# இன்னுமா உறக்கம்? - முதல் பகுதி

*தொகுத்தவர்:* **அல்ஹாபிழ் எப்.எம். இப்றாஹிம் ரப்பானி ஆலிம் ரஹிமஹுல்லாஹு அவர்கள்.**

**மதிப்புரை**

காதிர் முகைதீன் கல்லூரி முன்னாள் முதல்வரும், பன்னூல் ஆசிரியரும் ஆகிய அல்ஹாஜ் பேரா.டாக்டர் மு.அப்துல் கறீம் அவர்கள் மனமுவந்தளித்த மதிப்புரை.

மௌலானா மௌலவி ஹாஃபிழ் 'அஹ்லெ சுன்னத்' ஆசிரியர் எப்.எம். இப்றாஹிம் ரப்பானி அவர்கள் வழங்கியுள்ள 'இன்னுமா உறக்கம்? என்ற ஆய்வு நூலை ஆழமாகப் படித்தேன். இன்றைய இந்தி;ய மக்களுக்கு இன்றியமையாது தேவைப்படும் 'மனிதநேயத்தின் சகோதரத்துவ அடிப்படையில்' அமைந்த அருமையான-அற்புதமான-ஆய்வு நூல் இது.

உலகையும் படைப்பினங்கள் அனைத்தையும் சிறப்பாக மனித குலத்தோர் அனைவரையும் படைத்து வளர்த்து வருபவன் ஓர் இறைவனே என்பது இஸ்லாத்தின் ஆணி வேரான அடிப்படைக் கொள்கை. இக்கொள்கைப்படி – ஒரு மூலத் தந்தை- தாய் கோட்பாட்டின்படி- உலகமக்கள் அனைவரையும் சகோதரர்களாக-ஒரே இறைவனின் படைப்புகளாகக்-கருதி அன்பும் பாசமும் கொள்ளக் கடமைப்பட்டுள்ளவன் ஒரு முஸ்லிம்.

ஒரே நாட்டில் ஒரே ஆட்சியின் கீழ் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்ற பலகோடி மக்களாகிய இந்துச் சமயத்தவர்களைப் பற்றிக் கவலையும் அவர்களது இம்மை மறுமை வாழ்வைப் பற்றிய நல்லெண்ணமும் முஸ்லிம்களுக்கு இருக்க வேண்டியது கட்டாயப் பொறுப்பல்லவா? என்ற ஆசிரியரது சிந்தனைப் போக்கும் விரைந்த செயல்பாட்டிற்குத் தூண்டும் பரந்த நோக்கும் அறிவார்ந்த அணுகுமுறையும் இன்றைய காலகட்டத்தின் அவசிய அவசரத் தேவையாகும். மரியாதைக்குரிய இந்துப் பெருங்குடி மக்கள் இக்கருத்தை உரிய வகையில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்து சமுதாயப் பெருங்குடி மக்கள் நூஹ் நபியின் சமூகத்தினர், அவர்களது பழைய வேதங்கள் ஓர் இறைவனால் வழங்கப்பட்ட உண்மை வேதங்கள் என்பது நூலாசிரியரின் உறுதியான கொள்கை. இந்த அடிப்படையில் இந்து சமுதாய பெருங்குடி மக்கள் தங்களது இறை வேதத்தையும் இறைத்தூதரையும் அறிவது அவசியமானது. நீண்ட நெடுங்காலத்தில் இறை வேதமாகிய ரிக், யஜூர், வேதங்களும் அவற்றை சார்ந்த ஆகம நூற்களும் பல்வேறு திரிபுகளையும் மாற்றங்களையும் பெற்று – கற்பனை செய்திகளாலும் கதைகளாலும் பின்னப்பட்டு-வேத விற்பன்னர்களே விளக்க முடியாத பல விந்தை செய்திகளைத் தாங்கி-உருமாறியிருக்கின்ற நிலையில் அவற்றின் செய்திகள் இறுதித் திருவேதத்தின் (அல்குர்ஆன்) ஒளியில் விருப்பு வெறுப்பற்ற நுட்பமான ஒப்பாய்வு நிகழ்த்தப்படுமானால் உண்மைகள் வெளிச்சத்திற்கு வந்து விடும் என்பது மௌலானாவின் நம்பிக்கை.

இச்செய்தியைக் குறுகிய பார்வையில் நோக்கக் கூடாது. எனது வேதத்தின் வெளிச்சத்தில் பிறசமய வேதங்கள் விளக்கப்பட வேண்டும் என ஓர் இஸ்லாமிய அறிஞர் கூறுவதாகக் கருதிவிடக் கூடாது. எல்லாச் சமய வேதங்களும் அந்தந்தக் காலங்களில் பல்வேறு இறைத்தூதர்கள் மூலமாக ஓர் இறைவனால் வழங்கப்பட்டவையே என்பதை உணர்ந்து நம்பினால் உயர்வு தாழ்வு எண்ணத்திற்கு அறவே இடமில்லை. கால ஓட்டத்தில் பல வேதங்களும் மாற்றம் திரிபுகளுக்கு ஆட்பட்டு விட்டன. 1400 ஆண்டுகளுக்கு முன்னர் இறைவனால் வழங்கப்பட்ட இறுதித் திருவேதம் அல்குர்ஆன் திரிபுகளுக்கு உட்படவில்லை என்பதை எல்லா சமய அறிஞர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பது ஆசிரியர் கருத்து. இறுதித் திருவேதத்தின் அடிப்படையில் முந்திய இறைவேதங்கள் ஆயப்பட்டுப் பொருத்தமான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்பதே ஆசிரியரின் பொருத்தமான விருப்பமாகும் (பக்-158-159)

இந்து-முஸ்லிம் இணைப்புப் பாலம் என்பது இந்நூலின் ஒரு துணைத் தலைப்பு (பக்34) இந்துப் பெருங்குடி மக்கள் இவ்வுலகின் முதல் ஷரீஅத்தைக் கொண்டிருக்கும் ஒரு கூட்டம். முஸ்லிம்கள் இறுதி ஷரீஅத்தைக் கொண்டிருக்கும் கூட்டத்தார். இரு கூட்டத்தாருமே இந்தியாவில் இணைந்து வாழுகின்றனர். இவ்விரு சமுதாய மக்களும் இணைந்தும் இயைந்தும் தங்களது மூல ஒருமைப்பாட்டை உணர்ந்து வாழ்வது இந்தியாவிற்கும் உலகத்திற்கும் நலம் விளைக்கின்ற நற்செய்தியாகும். இது ஏதோ ஒரு மார்க்க அறிஞரின் கற்பனை என்றோ கனவு என்றோ கருதிட வேண்டாம். நூல் முழுமையும் இரு சமுதாயத்திற்கும் உள்ள ஒருமைப்பாடுகளை விளக்கி இரண்டு சமுதாயங்களும் கைகோர்த்துக் கொள்வது காலத்தின் கட்டாயம் என்பது அறிஞரின் கருத்து.

இன்றைய சூழ்நிலையில் இச்செய்தி பகற் கனவே என்பது போலத் தோன்றலாம். விருப்பு வெறுப்பின்றி நூலைப் படித்து முடிக்கின்ற யாரும் இக்கனவு நனவாக மாறக்கூடும் என்றே கருதுவர். இரு சமுதாய இணைப்பும் நடப்பது இறை நாட்டம் எனவும் அதுவும் ஹிஜ்ரி 15 ம் நூற்றாண்டிலேயே நடந்து விடும் எனவும் ஆசிரியர் நம்புகிறார். (பக்-208) ஆகவே இரு சமுதாய மக்களுக்கும் உறக்கம் போதும். விழித்து வீறு கொண்டு எழுங்கள். இறைவன் நாடினால் வெற்றி நிச்சயம் என நூலாசிரியர் அழைப்பு விடுக்கின்றார்.

பொருளும் பொருத்தமும் மிக்க அறிவுப்பூர்வமான இந்த அருமையான அழைப்புக்குச் செவிசாய்த்து செயல்பட வேண்டிய கடமையும் பொறுப்பும் இரு சமுதாய அறிஞர்களுக்கும் மக்களுக்கும் உரியனவாகும். இந்த அழைப்பை நீயா? நானா? என்னுடையது சிறந்ததா? உன்னுடையது சிறந்ததா? என்ற அடிப்படையில் அணுகக் கூடாது. உலக மக்கள் அனைவரையும் படைத்த ஓரிறைவன் அந்தந்தக் காலங்களில் வழங்கிய திரு வேதங்களைக் கொணர்ந்த இறைத் தூதர்களுக்கிடையே உயர்வு தாழ்வு இல்லை என்ற உணர்வே இந்த அழைப்புக்கு வலிவும் பொலிவும் ஊட்டும். இரு சமுதாயங்களின் நல்லிணக்கத்திற்கு வழிவகுக்கும்.

நூலாசிரியர் இந்துச் சமய வேதவிற்பன்னர்கள், அறிஞர் பெருமக்கள் ஆகியோரின் நூல்களில் இருந்து தமது கருத்துக்கு பக்கந்தோறும் சான்றுகள் தந்து செல்வது நூலின் நம்பகத்தன்மைக்கு நற்சான்றாகும்.

அஹ்மது, முஹம்மத் என்ற சொற்களின் ஆய்வும், வேதங்களில் முஹம்மத் நபி பற்றிய ஆய்வும், வைதீக வேதங்களில் சுவர்க்கம் நரகம் பற்றிய விளக்கங்களும், ஒரு இரகசியம் இரகசியமாகவே உள்ளது பற்றிய விளக்கங்களும் (பக் 174-177) இது போன்ற மிகப் பல ஆய்வுகளும் இந்து சமய வேதங்களுக்கும் இஸ்லாமிய வேதத்திற்கும் உள்ள ஒற்றுமைகளின் உறுதியை நிலைநிறுத்துகின்றன. யுகம் மாறப் போகிறது(பக் 208) எனவும் இறைவனின் ஆதாரங்களின் படி இரு பெருஞ் சமுதாயங்களும் இணைவது இக்காலத்தில நிகழப்போகிறது எனவும் அதற்குரிய அழைப்பை குர்ஆன் நபிமொழிகளின்படி முஸ்லிம்கள் விரைந்து செய்தாக வேண்டும் எனவும் நூலாசிரியர் குறிப்பிடுகிறார். குர்ஆன், நபிமொழிகளின் படி அழைப்பு விடுக்கும் கடப்பாடு முஸ்லிம்களுக்கு உரியது. தம்மோடு உடன்வாழும் சகோதர சமுதாயத்தார் கால வெள்ளத்தில் தொலைந்து விட்டதை இறுதி மறையின் வெளிச்சத்தில் தெளிவு படுத்த வேண்டிய பொறுப்பு முஸ்லிம்களுடையது என்ற கருத்தையும் நூலாசிரியர் அழுத்தமாக விளக்குகின்றார்.

நூலாசிரியர் இந்துச் சமய வேத புராண நூல்களில பெற்றிருக்கும் புலமை வியப்பைத் தருகிறது. பல சமயங்களது ஆகமங்களிலும் தெளிவான புலமையை அறிஞர் பெருமக்கள் பெறுவதே மனித நேயத்தையும் சமூக நல்லிணக்கத்தையும் வளர்க்கும் என்ற உண்மைக்கு ஆசிரியர் சான்றாக விளங்குகின்றார்.

இரு சமுதாய அறிஞர்களும், மக்களும் இந்நூலைக் கற்று சமுதாய இணக்கத்திற்குத் துணை நிற்க இறையருள் பாலிக்குமாக.

அன்புடன்,

**பேரா. டாக்டர் மு. அப்துல் கறீம்,**

திண்டுக்கல்.

**அணிந்துரை**

அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே!

அரூபத்தை அரூபமாகவே பார்க்கிற பார்வைக்கும் அரூபத்தை பேதமுள்ள உருவங்களில் பார்க்கிற பார்வைக்கும் பாலமாக அமைகிற இந்நூல் சிந்தனையைத் தூண்டக் கூடிய எந்நூலும் சிறந்ததே என்ற இலக்கணத்திற்கு சான்றாக அமைகிறது. இந்த பாலத்தை தனது ஆழ்ந்த ஞானத்தாலும், விரிந்த மனதாலும் உருவாக்கி இருக்கிறார் இதன் ஆசிரியர் எப்.எம். இப்ராஹீம் ரப்பானி அவர்கள். இந்நூலை பலமுறை படித்து மகிழ்ந்தேன். பலரும் பலனடைந்து மகிழ வேண்டும் என்பதே இந்த அணிந்துரையின் நோக்கம்.

அந்நூலை ரசிப்பதற்கு திருக்குர்ஆன், கீதை, வேதம், பாகவதம், பைபிள் போன்ற மறை நூல்களைப் பற்றிய ஆழ்ந்த ஞானம் அவசியமில்லை, மாறாக அவை அனைத்தும் போற்றுவது ஒரே இறைவனைத்தான் என்ற எளிய, அகன்ற ஞானம் போதுமானது.

சிந்தித்து தெளிவு பெறுவதற்கான வாசகங்கள் இந்நூலில் ஏராளம். அவைகளில் சில:

'இந்துக்கள் நூஹ் நபியின் கூட்டத்தாராகும்'

'ஏக இறைவனை பலக் கூட்டத்தாரும், மதவாதிகளும் அல்லாஹ், பகவான், ஈஸ்வர், குதா, காட் எனப் பல பெயர்களைக் கொண்டு அழைக்கின்றனர்'

'இந்து அறிஞர்கள் தமது பாமர மக்களை வேதத்திலிருந்து முழுமையாக வெட்டி விட்டுள்ளனர். இவர்கள் மட்டும் வேதத்தை விட்டும் வெட்டி விடப்படாது இருந்திருப்பார்களேயாயின் கணக்கில்லாத வழிகேடுகள் அகன்றிருக்கும்'

'இவ்வாறே ஸ்ரீராமன், ஸ்ரீகிருஷ்ணன் குறித்த வரலாற்று ஆதாரமென்பதும் இல்லை.'

'இன்றைய அறிவின் வளர்;ச்சி எப்போதும் இல்லாத அளவுக்கு மிக அதிகமான வேகம் கொண்டிருப்பதால் இன்றைய அறிவியல் வளர்ச்சிக்குத் தக்கவாறுள்ள விரிவுரைகள் உருவாக்கப்படாது போனால் குர்ஆன் தற்காலத்திற்குப் பொருந்தாது என்னும் குற்றச்சாட்டுக்கு இலக்காகிவிடும் அபாயம் வந்து சேர்ந்து விடும்.'

'இந்துக்களுக்கு அவர்களின் பழைய மார்க்கத்தையும் அவர்கள் தொலைத்து விட்ட அவர்களின் வேதத்திலிருந்தே தேடியெடுத்து நாம் கொடுக்க வேண்டும். இதில் எக்காரணம் கொண்டும் மதமாற்றம் என்பதை நாம் கையில் எடுக்கக் கூடாது.'

தான் சார்ந்த மதத்தைப் பற்றியும், பிற மதங்களைப் பற்றியும் கொண்டிருந்த கருத்துக்களை மறுபரிசலனை செய்து கற்பனையான, கவைக்குதவாத கருத்துக்களை வடிகட்டவும், அறிவுப்பூர்வமான, தர்க்கரீதியான கருத்துக்களுக்கு படிபட்டவும் இந்நூல் வழி செய்கிறது.

இறைமை, மறுமை, நேர்மை பற்றி பேசுகிற அனைத்து மறைநூல்களும் மதிக்கப்பட வேண்டியவைகளே. இஸ்லாமியரின் திருக்குர்ஆனும் இந்துக்களின் வேதமும் வெள;வேறு அல்ல. ஒரே வழித்தடத்தின் வெள;வேறு நிலைகளே அவைகள். மல்லிகைப்பூவை எந்தப் பெயரிட்டு அழைத்தாலென்ன! அது மணக்கத்தானே செய்யும். மனித குல சத்தியங்களின் தொகுப்பை கீதை என்றும், குர்ஆன் என்றும் வேதங்கள் என்றும் எந்தப் பெயரிட்டு அழைத்தாலென்ன! மொழிந்த காலம்தான் வித்தியாசமே தவிர மொழியப்பட்ட சத்தியம் சத்தியம்தானே! மனித குலத்தை மென்மேலும் நெறிப்படுத்தும் அவைகளின் நோக்கமும் ஒன்றுதானே!

குர்ஆனின் சாயலை வேதத்திலும், வேதத்தின் சாயலை குர்ஆனிலும் காணலாம். அவ்வாறு காண்பதே அறிவின் முழுமை. அதுவே அமைதிக்கு அடித்தளம் எனும் சிறந்த உயர்ந்த

கருத்தை வலியுறுத்துகிற இந்நூலை எத்தனை முறை படித்தாலும் தகும். 'ஈஸ்வர் அல்லா தேரே நாம்' என்றுரைத்த மகாத்மாவின் உடலில பாய்ந்த குண்டுகளை அகற்றி அவரை உயிர்த்தெழச் செய்கிறது இந்நூல்.

அனைத்து மறைநூல்களிலும் ஊடுருவும் ஒற்றுமையை உற்றுப் பார்த்தால் அவைகளில நாம் கற்பித்த வேற்றுமைகள் சின்னஞ்சிறியதாகி மறைந்துவிடும். ஆனால் அவைகளில் அங்கொன்றும், இங்கொன்றுமாக இருக்கும் வேற்றுமையை பெரிதுபடுத்தும்போது ஒற்றுமை ஒழிந்து மறைந்து சிக்கல்கள் பெருகிவிடும். குர்ஆன், கீதை, ரிக்வேதம் போன்ற மறைநூலகளின் பார்வையிலுள்ள ஒற்றுமையை, தக்க சான்றுடன், எல்லோரும் ஏற்றுக் கொள்ளும்வண்ணம் ஆசிரியர் இங்கு நிறுவியிருப்பது பாராட்டத்தக்கதாகும்.

ஒற்றுமைப்படுத்துகிற பார்வை அங்கொன்றும் இங்கொன்றுமாக அத்திப்பூத்தாற்போல் வந்தாலும், அந்த பார்வைதான் உலகமக்கள் அனைவரையும் அரவணைத்துச் செல்கிறது.

'Bonds that unite us are stronger than the barriers that divide us' என்பார்கள். மனிதர்களுக்கிடையே இழையூடுகின்ற ஒரே இறையின் ஞானத்தை உணர்த்தி, நாமாக நமது மயக்கத்தில் கற்பித்த வேறுபாடுகளை அகற்றி பிளவுபட்ட மனிதர்களை மறுபடியும் பிணைக்கின்ற இந்நூல் மனிதகுல அமைதிக்கு அடித்தளமாகவும் அச்சாரமாகவும் அமைகிறது.

இன்றைய காலகட்டத்தில் பல்கலைக்கழகங்களும் கல்லூரியும் தரவேண்டிய, ஆனால் தராத இந்த ஒற்றுமைப் பார்வையை எப்படியாவது எல்லோருக்கும் கொடுத்துவிட வேண்டும் என்ற இந்நூலாசிரியரின் ஆர்வம் போற்றுதலுக்குரியது.

உள்ளதை உணர்ந்து, அந்த உணர்வின் மூலம் அல்லதை விடுத்து நல்லதையே செய்யும் வல்லமையைத் தருகின்ற இந்நூல் ஒவ்வொரு இல்லத்தில் மட்டுமின்றி ஒவ்வொரு உள்ளத்திலும் இருக்க வேண்டியதொன்றாகும்.

'ஈஸ்வர் அல்லா தேரே நாம்'

வாழ்க வளமுடன்.

முனைவர். கோ. அழகர் ராமானுஜம்

முன்னாள் முதல்வர் என்.ஜி;எம். கல்லூரி,

பொள்ளாச்சி,

செயலர், அறிஞர்குழு,

ஆழியார்.

## வாழ்த்துரை

எல்லாப் புகழும் இறைவனுக்கே. இந்தப் பிறவியின் நோக்கம் இறைவனை உணர்வதற்கு என்றே படைக்கப்பட்ட தத்துவமாகும். அதுவே வாழ்க்கை சரீர நோக்கமாகும். அவ்வகையில் 'இன்னுமா உறக்கம்?' என்னும் இந்நூலானது இறைவனை உணர்வதற்கு ஏற்ற வகையில் விளக்கமாக அமைந்துள்ளது. இந்த நூலை தொகுப்பதற்கு கருவியாக திரு எப்.எம். இப்றாஹிம் ரப்பானி அவர்களை இறைவன் தேர்ந்தெடுத்ததே சரியான தேர்வாகும். அதேசமயம் இறைவனுக்கு மி;கவும் பிடித்தமானது, பேதகமில்லாமல் இருப்பது, அந்த பேதகத்திலிருந்து விடுபடுவது இறைவனின் மிகப்பெரிய கருணையாகும். அந்த வகையில் இந்த நூலானது வரும் காலத்தில் மக்களுக்கு இறைவனை சேர்ந்திட பாலமாக, பொதுமறை நூலாய் பலருக்கு திருக்குர்ஆனைப் போல விளங்க வேண்டும்.

மேலும் இந்நூலில் சிறப்புற இரண்டு மதங்களையும் ஆய்வு செய்திருப்பது சிறப்பாக உள்ளது. உடலில் சந்திரக் கலையிலும் சூரிய கலையிலும் சுவாசம் எப்படி இயங்குகிறதோ அதே வகையில் சுவாசமாகிய இறைவனை, சந்திர கலையாக இஸ்லாமும் சூரிய கலையாக இந்துத்துவமும், சந்திர கலையாக திருக்குர்ஆனையும், சூரிய கலையாக சதுர் வேதங்களையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.எப்பொழுதும் எந்தவொரு இயக்கத்திற்கும் கர்த்தா, கருவி, காரணம் இறைவன் ஒருவனே. அந்த வகையில் இக்காலத்தில் இந்நூலாசிரியர் திரு எப்.எம். இப்றாஹிம் ரப்பானி அவர்களுக்கு இறைவன் அருளியது மிகப்பெரிய பாக்கியமாகும்.

ஏனெனில் காலம் காலமாய் இறைவனால் பின்னப்பட்ட நாடகத்தில் துவேஷத்துடன் மதம் என்னும் மதத்துடன் மக்களை வழிநடத்திய இறைவன் இன்று இரு மதங்களும் சங்கமம் ஆவதற்கு விருப்பப்பட்டு இந்நூலை தொகுக்கின்ற பாக்கியத்தை அருளியுள்ளான். ஒவ்வொரு மனித ஜீவனும் இந்நூலை மனம் ஒன்றி படித்துப் பயன் பெறவும் மனித சமுதாயம் ஓரணியில் சங்கமம் ஆவதற்கும் இறைவன் அருள் புரியட்டும்.

இறைவன் எந்த நோக்கத்திற்காக இந்த வாழ்க்கை சக்கரத்தை அமைத்தானோ அந்த நோக்கத்தை பிரதிபலிக்கக் கூடிய வகையில் ஆசிரியரின் நோக்கமும் இருப்பது நிறைவாய் உள்ளது. ஆக வரும் காலங்களில் மனித சமுதாயம் பேதமில்லாது அன்புடன், தர்ம நெறியுடன், ஞான தாகத்துடன் இறைவனோடு ஒன்றிட இந்த சரீரத்தில் இறைவனால் கொடுக்கப்பட்ட பணியை இறைவனுக்கு அர்ப்பணித்து முழுவதுமாக சரணாகதி அடைந்து இறைவன் ஒருவனே என்னும் தத்துவத்தோடு இந்நூலின் மூலக்கருவை உணர்ந்து ஒவ்வொரு மனித ஜீவனும் சமுத்திரமாகிய இறைவனோடு சங்கமமாகி இறைத்தத்துவத்தோடு ஐக்கியமாக வேண்டும்.

'தருபவை எல்லாம் இறைவனுக்கே

எப்பொழுதும் எல்லாப் புகழும் இறைவனுக்கே!'

மனித நேயத்துடன்,

ஸ்ரீசுக ஸ்வர்ண பிரணவ்

ஸ்ரீசுதர்ஸன சக்கரபீடம்,

சுகவனம்,

ஆனைமலை வழ கோட்டூர் ரோடு,

தென்சங்கம் பாளையம், பொள்ளாச்சி.

9-6-2003.

**மதிப்புரை**

எங்களின் பிரியத்திற்கும் மரியாதைக்குமுரிய மௌலானா மௌலவி எப்.எம். இப்றாஹீம் ரப்பானி சாஹிப் அவர்கள் தொகுத்துள்ள 'இன்னுமா உறக்கம்?' என்னும் நூலை படிக்கும் வாய்ப்பு கிடைத்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நூலை முழுமையாக படித்து முடிக்கும் போது அந்த மகிழ்ச்சி பன்மடங்காக ஆயிற்று. ஏனெனில் இறைவன் எல்லையில்லாப் பிரியம் கொண்டிருக்கும் தன்னுடைய நேசரான முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நேசிக்க, கண்ணியப்படுத்த ஒரு புதிய கூட்டத்தை உருவாக்கப் போகிறான் என்பதும், அந்தப் புதிய கூட்டம் நாம் வாழும் இந்தியாவிலுள்ள திராவிடர்களும், ஆரியர்களும்தான் என்பதை நபிமொழியின் மூலம் இந்நூலாசிரியர் நிரூபித்து இருப்பதும் ஆகும்.

அந்த வகையில் இறைவன் அருளிய முதல் ஷரீஅத்தைக் கொண்ட நூஹ் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சமூகத்தாராகிய இந்தப் பெருமக்களுக்கு அவர்களின் வேதபுராண ஆதாரங்களைக் கொண்டே அவர்களின் நபியாகிய 'நூஹ்' அவர்களையும், '**நிராஷ்னஸ்**'(புகழுக்குரியவர்) ஆகிய இறுதி நபி முஹம்மத் முஸ்தபா அவர்களையும், கடைசி ஷரீஅத்தைக் கொண்ட முஹம்மத் நபியின் சமூகத்தைச் சார்ந்த ஆசிரியர் ஒருசேர அறிமுகப்படுத்தி இருப்பது அருமையாக உள்ளது.

மேலும் இந்தப் பெருமக்கள் நம்பிக் கொண்டிருக்கும் 'கல்கி அவதாரம்' என்பது முஹம்மது நபி அவர்கள்தான் என்று ஏற்கனவே இந்துமத வேதப் பண்டிதர்களும், இஸ்லாமிய அறிஞர்களும் ஒப்புக் கொண்டதுடன், தக்க சான்றுகளுடன் நூல்களும் எழுதி வெளியிட்டுள்ளனர். 'இன்னுமா உறக்கம்?' நூலின் மூலமாக ஆச்சரியமான ஒரு சிந்தனையை ஏற்படுத்தியதுடன்....

'உலகிலுள்ள வழிமுறைகளில் எல்லாம் என்னுடைய வழிமுறையே சிறந்தது'

'என்னை அறிமுகப்படுத்துங்கள்'

என்பது போன்ற நபிமொழிகளை செயலாக்கி இருக்கிறார்.

மேலும் முன்சென்ற வரலாறு, நிகழ்கால நிகழ்வுகள், எதிர்கால மாற்றங்கள் என முக்காலங்களையும் அலசி மனிதகுல வரலாறு, பூகோள அமைப்பு போன்றவைகளையும் ஆய்வு செய்து திருக்குர்ஆன், நபிமொழி மற்றும் இ.ந்துமத வேத புராணங்களின் சான்றுகளுடன்

விளக்கியிருப்பது ஆசிரியரின் கல்வி ஞானத்தையும், சிந்தனையோட்டத்தையும் படம்பிடித்துக் காட்டுகிறது.

இந்துப் பெருமக்கள் நம்பிக் கொண்டிருக்கும் மறுபிறவி என்பது இல்லையென்பது அவர்களின் 'ரிக்' வேதத்தைக் கொண்டே ஆதாரப்படுத்தியதுடன், அந்த நம்பிக்கை எப்படி உருவாகி இருக்கும் என்ற ஆசிரியரின் விளக்கமும் இந்துப் பெருமக்கள் சிந்தனையில் கொள்ள வேண்டியவ pஷயமாகும். மேலும் இறைவனையும், மறுமைநாளையும் நினைத்து தொழுகை, நோன்பு, ஹஜ் போன்றவைகளை நிறைவேற்றினால் போதுமென்னும் மயக்கத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் இஸ்லாமியர்களுக்கும், எந்த மதமாக இருந்தாலும் இறைவனிடம் சரணாகதி அடைந்து தியானித்தால் இறையருளை பெற்றுவிடலாம் என்று நம்பிக் கொண்டிருக்கும் இந்துப் பெருமக்களுக்கும் ஆசிரியர் இந்நூலின் மூலமாக இறுதித் தூதரும், அகில உலகங்களுக்கும் சக்கரவர்த்தியான முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கருணையும் ஆதரவும்தான் ஈடேற்றம் அடைய வைக்கும் என்பதை இந்துமத வேதச் சான்றுடன் விளக்கியிருப்பதும் அருமை.

இந்த நூலின் மூலமாக ஆசிரியர் வெளிப்படுத்தி இருக்கும் விருப்பமும், நோக்கமும் நிறைவேறுமா? என்று யோசித்தால் திருக்குர்ஆன், நபிமொழிகளின் ஞானத்துடன் உலக நிகழ்வுகளை அதுவும் குறிப்பாக இந்தியாவில்நிகழும் அனைத்து ஆன்மீக அரசியல் நிகழ்வுகளையும் கூர்ந்து கவனித்து சிந்தித்துப் பார்த்தால் நிச்சயமாக ஆசிரியர் எதிர்பார்க்கும் மாற்றங்கள் நிகழும் என்று உறுதியாக நம்பலாம்.

உலமாக்கள் நபிமார்களின் வாரிசுகள் என்பதற்கு உதாரணமாகத் திகழும் ஆசிரியர் எப்.எம்.இப்றாஹீம் ரப்பானி சாஹிப் அவர்களின் இவ்வரிய முயற்சியை எல்லாம் வல்ல இறைவனும், அவனின் பிரியத்திற்குரிய இறுதித் தூதர் முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமும் அங்கீகரிக்க வேண்டும். ஆசிரியரின் ஆயுளை நீடித்து இன்னும் இதுபோன்ற பல நூல்களை அவர் மூலமாக இறைவன் வெளிக் கொணர வேண்டும் என்ற பிரார்த்தனையோடு முடிக்கிறேன்.

**மு.முனவ்வர் பாஷா B.A.**

டெலிகிராப் மாஸ்டர், தந்தி அலுவலகம்,

பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட்,

பொள்ளாச்சி-642001

12-6-2003.

**என்னுரை**

எதைக் கொண்டு இப்பிரபஞ்சம் தோற்றுவிக்கப்பட்டதோ, எது இப்பிரபஞ்சத்தையும் இதிலுள்ள எல்லா ஜீவராசிகளையும் ரட்சித்துப் பாதுகாத்து பரிபாலித்து வருகிறதோ அதற்கே எல்லாப் புகழும் உரித்தாகுக. அதுதான் எல்லாவற்றுக்கும் மூலாதாரம். அதைக் கொண்டு தான் சர்வமும் இயங்கிக் கொண்டுள்ளது.

அது உண்மைகளுக்கும் உதாரணங்களுக்கும் அப்பாற்பட்டது. அதைக் காலமோ எல்லையோ கட்டுப்படுத்த முடியாது. ஏனெனில் அதுதான் காலத்தையும் எல்லைகளையும் வடிவமைத்தது. அதை எந்தவொரு பொருளும் படைக்கவோ பிறக்க வைக்கவோ இல்லை என்பதுதான் முடிவான தீர்மானம். ஏனெனில் அதுதான் எல்லாவற்றையும் படைத்துப் பிறக்கச் செய்தது. எனவே அதை யாரும் படைக்கவில்லை. எதைக் கொண்டும் அது பிறக்க வைக்கப்படவுமில்லை.

அதை புரிந்து கொள்வதற்காகத்தான் சிருஷ்டிப் பொருட்களில் உன்னதமான படைப்பாக மனிதன் தோற்றுவிக்கப்பட்டான். இன்னும் அந்த சிருஷ்டிகர்த்தா அவனை தனது பண்பில் அதற்காகவே தோற்றுவித்தது. அத்துடன் அதை புரிந்து கொள்வதற்காகவே மனிதனாகிய அவனுக்குள் பகுத்து அறியக் கூடிய அறிவையும் அது தோற்றுவித்தது. இத்தனைக்குப் பிறகும் அது தன்னை தன்னையன்றி வேறு யாராலும் புரிந்து கொள்ள முடியாது என்பதால் தனது அனுக்கிரஹத்தை அம்மனித இனத்தில் சிலரை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு அதை வெகுமதியாகத் தந்து அவர்களை தனது தூதர்கள் என்னும் பெயரில் இப்பூமியில் வெளிப்படுத்திற்று.

வெளிவந்த அத்தூதர்கள் அதை ஈல் என்றும், ஈலியா என்றும், இலாஹ் என்றும் அல்லாஹ் என்றும், ஈஸ்வர் என்றும், பரம்பொருள் என்றும், கடவுள் என்றும், இறைவன் என்றும், காட் என்றும் அழைத்துக் காட்டித் தந்தனர். அவர்கள் அப்பரம்பொருளைக் காட்டித் தரும் கண்ணாடியாக இப்பூமியில் பிரகாசித்தனர். அவர்களைக் கொண்டுதான் மனித இனத்தாரிடையே சமயம், மார்க்கம், மதம் என்பவைகளெல்லாம் தோன்றின.

ஆதலால் இன்று இப்பூமியில் எத்தனை சமயங்கள், மார்க்கங்கள், மதங்கள் பார்க்கப்படுகிறதோ அவையனைத்தும் பின்னால் ஒரு தீர்க்கதரிசி என்னும் திருத்தூதர் நின்று கொண்டிருக்கிறார். எந்தவொரு மார்க்கமும், மதமும், சமயமும் அக்கடவுளின் தீர்க்கதரிசியான திருத்தூதரின்றி மனித அறிவில் தோன்றிய அல்;லது விளைந்த ஒன்றல்ல என்பதைத் திண்ணமாக சொல்லலாம்.

இவ்வாறு இறைவனால் அவனது சிருஷ்டிப் பொருட்கள் மீது செய்யப்பட்ட அந்த 'அனுக்கிரஹத்தை' தான் இஸ்லாமிய சமயவாதிகள் 'இறைவன் முதன் முதல் 'அஹ்மதை தோற்றுவித்தான்' எனக் கூறுவதன் மூலம் அந்த அனுக்கிரஹத்தை 'அஹ்மத்' முஹம்மத்' என்னும் திருநாமத்தைக் கொண்டு அழைத்து வருகின்றனர். இதே அனுக்கிரஹத்தைதான் இந்துச் சமயவாதிகள் 'அஹம்மத்' 'அக்னீ' 'நிராஷ்னஸ்' என்னும் பெயரால் அழைத்து

வருகின்றனர். பின்னும் இந்த அனுக்கிரஹம் முதன்முதல், முதல் சிருஷ்டிப் பொருளாக இறைவனிலிருந்து வெளிப்பட்டதோடு இதுதான் எல்லா இறைத்தூதர்களிலும் வெளியாயிற்று. அதன்பின் இதுதான் இப்பூமியில் இறுதியில் 'முஹம்மத்' என்னும் பெயரிலும் தோன்றிற்று. ஆதலால் இந்த முஹம்மத் என்னும் அனுக்கிரஹத்தின் மீதும், இதைப் பின்பற்றியவர்கள் மீதும், இதனுடைய புகழைப் பாடியவர்கள் மீதும், இது தோன்றிய குலத்தார் மீதும், இதற்கு வழிப்பட்டு இதன்முன் சாஷ்டாங்கமாக தம்மை ஒப்புக் கொடுத்தவர்கள் மீதும் இறைவனின் பேரருளும் சாந்தியும் சமாதானமும் சதாகாலமும் சுரந்து பொழிவதாக!

அகிலத்தின் அதிபதியான பரம்பொருளாகிய இறைவனை புரிந்து வழிப்படுவதில் வழிகாட்டப்பட்ட மனிதர்கள், வழிகாட்ட வந்த தூதர்களையும், வழிகாட்டப்பட்ட இறைவனையும் புரிந்து கொள்ளும் விஷயத்தில் தவறிழைத்ததன் விளைவே சமயங்களுக்குள் தவறான அணுகுமுறைகள் தோன்றி அவை காலப் போக்கில் தவறான நடைமுறைக்கு வழிவகுத்தன. ஆம். இன்று ஒவ்வொரு சமயத்திற்குப் பின்னாலும் ஒரு தூதர் மறைந்திருக்கிறார் என்பதே எதார்த்தமான உண்மையாகும்.

அடுத்து புரிந்து கொள்ளலில் ஏற்பட்ட கோளாறுகளை, குளறுபடிகளை அகற்றி மனித இனத்தை மீண்டும் ஒருங்கிணைக்க அப்பரம்பொருள் என்னும் இறைவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு ஏற்பாடுதான் தூதர் பெருமக்களின் வெளித்தோற்றத்தை காரணமாக்கி பிரிந்து போய்விட்ட மனிதர்களை மீண்டும் அத்தூதருக்குள் செயலாற்றிக் கொண்டிருந்த அந்த அனுக்கிரஹத்தைக் கொண்டு திரும்பவும் ஒருங்கிணைக்கின்ற ஒரு ஏற்பாடாகும். அதனால்தான் இப்பூமிக்கு வருகை தந்த ஒவ்வொரு தூதரும் அந்த அனுக்கிரஹத்தைப் பற்றிய செய்தியை தமது சமூகத்தாருக்குத் தந்து சென்றதாகும்.

இங்கே இன்னொன்றும் மனித அறிவால் விளங்கிக் கொள்ளப்பட்டாக வேண்டும். அது, ஒவ்வொரு தூதரும் தமது சமூகத்தாருக்குத் தந்து சென்ற மார்க்கம் என்பது வௌ;வேறான நம்பிக்கையைக் கொண்ட மார்க்கமல்ல. மாறாக ஒரே மாதிரியான நம்பிக்கையைக் கொண்ட மார்க்கத்தைத்தான் எல்லா தூதர்களும் தமது சமூகத்தாருக்குத் தந்து சென்றார்கள். ஆம். இறைவனைக் குறித்த நம்பிக்கையில் அவன் ஒருவன் என்றும், உருவமற்றவன் என்றும், ஈடு இணையில்லாதவன் என்றும், அவனை யாரும் பெற்று எடுக்கவில்லை என்றும், அவன் யாராலும் பெறப்படவில்லை என்றும், காணப்படும் எல்லாவற்றிலும் அவன்தான் பிரகாசிக்கிறான் என்றும், அவன் ஒரேயொரு பொருளுக்குள் முடக்கப்படும் போது மற்றவைகளில் அவன் பிரகாசிக்கத் தகுதியற்றவன் என்னும் நிலை தோன்றி விடுவதால் அதைத் தவறான நம்பிக்கையென்றும் வலியுறுத்தப்பட்டது.

ஆனால் கால மாற்றத்தாலும், பேசப்படும் மொழிகளின் திரிபுகளாலும் புரிந்து கொள்ளலில் ஏற்பட்ட கோளாறுகளாலும் அவன் ஒவ்வொரு சமூகத்தாரிடையேயும் வௌ;வேறானவனாக கருதப்பட்டு பல நூறு துண்டுகளாக இன்று காட்சியளிக்கிறான் என்பது இப்போது இப்பூமியில் பார்க்கப்படும் ஓர் எதார்த்தமான உண்மையாகும்.

அதனால்தான் அப்பரம்பொருள் தனது தூதர் பெருமக்களின் வாயிலாக தனது அனுக்கிரஹம் என்னும் அஹ்மதைக் கொண்டு மீண்டும் மனித இனத்தை ஒருங்கிணைக்கின்ற காரியத்தை இப்போது செய்யத் துவங்கியுள்ளது. அதற்குரிய முதல் முயற்சிதான் இப்போது இச்சிறியவனின் வாயிலாக 'இஸ்லாம்'(அமைதி) என்பதுதான் மனிதனின் அஸல் மார்க்கம் என்பதையும், எல்லா தூதர் பெருமக்களும் மனித இனத்திற்கு போதித்தது அதைத்தான் என்பதையும், வேதங்கள் அனைத்தும் அப்பரம்பொருளின் வாக்குகள்தான் என்பதையும், முடிவில் மனித எண்ணத்தில் விளைந்த எந்த மார்க்கமும் இப்பூமியில் நில்லாது இஸ்லாம் மட்டும்தான் இப்பூமியின் மார்க்கமாக அமையும் என்பதையும், விளக்கப்படுத்தும் இவ்வரிய நூலை உங்களின் பார்வைக்குக் கொண்டு வந்துள்ளது.

இந்நூல் எந்தவொரு சமயவாதியின் சமயத்தையும் களங்கப்படுத்துவதோ அல்லது புண்படுத்துவதோ அல்லது பொய்யாக்குவதோ அல்ல என்பதை வாசிப்போர் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கு மாறாக சமயங்களுக்குள் கால மாற்றங்களால் ஏற்பட்டுப் போன கோளாறுகளை அகற்றி அவைகளின் எதார்த்தத்தை விளக்கிக் காட்டுவதே இந்நூலுடைய நோக்கமாகும்.

மேலும் இந்நூலை வெளிக் கொண்டு வருவதில் இச்சிறியேனுக்கு முதலில் துணை நின்று தமது அனுக்கிரஹத்தை என்மீது அள்ளிச் சொரிந்த என்னை ஆளும் எனது இறைவனுக்கும், என்னை இதில் சிந்திக்கத் தூண்டிய எனது ரஸூலான முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம் அவர்களுக்கும், என்னையும் ஒரு பொருட்டாக ஏற்று என் மீது எனது ரஸூலுடைய அதே அனுக்கிரஹத்தை அள்ளிச் சொரிந்த எனது உயிரினும் மேலான எனது பரம்பொருளின் வெளிப்பாட்டுத் துறையாகிய என்னுடைய ஷைகு நாயகம் அவர்களுக்கும், இந்நூலைப் படித்து இந்நூலுக்கு மதிப்புரை மற்றும் அணிந்துரை வழங்கிய அனைவருக்கும், இந்நூல் வெளிவர தமது பொருளால் பேருதவி புரிந்த ஜனாப் முனவ்வர் பாஷா ஸாஹிப், ஜனாப் கலீ:லுர் ரஹ்மான் ஸாஹிப், ஜனாப் முஹம்மத் தாஜுத்தீன் ஸாஹிப் அவர்களுக்கும் இதன்பால் இவ்வெளியேனின் எண்ணத்தை தூண்டிய அனைவருக்கும் நான் எனது உளமார்ந்த நன்றியை காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

மேலும் இந்நூலை படித்துப் பயனடைவோர் இச்சிறியவன் மற்றும் அவனது இல்லத்தாரின் மறுமை வாழ்க்கை சிறப்படையவும், இறை நம்பிக்கை மற்றும் நல்லோரை மதிக்கும் ஈமான் என்னும் ஈடேற்றத்தை அடைந்து கொள்ளவும், இறைவனின் அனுக்கிரஹமான அஹ்மதின் பரிந்துரைக்கு உரியவனாகி ஈடேற்றம் பெறவும் பிரார்த்திக்குமாறு மிகவும் தயவாய் வேண்டிக் கொள்கிறேன். அதேநேரம் இந்த நூலை வாசிப்பதில் ஏதேனும் சந்தேகம் ஏற்படுமாயின் அதை இச்சிறியவனுக்குத் தெரியப்படுத்துமாறும் பணிவோடு வேண்டிக் கொண்டு இதுபோன்ற இன்னும் பல ஆய்வு நூல்கள் இச்சிறியவன் வாயிலாக வெளிவரவும் பிரார்த்திக்குமாறு வேண்டுகிறேன்.

ஹிஜ்ரி 1424 – ரஜப் சிறியவன்,

கி.பி. 2003 – செப்டம்பர் **எப்.எம். இப்றாஹீம் ரப்பானி**

திருச்சி.

**அத்தியாயம் ஒன்று**

بسم الله الرحمن الرحيم

**கஃபா அவமதிக்கப்படுதல்**

உலக மாந்தரின் முதல் கிப்லாவாகிய பைத்துல் முகத்தஸ் யூதர்களால் கைப்பற்றப்பட்ட போது நிகழ்ந்த அசம்பாவிதங்களைக் குறித்து மௌலானா ஸையத் அலி மியான் என்பார் தனது மனக்குமுறலை எழுத்து வடிவில் இவ்வாறு வெளிப்படுத்துகிறார்.

**'அனைத்து உலகின்முன் இம்மோசமான வெட்கித் தலைகுனிவதற்குரிய தோல்லியும், இழிவும் முடிவில் எவ்'வாறு நேர்ந்தது? இத்தனைக்கும் நேற்றுவரை இறையுதவியைப் பெற்று வந்த நிலை இருந்ததோடு முஃஜிஸாக்கள் என்னும் அற்புதங்களும் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன. அத்துடன் விண்ணிலிருந்து அவர்களுக்காக பாதுகாப்புப் படைகளும் இறங்கிக் கொண்டிருந்தன'.**

அன்றிலிருந்து இன்றுவரை உலகிலுள்ள அனைத்து முஸ்லிம்களுடைய கரங்களும் விண்ணை நோக்கி உயர்த்தப்பட்டு, இறைவா! ரட்சகா!! எங்களுடைய முதல் கிப்லாவை எங்களுக்குத் திருப்பித் தா!!! என எவ்வளவோ மன்றாடி யும் உயர்ந்த கரங்கள் வெறுங்கரங்களாகவே இன்றுவரை காலியாகவே திரும்பிக் கொண்டிருக்கின்றன. உண்மையில் இறையுதவி வருவதென்பது நின்றுதான் போய்விட்டது. வெகுகாலமாகவே நிலைமைகள் மிகவும் மோசமாகிக் கொண்டுதான் வருகின்றன. எதுவரை எனில் மக்காவிலுள்ள இரண்டாவது கிப்லாவாகிய கஃபாவும் அவமதிக்கப்படுவதற்தகுரிய நிலை தோன்றிவிட்டது.

ஆம்! ஹிஜ்ரி 1400 முஹர்ரம் பிறை ஒன்று, கி.பி. 1979 நவம்பர் இருபதாம் நாள் அன்று உலக மாந்தர் அனைவரும் குழப்பங்களை விளைவித்து குருதியைக் கொட்டுவோர் என வானவர்களால் வழங்கப்பட்ட தீர்ப்பை தக்கவைத்துக் கொள்வதைப் போன்ற அந்நாள், 'முஹம்மத் பின் அப்துல்லாஹில் கஹ்தானி' என்பான் மூலம் மஹ்தி என்னும் தோற்றத்தின் பெயரால் துவங்கிற்று. அதன்பின் அடுத்து வந்த பதினைந்து நாட்களும் ஹிஜ்ரி பதினைந்தாம் நூற்றாண்டின் துவக்க காலத்தை வரலாற்றின் இருண்ட காலமாகவே நிலைபெறச் செய்து விட்டது.

பிறகென்ன? கஃபா மனித ரத்தத்தால் சிவப்பாயிற்று. கஃபாவின் சுவர்கள் துப்பாக்கித் தோட்டாக்களால் சல்லடைக் கண்ணாகத் துளைக்கப்பட்டது. அடுத்து வந்த பதினைந்து நாட்களும் தொழுகை, பாங்கு, தவாப்(வலம் வருதல்) போன்ற எதுவுமே நடக்காமல் கஃபா

மூளியாக்கப்பட்டது. அந்தப் பதினைந்து நாட்களும் உலக இஸ்லாமியரது பார்வைகள் இறைவனுடைய பாதுகாப்புப் படையை எதிர்பார்த்து விண்ணையே நோக்கிக் கொண்டிருந்தன.

ஆம். இதற்கு முன்பும் வரலாற்றில் '**அப்ரஹா**' என்பவன் தனது படைகளைக் கொண்டு கஃபாவைத் தகர்க்க வந்தபோது மகத்துவமிக்க இறைவன் தனது இல்லத்தை பாதுகாப்பதற்காக 'அபாபீல்' என்னும் படைகளை அனுப்பி உதவியவன் இப்போது உதவிக்கு வரவில்லை. காரணம் இறைவனின் இனிய தூதர் ஆயிரத்து ஆண்டுகளுக்கு முன்பே, '**அவ்வில்லத்தின் காப்பாளர்களே அதைக் களங்கப்படுத்தும் காரியத்தை செய்வர் என்றும், அதன் பொருட்டு அவர்களை அவர்களின் போக்கிலேயே போகவிட்டு அவர்களின் அஃமால் நாமாவி(பட்டோலையி)ல் கரும்புள்ளிகளை நிரப்பிக் கொள்வர். ஆகையால் இதன்மூலம் உலக சாம்ராஜ்ஜியத்தை நிர்வகிக்கும் தகுதியை அவர்கள் இழந்து விடுவர்**' என்றும் கூறுவதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அடுத்து...

அபூஹுரைரா என்னும் நபித் தோழர் தமது நபியைக் கொண்டு அறிவிக்கின்றனர், அந்த மனிதன் ஹஜ்ருல் அஸ்வதுக்கும் (சுவனத்திலிருந்து இறக்கப்பட்ட கல்) மகாமே இப்றாஹிமுக்கும்(இப்றாஹிம் என்னும் இறைத் தூதர் அந்த ஆலயத்தை கட்டியபோது நின்ற இடம்) இடையில் வைத்து வாக்குப் பிரமாணம் வாங்குவான். அதன்பின் அவ்வில்லத்தை அவனுடைய வீட்டாரைத் தவிர வேறு யாரும் களங்கப்படுத்த மாட்டாhகள்;. அவ்வில்லம் களங்கப்படுத்தப்பட்டபின் அரபியர் எப்போது அழிந்து போவார்கள் என்பதை என்னிடம் கேட்காதீர்கள் என்று கூறுகின்றனர்.'

நூல்: லவாமிவுல் அன்வார், பாகம் 2, பக்கம் 122.

இதனை அர்ஸகீ என்பாரும் தமது 'தாரீகே மக்கா' என்னும் நூலில் குறித்துள்ளனர். இவ்வாறே ஹாகிம் என்பார் இதனை ஸஹீஹான ஹதீஸென்று உறுதிப்படுத்துகிறார். மேலும் கஃபாவில் நடைபெற்ற அப்பதினைந்து நாட்களின் அந்த அசம்பாவிதம் மேற்கண்ட இறைத்தூதரின் அறிவிப்பை உறுதிப்படுத்தும் வகையில் 'தன்னை மஹ்தி என்று வாதிட்ட அப் போலி மனிதர் ஹஜ்ருல் அஸ்வத்துக்கும் மகாமே இப்றாஹிமுக்கம் இடையில் வைத்துத்தான் தன்னைச் சேர்ந்தோரிடம் வாக்குப் பிரமாணதம் வாங்கினான்' என்பதைக் கொண்டு உறுதியாகிறது. இறைத்தூதரின் இன்னொரு அறிவிப்பைப் பாருங்கள்....

**'அபூஹுறைறா என்னும் நபித்தோழர் தமது நபியைக் கொண்டு அறிவிக்கிறார். எனது சமூகத்தார் குறைஷிகளிலுள்ள தரிகெட்ட வாலிபர்களின் கரத்தால் அழியும்'**

நூல்: புகாரி, குழப்பம் பற்றிய பாடம்.

நடைபெற்ற அந்த அசம்பாவிதம் உண்மையை உடைத்துக் காட்டிற்று. ஆம். கஃபாவில் நடைபெற்ற அந்த அசம்பாவிதத்தில் பங்குபெற்;ற அனைவருமே வாலிபர்களாகவும், இருபது வயதுக்கு உட்பட்டவர்களாகவும் தானிருந்தனர். இது மட்டுமல்ல. உள்ளத்தை உறைய வைக்கும் பேரழிவின் அச்சம்பவத்திற்குரிய முகவுரையை நிகழ்த்தியவன் யார் என்பதையும்

நபியவர்களின் அறிவிப்பு சூரியனைப் போல நமக்கு பிரகாசமிட்டுக் காட்டுவதையும் பாருங்கள். அதாவது...

;**அபூஹுரைரா என்னும் நபித்தோழர் தமது நபியைக் கொண்டு அறிவிக்கிறார், உலகின் அழிவுநாள் வராது. எதுவரையெனில் கஹ்த்தானிலிருந்து ஒரு மனிதன் வெளியாகி மனிதர்களைத் தனது தடியைக் கொண்டு ஆட்டுவிக்காத வரை என்று கூறுகின்றனர்.**' - நூல்: புகாரி, கஹ்த்தான் பற்றிய பாடம்.

**தொடரும் வேதனைகள்**

மௌலானா ஸையத் அலீமியான் அவர்கள் குமுறுவதைப் போல உண்மையில் இறைவனுடைய உதவி வருவது நின்றுதான் போய்விட்டது. இது உலக இஸ்லாமியர்களை எச்சரிக்கை செய்கின்ற ஒன்றில்லையா என்ன? இன்னும் முஹம்மத் நபியவர்களை விசுவாசித்தவர்களின் கரத்தாலேயே கஃபா களங்கப்டுத்தப்பட்டபின், அரபியரின் அழிவைக் குறித்த நபியவர்களின் வார்த்தையை நாம் நம்புகிறோம் என்பது உண்மையானால் இது உலக அரங்கில் ஒரு மாபெரும் மாற்றத்தை நிகழ்த்தப் போகிறது என்பதை நாம் இப்போதாவது உணர வேண்டாமா? அத்துடன் இன்று உலக முஸ்லிம்களின் மீது என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதைப் பாருங்கள்.

இஸ்லாமியர்கள் குறைவாயுள்ள எண்ணிக்கை கொண்ட நாடுகள் மட்டுமல்ல. பெரும்பான்மையாக வசித்துவரும் நாடுகளில் கூட அவர்களின் வணக்க வழிபாட்டுத் தலங்கள், உயிர் மற்றும் உடைமைகள், மானம், மரியாதை, அரசியல் சமூக பொருளாதார வாழ்வியல் போன்ற நிலைகளிலும் கூட மிக மிகப்பின்தங்கிய நிலையில்தான் முஸ்லிம்கள் இருக்கின்றனர். மேலும் மத்தியப் பிரதேசத்திலுள்ள போபாலில் ஏற்பட்ட விஷவாயுக் கசிவின் இழப்புகள், ஜபல்பூர் மற்றும் ஜாம்ஷெட்பூரில் நடந்துவரும் வகுப்புவாத துவேஷசத்தின் முடிவில்லாத சோகங்கள், பாபரி மஸ்ஜிதின் இடிப்பு, பிலிப்பைன்ஸ்', சீனா, ரஷ்யா, மங்கோலியா, பர்மா, யுகோஸ்லாவாகியா போன்ற நாடுகளில் வாழுகின்ற இஸ்லாமிய நாடுகளின் மீது கட்டவிழ்த்து விடப்படும் அடக்குமுறை மற்றும் அராஜகங்கள், பாகிஸ்தானில் நடந்து வரும் பாரம்பரியச் சண்டைகள், இஸ்ரேலியர்களின் கரத்தால் பத்து லட்சத்திற்கும் அதிகமான முஸ்லிம்கள் கொன்றொழிக்கப்பட்ட கொலைவெறித் தாக்குதல்கள், அரபியர்கள் பாலஸ்தீனியர்கள் மீது தொடுத்த அடக்குமுறை அட்டகாசங்கள், அதன்பின் பாலஸ்தீனரே தமக்குள் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்ட கோரங்கள், துருக்கி, எகிப்து, ஷாம், லிபியா, இந்தோனேஷியா, மலேஷியா போன்ற நாடுகளில் மிகப்பெரும் அளவில் முஸ்லிம்கள் மீது நடைபெற்ற அநியாயங்கள், ஆப்கானிய முஸ்லிம்களிடையே தொடர்கதையாகிப் போன துயரங்கள், ஈரானுக்கும் ஈராக்குக்கும் இடையே கடந்த பத்து ஆண்டுகளாக நடைபெற்று வரும் போரில் எண்ணிலடங்காதோர் செத்து மடிந்த துயரங்கள், எத்தியோப்பியாவில் ஏற்பட்ட வரலாறு காணாத பஞ்சம், ஐரோப்பா மற்றும் ஆப்பிரிக்கா ஆசயக் கண்டங்களுக்கிடையே ஏற்பட்ட புகைச்சலில் கணக்கில்லாத முஸ்லிம்கள் சிறைபிடிக்கப் பட்டு சிறைக் கூடங்களில் சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவித்து வரும் அவலங்கள் கேவலங்கள் போன்ற

இவைகளெல்லாம் நமக்கு எதை உணர்த்துகின்றன? நபியவர்களின் எச்சரிக்கை ஒன்றைப் பாருங்கள்...

'ஸவ்பான் என்னும் நபித்தோழர் தமது நபியைக் கொண்டு அறிவிக்கிறார், வெகுவிரைவில் உங்களின் மீது இன்னொரு சமூகத்தார் கணக்கின்றி வெளிப்படுவர். எவ்வாறு உணவருந்துவோர் உணவுத் தட்டுகளின் மீது வருவார்களோ அவ்வாறு என்ற போது, அப்போது ஒருவர், அண்ணலாரே! அப்போது எண்ணிக்கையில் நாம் குறைவாக இருப்போம் என்று சொல்ல, அதற்கு நபியவர்கள் இல்லை. அப்போது எண்ணிக்கையில் நீங்கள் மிகைத்திருப்பீர்கள். இருப்பினும் நீங்கள் சமுத்திரத்தில் தோன்றும் நீர்க்குமிழிகளைப் போல் இருப்பீர்கள். பின்னும் இறைவன் உங்களுடைய விரோதிகளது உள்ளங்களிலிருந்து உங்களைப் பற்றிய அச்சத்தை அகற்றி விடுவான். அத்தோடு உங்களுடைய உள்ளங்களில் சோர்வையும் போட்டு விடுவான் என்று சொல்ல, அதற்கு ஒரு தோழர், அண்ணலாரே! சோர்வு எப்படி வரும்? என்று கேட்க, அதற்கு நபியவர்கள், உலகின் மீதுள்ள பற்றும், மரணத்தின் மீதுள்ள அச்சமும்தான் அதற்கு காரணமென்று கூறினர்.'

-நூல்: பைஹகீ, அபூதாவூது

**என்ன? உண்மையான வேதனை மீதமுள்ளதா?**

கேவலமும் வேதனையும் வந்து சூழ்ந்து விட்ட இன்றைய காலத்தைதான் வேதனைக்குரிய காலமென்று கூறுகிறோம். அதேநேரம் இன்று நாம் அனுபவித்துக் கொண்டுள்ள இந்த இழிநிலையை நமது வேதனைக்குரிய துவக்க காலமென்று நாம் சொன்னால்? ஒருவேளை இறைவனுடைய இந்த வேதனை என்னும் கடுமையாக்கப்பட்டால்? திசைமாறி சென்ற முந்தைய சமூகத்தார் மீ:து இறைவேதனை இறங்கியபோது அவர்களனைவரும் இம்மண் பரப்பிலிருந்தே மறைக்கப்பட்டுப் போயினர். என்ன? இத்தனைக்குப் பிறகும் முஹம்மத் நபியவர்களின் உம்மத்துக்களான சமூக மக்கள் இவ்வளவு கேவலத்தையும் இழிவையும் அனுபவித்த பிறகும் கூட அவனை அஞ்ச வேண்டாமா? குறைந்தபட்சம் குர்ஆனைக் கொண்டாவது நாம் உணர்வு பெற வேண்டாமா? குர்ஆன் கூறுளுவதைப் பாருங்கள்...

يُدَبِّرُ الْأَمْرَ مِنَ السَّمَاءِ إِلَى الْأَرْضِ ثُمَّ يَعْرُجُ إِلَيْهِ فِي يَوْمٍ كَانَ مِقْدَارُهُ أَلْفَ سَنَةٍ مِّمَّا تَعُدُّونَ

**'வானத்திலிருந்து பூமயின் பக்கமாக அவன் தனது ஒவ்வொரு கட்டளையையும் முறைப்படுத்துகிறான். அதன்பின் அக்கட்டளைகள் ஒருநாளில் திரும்பிவிடும். அதன் அளவு உங்களிடம் ஆயிரம் ஆண்டுகளாகும்.'**

-அல்குர்ஆன் ஸூரா ஸஜ்தா வசனம் 5

இதில் பெரும்பான்மையான வேத வியாக்கியானிகள் இவ்வசனத்தின் கருத்தை மறுமை நாளுக்குரியதாகக் கணிக்கின்றனர். ஆனால் திருமறையிலுள்ள சூறா மஆரிஜில் மறுமையின் ஒரு நாளுடைய அளவைக் குறித்து,...

فِي يَوْمٍ كَانَ مِقْدَارُهُ خَمْسِينَ أَلْفَ سَنَةٍ

**'அங்கு ஒரு நாளின் அளவு ஐம்பதாயிரம் ஆண்டுகளாகும்'.**

என்று கூறப்படுவதால் இறைவனுடைய கட்டளை முறைப்படுதவதற்குரிய ஒருநாள் என்பது இப்பூமியில் ஆயிரம் வருடங்களாகும் எனத் திருமறை மிக அழுத்தமாகக் கூறுகிறது. மேலும் இந்த ஒரு நாள் என்பது பற்றிய விளக்கத்தை திருமறையின் சூறா ஹஜ்ஜிலும் பார்க்கலாம். அதாவது....

أَفَلَمْ يَسِيرُوا فِي الْأَرْضِ فَتَكُونَ لَهُمْ قُلُوبٌ يَعْقِلُونَ بِهَا أَوْ آذَانٌ يَسْمَعُونَ بِهَا ۖ فَإِنَّهَا لَا تَعْمَى الْأَبْصَارُ وَلَٰكِن تَعْمَى الْقُلُوبُ الَّتِي فِي الصُّدُورِ وَيَسْتَعْجِلُونَكَ بِالْعَذَابِ وَلَن يُخْلِفَ اللَّهُ وَعْدَهُ ۚ وَإِنَّ يَوْمًا عِندَ رَبِّكَ كَأَلْفِ سَنَةٍ مِّمَّا تَعُدُّونَ وَكَأَيِّن مِّن قَرْيَةٍ أَمْلَيْتُ لَهَا وَهِيَ ظَالِمَةٌ ثُمَّ أَخَذْتُهَا وَإِلَيَّ الْمَصِيرُ

**'இன்னும் வேதனையைக் குறித்து உம்மிடம் அவர்கள் அவசரப்படுத்துகிறார்கள். ஆனால் அல்லாஹ் தனது வாக்குறுதிக்கு மாறு செய்யவே மாட்டான். இன்னும் உம துரட்சகனிடத்தில் ஒரு நாளானது நீங்கள் கணிக்கிற ஆயிரம் வருடத்தைப் போன்றாகும்.**

**எனவே அவர்கள் பூமியில் பயணம் செய்யவில்லையா? அவ்வாறு (செய்திருப்பின்) அவர்களுக்கு இதயங்கள் இருக்கும். அதைக் கொண்டு அவர்கள் உணர்வார்கள். அல்லது செவிகள் (இருக்கும்) அவற்றைக் கொண்டு அவர்கள் செவியேற்பார்கள். ஆகவே திடனாக அது பார்வைகளை குருடாக்காது. எனினும் நெஞ்சுகளிலுள்ள இதயங்கள் குருடாகிவிடும்.**

**இன்னும் ஊர்களிலிருந்து எத்தனையோ அவைகள் அநியாயம் செய்தவைகளாக இருக்கிற நிலையில் அவைகளுக்கு தாமதம் தந்து பின்னர் அவைகளைப் பிடித்திருக்கிறேன். இன்னும் என்னிடமே (அவர்களுக்குரிய) மீளுதல் இருக்கின்றது.'**

-அல்குர்ஆன், சூறா ஹஜ் வசனம் 46,47,48

இது போன்றே திருமறையின் பிரிதோர் அத்தியாயமான சூறா சபாவில்...

قُل لَّكُم مِّيعَادُ يَوْمٍ لَّا تَسْتَأْخِرُونَ عَنْهُ سَاعَةً وَلَا تَسْتَقْدِمُونَ

**'இன்னும் அவ்வாக்குறுதி எப்போது நிறைவேறும் என்று வினவுகின்றனர். உங்களுக்கு ஒரு நாள் மட்டுமே வாக்களிக்கப்பட்டுள்ளது. அதில் ஒரு வினாடி கூட முன்பின்னாகாது என்று கூறுங்கள்'** – அல்குர்ஆன் சூறா ஸபா, வசனம் 30.

ஆக மேற்கண்ட மூன்று அத்தியாயங்களிலும் காணப்படும் வசனங்களை மிக்க கவனமாக யோசித்துப் பாருங்கள். என்ன? இறைவன் இப்பூமியில் எதை முறைப்படுத்துகிறானோ அதை

அவன் ஒரு நாளில், நமது கணக்கில் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் திரும்பப் பெற்றுக் கொண்டு அதன்பின் வேறொன்றை அனுப்புகிறான். இதில் வேதனை என்பது முந்தைய சமூக மக்களுக்குத்தானேயன்றி நமக்கல்ல. அத்துடன் மறுமைவரை நமக்கு தவணையும் வழங்கப்பட்டுள்ளது என்றும் எண்ணிக் கொண்டுள்ளனர். அவர்களுக்கு இறைவன் ஆயிரம் வருடங்கள் வரை மட்டும்தான் வாக்களித்துள்ளான் என்பதை புரிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

அவசரப்'பட வேண்டாம். ஆயிரம் வருடங்கள்தான் முடிந்து விட்டதே! அவன் ஏன் இன்னும் தனது வேதனையை நம் மீது இறக்கவில்லை? தனது வாக்கை இன்னும் ஏன் நிறைவேற்றவில்லை? என்பதாக யோசிக்கலாம். அவர்கள் அபூதாவூத் என்னும் கிரந்தத்தில் காணப்படும் நபியவர்களின் அருள்வாக்கை கொஞ்சம் கவனிக்க வேண்டும். அது...

**'ஸஃத் பின் அபீ வக்காஸ் என்னும் நபித்தோழர் தமது நபியவர்களைக் கொண்டு அறிவிக்கிறார், திடனாக எனது சமூக மக்கள் என்னுடைய இறைவனது பார்வையில் இத்தனை கீழான நிலைக்கு ஆளாகிவிட மாட்டார்களென நம்புகிறேன். என்னுடைய இறைவன் ஒரு அரை நாளாவது அவர்களுக்கு தவணையளிக்'காதிருக்க மாட்டான் என்று சொல்ல, அப்போது ஸஃத் அரை நாள் என்பது எவ்வளவு எனக் கேட்க, அதற்கவர்கள், ஐநூறு ஆண்டுகள் என்றனர்'**

இன்னும் **அல்லாமா ஜலாலுத்தீன் சுயூத்தி என்பாரின் ஆய்வுப்படி பூமியில் அருமை நபியவர்களின் சமூக மக்கள் நபியவர்களுடைய மறைவுக்குப் பின் ஆயிரத்து ஐநூறு ஆண்டுகள் வரை இருப்பர் எனக் கூறுகின்றனர்.**

நூல்: மிஷ்காத், ஆசிரியர்: நவாப் குத்புத்தீன் கான் தெஹ்லவி.

**மாற்றுக் கூட்டம் பற்றிய எச்சரிக்கை**

இப்போது நாம் இந்த இடத்தில் மிகவும் ஆழமாக யோசிக்க வேண்டிய ஒரு விசயத்தை உங்களின் கவனத்திற்கு தரவேண்டிய நிர்பந்தத்தில் இருக்கிறோம். அது, ஒவ்வொரு நபியுடைய வருகைக்குப் பிறகும் அவரது சமுதாயத்தினர் மீது நிர்பந்திக்கப்படும் கடமையாதெனில், அவர்கள் இறைவனுடைய தரப்பிலிருந்து அனுப்பப்பட்டுள்ள புதிய கல்வி ஞானங்களின் வழிகாட்டலில் முந்தைய அனைத்து கூட்டத்தாரையும் திருத்தியமைக்க முனைய வேண்டும் என்பதாம். இதைத்தான் உலக உம்மத்தின் சாம்ராஜ்யம் என்று அழைக்கப்படுகிறது. இன்னும் நபியவர்களின் வெளிப்பாட்டினை தொடர்ந்து பனீ இஸ்ரவேலர்களுடைய கூட்டத்தை உலக சக்ராதிபத்தியத்திலிருந்து அகற்றி உம்மத்தே முஹம்மதிய்யாவு(முஹம்மது நபியின் சமூகத்தாரு)க்கு இறுதிநாள் வரை இவ்வுலகின் அனைத்து கூட்டத்தாருடைய சக்ராதிபத்தியமும் அருளப்பட்டது. இப்பூமிக்கு இனி வேறு எந்த நபியும் வரப்போவதில்லை. இவ்வாறே நபியவர்களின் சமூகத்தினர் தான் இனி இறுதிநாள் வரை மனிதகுலத்தில் காணப்படும் களங்கங்களை அகற்றி உலகோரை வழி நடத்திச் செல்ல வேண்டும். என்ன? இச்சமூகத்தினர் இன்றுள்ள நிலையில் அதற்குரிய தகுதியை தக்க வைத்துக் கொண்டுள்ளனரா?

அதே நேரம் இவர்களின் சக்ராதிபத்தியம் உலகம் உள்ளவரை நிலைபெற்று இருந்தேயாக வேண்டும். காரணம் முஹம்மத் நபியவர்கள் இறுதி நபியாக இருப்பதைப் போல அவர்களின் சமூகத்தினர்தான் உலகின் சக்ராதிபதிகளாகவும் இறுதிவரை இருப்பார்கள். அவ்வாறாயின் இதுவரை நாம் கூறியவை அனைத்தையும் மீண்டும் ஒருமுறை ஒருங்கிணையுங்கள்.

முஹம்மத் நபியவர்களின் சமூகத்தாருக்கு ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்குப் பின் அவர்கள் மீது இறக்கப்படப் போகும் இறைவேதனை குறித்த எச்சரிக்கை! இதுபோன்றே கஃபா களங்கப்படுத்தப்பட்ட பின் அரபியரின் (ஆன்மா) அழிந்து போவதை குறித்த செய்திக் குறிப்பு!! இவ்வாறே மறைந்தவை மீண்டும் வெளியாகப் போவதை குறித்த அதன் தாக்கங்கள்!!! இத்தனைக்குப் பிறகும் உம்மத்துகளின் சாம்ராஜ்ஜியம் நிலைத்திருக்கும்? எப்படி? எழுதும்போதே நமது பேனா நடுங்குகிறது. என்ன? இச்செய்திகளனைத்தும் ஒரே இடத்தை திரும்பத் திரும்ப கோடிட்டுக் காட்டுகிறதா? இல்லையா?

'மாற்றுக் கூட்டம்'இவர்களைக் குறித்து திருமறை பல்வேறு இடங்களில் பலவகையான முன்னறிவிப்புக்களை கூறிக் கொண்டிருக்கிறது. ஆம். உம்மத்தே முஹம்மதீ (நபியவர்களின் சமூகத்தார்) இவ்வுலகின் சக்ராதிபதிகளாக மீண்டும் உயருவர். ஒரு மாற்றுக் கூட்டத்தார் இஸ்லாத்தை ஏற்பதன் மூலம் அந்த மாற்றுக் கூட்டத்தாரைக் குறித்த திருமறை வசனங்களில் சிலவற்றை இப்போது நாம் பார்ப்போமா?

إِن يَشَأْ يُذْهِبْكُمْ أَيُّهَا النَّاسُ وَيَأْتِ بِآخَرِينَ ۚ وَكَانَ اللَّهُ عَلَىٰ ذَٰلِكَ قَدِيرًا

**'அவன் விரும்பினால் உங்களை போக்கிவிட்டு மனிதர்களே! மற்றவர்களை அவன் கொண்டு வருவான். இன்னும் அல்லாஹ் அதன் மீது பேராற்றலுள்ளவன்'** –அல்குர்ஆன் சூறா நிஸா, வசனம் 133.

ذَٰلِكَ بِأَنَّ اللَّهَ لَمْ يَكُ مُغَيِّرًا نِّعْمَةً أَنْعَمَهَا عَلَىٰ قَوْمٍ حَتَّىٰ يُغَيِّرُوا مَا بِأَنفُسِهِمْ ۙ وَأَنَّ اللَّهَ سَمِيعٌ عَلِيمٌ

**'இது திடனாக அல்லாஹ் ஒரு பாக்கியத்தை – அதனை ஒரு சமூகத்தாருக்கு அளித்திருப்பதை அவர்களின் ஆண்மாவில் உள்ளதை அவர்கள் மாற்றிக் கொள்ளும்வரை அவன் மாற்றுபவனாக இல்லை. இன்னும் நிச்சயமாக அல்லாஹ்' செவியேற்பவன். மிகவும் அறிந்தவன்.'** – அல்குர்ஆன் சூறா அன்ஃபால், வசனம் 5.

هَا أَنتُمْ هَٰؤُلَاءِ تُدْعَوْنَ لِتُنفِقُوا فِي سَبِيلِ اللَّهِ فَمِنكُم مَّن يَبْخَلُ ۖ وَمَن يَبْخَلْ فَإِنَّمَا يَبْخَلُ عَن نَّفْسِهِ ۚ وَاللَّهُ الْغَنِيُّ وَأَنتُمُ الْفُقَرَاءُ ۚ
وَإِن تَتَوَلَّوْا يَسْتَبْدِلْ قَوْمًا غَيْرَكُمْ ثُمَّ لَا يَكُونُوا أَمْثَالَكُم

**'ஆம். உங்களில் சிலர் அவர்களை அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யுங்கள் என்று அழைக்கப்பட்டால் அவர் கஞ்சத்தனம் செய்கிறார். அன்றி யார் கஞ்சத்தனம் செய்கிறாரோ**

**அவர் தனது ஆன்மாவுக்குத்தான் கஞ்சத்தனம் செய்கிறார். இன்னும் அல்லாஹ் யாரிடமும் தேவையானவன் அல்ல. மாறாக நீங்கள் அனைவருமே அவனிடம் தேவையாகின்றவர்கள். பின்னும் நீங்கள் புறக்கணிப்பீர்களாயின் அல்லாஹ் உங்களின் இடத்திற்கு வேறொரு கூட்டத்தாரைக் கொண்டு வருவான். மேலும் அவர்கள் உங்களைப் போன்று இருக்க மாட்டார்கள்.'** –அல்குர்ஆன் சூறா முஹம்மத், வசனம் 38.

وَآخَرِينَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوا بِهِمْ ۚ وَهُوَ الْعَزِيزُ الْحَكِيمُ

'இன்னும் அவர்களில் (உம்மிகளிலுள்ள) இறுதியானவர்களுக்காக உம்மை வெளிப்படுத்தியுள்ளோம். அவர்கள் இன்னும் அதில் இணையவில்லை. மேலும் அவன் கண்ணியமும் நுணுக்கமும் உடையவன்'. -அல்குர்ஆன் சூறா ஜும்ஆ, வசனம் 3

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا مَن يَرْتَدَّ مِنكُمْ عَن دِينِهِ فَسَوْفَ يَأْتِي اللَّهُ بِقَوْمٍ يُحِبُّهُمْ وَيُحِبُّونَهُ أَذِلَّةٍ عَلَى الْمُؤْمِنِينَ أَعِزَّةٍ عَلَى الْكَافِرِينَ

يُجَاهِدُونَ فِي سَبِيلِ اللَّهِ وَلَا يَخَافُونَ لَوْمَةَ لَائِمٍ ۚ ذَٰلِكَ فَضْلُ اللَّهِ يُؤْتِيهِ مَن يَشَاءُ ۚ وَاللَّهُ وَاسِعٌ عَلِيمٌ

**'விசுவாசிகளே! உங்களில் எவரேனும் தனது மார்க்கத்தை விட்டு திரும்பி விடுவாராயின், விசுவாசிகள் மீது இரக்கமுள்ள, காபிர்கள் மீது கடுமையாக இருக்கும் ஒரு கூட்டத்தை அல்லாஹ் (அவர்களுக்கு) பகரமாகக் கொண்டு வருவான். அவர்களை அவன் நேசிப்பான். அவர்களும் அவனை நேசிப்பார்கள். அல்லாஹ்வின் பாதையில் அவர்கள் போர் புரிவார்கள். இன்னும் பழிப்பவனின் பழிப்பை(கண்டு) அஞ்ச மாட்டார்கள். இது அல்லாஹ்வின் கடாட்சமாகும். அவன் நாடியவருக்கு இதனை கொடுப்பான். மேலும் அல்லாஹ் விசாலமானவன் (மிகவும்) அறிந்தவன்'** – அல்குர்ஆன் சூறா மாயிதா, வசனம் 54.

إِلَّا تَنفِرُوا يُعَذِّبْكُمْ عَذَابًا أَلِيمًا وَيَسْتَبْدِلْ قَوْمًا غَيْرَكُمْ وَلَا تَضُرُّوهُ شَيْئًا ۗ وَاللَّهُ عَلَىٰ كُلِّ شَيْءٍ قَدِيرٌ

**'நீங்கள் புறப்படாவிட்டால் உங்களை நோவினை செய்யும்படியான வேதனையாக வேதனை செய்வான். இன்னும் உங்களையல்லாத ஒரு கூட்டத்தாரை (உங்களுக்கு) பகரமாக்குவான். ஆனால் (அவனுக்கு) ஒரு வஸ்துவையும் நீங்கள் தீங்கிழைக்க முடியாது. மேலும் அல்லாஹ் அனைத்து வஸ்த்துக்களின் மீதும் பேராற்றல் உள்ளவன்.'** – அல்குர்ஆன் சூறா தௌபா, வசனம் 39.

அகில உலகின் அதிபதியான அல்லாஹ்விடம் நாம் பாதுகாவல் தேடுகிறோம். **'இதென்ன! திரும்பத் திரும்ப இன்னொரு கூட்டத்தாரைக் கொண்டு வருவேன் என்னும் பயமுறுத்தல்'** இது **'புலி வந்து விட்டது'** என்பதைப் போலல்லவா இருக்கிறது? இந்நிலையில் பிரதிநிதி வலுவாக இருக்கிறாரா என்ன? சந்தேகத்திற்கிடமின்றி இறைவனின் வாக்கு என்பது சத்தியமானது. நீங்களும் நானும் எத்தனைதான் ஆசைப்பட்டாலும் படாவிட்டாலும் இறைவனுடைய நாட்டத்தை ஒருபோதும் மாற்றுவதென்பதும் அறவே நடக்காது. இருப்பினும்

நாம் முயல வேண்டும். அது நமது கடமையும் கூட. ஆம். இறை வேதனையைக் கொண்டு பிடிக்கப்படப் போகும் அக்கூட்டத்தாரை விட்டும் நம்மை நாம் தற்காத்துக் கொள்ளலாமல்லவா!

இன்னும் எந்தக் கூட்டத்தாரை இறைவன் உம்மத்தே முஹம்மதிய்யாவில் (முஹம்மத் நபியவர்களின் சமூகத்தாரோடு) இணைந்து நமக்குப் பகரமாக வெளிக் கொண்டு வரப்போகிறானோ அவர்களுடைய சிரசுகளின் மீது சூட்டப்படப்போகும் ராஜ கிரீடத்தை, அவர்கள் பெறப்போகும் ஈமானை, அதை அவர்கள் தமது இதயங்களில் ஒளியேற்றுவதற்கு நமது முயற்சியும் ஒரு பக்க துணையாக அமையட்டுமே! இப்போது அவ்வுயர் நிலையை பெறப்போகும் அக்கூட்டம் எது என்பதை குறித்த நபியவர்களின் அருள்வாக்கைப் பாருங்கள்.

எப்போது அபூதர் கிபாரி என்னும் நபித்தோழர் மக்காவில் வைத்து நபியவர்களின் திருக்கரத்தைப் பற்றி இஸ்லாத்தை ஏற்றாரோ அப்போதே அவர் சொன்னார், '**எனக்கு பூமியின் ஒரு பகுதியைக் காட்டப்பட்டது. அது பேரீத்தம் பழங்களின் தோட்டங்களும் , பயிர் பச்சைகளும் அதிகமாக உள்ள பகுதியாகும். அது மதீனாவைத் தவிர வேறொரு பகுதியல்ல என்றே நான் நம்புகிறேன். என்ன? எனது இச்செய்தியை நீங்கள் உங்களின் கூட்டத்தாருக்குத் தெரிவிப்பீர்களா? அவர்களும் அதைக் கொண்டு பலனடைவர். அத்துடன் உங்களுக்கும் அதற்குரிய பலன் கிடைக்குமென்றனர்.**' –நூல்: முஸ்னத், முஸ்லிம், தப்ரானி.

ஆகையால் எந்தக் கூட்டம் தனது பழைய மார்க்கத்தை விட்டும் திரும்பி இஸ்லாத்தை ஏற்க உள்ளதோ அக்கூட்டத்திற்கு புனித இஸ்லாத்தின் தௌ;ளிய உண்மைகளை வெளிச்சமிட்டுக் காட்டுவோரில் நாம் முன்னுரிமை பெற்றவர்களாக ஆகலாமில்லையா!

**என்ன? நாம் இறை விசுவாசிகளா?**

மேற்கொண்டு நூலின் பக்கங்களை புரட்டும் முன் உங்களின் எண்ணத்திலுள்ள தவறான கருத்து ஒன்றை நீங்கள் முதலில் நீக்கிக் கொள்ள வேண்டும். அது, வெறும் நாவினால் மட்டும் லாஇலாஹ இல்லல்லாஹ் எனக் கூறியதன் மூலம் நமக்கு சுவர்க்கம் நிச்சயமாகிவிட்டதென்ற நினைப்புத்தான். இப்படித்தான் யூதர்களும் வாதித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் அதைப் பற்றி சொல்லும்போது, ஒருவேளை நாங்கள் நரகத்திற்குச் சென்றாலுங்கூட சில காலங்களுக்குப் பின் எங்களது பாவங்களுக்குரிய தண்டனையை அனுபவித்து விட்டு மீண்டும் சுவர்க்கத்திற்கு வந்து விடுமோமென்று கூறிக் கொண்டிருந்தனர். இதைக் குறித்த நபிமொழி ஒன்றைப் பாருங்கள்...

**'நபிகள் நாதர் கூறினர், நீங்கள் கிட்டதட்ட முந்தைய சமூகத்தாரைப் போன்று ஆகிவிடுவீர்களென்று சொன்னபோது, அது கேட்ட தோழர்கள் முந்தைய சமூகத்தார் என்பதைக் கொண்டு யூத, கிறித்துவர் என்பது கருத்தா? என்று கேட்க, அதற்கு நபியவர்கள் வேறென்ன? என்றார்கள்.'**

யாருக்குத் தெரியும்? நம்மில் எத்தனைபேர் விசுவாசிகளாக இருக்கின்றனர்? எத்தனை பேர் நயவஞ்சகர்களாக இருக்கின்றனர்? எத்தனைபேர் தமது செயல்பாடுகளில் குப்ரை (இறை

மறுப்பை) உடையவர்களாக இருக்கின்றனரென்று. இதில் நயவஞ்சகத்தனத்தை பற்றி தெரிந்து கொள்ள கலீபா உமரவர்களின் சம்பவமொன்றைப் பாருங்கள்...

**'கலீபா உமர் அவர்கள் தமது ஆட்சி காலத்தில் ஒருநாள் நபியவர்களின் அளப்பரிய ரகசியங்களை தமது இதயத்தில் இருத்தி வைத்துக் கொண்டிருந்த தோழர் ஹுதைபா என்பாரின் வீட்டுக் கதவை வந்து தட்டுகின்றனர். அப்போது அவர்களின் முகமெல்லாம் புழுதி படிந்துள்ளது. ஹுதைபாவை நோக்கி உமரவர்கள், ஹுதைபாவே! நான் கேட்பதற்கு உண்மையைச் சொல்ல வேண்டும். இறைவன் மீது ஆணையிடுங்கள் என்று கேட்க, அதற்கவர்கள், கேளுங்கள் அமீருல் முஃமினீனே! என்றனர். அதற்கு உமரவர்கள், இல்லை, நான் கேட்பதற்கு உண்மையைச் சொல்வேனென இறைவன் மீது ஆணையிடுங்கள் என்றவர்கள், கெஞ்சும் குரலில், உங்களுக்கு நபியவர்கள் மதீனாவிலுள்ள அனைத்து நயவஞ்சகர்களின் பெயரையும் அறிவித்துத் தந்தார்களே! அதில் என்னுடைய பெயர் இல்லையே! என்று வினவினர்.'**

அல்லாஹ்! அல்லாஹ்!! இப்பூமியிலேயே யார் சுவர்க்கவாதியென நபியவர்களால் சுபச் செய்தி தரப்பட்டார்களோ, எனக்குப் பின் நபியில்லை, அவ்வாறு இருப்பின் அவர் உமராகத்தான் இருப்பார் என நபியவர்கள் யாரைப் பற்றி பெருமையாகச் சொன்னார்களோ அவர், தான் முனாபிக்காகி விடுவோமோ என அஞ்சுகிறார் எனில் மேலும் அவர் கூறுவதைப் பாருங்கள்...

**'ஈமான் என்பது அச்சத்திற்கும் ஆதரவுக்கும் இடையில் அமைந்ததோர் நிலையாகும். இதில் ஒருவேளை உலகோர் அனைவரும் சுவர்க்கம் சென்று ஒரேயொருவர் மட்டும் செல்லவில்லையாயின் அந்த ஒருவன் நானாக இருக்குமோ என்னும் அச்சம் என்னை விட்டும் அகலாது. அவ்வாறின்றி ஒரேயொருவரைத் தவிர மற்றவர்களனைவரும் நரகத்திற்கு செல்வார்களாயின் அந்த ஒருவன் நானாக இருப்பேனோ என்பதில் இறையருளை ஆதரவு வைப்போரில் நானும் ஒருவனாக இருப்பேன் எனக் கூறுகின்றனர்.'**

கொஞ்சம் யோசியுங்கள். விசுவாசத்திற்கும் நயவஞ்சகத்தனத்திற்கும் இடையேயுள்ள அளவுகோலை கையிலேந்தி கவனிப்போமாயின் இன்று எத்தனை பேரை நாம் விசுவாசிகளாக கணக்கிலெடுக்க முடியும்.? அதே நேரம் நயவஞ்சகன் நரகின் அடித்தட்டில் வைத்தல்லவா வேதனை செய்யப்படுவான் என்பதாக வேதம் எச்சரிக்கின்றது?

**அது எந்தக் கூட்டம்?**

இப்போது வாருங்கள்! எந்தக் கூட்டத்தை முன்னிறுத்தி இறைவன் தனது வேதத்தில் இஸ்லாமியர்களைப் பார்த்து எச்சரிக்கிறானோ, இன்னும் எந்தக் கூட்டத்தை இன்றுள்ள இஸ்லாமிய சமூகத்திற்கு பகரமாக்கி உலக சக்ராதிபத்தியத்தை அவர்களுக்கு வழங்கப் போவதாக கூறுகிறானோ அவர்களை நாம் இனங்காணும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் இறைவனும் அவனுடைய தூதரும் எந்த மாற்றத்திற்குரிய செய்தியையும் அதற்குரிய நேரத்தையும் நமக்கு அறிவத்துத் தந்துள்ளார்களோ அந்த நேரம் எது என்பதையும் அதற்குரிய அடையாளங்களையும் கூட நமக்கு அறிவித்துத் தந்துள்ளனர்.

அதைக்குறித்த வேத வசனங்களை நாம் முன்னால் உங்களின் பார்வைக்கு தந்திருக்கிறோம். இப்போது அவ்வேத வசனங்களுக்குரிய விளக்கங்களை பார்ப்போம்.

சூறா முஹம்மதின் 38 வது வசனத்திற்குரிய விரிவுரையில் அப்துர் ரஸ்ஸாக், அப்திப்னு ஹமீத், இப்னு ஸுரைர், இப்னு அபீ ஹாத்தம், தப்ரானீ, பைஹகீ போன்றோர் அபூஹுரைரா என்னும் நபித்தோழரைக் கொண்டு ஒரு நபிமொழியை எடுத்துக் காட்டுகின்றனர். அதாவது....

**'அருமை நபியவர்கள், 'அன்றி நீங்கள் முகம் திருப்பிக் கொண்டால்' என்னும் வசனத்தை ஓதினர். அப்போது தோழர் பெருமக்கள் நபியவர்களை நோக்கி, இறைத்தூதரே! யார் அவர்கள்? நாம் முகத்தை திருப்பிக் கொள்ளும்வேளையில் நமக்குப் பகரமாக நமது இடத்திற்கு வந்து சேருவர்? என்று கேட்க, அதற்கு நபியவர்கள், ஸல்மானின் தோளை தட்டிக் கொடுத்து, இவர்தான். இவருடைய கூட்டம்தான் என்றதோடு யாருடைய கரத்தின் என்னுடைய ஆன்மா இருக்கிறதோ அவன் மீது ஆணையாக ஒருவேளை இறைநம்பிக்கை பாதாளத்திற்குள் புதைந்து விட்டிருந்தாலும் கூட அவர்கள் அதைத் தேடிக் கொண்டு அங்கேயும் சென்று விடுவார்கள் என்றனர்'**

-நூல்: பத்ஹுல் கதீர், பாகம் 5 பக்கம் 41.

அடுத்து திருமறையின் மற்றோர் அத்தியாயமான சூறா ஜும்ஆவுடைய 3வது வசனத்திற்குரிய விரிவுரையிலும் இதே போன்றதொரு தலைப்பைக் கொண்ட ஓர் அறிவிப்பு புகாரி என்னும் கிரந்தத்திலும் காணப்படுகின்றது. இவ்வாறே சூறா மாயிதாவின் 54 வது வசனத்திற்குரிய விரிவுரையில் தப்ஸீர் பத்ஹுல் கதீர் என்னும் கிரந்தத்தில் குறிக்கப்பட்டுள்ள அறிவிப்பொன்றையும் கீழே தருகிறோம். அதையும் பாருங்கள்.....

'இப்னு ஸுரைர் என்பார் ஷரீஹ் பின் உபைத் என்பாரைக் கொண்டு அறிவிக்கின்றனர், இறைவன் இவ்வசனத்தை இறக்கியபோது உமரவர்கள் நபியவர்களை நோக்கி, இறைத்தூதரே! இவ்வசனத்தில் குறிக்கப்படுவோர் நானும் எனது கூட்டத்தாருமா? எனக் கேட்க, அதற்கு நபியவர்கள், இல்லை இவரும் இவருடைய கூட்டத்தாரும் என்றனர். அவர் அபூ மூஸா அஷ்அரி என்பாராகும். இயாலுல் அஷ்அரி என்பார் கூறுகிறார், நபியவர்கள் அபூமூஸா அஷ்அரியை சுட்டிக் காட்டி இவரும் இவருடைய கூட்டத்தாரும் என்றனர் எனக் கூறுகிறார்.'

-நூல்: முஸ்னத், திர்மிதி, பைஹகி, முஸ்தத்ரக் ஹாகிம்.

**'அபூமூஸா அஷ்அரி என்பார் கூறுகிறார் நான் நபியவர்களின் திருமுன் இவ்வசனத்தை ஓதியபோது நபியவர்கள் என்னை நோக்கி, அபூ மூஸா அஷ்அரியே! இது உனது கூட்டம்தான். எமனுடைய கூட்டம் என்றனர்'.**

நூல்: பைஹகீ, இப்னு அஸாகீர், ஹாகிம்.

**'இப்னு அப்பாஸ் அவர்கள் அது என்னுடைய கூட்டத்தாராகும் என்கின்றனர்.'**

www.sufimanzil.org

-நூல்: பத்ஹுல் கதீர், பாகம் 2 பக்கம் 49, 50.

மேலும் சூறா தௌபாவின் 39வது வசனத்திற்குரிய விரிவுரையில் பத்ஹுல் கதீர் பாகம் 2 பக்கம் 345 ல் ஷவ்கானி என்பார் கூறுகிறார், இந்த வசனங்களிலுள்ள கருத்து வேறுபாட்டுக்குரிய பிரச்சனை என்னவென்றால் அவர்கள் யார் என்பதேயாகும். ஏனெனில் அவர்கள் எமன்வாசிகள் என்றும், பாரசீகத்தவர் என்றும் இருவகையான குறிப்புகள் காணப்படுவதால தகுந்த ஆதாரமின்றி அவ்கள் யார் என்பதை நம்மால் திட்டவட்டமாகக் கூறமுடியாதென்று சொல்கிறார்.

அவருடைய கருத்து ஒருபுறம் இருக்கட்டும். இப்போது நீங்கள் கொஞ்சம் நிதானமாக யோசித்துப் பாருங்கள். நாம் இறைவனிடமே பாதுகாவல் தேடுகிறோம். என்ன? இறைவனின் இனிய தூதர் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல தோழர்களுக்கிடையே, ஒருபோது ஸல்மான் பார்ஸிக்கு முன் பாரசீகத்தவர் (ஈரானியர்) என்றும், இன்னொரு போது அபூமூஸா அஷ்அரிக்கு முன் எமன் தேசத்தவர் என்றும் கூறுகின்றனர் எனில் நபியவர்களின் திருநாவு எப்போதுமே உண்மையை மட்டும்தானே உரைத்துள்ளது. அதுதானே வரலாறு கூறும் உண்மையும் கூட. இந்நிலையில் நாம் அவ்விரு கூட்டத்தாருக்கும் இடையேயுள்ள இணைப்பையல்லவா தேட வேண்டும்?

இவ்வுலகம் அனைத்தையும் உங்களின் கூர்ந்த அறிவின் பார்வைக்கு முன்னாலகொண்டு வந்து நிறுத்திப் பார்ப்பீர்களாயின் இப்பூமியில் இந்தியா என்றொரு நாடு, அங்கேதான் இவ்விரு கூட்டத்தாரும்; இணைந்திருப்பதை நாம் பார்க்கலாம். ஆம். பாரசீகத்தைச் சார்ந்த ஈரானியர் இந்திய நாட்டின் வடப்பகுதியில் 'ஆரியர்' என்னும் பெயரில் வருகை தந்து குடியேறினர். இதே போன்று இந்திய நாட்டின் தென்பகுதியில் காணப்படும் திராவிடர்களுடைய முன்னோடிகளில் பெரும்பாலோர் எமனில் வாழ்ந்து வந்தனர். இவர்களில் புத்தமதத்தை நம்புகின்ற **'சிந்திகள்', 'மேத் ஸபாப்ஜா', 'ஸயாப்ஜா'** மற்றும் **'அஹாமிரா'** என்னும் பெயருடைய கூட்டத்தாரும் எமனில் வாழ்ந்து வந்துள்ளனர். மேலும் இன்றுகூட அங்கே இந்திய தேசத்தின் கலாச்சாரம் மிளிர்வதைக் காணலாம். ஹிந்த், ஹிந்தா, ஷியாம், அல்லது ஷாம், ஷியாம் என்னும் பெயரில் பெரும் பெரும் கோட்டைகள் இப்போதும் அங்கே இருக்கின்றன.

இனி இவ்விரண்டு கூட்டத்தாரின் வம்சவழியினர் இந்திய மண்ணில் ஒருங்கிணைவது இவ்வையகத்தை நிலைப்படுத்துவதற்குரிய முன்னேற்பாட்டுக்கு இது துவக்கமென்றோ அல்லது முன்மாதிரி என்றோ சொல்லலாம். ஏனெனில் அருமை நபியவர்கள் அன்று சொன்ன வார்த்தையை செயல்வடிவத்தின் பக்கமாக திருப்ப வேண்டுமல்லவா!

அடுத்து இந்த இடத்தில் இதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது ஈரானியரும் அவர்களைச் சார்ந்தோரும் ஸல்மான் பார்ஸியை குறித்த அறிவிப்பை வைத்து மக்காவில் நடந்த நிகழ்ச்சியை நியாயப்படுத்துகின்றனர். நாம் அவர்களைக் குறித்த நல்லெண்ணத்துடன் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறோம். அதாவது, அவர்கள் அபூமூஸா அஷ்அரியை குறித்த அறிவிப்பையும் பார்க்க வேண்டாமா? அவர்களின் கூட்டத்தார் (ஜாட், இந்துக்களிலுள்ள

விவசாயிகள்) இஸ்லாத்தின் துவக்க காலத்திலேயே இஸ்லாத்தை ஏற்று வரலாற்றில் பேசப்படும் அளவுக்கு பங்காற்றியுள்ளார்களே!

மௌலானா உபைதுல்லாஹ் சிந்தீ. இவர்கள் (ஷாஹ் வலியுல்லாஹ்வின் மாணவர்களில் தலைசிறந்த பிலாஸபர்களில் ஒருவராகும்) தமது 'ஷாஹ் வலியுல்லாஹ்வும் பிலாஸபியுமு;' எ ன்னும் நூலில், சூறா ஜும்ஆவின் 3வது வசனத்தைக் குறித்து கீழ்கண்டவாறு எழுதுகிறார்...

**'எங்களிடம் வஆகரீன மின்ஹும்' அவர்களில் நின்றும் இறுதியானவர்;கள் என்பதன் கருத்தானது ஈரானியரும் (இந்திய மண்ணில் வாழும் ஆரியர்) அவர்களுடன் இணைந்திருப்பவர்களும்தான்'** என்று கூறுகின்றனர். இந்த இடத்தில் ஷாஹ் வலியுல்லாஹ்வின் இன்னொரு முன்னறிவிப்பையும் பாருங்கள்...

**'இன்னும் நான் எதை நம்புகிறேனோ அவர்கள் இந்திய மண்ணில் வாழும் இந்துக்கள் தானெனில் அவர்கள் எல்லாவகையான அதிகாரங்களையும் பெற வேண்டும். அப்போதுதான் இறைவனுடைய நோக்கம் செயல் வடிவம் பெறமுடியும். இதேபோல அந்த இந்துத் தலைவர்களின் உள்ளங்களில் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் உதிப்பும் தோன்ற வேண்டும்.'** –நூல்: அல்புர்கான் பக்கம் 158.

ஷாஹ் வலியுல்லாஹ் அவர்களால் முகலாயர்களின் ஆட்சிகாலத்தில் முன்னறிவிப்பு செய்யப்பட்ட விசயத்தின் முதல் கட்டம் இப்போது செயல் வடிவத்திற்கு வந்துள்ளது. அதாவது இந்திய மண்ணில் இப்போது இந்துக்களின் ஆட்சி மலர்ந்துள்ளது. இதனுடைய அடுத்த கட்ட மற்றொரு அறிவிப்பான இஸ்லாத்தை ஏற்பதும் வெகுவிரைவில் நடக்கும்.

ஆதலால் இயன்றவரை ஆதாரங்களை திரட்டி உங்கள் முன் வைத்துவிட்டோம். அவை இதுவரை கூறியவை அனைத்தையும் உண்மைதானென உறுதிப்படுத்துகின்றன. அதாவது, உம்மத்தே முஹம்மதிய்யா (முஹம்மது நபியவர்களின் சமூகத்தார்) என்பது இருபிரிவாகும். அதில் முதல் பிரிவென்பது இப்போதுள்ள இஸ்லாமிய சமூகத்தாராகும். இவர்களின் வயது ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளாகும். இதுபோன்றே இரண்டாவது பிரிவென்பது இந்திய மண்ணில் வாழும் இந்துக்களாகும். இவர்கள்தான் இறுதியானவர்கள். இவர்கள் ஒட்டுமொத்தமாக இஸ்லாத்தை ஏற்பார்கள். அப்போது உலக ராஜரீகத்தின் சக்ராதிபத்தியத்தை இவர்கள் கண்டிப்பாகப் பெறுவார்கள் என்பதில் அணுவளவும் ஐயமில்லை.

புத்தியையும் மனதையும் கலங்கடிக்கும் இச்செய்தியைக் கேட்டு இது வெறும் கற்பனையென்றோ, அல்லது கட்டுக்கதை என்றோ நீங்கள் மறுக்கத் தலைப்படலாம். ஆனால் இன்றுள்ள இஸ்லாமியர்களின் நிலைகளை கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். அத்துடன் உலகின் போக்கு எப்படியெல்லாம் திசைமாறி சென்று கொண்டுள்ளது என்பதையும் யோசித்து அவர்(இந்துக்)களுக்கு இஸ்லாத்தை குறித்து எவ்வாறு அழைப்பு கொடுக்கலாம் என்பதை யோசியுங்கள். அவர்கள்தான் அகில உலகிலும் அடுத்து வரப்போகும் காலங்களில் உலகின் தலைமைப் பதவியை ஏற்று வழி நடத்தப் போகின்றனர். இதில் அவர்கள் ஏற்கப் போகும்

ஈமானி(விசுவாசத்தி)ல் நம்முடைய பங்களிப்பு என்பது சிறிதேனும் நமக்கு வாய்க்குமாயின் அது நம்முடைய மறுமை வாழ்வுக்குரிய வெற்றிக்கு அடித்தளமாக அமைந்து விடாதா என்ன? அவ்வாறு இல்லையேல் இறைவனின் வாக்கு சத்தியமானது. இன்னும் அவன் எவருடைய தேவைகளை விட்டும் தூய்மையானவன். எந்த சூறா தௌபாவின் 39வது வசனம் மாற்றுக் கூட்டத்தைக் குறித்து நமக்கு எச்சரிக்கை செய்கிறதோ அதற்கடுத்த வசனமும் ஒரு மாபெரும் படிப்பினையை நமக்கு எடுத்துக் காட்டுவதைப் பாருங்கள்...

إِلَّا تَنصُرُوهُ فَقَدْ نَصَرَهُ اللَّهُ إِذْ أَخْرَجَهُ الَّذِينَ كَفَرُوا ثَانِيَ اثْنَيْنِ إِذْ هُمَا فِي الْغَارِ إِذْ يَقُولُ لِصَاحِبِهِ لَا تَحْزَنْ إِنَّ اللَّهَ مَعَنَا ۖ فَأَنزَلَ اللَّهُ

سَكِينَتَهُ عَلَيْهِ وَأَيَّدَهُ بِجُنُودٍ لَّمْ تَرَوْهَا وَجَعَلَ كَلِمَةَ الَّذِينَ كَفَرُوا السُّفْلَىٰ ۗ وَكَلِمَةُ اللَّهِ هِيَ الْعُلْيَا ۗ وَاللَّهُ عَزِيزٌ حَكِيمٌ

**'அவரு(ரஸூலு)க்கு நீங்கள் உதவி செய்யவில்லயாயின் திடனாக அல்லாஹ் அவருக்கு காபிரானார்களே, அவர்கள் அவரை -இருவரில் இரண்டாமவரை-வெளியேற்றியபோது, இருவரும் (மலை) பொதும்பில் இருக்கும் போது தனது தோழரை நோக்கி, துக்கப்படாதீர். நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கிறான் என்று கூறும்போது உதவி செய்திருக்கிறான். எனவே அவர் மீது அல்லாஹ் ஸகீனாவை(அமைதியை) இறக்கினான். இன்னும் சில கூட்டங்களைக் கொண்டு அவரைப் பலப்படுத்தினான். அவைகளை நீங்கள் பார்க்கவில்லை. இன்னும் காபிரானார்களே அவர்களின் வார்த்தையை கீழானதாகவும் ஆக்கினான். இன்னும் அல்லாஹ்வின் வார்த்தைதான் மிகைத்ததாயிருக்கிறது. மேலும் அல்லாஹ் மிகைத்தவன்(இன்னும்) விவேகமுள்ளவன்.**

## அத்தியாயம் இரண்டு

### இந்து சமூகத்தின் நபி

### கிருஷ்ணமேனனின் திகைப்பு

ஸ்ரீகிருஷ்ணமேனனின் வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு சம்பவம் பின்வருமாறு: அவர் லண்டனில் தங்கியிருந்தபோது தமது நண்பர்களோடு வீற்றிருந்த சமயத்தில் இருந்திருந்தாற்போல் அவருடைய நண்பர்களில் ஒருவர் அவரைப் பார்த்து, இதோ உங்கள் முன் அமர்ந்துள்ள இந்த நண்பர் ஒரு யூதர். அவர் கூறுகிறார், அவர்களிடம் கடவுளின் தரப்பிலிருந்து அவர்களுக்கு வழங்கப்பட்ட வேதமொன்று இருப்பதாகவும், அதன் பெயர் தௌராத் என்றும் அதை அவர்களுக்கு அவர்களின் நபி மூஸா அவர்கள் பெற்றுத் தந்ததாகவும் சொல்கிறார்.

இது எனக்குத் தெரியும். கிருஷ்ணமேனனின் பதில்.

அதைக் கேட்ட அந்த நண்பர் இன்னொரு கிறத்;துவ நண்பதை சுட்டிக் காட்டி, இவர் ஒரு கிறித்துவர். இவர் கூறுகிறார், இவரிடம் கடவுளால் அருளப்பட்;ட வேதமொன்று இருப்பதாகவும்,

www.sufimanzil.org

அதன் பெயர் இன்ஜீல் என்றும் அதை அவர்களுக்கு அவர்களின் நபி ஈஸா பெற்றுத் தந்ததாகவும் சொல்கிறார்.

இதுவும் எனக்குத் தெரியும் புன்சிரிப்புச் சிரித்தவாறே கிருஷ்ணனமேனன், இத்தனை பிரபலமான விஷயத்தைக் கூட தெரியாத ஒருவர் இருப்பாரா என்ன? அதேநேரம் அவர் என்னை திகைப்போடு பார்ப்பதைப் பாருங்களென்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே அந்த நண்பர் அங்கேயிருந்த இன்னொரு நண்பரை சுட்டிக் காட்டி...

இவர் நமது முஸ்லிம் நண்பர். இவரும் தம்மிடம் இறைவனால் வழங்கப்பட்ட வேதமொன்று இருப்பதாகவும் அதனுடைய பெயர் குர்ஆன் என்றும், அதை அவர்களுக்கு அவர்களுடைய நபி முஹம்மத் பெற்றுத் தந்ததாகவும் சொல்கிறார் என்று சொல்ல...

இத்தனையையும் கேட்ட கிருஷ்ண மேனன் தமது புருவத்தை மேலேற்றியவராக, நண்பா! இதுவும் எனக்குத் தெரியுமே என்று சொல்ல, அதைக் கேட்ட அந்த நண்பர் மிகவும் நிதானமாக கிருஷ்ணமேனனைப் பார்த்து, நண்பரே இதெல்லாம் எனக்குத் தெரியும், உமக்குத் தெரியும். ஆனால் நம்மில் யாருக்குமே தெரியாத ஒரு விசயம் என்ன தெரியுமா? இவர்களெல்லாம் கூறுவதை போல நீரும் எதை கடவுளால் அருளப்பட்ட வேதமென்றும், மிக மிகப்பழமையானதென்றும் ....;ஆதி கிரந்தம்' என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறீரோ அதை உங்களுக்கு கடவுளிடமிருந்து பெற்றுத் தந்தது யார்? என்பது தான் எனது கேள்வியாகும் என்று நிதானமாகக் கூறினார்.

இத்தனை நேரமும் புன்னகைத்தவாறு அமர்ந்திருந்த கிருஷ்ணமேனனின் முகத்திலிருந்த தசைகளெல்லாம் இறுகி புருவங்கள் சுருங்கத் துவங்கிற்று. இப்போது அத்தனை பேருடைய விழிகளும் தமக்குள் கேள்வியைத் தேக்ககிக் கொண்டு அதற்குரிய பதிலை எதிர்பார்த்து அவரையே வைத்த கண் வாங்காமல் பார்த்தன. அங்கே எல்லாமே ஸ்தம்பித்துவிட்டதைப் போன்ற நிசப்தம் அரியணை ஏறியிருந்தது. ஆம். முதன்முதலாக இப்படிப்பட்டதொரு கேள்வியின் மூலம் கிருஷ்ணமேனன் தாக்கபட்டார். இப்போதுதான் அவருக்கே இது தோன்றுகிறது. ஒவ்வொருவரும் தமக்குரிய வேதம் இன்னின்ன தீர்க்கதரிசியின் மூலம் கிடைத்ததென்று உறுதியாக சொல்லிக் கொண்டிருக்கும் போது, வாதித்துக் கொண்டுள்ள போது, மிகமிகப் புராதனமான, அதிவுலும் முதன்முதலாக இறைவனிடமிருந்து அருளப்பட்ட வேதம் எங்களுடையதென வாதிக்கின்ற நம்முடைய வேதம் எந்த தீர்க்கதரிசியின் ;வாயிலாக தங்களுக்குக் கிடைத்ததென்பதை குறித்து இதுவரை நாம் யோசிக்கவே இல்லையே! என்று அவர் மட்டுமா மலைக்கிறார்? இன்று எத்துனை இந்துக்களின் இதயங்கள் இக்கேள்வியில் சிக்கித் தவஜித்துக் கொண்டுள்ளன என்பது யாருக்குத் தெரியும்? இன்றா! நேற்றா!! இக்கேள்வி ஆயிரக்கணக்கான வருடங்களாக நெருஞ்சி முள்ளாகவல்லவா அவர்களின் இதயத்தை குத்திக் கிழித்துக் கொண்டிருக்கிறது? இப்போது அவர்களுடைய நபியை நாம் கொஞ்சம் தேடுவோமா?

**நூஹ் நபியின் சமூகம் எங்கே?**

இந்துக்கள் ராமாயணத்தையும், மகாபாரதத்தையும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட நூல்கள்தானென்பதை ஒப்புக் கொண்டாலும் வேதங்கள் பற்றிய விஷயத்தில் மட்டும் அச்சமூக மக்களின் முன்னோர்கள் அதை இறைவாக்கு என்பதாகத்தான் உறுதியாக நம்புகின்றனர். ஆனால் அதே நேரம் அதை அவர்களுக்கு எந்த தீர்க்கதரிசி பெற்றுத் தந்தார் என்பதற்குரிய பதில் மட்டும் அவர்களிடம் இல்லை. விஷயம் என்ன தெரியுமா? அவர்கள் தங்களின் நபியை கடவுளின் அவதாரத்தில் தொலைத்துவிட்டதுதான். ஆம். உலகிலுள்ள ஒவ்வொரு சமூகமும் யாராவது ஒரு மனிதரை தம்மிடமுள்ள வேதத்தோடு தொடர்புபடுத்தி நம்பிக் கொண்டிருக்கும்போது இந்த ஒரேயொரு (இந்து) சமூகம் மட்டும் தங்களின் நபியை தொலைத்துவிட்டு நின்று கொண்டுள்ளது. இதை கவனத்தில் வைத்துக் கொண்டவர்களாக புகாரி என்னும் கிரந்தத்தில் காணப்படும் இந்த நபிமொழியைப் பாருங்கள்...

**'அபூஸயீத் என்பார் அறிவிக்கின்றனர். இப்பூமியின் இறுதித்தூதர் முஹம்மத் நபியவர்கள் இயம்பினர், இறுதித் தீர்ப்பு நாளன்று நூஹ் நபியவர்கள் அழைக்கப்பட்டு அவர்களிடம், நீர் உமது கூட்டத்தாரிடம் இறை கட்டளைகளை ஒப்படைத்தீரா?' என்று கேட்கப்படும். அப்போது அதற்கவர், ஆம் என்று பதிலுரைப்பார். அதன்பின் நூஹ் நபியின் கூட்டத்தாரை நோக்கி எனது தூதர் நூஹ் உங்களிடம் எனது கட்டளையை ஒப்படைத்தாரா? என்று கேட்க அதற்கவர்கள், இல்லையென மறுப்பதோடு எங்களிடம் அச்சமூட்டி எங்களை எச்சரிக்கை செய்கின்ற யாரும் வரவில்லை என்றும் கூறுவார்கள்.**

**அப்போது நூஹ் நபியவர்களை நோக்கி, உங்களுக்கு சாட்சி யாரென்று வினவப்படும். அதற்கவர் எனக்கு சாட்சி முஹம்மத் நபியும் அவரது சமூகத்தாருமாகும் என்று கூறுவர். அப்போது முஹம்மத் நபியவர்கள் தமது தோழர்களை நோக்கி, அந்த சூழ்நிலையில் உங்களை அங்கே கொண்டு வரப்பட்டு நீங்கள் சாட்சியும் சொல்வீர்கள் எனக் கூறிவிட்டு கீழ்காணும் வேதவசனத்தை ஓதினர்' –நூல்: புகாரி**

وَكَذَٰلِكَ جَعَلْنَاكُمْ أُمَّةً وَسَطًا لِّتَكُونُوا شُهَدَاءَ عَلَى النَّاسِ وَيَكُونَ الرَّسُولُ عَلَيْكُمْ شَهِيدًا

**'இவ்வாறே உங்களை நாம் நடுநிலையான சமூகத்தினராக ஆக்கினோம். ஆகவே நீங்கள் (மற்ற) மனிதர்களுக்கு சாட்சிகளாக இருங்கள். (நம்முடைய) தூதர் உங்களுக்கு சாட்சியாக இருப்பார்'**- அல்குர்ஆன், சூறா பகரா வசனம் 143.

இப்போது நாம் கொஞ்சம் கூர்ந்து கவனிப்போமாயின் ஒருபக்கம் மேற்கண்ட ஹதீஸைக் கொண்டு நூஹ் நபியின் கூட்டத்தார் தமது நபியை புரிந்து கொள்ளும் விசயத்தில் மறுப்பைக் காட்டுகின்றனர். இன்னொரு பக்கம் இப்பூமியிலுள்ள எல்லா மதங்களின் கூட்டத்திலும் இந்து மதத்தாரின் நபி மட்டும் காணாமல் போய் விட்டிருக்கிறார். அப்படியானால் யோசியுங்கள். இந்துச் சமூகம் முஹம்மத் நபியவர்களின் சமூகத்தாராக வெகுவிரைவில் மாறுவர். அதற்கு இப்போதுள்ள முஹம்மத் நபியவர்களின் சமூகத்தார் காரணமாக அமைவர். மேலும் நூஹ் நபியின் கூட்டத்தார் தமது நபியை இனங்காண முடியாமல் மறுக்கும்போது முஹம்மத்

நபியவர்களின் சமூகத்தார் நூஹ் நபியவர்கள் தனது கூட்டத்தாரிடம் இறைவனுடைய கட்டளைகளை ஒப்படைத்தார்களென்று சாட்சி கூறுவர். சாட்சி சொல்லக்கூடிய முஹம்மத் நபியின் சமூகத்தார் நூஹ் நபியின் கூட்;டத்தாரையும், அவர்களுக்கும் நூஹ் நபிக்கும் இடையே உள்ள தொடர்பையும் அவர்கள் அறிந்திருப்பார்கள். அவ்வாறாயின் இந்த ஆதாரங்கள் அனைத்தும் இப்போது நமக்கு மத்தியிலுள்ள இந்துக் கூட்டம்தான் நூஹ் நபியின் சமூகத்தார் என்பதை நமக்கு உறுதிபபடுத்திக் காட்டுகிறதா இல்லையா?

**இந்துக்கள் நூஹ் நபியின் சமூகத்தினர்?**

மேலும் 'வேததர்மம்' என்பது உலகிலுள்ள எல்லா மதங்களாலும் ஒருங்கிணைந்த நிலையில் ஏற்பட்ட மிகப்பழமையான ஓர் மதமாகும். இவ்வாறே நூஹ் நபியவர்களும் உலகின் முதல் ஷரீஅத்திற்குரிய (வாழ்வியல் நடைமுறைக்குரிய சட்டங்களின்) ரஸூலாகும். எனினும் அதை ஏற்றுக் கொள்ளும் முன் அந்த வேததர்மத்தை கொண்டே அதை நம் அறிந்து கொள்வது அவசியமாகும். ஆதலால் இப்போது நாம் அவர்களின் வேதத்தை '**இறைவாக்கு**' என ஒப்புக் கொள்ள வேண்டுமென்ற அவசியமில்லை. ஆயினும் இந்துக்கள் எதை இறைவனின் வாக்கு (வேதம்) என சொல்லிக் கொண்டிருக்கிறார்களோ அதற்குரிய நபியாக யாரை நமக்குக் காட்டுகின்றனர்?

பிரான்ஸ் நாட்டைச் சார்ந்த ஆசிரியர் A.J.A. DUBOIS டுபாய்ஸ் என்பார் , இவர் ஏறத்தாழ நாற்பது ஆண்டு காலம் வரை இந்துமதம் பற்றியும், இந்துக் கலாச்சாரம் பற்றியும் ஆய்வு செய்து மிகவும் பலமான ஆதாரங்களை முன்வைத்து பெரும் நூலொன்றை எழுதியுள்ளார். அவர் தனது HINDU MANNERS, CUSTOMS AND CEREMONIES என்னும் நூலில் எந்த உண்மைகளை படம் பிடித்துக் காட்டியுள்ளாரோ அவை உங்களின் மனதுக்கு மிகப்பெரும் நிம்மதியை நிச்சயம் தருமென்று நினைக்கிறோம். அவர் எழுதுகிறார்...

**'சுருக்கமாகச் சொல்வதாயின், ஒரு மிகப்பிரபலமான மனிதர் அவரை இந்துக்கள் மிகவும் அதிகமாக நம்புகின்றனர். இன்னும் அவர்கள் அவரை 'மகாநூவு' (MAHANUVU) என்னும் பெயரில் அறிந்து வைத்துள்ளனர். வெள்ளப் பிரளயத்தின்போது ஒரு கப்பல் மட்டும் தப்பிக் கரை சேர்ந்து அதில் பிரபலமான ஏழு ரிஷிகள் இருந்தனர். மகாநூவு என்பது இரு வாக்கியங்களின் இணைப்பாகும். இதில் 'மகா' என்றால் 'மிகவுயர்ந்த' என்பதும் 'நூவு' என்பது 'கொஞ்சங்கூட சந்தேகத்திற்கிடமின்றி' 'நூஹ்'தான்.'**

-ஆதாரம்:Hindu Manners Customs and Ceremonies, page 48.

**'உலக வரலாற்றை நோக்கினால் இந்திய தேசம் அவ்வெள்ளப் பிரளயத்திற்குப் பின் முதன் முதல் இப்பூமியில் உயிர்த்தெழுந்தது. அதுதான் இப்பூமி முழுவதையும் நிர்மூலமாக்கிற்று'.**

ஆதாரம்: Hindu Manners Customs and Ceremonies, page 100.

**'மார்க்கேண்டய புராணத்திலும், பகவத் கீதையிலும் இச்சம்பவத்தை குறித்து மிகவும் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. அதாவது அவ்வெள்ளப் பிரளயத்தில் மனித ஜீவராசிகள் அனைத்தும் அழிந்து போய்விட்டன. அதே நேரம் ஏழு ரிஷிகளைத் தவிர. அவர்களைப் பற்றி நிறைய இடங்களில் நான் குறிப்பிட்டிருக்கிறேன். அந்த ஏழு ரிஷிகளும் உலகளாவிய அவ்வெள்ளப் பெருக்கிலிருந்து ஒரு கப்பலில் ஏறித் தப்பினர். அக்கப்பலை விஷ்ணு (இறைவன்) செலுத்தினான். தப்பியவர்களில் மிகவுயர்ந்த ஓர் மனிதரும் இருந்தார். அவர்தான் 'மனூ'(நூஹ்தான்) என்பதை நான் இன்னோரிடத்திலும் உறுதிப்படுத்தி இருக்கிறேன்.**

**அதுமட்டுமின்றி எனக்குத் தெரிந்தவரை எத்தனை விக்ரஹ ஆதாதனைக்குரிய கூட்டங்கள் இருக்கின்றனவோ அவைகளில் எதுவுமே இத்தனை விரிவாக அவ்வெள்ளப் பெருக்கைப் பற்றி விபரிக்கவில்லை. அன்றி அச்சம்பவத்தை மூஸா நபியின் 'தௌராத் வேதம்' விரிவாக விளக்குமளவுக்கு இந்து வேதங்கள்தான் விபரிக்கின்றன. இது அவர்களின் வேதம் மிக மிகப் பழமையானது என்பதற்குரிய ஆதாரமாகும். மேலும் இதை எல்லோருமே ஒப்புக் கொள்ளவும் செய்கின்றனர்.'**

- ஆதாரம்:Hindu Manners Customs and Ceremonies, page 100.

**'மேலும் நூஹ் நபி பற்றியும் அவர்களுடைய காலத்தில் நிகழ்ந்த வெள்ளப்பிரளயம் பற்றியும் பவிஷ்ய புராணமும், மித்ஸியப் புராணமும் கூடப் பேசுகின்றன. அதுபற்றி பின்னால் நாம் விபரிப்போம். இனி 'மனூ' என்.னும் பதம் இந்து மதவாதிகளில் பலபேருக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனி;னும் புராணங்களும் வேதங்களும் மற்றுமுள்ள இந்துமத நூல்களும் எந்த 'மனூ'வைக் குறித்து விரிவாகப் பேசுகிறதோ அந்த 'மனூ' 'நூஹ் நபிதான்'.**

அதாவது உலகின் முதல் மனிதரான ஆதமைப் பற்றி, '**மனூவின்**' வலப் பக்கத்திலிருந்து '**சத்ரூபா**' அதாவது ஹவ்வா பிறந்தார் என எழுதப்பட்டுள்ளது.

நூல்: ராம்சரித்ரமான்ஸ், பக்கம் 154.

**'மேலும் வேதங்களின் விரிவுரையாளரான ஆங்கிலேய நூலாசிரியர் ஒருவர் ஒரு மந்திரத்தில் காணப்படும் 'மனூ' என்னும் பதத்திற்கு விரிவுரை செய்யும்போது கீழ்க்கண்டவாறு எழுதுகிறார், அதாவது: 'மனூ' மனிதகுலத்தின் வழிகாட்டியாகவும் நிகரற்றவராகவும் இருந்தார். அனைத்து மனித குலத்தின் தந்தையாகவும் (வெள்ளப்பிரளயத்திற்கு பின் இரண்டாம் ஆதம் என்றும் அழைக்கப்படுகின்றனர்) மனித ஜீவராசிகளின் வாழ்க்கையை முறைப்படுத்தும் சட்டங்களான 'ஷரீஅத்'தை தோற்றுவிப்பவராகவும் இருந்தார்.'** –நூல் ரிக்வேதம், 1-13-4.

புராணங்களும் வேதங்களும் நூஹ் நபியைக் குறிதது விரிவாகப் பேசுவது மட்டுமின்றி இன்னொரு பெரும் ஆதாரத்தையும் முன்வைத்து தாங்கள் நூஹ் நபியின் கூட்டத்தார்

என்பதை ஆதாரப்படுத்துகின்றன. அதாவது பெரும்பான்மை சமூகங்கள் தாங்கள் ஒரு நபியின் கூட்டத்தை சார்ந்தவர்கள்தானென்பதை வெளிச்சமிட்டுக் காட்டும் வகையில் அவர்களுடைய காலத்தை குறிக்கும் வருடங்களை அல்லது நூற்றாண்டுகளை ஏற்படுத்துவர். உதாரணமாக முஸ்லிம்கள் முஹம்மது நபியவர்களின் ஹிஜ்ரத்திலிருந்து ஹிஜ்ரி என்னும் ஆண்டை உருவாக்குகின்றனர். இவ்வாறே கிறஸ்துவர்கள் ஈஸா நபியவர்களின் மறைவிலிருந்து கி.பி. என்னும் வருடத்தை உருவாக்கியுள்ளனர். இவ்வாறே இந்துக்கள் நூஹ் நபியவர்களின் அவ்வெள்ளப் பிரளயத்தின் ஒவ்வொரு அறுபது ஆண்டையும் ஒரு வருடமென்று எண்ணால் கணிக்கின்றனர். அந்த வருடத்தைக் கொண்டுதான் அவர்கள் அக்குறிப்பிட்ட சம்பவத்தையே நினைவு கூர்கின்றனர். டுபாய்ஸ் தனது நூலில் எழுதுகிறார்...

**'இந்துக்களின் யுகத்தில் 'கலியுகம்'; என்பது நூஹ் நபியின் வெள்ளப் பிரளய காலத்திலிருந்து தான் துவங்குகிறது. அதை அவர்கள் நினைவு கூறத்தக்க சம்பவமாகக் கருதுகின்றனர். இன்னும் அவர்களது நூலாசிரியர்கள் அதை 'ஜலப்பிரளயாவன்' அல்லது நீர்ப்பெருக்கு எனப் பெயரிட்டு நினைவு கூறுகின்றனர். இப்போதுள்ள 'யுகத்தின்' வரலாறு சந்தேகமின்றி அந்த ஜலப்பிரளயத்தின் இறுதியிலிருந்துதான் துவங்குகின்றது.**

**மேலும் இதில் திகைப்புக்குரிய ஒரு விசயம்யாதெனில் இந்துக்கள் தமது வாழ்;க்கையின் மிக மிக முக்கியமான சம்பவங்களையும், பிரபலமான வரலாறுகளையும் இதுபோன்ற எல்லா வகையான வரலாற்று நினைவுச் சின்னங்களையும் அந்த ஜலப் பிரளயத்தின் இறுதியிலிருந்து தான் இணைத்து கணக்கிடுகின்றனர். அந்த ஜலப் பிரளயத்திற்குப் பின்னுள்ள ஒவ்வொரு அறுபது ஆண்டையும் அவர்கள் ஒரு ஆண்டென கணக்கிடுகின்றனர்.'**

- ஆதாரம்: Hindu Manners Customs and Ceremonies, page 100.

இன்னும் இச்சமூகத்திற்கும் நூஹ் நபிக்குமி(அவர்களின் வார்த்தையில் மனுவுக்கி)டையே ஒரு நெருக்கமான பிணைப்புண்டு என்பதற்குரிய மற்றுமோர் ஆதாரமானது, அவர்களுடைய மதநூல்களில் 'மனுஸ்மிருதி' என்பதற்கு ஒரு குறிப்பான இடத்தை தந்து அவர்கள் வைத்திருப்பதேயாகும்.

இதுவரை இந்துமதம் பற்றியும் அவர்களின் வரலாறு பற்றியும் அவர்களுடைய மதநூல்களைப் பற்றியும் அதற்கும் நூஹ் நபிக்குமிடையே உள்ள நெருக்கமான தொடர்பை பற்றியும் சில உதாரணங்களை உங்களின் பார்வைக்கு எடுத்துக் காட்டினோம். இதுபோன்றே நூஹ் நபியின் சமூக மக்களைக் குறித்து பேசுகின்ற புகாரி என்னும் கிரந்தத்தின் ஹதீஸையும் முன்னால் உங்களின் பார்வைக்கு நாம் தந்துள்ளோம். அதில் நாம் நூஹ் நபியின் சமூகத்தார் நூஹ் நபியவர்களை நபியென்று புரிந்து கொள்ளாமல் உள்ளனர் என்றும், இவ்வாறே நூஹ் நபியோடு தங்களுக்குப் பிரிக்க முடியாத ஒரு இறுக்கமான சம்பந்தமும் இருக்கின்றதென்பதையும் நாம் குறிப்பிட்டோம். அத்துடன் அந்த ஹதீஸைக் கொண்டு இறுதி நாளில் முஹம்மத் நபியுடைய சமூகத்தார் நூஹ் நபியவர்கள் தமது சமூகத்தாரிடம் தம்மிடம் தரப்பட்ட தூதுத்துவத்தை

ஒப்படைத்தது உண்மைதானென்று சாட்சியும் சொல்வார்களென்றும் நாம் சுட்டிக் காட்டினோம். இவைகளெல்லாம் நமக்கு விளக்கிக் காட்டும் ஒரு உண்மை என்னவெனில் நூஹ் நபியின் இந்த இந்துச் சமூகம் தான் விரைவில் முஹம்மத் நபியின் சமூகத்தாராக மாறப் போகின்றனர் என்பதே. ஆக இந்த உண்மைகளனைத்தும் தெரிய வந்து தம்மை முஹம்மத் நபியவர்களின் சமூகத்தில் இணைத்துக் கொண்ட பின்னரே இவர்கள் சாட்சி சொல்வார்கள் என்பதாம்.

மேலும் இவ்வளவு ஆதாரங்களை நாம் பார்த்த போதிலும் இன்னொரு பெரும் ஆதாரத்தையும் (சாட்சியை) நாம் பார்க்க வேண்டியுள்ளது. அதுதான் முஹம்மத் நபியவர்களுக்கு அருளப்பட்ட திருக்குர்ஆன் என்னும் வேதத்தின் ஆதாரமாகும். இப்போது அதையும் பார்த்து விடுவோமே!

**திருக்குர்ஆனின் சாட்சி**

இப்பூமியிலுள்ள எல்லா சமூகத்தையும் நாம் இரு பிரிவாகப் பிரிக்கலாம். அதிலொன்று,'ஸாம்' உடைய கூட்டம் (Semetic Races) மற்றொன்று 'ஸாம்' அல்லாதாரின் கூட்டம் (Non-Semetic Races). ஸாமல்லாத கூட்டத்திலிருந்துதான் ஆரிய வம்சமே தோன்றுகிறது. இவ்வாறு ஸாம் உடைய கூட்டத்திலிருந்துதான் யூதர்கள், கிறிஸ்துவர்கள், அரபைச் சார்ந்த பனீ இஸ்மாயீலின் கூட்டங்கள் தோன்றின. இன்னும் உலகில் மனித இனம் இரு பிரிவாகப் பிரிவதைக் குறித்தும் அதில் ஒரு பிரிவு நூஹ் நபியுடன் தொடர்பு கொண்டிருந்தது என்பதைக் குறித்தும் திருக்குர்ஆன் உறுதிப்படுத்துவதைப் பாருங்கள்....

أُولَٰئِكَ الَّذِينَ أَنْعَمَ اللَّهُ عَلَيْهِم مِّنَ النَّبِيِّينَ مِن ذُرِّيَّةِ آدَمَ وَمِمَّنْ حَمَلْنَا مَعَ نُوحٍ وَمِن ذُرِّيَّةِ إِبْرَاهِيمَ وَإِسْرَائِيلَ وَمِمَّنْ هَدَيْنَا

وَاجْتَبَيْنَا ۚ إِذَا تُتْلَىٰ عَلَيْهِمْ آيَاتُ الرَّحْمَٰنِ خَرُّوا سُجَّدًا وَبُكِيًّا ۩

**'அவர்கள் ஆதமுடைய சந்ததியிலும், நூஹுடன் ஏறியவர்களிலும், இப்றாஹீம் மற்றும் இஸ்றாயீலுடைய சந்ததியிலும் நாம் நேர்வழியில் தேர்ந்தெடுத்தவர்களில் உள்ளவர்களான நபிமார்களாகிய அவர்கள் மீது அல்லாஹ் அனுக்கிரஹம் செய்தவர்களாவர். அவர்கள் மீது ரஹ்மானுடைய வசனங்கள் ஓதப்பட்டால் சிரவணக்கம் செய்தவர்களாகவும் அழுதவர்களாகவும் விழுந்து விடுவார்கள்.'**

-அல்குர்ஆன் சூறா மர்யம் வசனம் 58.

திருக்குர்ஆனின் இவ்வசனத்தைக் கொண்டு ஆதமுடைய சந்ததியிலிருந்து நூஹ் நபியின் சந்ததிகள் தனியாகப் பிரிக்கப்படுவதை நாம் பார்க்கலாம். இது போன்றே இப்றாஹீம் நபி, யஃகூப் நபி போன்றோர் அதாவது பனீ இஸ்மாயீல், இஸ்ராயீல்களின் சந்ததிகளும் வேறாகப் பிரிக்கப்படுகின்றனர். இதில் பனீ: இஸ்மாயீலுடைய சந்ததியும், பனீ: இஸ்றாயீலுடைய சந்ததியும் 'ஸாமு'டைய சந்ததிகள் என்பதை நாம் வரலாறுகளைக் கொண்டு தெரிந்து கொள்கிறோம். அவ்வாறாயின் இந்நிலையில் நூஹ் நபியின் சந்ததிகள் ஸாமல்லாத (Non-

Semetic Races) ஆரியரின் சந்ததிகளாகத்தான் இருக்க வேண்டும். இவர்கள் உலகின் பெரும்பாலான நாடுகளின்றி இந்திய தேசத்தில்தான் மிக அதிகமாக வாழ்ந்து வருகின்றனர்.

நாம் இப்படிச் சொல்வதால் இந்த இடத்தில் உங்களுக்கு இப்படியொரு சந்தேகம் எழலாம். அதாவது, நூஹ் நபியுடன் அவர்களுடைய கப்பலில் இணைந்திருந்தோரை அவர்களுடைய சமூகத்தாரென்று எப்படிச் சொல்ல முடியுமென்று கேட்கலாம். ஏனெனில் ஒரு நபியுடைய சமூகத்தாராக இருப்பதற்கு அந்த நபியுடைய சந்ததியாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை அல்லவா! உதாரணமாக நாம் இஸ்லாமியர்கள். முஹம்மத் நபியவர்களின் சமூகத்தார். இருந்தும் நம்மிலே பெரும்பாலோர் அவர்களின் சந்ததிஅல்ல. அவர்களுடைய சமூகத்தார் மட்டும்தான். காரணம் அவர்களை நாம் நம்முடைய ரஸூலென்று அங்கீகரித்திருக்கிறோம் அல்லவா!

இது போன்றே மூஸா நபியுடைய சமூகத்தார் ஈஸா நபியவர்களை தங்'களின் நபியாக ஏற்றுள்ளனர். அவர்களை ஈஸா நபியவர்களின் சமூகத்தாரென்று அழைக்கப்படுகிறது. இதேபோல நூஹ் நபியுடன் வெள்ளப்பிரளயத்தின் போது அவர்களோடிருந்து அப்பேரழிவிலிருந்து தப்பி அவர்கள் மீது விசுவாசம் கொண்டிருந்தார்களே அவர்கள் நூஹ் நபியுடைய சமூகத்தாராகத்தான் இருந்தனர். அவ்வாறு நூஹ் நபியோடிருந்த அவர்களுடைய சந்ததிகள்தான் ஆரியர் என்னும் இப்போதுள்ள இந்துச் சமூகம் ஆகும். இன்னும் இவர்கள் நூஹ் நபிக்குப் பின் வந்த மற்ற நபிமார்களை தங்களின் நபியாக ஏற்றுக் கொள்ள இவர்கள் இப்போது மறுக்கின்றனர். அதனால்தான் நாம் அவர்களைப் பற்றி நூஹ் நபியின் சமூகம் அல்லது நூஹ் நபியின் உம்மத் என்று குறிப்பிடுகிறோம். இதில் அவர்கள் நூஹ் நபியையும் இப்போது தங்களின் நபியாக ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர் என்பதும், தாங்கள் அவர்களுடைய சமூகம்தான் என்பதையும் ஒப்புக் கொள்ள மறுக்கின்றனர் என்பதும், எதனாலெனில் அவர்கள் தங்களின் நபியை '**கடவுளின் அவதாரம்**'; என்னும் கொள்கையில் தொலைத்து விட்டதுதான் அதற்குரிய காரணமாகும் என்றால் மிகையல்ல.

## அத்தியாயம் 3

### குர்ஆனில் இந்து சமூகம்

### குர்ஆனின் மீது குற்றச்சாட்டு

பெரும்பான்மையான தெளிந்த சிந்தனையுள்ள இந்துக்களில் பலர் இஸ்லாத்தின் உயரிய வழிகாட்டலால் கவரப்பட்டு குர்ஆனுடைய மகத்துவத்தைப் பாராட்டிப் பேசும் அதேநேரம் குர்ஆன் எத்தனையோ சமூகங்களைக் குறித்துப் பேசினாலும் எங்களைக் குறித்து ஒன்றுமே பேசவில்லையே என குர்ஆனின் மீது குற்றம் சாட்டுகின்றனர். இதிலஅவர்களின் குற்றச்சாட்டு தவறான ஒன்றென்பதை நாம் பல வகையான விளக்கங்களைக் கொண்டு விபரிப்போம். ஏனெனில் நம்மிடையேயுள்ள சிலர் கூட இப்படிப்பட்ட ஓர் குற்றச்சாட்டை குர்ஆனின் மீது தம்மையும் அறியாமலே சுமத்தி விடக் கூடாதல்லவா!

'ஸ்ரீகங்கா பிரசாத் உபாத்யாயா' என்பார் குர்ஆனை அரபி மொழியில் கற்று உர்து n மாழியில் 'மஸாபீஹுல் இஸ்லாம்' என்னும் பெயரில் நூலொன்றை எழுதினார். அதிலிருந்து ஒருபகுதியை உங்களின் பார்வைக்காக தருகிறோம்.

'திருக்குர்ஆனின் பல இடங்களில் இறைவன் பல்வேறு சமூக மக்களிடையே பல நபி;மார்களை அனுப்புகிறான். இருப்பினும் குறிப்பிடுமளவிற்கு யாரைப் பற்றியும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இதில் நகைப்பிற்குரிய விஷயம் என்னவெனில் மிக மிகப் பழமையான சமூக மக்கள் இருக்கிறார்களே அவர்களின் குண ஒழுக்கங்கள், வரலாறுகள் போன்றவை ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முந்தியவைகளாகும்.

உதாரணமாக இந்தியா, சீனா போன்றவைகளை குறிப்பிடலாம். ஆனால் அவைகளைப் பற்றிய ஒரு சைக்கினையை கூட காணோம். ஆதலால் இத் தெளிவைக்கொண்டு எதை குர்ஆன் என்றும் கலாமெ மஜீதென்றும் கூறப்படுகிறதோ அதற்கும் பாமர மனித சமூகத்திற்கும் அறவே சம்பந்தமில்லை'.

-நூல்: மஸாபீஹுல் இஸ்லாம் பக்கம் 43.

உண்மைதான். குர்ஆனைக் கொண்டு முதன்முதல முன்னோக்கப்பட்டவர்கள் அரபு நாட்டவர்கள்தான். எனினும் இரு ஆயிரத்து நானூறு ஆண்டுகள் பழமையானதோர் நூல் மட்டுமல்ல. உலகின் இறுதிவரை அதில் நிகழப்போகும் அனைத்து விஷயங்களும் கூறப்பட்ட வேதமென்றால் உலகின் மிக மிகப் பழமையான ஒரு மதத்தைப் பற்றி அல்லது ஒரு சமூகத்தைப் பற்றிய விசயம் ம்டும் எப்படி இல்லாமல் போகும்? எது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து இன்றுவரை மிகப் பெரிய சமூகமாக இருந்து கொண்டுள்ளதோ அதைப் பற்றி குர்ஆன் எப்படி பேசாமலிருக்க முடியும்? இது குர்ஆனின் மீது சுமத்தப்படுகிற ஒரு குற்றச்சாட்டாகும். என்ன? நாம் எப்போதாவது குர்ஆனில் இந்து சமூக மக்களை பற்றி எங்கே பேசப்பட்டுள்ளது என்பதைத் தேடிப் பார்த்தோமா,? ஆம். குர்ஆனில் '**இந்து**' என்னும் வார்த்தை எங்கேயும் காணப்படவில்லை என்பது என்னவோ உண்மைதான். அப்படியானால் ஈஸாயீ, கிறிஸ்டியன் என்னும் வார்த்தை மட்டும் குர்ஆனில் எங்கேயாவது சொல்லப்பட்டிருக்கிறதா என்ன? அதனால் குர்ஆன் கிறித்துவர்களைப் பற்றி எங்கேயும் பேசவில்லை என்று சொல்லிவிடலாமா? அல்'லது நினைத்துக் கொள்ளலாமா? அதேநேரம் குர்ஆன் கிறித்துவர்களைப் பற்றி 'நஸாரா' என்னும் பெயரில் பேசுகிறது. மேலும் உலகிலுள்ள எந்தக் கிறித்;துவரும் தம்மை நஸாரா என்று சொல்வதில்லை. இருப்பினும் குர்ஆன் நஸாரா என கிறித்துவர்களை குறித்துத்தான் பேசுகிறது என்பதை நாம்; தெரிந்து வைத்திருக்கிறோம். இது போன்றே இன்று எந்தச் சமூகம் தன்னை '**இந்து**' எனச்சொல்லிக் கொண்டிருக்கிறதோ அந்தச் சமூகத்தைப் பற்றி குர்ஆன் வேறொரு பெயரில்பேசிக் கொண்டிருக்கலாமல்லவா!

**குர்ஆன் கூறும் சமூகமனைத்தும் விளக்கப்படவில்லை**

திருக்குர்ஆனில் பல சமூகங்களைக் குறித்து பேசப்பட்டுள்ளது. அவற்றில் பல கூட்டங்களைப் பற்றி வேத வியாக்யானிகள் விளக்கிக் காட்டாமலே விட்டுள்ளனர். உதாரணமாக

**'அஸ்ஹாபர்ரஸ்'** **'கௌமெதுப்ப:'** போன்றவைகளைக் குறிப்பிடலாம். அதிலும் குறிப்பாக **'ஸாயிபீன்'** என்றொரு கூட்டம் இவர்களைப் பற்றி குர்ஆன், விசுவாசிகள்-கிறித்துவர்கள்-யூதர்கள் போன்ற பெரும்பான்மை கூட்டத்தாரோடு இணைத்துப் பேசுகிறது. அது பற்றிய வசனத்தைப் பாருங்கள்...

إِنَّ الَّذِينَ آمَنُوا وَالَّذِينَ هَادُوا وَالنَّصَارَىٰ وَالصَّابِئِينَ مَنْ آمَنَ بِاللَّهِ وَالْيَوْمِ الْآخِرِ وَعَمِلَ صَالِحًا فَلَهُمْ أَجْرُهُمْ عِندَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ

عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ

**'திடனாக (நாவினால மட்டும்) ஈமான் கொண்டார்களே அவர்களும் எஹூதிகளாகிவிட்டார்களே அவர்களும்,நஸராக்களும், ஸாபியீன்களும் (இவர்களில்) யார் அல்லாஹ்வைக் கொண்டும் இறுதிநாளைக் கொண்டும் விசுவாசம் கொண்டு இணக்கமானவற்றை செய்தார்களோ அவர்களுக்கு அவர்களின் கூலி அவர்களுடைய இரட்சகனிடமுள்ளது. மேலும் அவர்களுக்கு அச்சமுமில்லை. அவர்கள் சலிக்கவும் மாட்டார்கள்.'** – அல்குர்ஆன் சூறா பகரா வசனம் 62.

இந்த வசனத்தில் ஸாயிபீன் என்னும் சமூகம் கிறித்துவர்கள்-யூதர்கள் போன்ற சமூகத்தாருடன் இணைந்து பேசப்படுகின்றது. இது மட்டுமல்ல. குர்ஆயனில் ஸாயிபீன்களைக் குறித்து எங்கெல்லாம் பேசப்படுகின்றதோ அங்கெல்லாம் அவர்கள் பெரும் பெரும் சமூகத்தோரோடுதான் இணைத்துப் பேசப்படுகின்றனர். இத்தனை முக்கியத்துவம் தரப்படுகின்ற, அதிலும் குறிப்பாக குர்ஆன் பெரும் பெரும் சமூகத்தாரோடு இணைத்தப் பேசிக்காட்டுகின்ற அந்த சமூகத்தை இன்றுவரை நாம் தேடிப் பார்க்கவே இல்லை என்பது மட்டும் உண்மை. அத்துடன் முஸ்லிம், யூத, கிறித்துவ சமூகங்களைப் போன்று வருங்காலங்களிலும் உலகிலுள்ள பல்வேறு மதங்களில் ஒன்றாக இருந்து கொண்டிருக்கும் ஒன்றை நமது தேடுதல் விரிவாக இன்றி ஒரு வட்டத்திற்குள்ளேயே சுருங்கிப் போய்விட்டதென்றுதான் சொல்ல வேண்டும். பின்னும் குர்ஆன் குறிப்பிடுவதைப் போல இஸ்லாமிய, யூத, கிறித்துவ மதங்கள் பெரும்பான்மையானவை எனில் அதில் ஸாபியீன் என்றொரு பெரும்பான்மை மதமொன்று இருக்க வேண்டுமல்லவா? வாருங்கள். நமது பார்வையை இன்னும் கொஞ்சம் அகலமாக்கிக் கொண்டு தேடிப்பார்ப்போம்.

திருக்குர்ஆனில் மனிதகுலத்திற்கு ஒரு புதிய சட்டப்படிவத்தை (ஷரீஅத்தை) அறிமுகப்படுத்தும் ரஸூல்மார்களை குர்ஆன் தனிமைப்படுத்தி திரும்பத் திரும்ப அவர்களைப் பற்றி பேசுகிறது. அவர்களில் நூஹ் நபி, இப்றாஹிம் நபி, மூஸா நபி, ஈஸா நபி, முஹம்மத் நபி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். உதாரணமாக...

وَإِذْ أَخَذْنَا مِنَ النَّبِيِّينَ مِيثَاقَهُمْ وَمِنكَ وَمِن نُّوحٍ وَإِبْرَاهِيمَ وَمُوسَىٰ وَعِيسَى ابْنِ مَرْيَمَ ۖ وَأَخَذْنَا مِنْهُم مِّيثَاقًا غَلِيظًا

**'இன்னும் நபிமார்களிடம் வாக்குறுதி பெற்றபோது, இன்னும் உம்மிடமும், இன்னும் நூஹிடமும்', இன்னும் இப்றாஹீமிடமும், இன்னும் மூஸாவிடமும், இன்னும் மர்யமின் மைந்தரான ஈஸாவிடமும் நாம் பலமான வாக்குறுதியை வாங்கினோம்'**

-அல்குர்ஆன் சூறா அஸ்ஹாப் வசனம் 7.

شَرَعَ لَكُم مِّنَ الدِّينِ مَا وَصَّىٰ بِهِ نُوحًا وَالَّذِي أَوْحَيْنَا إِلَيْكَ وَمَا وَصَّيْنَا بِهِ إِبْرَاهِيمَ وَمُوسَىٰ وَعِيسَىٰ ۖ أَنْ أَقِيمُوا الدِّينَ وَلَا تَتَفَرَّقُوا

فِيهِ ۚ كَبُرَ عَلَى الْمُشْرِكِينَ مَا تَدْعُوهُمْ إِلَيْهِ ۚ اللَّهُ يَجْتَبِي إِلَيْهِ مَن يَشَاءُ وَيَهْدِي إِلَيْهِ مَن يُنِيبُ

**'நூஹுக்கு எதனை அவன் உபதேசித்தானோ அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கி இருக்கிறான். ஆகவே, (நபியே) நாம் உமக்கு வஹீ மூலம் அறிவிப்பதும் இப்றாஹீம், மூஸா, ஈஸா முதலானோருக்கு நாம் உபதேசித்ததும் (என்னவெனில் நீங்கள் ஒருமித்து) மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள். அதில் பிரிவினை செய்து கொள்ளாதீர்கள் என்பதேயாகும்.'**-அல்குர்ஆன் சூறா ஷூறா வசனம் 13.

நாம் பார்க்கிறோம். குர்ஆனில் எந்தெந்த பெரும்பான்மை சமூகக் கூட்டங்களைப் பற்றிப் பேசப்படுகிறதோ அவையனைத்தும் ஒன்றாக இணைத்தே பேசப்படுகின்றன. அவை இஸ்லாம், யூதம், கிறிஸ்துவம் மற்றும் ஸாயியீன்களின் கூட்டங்களாகும். இதுபோன்றே புதுப்புது ஷரீஅத்தை (மனிதகுல வாழ்வியல் சட்டம்) கொண்டு வந்த ரஸூல்மார்களும் ஒன்றாக இணைத்தே பல்வேறு இடங்களில் பேசப்படுகின்றனர். அவர்கள் முஹம்மத் நபி, ஈஸா நபி, மூஸா நபி, நூஹ் நபி ஆகியோர்களாகும். இதில் இஸ்லாமிய சமூகம் முஹம்மத் நபியைத் தங்களின் இறுதித் தூதராக நம்புகின்றனர். இவ்வாறே கிறிஸ்துவர்கள் ஈஸா நபியையும், யூதர்கள் மூஸா நபியையும் தங்களின் தூதுவராக நம்புகின்றனர். இதுபோன்றே ஸாயிபீPன்கள்? யாரை தங்களின் தூதராக நம்புகின்றனர்? இது மட்டும் நமக்குத் தெரியவில்லை.

இன்னும் யோசியுங்கள். முஹம்மத் நபியவர்களின் சமூகத்தார் முஸ்லிம்கள். ஈஸா நபியின் சமூகத்தார் கிறிஸ்துவர்கள். மூஸா நபியின் சமூகத்தார் யூதர்கள். நூஹ் நபியின் சமூகத்தார்? யாருக்கும் தெரியாது. ஒருவேளை அவர்கள்தான் ஸாபியீன்களோ!

குறிப்பு: இப்றாஹீம் நபியவர்களின் சமூகத்தாரில் யூதர்கள், கிறிஸ்துவர்கள், முஸ்லிம்கள் போன்ற அனைவரும் இணைந்துள்ளனர். ஏனெனில் அனைவரும் அவர்களை நபியென்றே நம்புகின்'றனர். இதில் இப்றாஹீம் நபியை மட்டும் ஒப்புக் கொண்டு அவர்களுக்குப் பின் வந்த எந்தவொரு நபியையும் ஒப்புக் கொள்ளமாட்டோம் என்று கூறுகின்ற ஒரு தனிக் கூட்டம் இன்றுவரை இப்பூமியில் உருவாகவில்லை.

**நூஹ் நபியின் சமூகம்தான் ஸாயிபீன்!**

வேத விரிவுரை நூலான தப்ஸீர் இப்னு கதீரில் அப்துர் ரஹ்மான் பின் ஸைத் என்பார் ஸாயிபீன்கள் தம்மை நூஹ் நபியின் மார்க்கத்தை சார்ந்தவர்கள் எனக் கூறி வந்ததாகக் கூறுகிறார்.

இவ்வாறே ஸாயிபீன்களை குறித்து கலீ:பா உமர், இமாம் அபூ ஹனீபா, இமாம் இஸ்ஹாக், அபுஸ்ஸனாத், குர்துபி, இப்னு தைமிய்யா, இமாம் கஸ்ஸாலி, இமாம் ரா:ஃகிப், மஆலிம், இப்னு ஸுரைர், இப்னு கதீர், இமாம் ஸுஹைலி, அல்லாமா ஷவ்க்கானி, காழி பைழாவி, அப்துல் மாஜித் தர்யாபாதி, சுலைமான் நத்வி போன்றோர்களின் கருத்துக்களை இங்கே நாம் உங்களுக்காக தொகுத்துத் தருகிறோம்.

1. எங்கே இப்றாஹீம் நபியவர்கள் பிறந்தார்களோ அங்கே ஈராக்கிலுள்ள 'உர்' என்னும் பகுதியைச் சேர்ந்தவர்கள் இவர்கள் (ஸாயிபீன்கள்) உர் மற்றும் இந்தியாவின் கலாச்சாரமும் ஒரே மாதிரியாக இருந்ததால் இவ்விரு பகுதியையும் சேர்ந்தவர்களான இவர்கள் தங்களின் கலாச்சார நாகரீக முறைகளால் மிகவும் நெருங்கியிருந்தனர்.

2. வேதக்காரர்களாக இருந்தனர். (இது குர்ஆனில் ஸாயிபீன்களை குறித்து பேசும்போதெல்லாம் ஒவ்வொரு இடத்திலும் வேதம் கொடுக்கப்பட்ட சமூகத்தாரோடு இணைத்துத்தான் இவர்கள் பேசப்படுகின்றனர். ஸாயிபீன்களிடம் நூஹ் நபியவர்கள் எந்த வேதச்சுவடிகளை கொண்டு வந்தார்கள் என்பதைக் குறித்து அடுத்து வரும் பக்கங்களில் நாம் பேசுவோம்)

3. லாஇலாஹ இல்லல்லாஹ் என்று கூறி வந்தனர். முஷ்ரிக்குகளாக(இணை வைப்பவர்களாக) இருந்தனர். (இந்துக்களின் கலிமாவும் லாஇலாஹ இல்லல்லாஹ் தான் என்பதை பின்னால் நாம் விளக்குவோம்.)

4. எமனை நோக்கி முகத்தை திருப்பி வணங்கி வந்தனர். (இந்து மதவாதிகளில் பெரும்பாலோர் பெருமளவில் எமனில் வாழ்ந்து வந்தனர் என்பதை முன்னால் நாம் ஆதாரப்படுத்தியுள்ளோம். இன்றும் கூட அங்கே ஷியாம் மற்றும் இந்து என்னும் பெயரில் அமைந்த கோட்டைகள் உள்ளன)

5. ஸாயிபீன்கள் என்பது 'அஜமி' (அரபியல்லாத ) பெயராகும்.

6. வானவர்களை பூஜிக்கின்ற கூட்டம் இது. (இந்து மதத்திலுள்ள பெரும்பாலான தேவதைகளுக்குரிய உருவங்களைக் கொண்ட சிலைகள் வானவர்களின் உருவங்களாகும். அதைத்தான் இவர்கள் பூஜித்து வருகின்றனர்.)

7. நட்சத்திரங்களையும் வானசாஸ்திரத்தையும் நம்புகின்றவர்கள் இவர்கள். உலகிலுள்ள சமூகங்களில இந்து சமூக மக்களைப் போல வானசாஸ்திரத்தில் இவ்வளவு நம்பிக்கை கொண்டோரை வேறு எங்கும் பார்க்க முடியாது)

8. நட்சத்திரங்களை பூஜிக்கின்றவர்கள். (பல்வேறு வகையான நட்சத்திரங்களையும் கோளங்களையும் பூஜை செய்யும் முறைகளை இப்போதுள்ள இந்துமத நூல்களில் கூட பார்க்கலாம்)

9. நெருப்பை பூஜிக்கின்றவர்கள். (இது இந்துச் சமூகத்தில் திருமணம், யாகம், பிணத்தை எரித்தல் போன்றவைகளில் இப்போதும் நடைபெற்று வருகிறது)

10. நெருப்பை வணங்கும் ஈரானிய சமூகத்தினர். (இவர்களும் நெருப்பை பூஜித்தனர். இந்துக்களும் நெருப்பை பூஜித்து வருகின்றனர். இவர்களர்தான் ஆரியர்கள். அங்கிருந்துதான் ஈரானியர்கள் இந்தியாவுக்கு வந்தனர்)

11. சமய வழிபாட்டுக்காக பகல் காலங்களில் பல முறை குளிக்கின்றவர்கள். (சமய வழிபாட்டுக்கா என உலகில் ஸ்நானம் செய்யும் முக்கியத்துவம் மற்றெல்லா மதங்களை விடவும் இந்து மதத்தில்தான் மிக அதிகமாகக் காணப்படுகிறது. இவர்களின் எந்தவொரு பூஜையும் ஸ்நானமின்றி நடைபெறுவதில்லை. இதன்றி பல்வேறு சமயங்களில் கூட்டுக்குளியலும் நடைபெறுவதுண்டு)

12. இரு மார்க்கத்(மதத்)திலிருந்து இன்னொரு மார்க்கத்திற்குள் நுழைவார்கள். (இந்த இந்துச் சமூக மக்'கள்தான் இஸ்லாத்தை ஏற்று விசுவாசிப்பார்கள். இதை நாம் முன்னால் உறுதிப்படுத்தியுள்ளோம்)

13. மயங்கி விடுபவர்கள். பணிந்து போகிறவர்கள். (மாற்று சமூக கூட்டத்தைக் குறித்த ஹதீதில் இவர்கள்தான் கோடிட்டு காட்டப்படுகின்றனர். இதுவும் முன்னால் கூறப்பட்டு விட்டது)

மேற்கண்ட அடையாளங்கள் மற்றும் குறிப்புகளனைத்தும் ஸாயிபீன்களை; குறித்து வேத வியாக்யானிகளாலும் அறிஞர் பெருமக்களாலும் தரப்பட்டுள்ளவைகளாகும். இதில் ஆச்சரியத்திற்குரிய விஷயம் என்னவெனில் அவர்களைக் குறித்து காட்டப்படும் அடையாளங்களும் குறிப்புகளும் முழுக்க முழுக்க இந்து சமூக மக்களுக்குத்தான் பொருந்துகின்றன என்பதே. மேலும் இந்த அறிஞர்கள் ஒவ்வோர் காலகட்டத்திலும் ஒவ்வொரு சமூகத்தினரை நினைத்து சொல்லியிருந்தாலும் கூட இக்காலத்தில் அக்குறிப்புகளனைத்தும் ஒரேயொரு சமூகத்தாருக்கு மட்டும்தான் பொருந்துகிறது என்று சொல்லப்பட்டால், அது இந்து சமூகக் கூட்டம்தான் என்று திண்ணமாக சொல்லலாம். மேலும் முன்னர் தனித்தனி கூட்டத்தார் மீது பொருந்தியிருந்த அக்குறிப்புகளின் அடையாளங்களைக்கொண்ட அவர்கள் பின்னர் தங்களின் இருப்பிடங்களைவ pட்டு இடம் பெயர்ந்து இந்திய மண்ணில் வந்து குடியேறி ஒன்றாக இணைந்திருக்கலாம் அல்லவா! இனியும் ஸாயிபீன்கள் என்னும் கூட்டம் யாரைக் குறிக்கின்றதென்பதில் சந்தேகம் ஏதுமிருப்பதாக நமக்குத் தோன்றவில்லை. ஒரு வேளை முன்னர் பல கூட்டங்களௌன குறிப்புத் தரப்பட்டிருந்தாலும் அவைகளெல்லாம் உண்மைதானென நம்பப்பட்டிருந்தாலும் இன்றைய காலத்தில் ஸாயிபீன்களென்னும்

கூட்டத்தார் இந்திய மண்ணில் இன்று வாழ்ந்து வரும் இந்து சமூக மக்களைத் தவிர வேறு யாருமில்லை என்பது ஆதவனின் பிரகாசம் போல் நமக்கு வெளிச்சமாகிவிட்டது.

அடுத்து இதுவரை நாம் போதித்தவை அனைத்தும் ஷாஹ் வலியுல்லாஹ் அவர்களின் ஓர் ஆய்வுக் குறிப்பைக் கொண்டு நிரப்பப்பட வில்லையெனில் அது குறையுள்ளதாகவே ஆகிவிடுமாகையால் அவர்களின் குறிப்பையும் தந்து நிறைவு படுத்துகிறோம்.

'**மஸீஹ் (ஈஸா நபி) எத்தனை மாண்புக்குரிய மனிதரெனில் அவர்கள் தமது வழிகாட்டலை பனீ இஸ்ரவேலர்களல்லாத ஸாயீபீன்களாகிய ஆரியர்களிடமும் எத்திவைக்க முயற்சி செய்தனர்.**'-நூல்: அல்புர்கான் பரேலி, பக்கம் 304.

'**ஈரான் அக்காலத்தில் ஆரியன் அதாவது ஸாயிபீன்களின் தலைமை கேந்திரமாக விளங்கி வந்தது. ஆனால் அதற்கு முன்பே இந்தியாவுக்கு இத்தலைமைத்தனம் கிடைத்திருந்தது**.'-நூல்: அல்புர்கான் பரேலி பக்கம் 310.

அடுத்து சுலைமான் நத்வியின் ஆய்வுக் குறிப்பொன்றையும் பாருங்கள். அவர் ஸாயிபீன்கள் என்போர் மிகப்பழமையான இந்திய தேசத்தவர் என்பதாகக் கூறுகிறார்...

'**வழிகெடுப்போர் மற்றும் வழிகெட்டோர் வேதக்காரர்களிலும் உள்ளனர். அவர்கள் தத்தம் தமது குண ஒழுக்கங்களுக்குத் தகுந்தவாறு வேதக்காரர்களில் அமைந்துள்ளனர். அவர்களை இரு பிரிவார்களாக குர்ஆன் நமக்குக் காட்டித் தருகிறது. அதில் ஒரு பிரிவார் நெருப்பை வணங்கும் மஜூஸிகள். இன்னொரு பிரிவார் ஸாயிபீன்கள். இவர்கள் பழமையான ஈரானியரும் இந்துக்களுமாவர்**'.-நூல்: பம்பாய் உலமாசபை கூட்ட உரை பிப்ரவரி 1945.

இறுதியாக இதையும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு மிகக் குறைந்த எண்ணிக்கையைக் கொண்ட ஒரு கூட்டம் இன்றும் ஈராக், ஷாம் போன்ற நாடுகளில் வாழ்ந்து வருகிறது. இவர்கள் தம்மை 'சூ.:.பி' எனக் கூறிக் கொள்கின்றனர். மேலும் யஹ்யா நபிக்குப் பின் வேறு எந்த நபியையும் இவர்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். ஈஸா நபியைக் கூட இவர்கள் ஏற்க மறுக்கின்றனர். யஹ்யா நபிக்கு முந்தைய நபிமார்களை மட்டும் இவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். ஒருவேளை குர்ஆன் கூறும் ஸாயிபீன்கள் இவர்கள்தானோ என்பதாக நீங்கள் யோசிக்கலாம். ஆனால் சுலைமான் நத்வி, உபைதுல்லாஹ் சிந்தீ NPhன்ற உலகை சுற்றி வரும் உலகப் பார்வையாளர்களான உலமாக்கள், ஸாயிபீன்கள் என்போர் இந்துக்கள் தான் என்பதை உறுதியாகச் சொல்கின்றனர். அத்துடன் இந்த சூ.:.பி கூட்டத்தாரிடம் அவர்கள் வேதக்காரர்கள் என்பதைத் தவிர வேத வியாக்கியானிகள் மற்றும் அறிஞர்கள் தரும் அடையாளக் குறிப்புக்கள் போன்றவை எதுவும் காணப்படவில்லை. எனவே இதுவரை திருக்குர்ஆனின் விளக்கத்தைக் கொண்டு நாம் விளக்கிக்காட்டியப ல கூட்டத்தாரில் ஸாயிபீன் என்னும் வாதம் அந்த சூ.:.பி என்னும் கூட்டத்தாருக்கும் பொருந்தலாம். இல்லையென நாம்

மறுக்க முடியாது. இருப்பினும் இந்தியாவிலுள்ள இந்துச் சமூகம் தான் ஸாயிபீன் என்பது சந்தேகத்தின் சாயல் கூடப்படுவதற்கு அறவே வாய்ப்பில்லை என்பதை மட்டும் நம்மால் திட்டவட்டமாக சொல்ல முடியும்.

**'மிகவுயர்ந்த தகுதியுடைய ஸாயிபீன்கள் உங்களிடம் வருவார்கள். இன்னும் அவர்கள் உங்களவர்களாகி விடுவார்கள். அவர்கள் உங்களுக்கு பிறகு வருவார்கள். அவர்கள் உங்கள்முன் குனிந்து உங்களை நோக்கி மிகவும் பணிவோடு திடனாக இறைவனை அன்றி வேறொரு கடவுள் இல்லையென கூறுவார்கள்.'** –நூல்: பைபிள், யஸ்ஆ நபியின் வேதம். 14 – 45

**'அவர்களனைவரும் வெட்கமடைந்து பணிவார்கள். அவர்கள் சிலைகளை உருவாக்குகின்றவர்கள். தமக்குள்ளேயே நாணமுறுவர்.'**

-நூல்: பைபிள், யஸ்ஆ நபியின் வேதம். 16 – 45

## அத்தியாயம் நான்கு

**ஒருமைப்பாடும் ஆதி பந்தமும்**

**மாற்றத்தின் தொடர்பைக் காண்க**

அரபியரின் ஆன்ம அழிவுக்குப் பின் இன்று நாம் எந்தக் கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோமோ அதனை நாம் ஆய்வு செய்வது அவசியமாகும். ஒரு கூட்டம் 1400 ஆண்டுகளுக்கு முன் அரபு மண்ணில் மாறுதலைக் கண்டது. இப்போது இந்திய மண்ணிலும் அப்படிப்பட்டதொரு மாறுதல் நிகழப்போகிறது. ஆம். இரு மதத்தின் மாற்றம் மற்றும் வழிகேட்டின் இறுதி எல்லையையும் நாம் கவனித்தல் அவசியமாகும். பின்னர் நாம் தற்போதுள்ள இந்து மதத்திற்கும் இஸ்லாத்திற்கும் இடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமை என்னென்ன என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். அதன்பின் முன்பு அரபு மண்ணுக்கும் இந்திய தேசத்திற்குமிடையே இருந்து வந்த வர்த்தக, வாணிப மற்றும் கலாச்சாரத் தொடர்பு, புவியியல் மற்றும் ஆன்மீக ரீதியான தொடர்பையும் நாம் பார்க்க வேண்டியது அவசியமாகும். ஏனெனில் எந்தச் சமூகத்திற்கு நாம் அழைப்பு விடுக்க வேண்டியுள்ளதோ அந்த சமூகத்தின் ஒவ்வொரு கோணத்தையும் அதன் பரிணாம வளர்ச்சியையும் முதலில் நாம் தெரிந்தாக வேண்டும். ஆதலால் நாம் முதலில் மக்காவின் முஷ்ரிகீன்களைப் பற்றியும் இப்போதுள்ள இந்துச் சமூக மக்களின் வழிகேட்டையும் பார்ப்போம்.

**ஒரு திகைப்புக்குரிய ஒற்றுமை**

**'முஹம்மத் நபியவர்கள் கூறினர், இஸ்லாத்தின் துவக்கம் அறியாமை நிலையிலிருந்து தான் தோன்றிற்று. இனி அவ்வாறே இஸ்லாம் மீண்டும் அறியாமைக்குள் முன்பிருந்தவாறே திரும்பிவிடும். ஆதலால் அறியாமைவாதிகளுக்கு சுபச் செய்தி.'**

-நூல்: முஸ்லிம் ஈமான் பற்றிய பிரிவு பக்கம் 218

என்ன? நாம் இன்று வறுமையை கொண்டு பிடிக்கப்பட்ட நெருக்கடியான ஒரு காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கவில்லையா? எந்தக் காலத்தை முஹம்மத் நபியும் அவர்தம் தோழர்களும் அனுபவித்தார்களோ அது போன்றதொரு காலத்தைத்தானே இப்போது நாமும் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

- அவர்கள் நூற்றுக் கணக்கான சிலைகளை அன்று பூஜித்து வந்தார்களெனில் இன்று இவர்கள் ஆயிரக்கணக்கான சிலைகளை பூஜித்து வருகிறார்கள். அன்றிலிருந்து இன்றுவரை நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான சிலைகளை பூஜிக்கின்ற கூட்டத்தாரில் இவ்விரு கூட்டத்தாரையன்றி வேறு எந்த கூட்டத்தாரையும் நாம் பார்க்கவில்லை.
- அவர்கள் தங்களின் பெண்குழந்தைகளை உயிரோடு புதைத்து வந்தனர். இவர்கள் தங்களின் மனைவிமார்களை உயிரோடு உடன்கட்டை என்னும் பெயரில் எரித்துக் கொண்டுள்ளனர். இது போன்றே ராஜஸ்தான் போன்ற பகுதிகளில் இன்று கூட பெண் குழந்தைகள் பிறந்தவுடனே கொண்டு விடுகின்றனர். இது இப்போது தமிழகத்திலும் காணப்படுகிறது.
- அவர்கள் முஹம்மது நபியவர்களோடு சமாதானத்திற்குரிய திட்டங்களை கொண்டு வந்தனர். அதாவது நீங்கள் எங்களுடைய தெய்வங்களை தவறாகப் பேச வேண்டாம். நாங்கள் உங்களுடைய இறைவனை ஏற்றுக் கொள்கிறோம் என்பதாக சமாதானம் பேசினர். பின்னும் இவர்கள் சூழ்நிலைக்கேற்ப ஒவ்வொரு மதமும்' போதிக்கின்ற நல்லதை ஏற்று மனித தர்மத்திற்கு உயிரூட்டுவோம் என்பதாக சமாதானம் பேசுகின்றனர். இவ்வாறு உலகிலுள்ள எந்தவொரு மதவாதியோ அல்லது மதமற்றவரோ அல்லது யூதர்களோ கிறிஸ்துவர்களோ அல்லது கம்யூனிஸத்தை சார்ந்தவரோ பேசுவதில்லை. அன்றி இவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் தங்களின் பாதைதான் சரியானதென்று வாதித்து வருகின்றனர்.
- அவர்களின் வேதச் சுவடிகள் மறைந்து போய்விட்டிருந்தன. (இப்றாஹீம் நபியின் வேதச்சுவடிகள் எங்குமே காணப்படவில்லை) ஆனால் இவர்களின் நபி காணாமல் போய்விட்டிருக்கிறார். (இவர்கள் தங்களின் வேதங்களை 'ஈஸ்வர் தானீ' (கடவுளின் வார்த்தை) என்பதாகக் கூறுகின்றனர். ஆனால் இது யார் மீது இறங்கிற்று என்பது இவர்களுக்கே தெரியாது.

என்னவொரு அதிசயமான ஒற்றுமை பார்த்தீர்களா? இவ்விருவரின் மதக் கலச்சாரம், நம்பிக்கை, நடைமுறை போன்றவையனைத்தும் ஒரே மாதிரியாக அமைந்துள்ளது. இன்று நாம் எந்த

மாதிரியான நிலையில் இருக்கிறோமோ அதே போன்றதொரு நிலையின் போதுதான் முஹம்மது நபியவர்கள் மக்களிடையே தோன்றினர்.

இறைநம்பிக்கையின் சீர் கேட்டுடைய இறுதி விளிம்பின் எல்லையுடைய இறுதிக்கட்டத்தில் மக்காவின் முஷ்ரிக்குகள் நின்று கொண்டிருந்தபோது தான் முஹம்மத் நபியவர்கள் அவதரித்தனர். அதேவிதமாகத்தான் இந்து சமூக மக்களும் இன்று இறுதிக்கட்டத்தில் நின்று கொண்டுள்ளனர். ஆதலால் வரலாற்றைத் திருப்பிப் பார்ப்பதிலோ அல்லது அ வர்களின் மார்க்கத்தை திருத்தி அமைப்பதிலோ இஸ்லாமியர்களாக அவர்கள் தம்மை முன்னிலைப்படுத்திக் கொள்வதற்குரிய முன்னேற்பாடு சம்பந்தமான விசயத்திலோ நாம் கொஞ்சம் கூட திகைப்படைய வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் மக்காவாசிகள் ஒட்டுமொத்தமாக இஸ்லாத்தை ஏற்பதற்கு சில வருடங்களுக்கு முன்புவரை யாரும் நினைத்துக் கூட பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால் அந்த வல்லமை பொருந்திய அருளாளனின் அறிவிப்பின் மீது நம்பிக்கை மட்டும் பசுமை குன்றாதிருந்தது. அத்துடன் உலக வரலாறும் அதை தமது கண்களால் கண்டது. ஆகையால் இன்று வெறுமனே தமதறிவைக் கொண்டு இந்துச் சமூகம் இஸ்லாத்தை தழுவுதல் நடக்காத ஒன்றெனக் கூறினாலும் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் முன்னறிவிப்பு மட்டும் கண்டிப்பாகப் பொய்யாகாது என்பதை நாம் நம்புவோம்.

**இந்து முஸ்லிம் இணைப்புப்ப பாலம்**

இந்து இவ்வுலகின் முதல் ஷரீஅத்தைக் கொண்டிருக்கும் ஒரு கூட்டம். இதுபோன்றே முஸ்லிம் இவ்வுலகின் இறுதி ஷரீஅத்தைக் கொண்டிருக்கும் ஒரு கூட்டம். இவ்விரு கூட்டத்தையும் இறைவனுடைய ஹிக்மத்தானது ஒரே தேசமாகிய இந்தியாவில் இணைத்து வைத்துள்ளது. இதில் இந்தியாவிலுள்ள எல்லா ஆலயங்களும், மஸ்ஜிதுகளும் ஒரே கிப்லாவை நோக்கியே கட்டப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது. 'டுபாய்ஸ்' தனது நூலில் எழுதுகிறார்....

**'பெரும் பெரும் கோவில்கள் மற்றும் மஸ்ஜிதுகள் கட்டப்பட்டுள்ள விதம் அவைகளின் கட்டிடக் கலை போன்றவை அவை புதிதாகவோ அல்லது பழையதாகவோ இருந்தாலும் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாகத்தான் அமைந்துள்ளன. உள்ளே நுழையும் தோற்றம் மட்டும் ஐரோப்பிய நாகரீகத்தில் அமைந்துள்ளது. இந்த ஒற்றுமை எல்லா ஆலயங்களிலும் மஸ்ஜிதுகளிலும் அமைந்துள்ளன. அவை பெரியதோ சிறியதோ எதுவாக இருந்தாலும் சரி'**

-நூல்: Hindu Customs and Ceremonies Page 579.

இதில் முஸ்லிம்கள் தங்களின் மஸ்ஜிதுகளை எதை நோக்கும் வகையில் கட்டப்படவேண்டும் என்பதற்குரிய காரணத்தை தெரிந்து வைத்துள்ளனர். ஆனால் இந்துக்கள் தங்களின் ஆலயத்தை கிப்லாவை நோக்கி கட்டினார்கள் என்பதற்குரிய காரணம் அவர்களுக்கே தெரியாது. இதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான காரணங்களைக் கூறினாலும் உண்மையான காரணம்

என்னவென்பது அவர்களில் யாருக்குமே தெரியாது. ஒருவேளை இது தங;களின் கஃபாவுக்கும் தங்களுக்குமிடையே உள்ள தொடர்பை வெளிப்படுத்திக் காட்டுவதாக இருக்குமோ? அதை இன்று அவர்கள் மறந்து போய் விட்டாலும் கூட நடைமுறைகள் மட்டும் அப்படியே தங்கி விட்டன.

இவ்வாறே இந்துக்கள் தம்மில் இறந்தோரின் பிணத்தை வைக்கும் திசை வடக்கு தெற்காக இருப்பதைப் போல முஸ்லிம்களின் மண்ணறைகளும் அதே திசையில்தான் அமைந்துள்ளன.

- முஸ்லிம்கள் ஹஜ் மற்றும் உம்ராவின் போது கஃபாவை ஏழு முறை வலம் வருகின்றனர். இந்துக்கள் திருமணம் போன்ற சடங்குகளில் நெருப்பை ஏழு முறை வலம் வந்து வாக்குப் பிரமாணம் செய்கின்றனர்.
- முஸ்லிம்கள் ஹஜ்ஜுடைய காலங்களில் எந்த மாதிரியான உடையை (இஹ்ராம்)அணிகின்றனரோ அது தையலில்லாத ஒரு போர்வை துண்டுகளாகும். அதில் ஒன்றை இடுப்பில் கட்டிக் கொண்டு மற்றொன்றை உடலின் மேற்பகுதியில் போர்த்திக் கொள்வர். இந்துக்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமது தீர்த்த யாத்திரையின் போது இதே மாதிரியான உடையைத்தான் அணிந்து வருகின்றனர். மேலும் இந்த உடை மிகவும் பவித்ரமான ஒன்றாகவும் அவர்களால் கருதப்பட்டு அதன்பின காலமாற்றத்தால் அதனுடைய உருவம் மாறி ஆண்கள் அதை வேட்டியாகவும் பெண்கள் சேலையாகவும் உடுத்தும் நிலைக்கு வந்துவிட்டனர்.
- ஹஜ்ஜின்போது முஸ்லிம்கள் தமது தலைமுடியை வெட்டிக் கொள்வதும் அல்லது சிரைத்துக் கொள்வதும் அவர்களுக்கு கடமையாக ஆக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்துக்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தங்களின் தீர்த்த யாத்திரையின் போது தலைமுடியை சிரைத்து வருகின்றனர்.
- முஸ்லிம்கள் ஹஜ் மற்றும் உம்ராவின் போது அல்லது இஹ்ராம் உடை அணிந்துள்ள போது ஆணாக இருப்போர் தமது பாதத்தின் மேல் பாகத்தை மறைக்கும்படியான காலணிகளை அணியக் கூடாது. அதனால்தான் இப்போது அம்மாதிரியான சந்தர்ப்பங்களில் 'ஹவாய் செருப்புகள்' பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஏனெனில் நடக்கும்போது சிரமம் இல்லாதிருக்கும் பொருட்டு பாதத்தின் மேற்பகுதியில் இருவார் பட்டைகள் இருக்கும் வண்ணம் அமைக்கப்படுகின்றன. இதில் இந்துக்கள் தமது தீர்த்த யாத்திரையின் போது எப்போதுமே மரத்தாலான வார்பட்டை இல்லாத மேற்புறம் ஒரு குமிழ் மட்டும் இருக்கும் வகையில் அமைந்த காலணிகளை அணிந்து வருகின்றனர்.
- முஸ்லிம்கள் அகீகாவின்போது (பிள்ளை பிறந்த ஏழாம் நாள்) குழந்தைக்குப் பெயர் வைத்து அதன் தலைமுடியை சிரைத்து விடுகின்றனர். இந்துக்கள் முன்பிருந்தே தமது குழந்தைகளின் பெயர் சூட்டு விழாவின் போது (அவர்களின் மதச் சடங்குப்படி) தலைமுடியை சிரைத்து விடுகின்றனர்.

என்ன? முஹம்மத் நபியவர்கள் இச்சடங்கு முறைகளனைத்தையும் ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்போ இந்துக்களடைய சடங்குகளிலிருந்துதான் பெற்றார்களென்று உங்களால் எண்ணிப் பார்க்க முடியுமா? மஆதல்லாஹ்! உண்மை என்னவெனில் இச்சமூக மக்களுக்கும் கஃபாவுக்கும் பன்னெடுங்காலமாகவே ஒரு இறுக்கமான பிணைப்புள்ளதென்று சொல்லலாமா? ஆம். இதுதான் உலகிலுள்ள ஒரு தனித்தன்மை கொண்ட மதச் சமூகமாகும். இவர்கள் தமது மதச் சட்டங்களையும் உணவில் சேர்த்துக் கொள்ளப்படும் ஊறுகாயைப் போல இன்றும் தக்க வைத்துக் கொண்டுள்ளனர்.

ஒரு வேளை நூஹ் நபியவர்கள் தமது கூட்டத்தாருக்கு கஃபாவைக் குறித்த இம்முறைகளை கற்பித்திருந்தால் மூஸா நபியும் ஈஸா நபியும் கூட தமது கூட்டத்தாருக்கு இம்முறைகளை கற்றுத் தந்துதானிருப்பார்கள். கால ஓட்டத்தின் மிக நீண்ட பயணத்தில் உண்மையான கஃபா காணாமல் போய்விட்டது. அதன்பின் அக்கூட்டத்தாரில் பல கூட்டத்தார் அவ்வெளிப்படையான சடங்குகளையும் மறந்து போய்விட்டபோது இந்த ஒரு கூட்டம் மட்டும் அவைகளை ஏதோவொரு உருவத்தில் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது. இதற்கு எண்ணற்ற உதாரணங்கள் இருந்தாலும் நூலின் விரிவஞ்சி விபரிக்காது விடுகிறோம்.

இருப்பினும் ஒன்றை மட்டும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். அது அந்தச் சமூகத்திடம் விலை மதிக்க முடியாத ஒன்றுள்ளது. அதைக் கொண்டு அவர்கள் தொலைத்துவிட்ட பேருண்மையை அவர்களுக்கு திருப்பிக் கொடுக்கப்பட்டால் மற்ற சமூகங்களை விட இந்த சமூகம் இஸ்லாத்தைப் புரிந்து கொள்வது என்பது எளிதான ஒன்றாகிவிடும். உண்மையை தொலைத்துவிட்டு அதன் வெளிப்பாட்டு தோற்றத்தை மட்டும் கைக்கொள்ளும் அசம்பாவிதம் இப்போது முஸ்லிம்களிடையேயும் பரவி வருகிறது.

எனினும் இந்த உம்மத்துக்களின் வேதமும் ரஸூலும் இறுதிநாள்வரை பாதுகாக்கப்பட்டுள்ளதால் முஸ்லிம்கள் தொலைத்து விட்டாலும் அப்பேருண்மையை வேதத்திலிருந்தும் ரஸூல்களிடமிருந்தும் திரும்பப் பெற்றுத் தந்துவிட முடியும். இவ்வாறே இந்துக்களிலுள்ள அறிஞர்கள் கூறுவதைப் போல அவர்களின் வேதம் இறைவனின் வாக்கு எனில், எவராலும் தொகுக்கப்பட்டதல்ல எனில் இந்துச் சமூகத்தின் வேதமும், அவர்களின் ரஸூலும் இப்போது தொலைந்து போய் உள்ளனர். அவர்களைத் தேடிக் கண்டுபிடித்து திருப்பித் தந்தால் நிச்சயம் அவர்கள் தம்மைப் பற்றிய உண்மையை தெரிந்து கொள்வார்கள்.

**பந்தம் ஆதியானது**

பந்தங்கள் என்பது உருவாக்கப்படுவதில்லை. அது ஆதியிலேயே நிரந்தரப்படுத்தப்படுவதாகும். இதில் தேகங்களைக் கொண்டு மட்டும் பந்தம் என்பது ஏற்படுவதில்லை. மாறாக ஆத்மார்த்தமான பந்தமும் உண்டு. இந்நிலையில் அது எப்போது வெளிப்பட்டாலும் சரியே. இனி இந்த பந்'தத்தின் அடிப்படை என்பது சில மனிதர்களுக்கு மட்டும் உரிய ஒன்றல்ல. மாறாக பல கூட்டங்களுக்கும், பிரிவுகளுக்கும் இது பொருந்தும். அத்துடன் இது மனித இனத்தாருடைய இணைப்புக்கு மட்டுமல்ல. விலங்கினங்கள், பறவைகள், புற்பூண்டுகள்

போன்றவைகளின் இணைப்புக்கும் இதுதான் அடிப்படையாகும். அதாவது அதுவும் ஆதியானதுதான். இதோர் தனிப்பட்ட துறையாகும். இதை விஞ்ஞானத்தின் அறிவியல் இன்று ஆதாரப்படுத்'துகிறது.

இப்போது நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயம் யாதெனில் தம்மை மாற்றிக் கொள்ளப் போகும் இந்திய மண்ணைச் சேர்ந்த சமூகத்திற்கும் முஹம்மத் நபியவர்கள் அவதரித்த அரபு மண்ணிலுள்ள அராபிய சமூகத்திற்கும் என்ன சம்பந்தம் என்பதுதான். இதைக் குறித்த பல்வேறு ஆய்வுகளின் கருத்துக்களை நாம் உங்களின் கவனத்துக்குத் தருகிறோம்.

**'நட்சத்திர ஆண்டின் ஆயிரமாவது ஆண்டிலேயே எமன் தேசத்தைச் சார்ந்த 'ஸபா' என்னும் கூட்டத்தார் இந்திய தேசத்தில் தம்து வர்த்தகத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர். வரலாற்றாசிரியர் 'ஜெளஸீபஸ்' என்பார் எழுதுகிறார். பம்பாய்க்கு அருகில் உள்ள 'ஸபாரா' என்னுமிடத்தில் சுலைமான் நபியின் காலத்தில் (அவர்களின் காலம் நட்சத்திர ஆண்டின் 950 வது ஆண்hகும்.) பாலஸ்தீனத்திற்கும், இந்தியாவுக்குமிடையே வர்த்தக தொடர்பு இருந்து வந்தது. இவ்வாறே இந்திய தேசத்தில் தயாரிக்கப்பட்ட 'மம்மல்இ சீன்ட்;' (இது ஒருவகை துணிகள்)மற்றும் போர்வைகள் அரப மண்ணில் இடம் பிடித்துக் கொண்டிருந்தன. இதுபற்றிய ஆதாரங்களை அரபுக் கவிதைகளில் பார்க்கலாம். மூரியா என்னும் வம்சத்தினர் பேசிய 'ஆராமிய' மொழி (அதாவது அரபு மொழி போன்று வலப்பக்கமிருந்து துவங்கும் மொழிகள்) எழுதப்பட்ட நூல்கள் ஆந்திராவிலிருந்து கிடைத்;தள்ளன. அசோகர் எழுதிய நூல்களும் (வலப்பக்கமிருந்து துவங்குபவை) கிடைத்துள்ளன.'**

-இஸ்லாம் காமில் பக்கம் 11 ஜனவரி 1959.

**'இப்போது எழுகின்ற கேள்வி என்னவெனில் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்திய தேசத்தில் அரபி மொழி 'யுதிஷ்தரின்' அரசவையில் எவ்வாறு இருந்தது என்பதுதான். அதற்குப் பதில் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்த நாட்டில் 'தீனெ ஹனீப்' இருந்ததென்பதையும் நாம் தெரிந்து கொள்கிறோம்'.**

-நூல்: குப்ருதோட், ஆசிரியர்: தரம்பாலி பக்கம் 29.

இந்திய மண்ணில் இன்னொரு பழமையான சமூகத்தையும் அரபு மண்ணில் நம்மால் காண முடிகிறது. அரபியர் அவர்களை 'மேத்' என்று அழைத்து வந்தனர்.

**'இஸ்கந்தரீ' என்பார் எழுதுகிறார் சிந்துப் பகுதியை சுற்றிலும் காணப்படும் நகரங்களில் வசிக்கும் எல்லா காபிர்களுடைய மதமும் புத்த மதமாகத்தான் இருந்தது. இன்னும் அவர்களோடு ஒரு கூட்டத்தாரும் இருந்தனர். அவர்கள்; 'மேத்' என்று அழைக்கப்பட்டனர். 'ஜாட்' மற்றும் 'மேத்' கூட்டத்தாருக்குப் பின் இந்திய தேசத்தைச் சார்ந்த இன்னொரு கூட்டத்தாரும் அரபு மண்ணில் நெடுங்காலமாக காணப்படுகின்றனர். அவர்கள் 'ஸயாப்ஸா' அல்லது 'ஸபாப்ஸா' என்றழைக்கப்படுகின்றனர். 'பிலாதரீ' என்பார் தமது**

**'புதூஹுல் புல்தான்' என்னும் நூலிலும், இப்னு கல்தூண் என்பார் தமது வரலாற்று நூலிலும் திரும்பத் திரும்ப இந்த 'ஸயாப்ஜா'க்களைப் பற்றி குறிப்பிடுகிறார். அரபு மண்ணில் இந்திய தேசத்தைச் சார்;ந்த இன்னொரு கூட்டமும் மிக நீண்ட காலமாக காணப்படுகிறது. அவர்களை அரபியர்கள் 'ஹம்ரா' என்றும் 'ஹம்ரு' என்றும், 'அஹாமிரா' என்றும் அழைக்கின்றனர்'.**

-நூல்: நார்ஜீல் ஸே நகீல் தக், காஜி அக்தர் முபாரக்பூரி, பாகம் 5 பக்கம் 89.

**'ஒரு ஆச்சரியமான திகைப்புக்குரிய விசயம் யாதெனில், இந்த 'இந்து' எனும் பதம் அராபியருக்கு மிகவும் பிரியமான ஒன்றாக இருந்தது என்பதே. இந்த தேசத்தின் பெயரை அவர்கள் தமது பெண்களுக்கு வைத்தனர். உதாரணமாக இப்பெயர் அராபியக் கவிதைகளில் எந்த ஸ்தானத்தை வகிக்கிறதெனில் பாரசீகக் கவிதைகளில் 'லைலா' 'ஷரீன்' போன்ற பெயர்கள் வகிக்கும் ஸ்தானத்தைக் கொண்டுள்ளன.'**

-நூல்: அரப் ஹிந்த்கே தஅல்லுகாத், பக்கம் 12, 13.

இது போன்ற கணக்கற்ற விளக்கங்கள் ஆய்வாளர்களின் நூல்களில் நிறைந்து காணப்படுகின்றன. அவைகளில் குறிப்பாக உர்து மொழியில் சுலைமான் நத்வி, காஜி அக்தர் முபாரக்பூரி போன்றோர் இந்திய தேசத்திற்கும் அரபுக்குமிடையே இருந்த மிக நெருக்கமான தொடர்பைப் பற்றி பல ஆதாரமான நூல்களைத் தந்துள்ளனர். நாம் அவைகளிலிருந்து உங்களின் பார்வைக்காக சிலவற்றை மட்டும் இங்கே எடுத்துக் காட்டினோம். அவைகளைக் கொண்டு இந்தியாவுக்கும் அரபுக்குமிடையே இருந்து வந்த உறவை நாம் யூகித்துக் கொள்ளலாம். பின்னும் இந்த உறவு வெறும் வர்த்தக, கலாச்சார, நாகரீகத்தை மட்டும் கொண்டிருந்த உறவல்ல. மாறாக இதோர் ஆத்மார்த்தமான உறவாகும். **உதாரணமாக, 'அரபியர் 'புத்தரை' தான் 'பூதாஸிப்' என்றழைத்து வந்தனர் என்பதில் திடஞானிகளுக்கு எந்த சந்தேகமுமில்லை.'** –நூல்: அரப் ஹிந்த்கே தஅல்லுகாத், பக்கம் 845.

மேலும் மதரீதியான தொடர்பு அதிலும் குறிப்பாக நபிமார்களின் வெளிப்பாடு அல்லது வருகை பற்றிய விஷயங்களில் பல்வேறு வகையான ஆதாரங்கள் நமக்கு கிடைக்கின்றன. ஆனால இன்று இஸ்லாமியர்களிடையே எண்ணத்தில் பொதுவான கற்பனையொன்று காணப்படுகிறது. அதாவது, எந்தெந்த நபிமார்களைப் பற்றிய விசயங்கள் குர்ஆனில் காணப்படுகிறதோ அவர்களின் தொடர்புகள் எல்லாமே அரபு மண்ணில்தான் இருந்ததென்று நினைத்துக் கொண்டுள்ளனர். இப்படி வாதிக்கும் அவர்கள் ஆதம் நபி, நூஹ் நபி போன்றோர் அரபகத்திலுள்ள மிஸ்த், ஷாம், ஈராக் போன்ற எந்தப் பகுதியின் மக்களை நல்வழிப்படுத்தத் தோன்றினர் என்பதைத் தெளிவாகச் சொல்வதில்லை. இது சம்பந்தமாக வரலாற்றின் ஆய்வாளர்களான திடஞானிகளுக்கு கிடைத்த ஆதாரங்களை நாம் இங்கே சுருக்கமாக உங்களின் பார்வைக்குத் தருகிறோம்.

**இந்தியாவில் ஆதம் நபி**

மனதுக்கு மகிழ்ச்சியளிக்க வல்ல ஓர் விசயம் என்னவெனில் இலங்கையிலுள்ள '**ஸரந்தீப்**' என்றொரு மலை மீது ஒரு பாதத்தின் சுவடொன்று உள்ளது. அதை பெரும்பான்மையான மதவாதிகள் புனிதமான ஒன்றெனக் கருதுகின்றனர். இஸ்லாமியரும், கிறித்துவரும் அதை ஆதம் நபியின் பாதச்சுவடு என்கின்றனர். புத்தமதத்தைப் பின்பற்றுவோர் அதை புத்தரின் பாதச் சுவடி என்கின்றனர். இந்துக்கள் அதை சிவனின் பாதச் சுவடி என்கின்றனர். அதிசயமான ஆச்சரியமான இந்தப் பாதச்சுவடு குறித்த விஷயங்கள் ஆதாரமற்றவையல்ல. மாறாக இதைக் குறித்த ஆதாரங்கள் நமக்கு அரபியரின் வரலாற்றில் கிடைக்கின்றன.

**'அரபு தேசத்தவரின் வாதம் என்னவெனில், இந்தியாவுக்கும் அவர்களுக்கும் இடையேயுள்ள தொடர்பு என்பது வெறுமனே சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தையதல்ல. மாறாக பிறப்பின் துவக்கத்திலிருந்தே இந்தியா அவர்களது தாய் வீடாகும் என்கின்றனர். ஹதீஸ்களும், வேத விரிவுரை நூல்களும் ஆதம் நபியைக் குறித்து பேசுகின்ற வசனங்களில் பல்வேறு அறிவிப்புகளைக் கொண்டு ஆதம் நபியவர்கள் விண்ணிலுள்ள சுவர்க்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டபோது அதை போன்றதொரு பூமியிலுள்ள சுவர்க்கத்தில் (அதன் பெயர் இந்தியா. சுவர்க்கத்தின் அடையாளத்தைக் கொண்ட பூமி) இறக்கப்பட்டனர். 'ஸரந்தீப்பி' (இலங்கையி)ல்தான் அவர்கள் தமது முதல் பாதத்தை வைத்தனர். அதனுடைய அடையாளம்தான் ஒரு மலை மீது உள்ளது. இப்னு ஸுரைர், இப்னு அபீஹாத்தம், ஹாகிம் போன்றோர் இந்தியாவின் எந்தப் பகுதியில் ஆதம் நபி இறக்கப்பட்டார்களோ அந்த பகுதிக்கு 'தஜ்னா' என்பது பெயராகும் எனக் கூறுகின்றனர். இந்த 'தஜ்னா'தான் 'தஜ்னா' அல்லது 'தக்கன்' எனப் பின்னர் பெயர் மாற்றமடைந்தது என்றும் கூறுகின்றனர். இது இந்தியாவின் தென் பகுதிக்குச் சொல்லப்படும் பிரபலமான ஒரு பெயராகும்'**

நூல்: அரப் ஹிந்த்கே தஅல்லுகாத் பக்கம் 2.

தப்ஸீர் பத்ஹுல் கதீர் பாகம் 2, பக்கம் 474.

அடுத்து குர்ஆன், இன்ஜீல், தவ்ராத் போன்ற வேதவியாக்கியானிகளும் ஆதம் நபியவர்கள் இப்பூவுலகின் எந்தப்பகுதியில் இறக்கப்பட்டார்கள் என்பதற்குரிய சரியான ஆதாரம் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் இதற்குமுன் கூறப்பட்ட விளக்கங்களைக் கொண்டு இலங்கையில் காணப்படும் பாதச்சுவடு ஆதம் நபியுடையதாகத்தான் இருக்க வேண்டும் எனப்தை கோடிட்டுக் காடடுகிறது. இருப்பினும் இதோர் பலவீனமான அறிவிப்பென்று சொல்லப்பட்டாலும் இதற்கு மாற்றமாக பூமியின் வேறு எந்தப் பகுதியும் நமக்கு இவ்விசயத்தில் காட்டித்தரப்படவில்லை என்பதையும் நாம் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

**இந்தியாவில் நூஹ் நபி**

குர்ஆனைக் கொண்டு நமக்கு விளக்கிக் காட்டப்படும் விசயம் யாதெனில் நூஹ் நபியின் ஜலப்பிரளயத்திற்குப் பின் அவர்களுடைய கப்பல் '**ஜூதி**' என்னும் மலைமீது தங்கி நின்றதாகக் கூறப்படுகிறது. இது ஈராக் பிரதேசத்தில் '**குர்திஸ்த்தான்**' என்ற இடத்திலுள்ளது. பைபிளில்

'**இராராத்**' என்னும் மலை மீது தங்கியதாகவும் சொல்லப்படுகிறது (ஜூதி மலை இராராத் மலையின் ஒரு பகுதியே) இருப்பினும் வேத விரிவுரையாளர்களில் யாருமே இதுவரை கப்பல் தங்கியபின் நூஹ் நபியவர்கள் தங்கிய நாடு எது என்பதை பற்றியோ அவர்கள் தமது மார்க்கப்பிரச்சாரத்தை எந்தெந்தப் பகுதியில் நடத்தினார்கள் என்பதைப் பற்றியோ அல்லது ஜலப்பிரளயம் நிகழுமுன் அறுநூறு ஆண்டுகளாக நூஹ் நபியவர்கள் இந்தப் பூமியில் எந்தப்பகுதியில் (தேசத்தில்) வாழ்ந்தார்கள் என்பதைப் பற்றியோ எதுவும் குறிப்பிடப்படவில்லை. தௌராத் வேதத்தில் நூஹ் நபியும் அவர்களைச் சார்ந்தோரும் ஜலப்பிரளயத்திற்குப் பின் '**பாபுலில்**' ஒன்றாக இணைந்து அதன்பின் அங்கிருந்து பூமி முழுவதும் பரவினார்கள் என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

'இனி பாபுல் என்னும் பெயர் எதனால் ஏற்பட்டதெனில் அங்கு வைத்துத்தான் இறைவன் உலக மாந்தரின் மொழிகளை புரட்டினான். இன்னும் அங்கிருந்து தான் அவர்களை (நூஹ் நபியையும் அவர்களை சார்ந்தோரையும்) இறைவன் பூமி முழுவதும் பரவச் செய்தான்.' –ஆதாரம்: தௌராத் வேதம். 9-11.

இதில் குர்ஆன் என்ன கூறுகிறதெனில் '**தன்னூரி**'லிருந்து நீர் பொங்கத் துவங்கிற்று என்றும் அங்கிருந்துதான் பிரளயம் ஆரம்பமாயிற்று என்றும் கூறுகிறது. அதாவது...

حَتَّىٰٓ إِذَا جَآءَ أَمْرُنَا وَفَارَ ٱلتَّنُّورُ قُلْنَا ٱحْمِلْ فِيهَا مِن كُلٍّ زَوْجَيْنِ ٱثْنَيْنِ وَأَهْلَكَ إِلَّا مَن سَبَقَ عَلَيْهِ ٱلْقَوْلُ وَمَنْ ءَامَنَ ۚ وَمَآ ءَامَنَ

مَعَهُۥٓ إِلَّا قَلِيلٌ

**'எதுவரை எனில் நமது கட்டளை வந்தபோது தன்னூர் பொங்கிற்று. அப்போது நாம் சொன்னோம். அதி(கப்பலி)ல் ஒவ்வொரு ஜோடிகளிலிருந்தும் இரண்டை ஏற்றிக் கொள்வீராக என்பதாக'** –அல்குர்ஆன் சூறா ஹூத் வசனம் 40

தன்னூர் என்னும் வாக்கியம் அரபி வாக்கியமல்ல. மாறாக பார்ஸி மொழியில் அதனடைய அர்த்தம் ரொட்டி சமைக்கும் பாத்திரத்திற்குச் சொல்லப்படுகிறது. வேதவிரிவுரையாளர்களும் இந்த வாக்கியத்திற்கு இதே அர்த்தத்தைத்தான் வழங்குகின்றனர். இதில் வேறுசிலர் தன்னூர் என்பதற்கு 'பூமியின் பரப்பு' என்றும் கூறுகின்றனர். அதாவது பூமயின் பரப்பிலிருந்து நீர் பொங்கத் துவங்கிற்று எனக் கூறுகின்றனர். ஆனால் தன்னூர் என்பதை பேசுமுன் குர்ஆன் ஒரு அலிபையும் லாமையும் இணைத்துப் பேசுவதால் அதன் அர்த்தம் ஒரு குறிப்பிட்ட தன்னூர் என்பதாகும். இதுகுறித்து அறிஞர்களின் விளக்கத்தைப் பாருங்கள்...

**'தன்னூர் என்பதில் அலிபும் லாமும் சேர்த்து சொல்லப்பட்டிருப்பதால் அது நூஹ் நலால்பிக்கு மட்டுமே தெரிந்த தன்னூராகும். இமாம் ஹஸன் பஸரி என்பார் கூறுகின்றனர் அந்தத் தன்னூர் என்பது கல்லால் ஆனதாகும். அதில் ஹவ்வா அவர்கள் ரொட்டி சமைத்து வந்தனர். அதன்பின் அது நூஹ் நபியிடம் வந்து சேர்ந்தது. இன்னும் அவர்களை நோக்கி தன்னூரிலிருந்து நீர் பொங்குவதைப் பார்ப்பீராயின் நீரும் உம்மைச்**

**சார்ந்தோரும் கப்பலில் ஏறிக் கொள்ள வேண்டுமெனக் கூறப்பட்டது.**'-நூல்: லிபாபுத் த∴வீல் பாகம் 3 பக்கம் 189.

இந்த தன்னூர் என்பது ஆதம் நபியுடையது. இதனை நயீமுத்தீன் முராதாபாதி அவர்களின் வேதவிரிவுரை நூலும் குறிப்பிடுகிறது. அதற்குமுன் தப்ஸீர் பத்ஹுல் கதீர் என்னும் வேதவிரிவுரை நூலில், '**ஆதம் நபியுடைய தன்னூர் இந்தியாவில் இருந்தது**' என்று அறிவிக்கும் இப்னு அப்பாஸின் அறிவிப்பை நாம் முன்னால் தந்திருக்கிறோம். இப்போது வாருங்கள். இதனுடைய இன்னொரு கோணத்தையும் பார்ப்போம். தன்னூர் என்னும் பதத்தை குறித்த பல்வேறு அறிவிப்புக்களையும் ஒன்றாக இணைத்து ஷவ்கானி என்பார் எழுதுகிறார்...

'**எட்டாவது அறிவிப்பானது தன்னூர் என்பது ஒரு இடமாகும். அது இந்தியாவில் இருக்கின்றது.**' –நூல்: தப்ஸீர் பத்ஹுல் கதீர் பாகம் 2 பக்கம் 474.

இதுவும் நமது சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒரு முக்கியமான விசயமாகும். ஏனெனில் நாம் இந்தியாவின் இரயில்வே அட்டவணையைப் பார்ப்போமாயின் அதில் கேரளாவிலுள்ள தானூர் (TANUR) என்னும் ஒரு இடத்தைக் காணலாம். இதேபோல வரைபடத்தைப் பார்ப்போமாயின் கேரளாவில் மலப்புரம் என்னும் மாவட்டத்தில் உள்ள கடலோரத்தில் இந்தத் தானூர் என்னும் ஊர் இருக்கின்றது. இது இந்தியாவின் மேற்கு கரையிலுள்ளது. அத்துடன் இது அரபிக் கடலிலிருந்து தனியாக இருக்கின்றது. பல்வேறு அறிவிப்புக்களின் வெளிச்சத்தைக் கொண்டு குர்ஆன் எந்த இடத்திலிருந்து பிரளயம் துவங்குமென்று கூறியதோ அந்த இடம்தான் தானூர் என்பதை நம்மால் ஊகிக்க முடிகிறதல்லவா! இதன் மூலம் மற்ற அறிவிப்புக்களனைத்தும் இதனோடு ஒன்றாக இணைந்தும் விடுகின்றன. அதாவது கடற்கரை ஓரமுள்ள தானூர் என்றொரு இடம். அந்த இடத்திலிருந்துதான் நீர் பொங்கத் துவங்கிற்று. இன்னும் அந்த இடத்தைத்தான் ஆதம் நபியின் தன்னூர் என வழங்கப்பட்டும் வந்தது.

அடுத்து இந்திய மக்களுக்கும் நூஹ் நபிக்கும் இடையே பிரிக்க முடியாத ஒரு இறுக்கமான பிணைப்பு இருந்தது என்பதையும் இந்திய மக்கள் நூஹ் நபியை '**மனூ**' என்னும் பெயரால் அறிந்திருந்தனர் எனவும் நாம் முன்னால் அழுத்தமான ஆதாரங்களைக் கொண்டு விளக்கியுள்ளோம் என்பது உங்களுக்கு நினைவிருக்கலாம். அதன்பின் கொஞ்சம் முன் இமாம் ஹஸன் பஸரியின் அறிவிப்பான '**எப்போது தன்னூரிலிருந்து நீர் பொங்குவதை நீர் பார்ப்பீரோ அப்போது நீரும் உம்மைச் சார்ந்தோரும் கப்பலி ஏறிக் கொள்ள வேண்டும்.**' என்பதையும், இவ்வாறே மற்ற அறிவிப்புக்களான '**தன்னூர் ஆதமுடையதாக இருந்தது. இன்னும் அது இந்தியாவில் இருந்தது**' என்பது போன்ற வாக்கியங்களையும் இணைத்துப் பார்ப்பீர்களாயின் நூஹ் நபியவர்கள் ஜலப்பிரளயத்திற்கு முன்பே இந்தியாவில்தான் தங்கியிருந்தார்கள் என்பதை தெரிந்து கொள்கிறோம். இப்போது வாருங்கள் அந்த ஜலப்பிரளயத்திற்குப் பின் அவர்கள் எங்கே இருந்தார்கள் என்பதை இப்போது பார்ப்போம். '**நரசிங்க அகர்வால் என்பார் தமது நூலில் ஆரியர்கள் இந்தியாவுக்குள் மனூவு(நூஹ் நபியு)டன் வந்தனர்**' என்று எழுதுகிறார்.

'ஆரியர்கள் இவர்களை பாதர் மனூ தன்னுடன் இந்தியாவுக்கு அழைத்து வந்தார். அப்போது அவர்கள் சிலை வணங்குபவர்களாக இருக்கவில்லை.'

-நூல்: THE Hindu Muslim QUESTION, Page 12.

**'குஜராத்தைச் சார்ந்த ஒரு சட்ட நிபுணரும் ஆய்வாளருமான எம்.ஸமான் கோகரா' என்பார் பல ஆண்டுகளாக ஆய்வு செய்தபின் திட்டப்படுத்திய விஷயம் யாதெனில், இரண்டாவது ஆதமின் (நூஹ் நபியின்) புனித திரேகம் குஜராத்தில் உள்ளது என்பதாம். அவர் இவ்வாறு வாதிப்பதற்குரிய காரணம் அங்கே 240 அடி நீளமுள்ள ஒரு பழமையான சமாதியானது குஜராத்திலிருந்து 25 மைல் தொலைவில் 'படேலா ஷரீப்' என்னும் ஊருக்கு வெளியே மகி நீண்ட காலமாக இருக்கின்றது. ஊருக்கு வெளியே ஒரு பர்லாங்கு தெற்கே முட்;செடிகளுக்கிடையே அடர்ந்த மரங்களின் நிழலில் ஒன்பது கஜமுள்ள ஒரு கப்ரை (சமாதியை) குறித்து பொதுவாகப் பேசப்படும் கருத்தானது, இது நூஹ் நபியின் மைந்தர் அல்லது பேரர் 'ஹழரத் கபீத்' என்பாரின் அடக்கஸ்தலம் தான் இதுவென்று பேசப்படுகின்றது. ஆனால் எம். ஸமான் கோகரா என்பார் சமாதிகளைக் குறித்த இரு கஷ்புடைய அறிஞர்களின் அறிவிப்பைக் கொண்டு இது 'கபீத்' உடைய சமாதியல்ல என்றும், மாறாக இது நூஹ் நபியுடைய சமாதிதான் என்றும் உறுதிப்படுத்துகிறார்.'**

-நூல்: ரோஸ் நாமா கௌமீ ஜங்க் 13 மார்ச்ச 1988.

பெருவாரியான கஷ்புல குபூரு (சமாதிகளைப் பற்றிய ஞானமு)டையோரைக் கொண்டும், மற்ற அறிஞர் பெருமக்களைக் கொண்டும் ஆதாரப்படுத்திய பின் மேற்கொண்டு அவர் எழுதுகிறார்...

**'படேலா ஷரீப்' என்னும் ஊர் ஒரு சிறிய கிராமமாகும். இது குஜராத்திலிருந்து ஐந்து மைல் தொலைவில் வடகிழக்குப் பக்கம் 'டான்டா' என்னும் ஊருக்குப் பக்கத்திலுள்ளது. இங்கிருந்து 'சம்ப்' என்னும் நதி துவங்குகிறது. இவ்வாறே 'சுனாப்', தோமி' என்னும் நதிகளும் அதனருகில் ஓடுகின்றன. பிரிக்கப்படுவதற்கு முன் இந்துக்கள் அந்த சமாதியை 'மனூ மெஹ்ரஸ்த்' என்னும் பெயரால் அழைத்து வந்தனர். மனூ மெஹ்ரஸ்த் என்பது சமஸ்கிருத சொல்லாகும். இதனுடைய அர்த்தம் 'படகோட்டி' என்பதாகும். அப்ரானி மொழியின் நூஹ் என்பதற்கும் இந்த அர்த்தம்தான் வழங்கப்படுகிறது. சமஸ்கிருதத்தின் பழமையான நூல்களில் காணப்படும் ஒரு விஷயமானது,**

**ஆதமின் ஒரு மைந்தர் விரைந்து செல்லும் ஒருவரின் தலைமுடியைப் பற்றி கப்பலுக்கு அழைக்கிறார் என காணப்படுகிறது. நூஹ் நபியின் ஜலப்பிரளயம் குறித்த இந்த சம்பவம் ஆரியர்களின் மிகப் பழமையான அவர்களின் மதக்கிரந்தங்களிலும் காணப்படுகிறது. இந்த ஆதாரங்களைக் கொண்டு நிரூபிக்கப்படும் ஒரு விஷயம்யாதெனில் துவக்க காலத்திலேயே நூஹ் நபியின் சந்ததியினர் கடல் சூழ்ந்த இந்தியா வரை பரவியிருந்தனர் என்பதாம். 'ஆயீனயே குஜராத்' என்னும் நூலில், குஜராத்தைச் சார்ந்தவர்கள் நூஹ் நபியின் மைந்தரான 'ஸாம்' என்பாரின் சந்ததியினராகும் எனக் கூறப்பட்டுள்ளது. இன்னும் இவ்வம்சத்தார் காஷ்மீரைச் சுற்றி பெரும் பெரும் கட்டிடங்களையும் ஏற்படுத்தினர்.**

**ஆனால் கால ஓட்டத்தில் ஸாமுடைய வம்சத்தாரின் சின்னங்கள் அனைத்தும் அழிந்து போய்விட்டன. எனினும் நகரங்கள் சமாதிகளின் தோற்றத்தில் இப்பரந்த மண்ணில் இன்றும்கூட தனது அடையாளங்களை தக்க வைத்துக் கொண்டுள்ளது. படேலா ஷரீபின் சுற்றுப்புறங்களில் இன்றும் கூட மண்ணினாலான பெரும் பெரும் குவியல்களும், குன்றுகளும் இங்கே ஒரு காலத்திலல் ஆதமுடைய சந்ததியினரின் அழகான நகரங்களாக இருந்தன என்பதற்கு சாட்சி கூறிக் கொண்டுள்ளன என்பதாக விளக்கம் தருகிறது.'** –நூல்: ரோஸ்நாமா கௌமீஜங்க் 13 மார்ச் 1988.

இத்தனை அழுத்தமான செய்திகளையெல்லாம் பார்த்த நீங்கள் இப்போது இதையும்தான் பார்த்து விடுங்களேன்...

**'யாகூத்து ஹமவீ என்பார் எழுதுகிறார், 'பவ்கீர் பின் யக்தன் பின் ஹாம் பின் நூஹ்' உடைய வம்சத்தில் 'சிந்து மற்றும் ஹிந்து' என்னும் பெயரில் இரு சகோதரர்கள் இருந்தனர். அவர்களின் பெயரால்தான் இவ்விரு தேசமும் பிரபலமாயிற்று'.**

-நூல்: கிலாபத்தே ராஷிதா அவ்ர் ஹிந்துஸ்த்தான் பக்கம் 25.

இதுவழைர நாம் கூறி வந்த அறிவிப்புகள் மற்றும் ஆதாரங்களனைத்தும் நீங்கள் யூகிப்பதற்குரிய பலத்தை தருகிறதா இல்லையா? அதாவது, நூஹ் நபியின் ஜலப்பிரளயத்திற்கு முன்னும் பின்னும் நூஹ் நபிக்கு இந்தியாவோடு தொடர்பு இருந்ததைை இவை உறுதிப்படுத்தவில்லையா என்ன?

மேலும் ஆதம் நபி நூஹ் நபி பற்றி அறிவிப்புக்களையும், ஆதாரங்களையும் தனித்தனியாகப் பிரித்துப் பார்ப்பீர்களாயின் அவைகளில் சில உங்களுக்கு பலவீனமானவைகளாக தெரியவரலாம். இருப்பினும் அவையனைத்தையும் ஒன்றாக இணைக்கும்போது அதுவே மிகப் பலமான ஆதாரமாக அமைந்து விடும். பின்னர் இதையும் நீங்கள் கவனிக்க வேண்டும். அதாவது வேறு எந்த நாட்டிலும் அவர்களின் பிறப்பைக் குறித்த அல்லது இறப்பைக் குறித்த ஆதாரங்களும் நமக்கு வேறு எங்கேயிருந்தும் இதுவரை கிடைக்கவில்லை. அதன்றி மேற்படி ஆதாரங்களை, அறிவிப்புக்களை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கடுக்காகத் தந்த அறிவிப்பாளர்கள், ஆய்வாளர்கள் அத்தனை பேரும் ஒன்று சேர்ந்து தங்களின் கற்பனைக்கு வளம் சேர்த்தனரென்று சொல்லப்படுமாயின் இதோர் ஆச்சரியமான அதேநேரம் அர்த்தமற்ற ஒரு வாதமென்றுதான் சொல்ல வேண்டு:ம் என்ன? அரபியரும் ஆதம் நபி, நூஹ் நபி போன்றோரை இந்தியாவோடு இணைத்துப் பேசியிருப்பதும் கற்பனையான ஒன்றெனில் அவர்களை சீனா, ரஷ்யா, ஜப்பான், ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவுடன் ஏன் இணைத்து கற்பனை செய்யவில்லை?

மேலும் இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? அக்காலத்திய மனிதர்கள் அறுபது அடி உயரமுள்ளவர்களாகவும், ஆயிரம் ஆண்டுகள் வரை வாழுபவர்களாகவும் இருந்துள்ளனர். இப்படிப்பட்டோர் இப்பூமியின் நாலா பக்கங்களுக்கும் சென்றுள்ளனர் என்பது ஒரு திகைப்புக்குரிய விஷயமேஅல்ல. அன்றி நீண்ட வயதுக்குரிய அறிவிப்புக்கள் மிகவும்

பிரபலமானவை. இவ்வாறே நீண்ட உருவம் குறித்து புகாரி என்னும் நபிமொழிக் கிரந்தத்தில் வைத்து அபூஹுரைரா என்னும் நபித்தோழர் கூறும்போது, ஆதம் நபியவர்களின் உயரம் அறுபது கெஜமாக(மீட்டர்) இருந்தது என்றும் அதன்பின் மனிதர்களின் உயரம் குறைந்து கொண்டே வந்ததென்றும் கூறுகின்றனர்.

**இந்தியாவில் மூஸா நபியும் மற்ற நபிமார்களும்.**

இதுவரை நாம் மேலே சுட்டிக் காட்டி வந்ததைப் போல ஆதம் நபி, நூஹ் நபி மட்டுமல்ல எத்தனையோ நபிமார்கள் இந்தியாவுக்க வருகை தந்துள்ளனர் அல்லது இந்தியாவில் இருந்துள்ளனர் என்பதற்குரிய ஆதாரங்கள் நமக்கு கணக்கின்றி காணக்கிடைக்கின்றன. அவைகளில் சிலவற்றை மட்டும் உங்கள் பார்வைக்காக தருகிறோம்.

**'அரபியர் 'புத்தரை' தான் 'பூதாஸிப்' என்றழைத்து வந்தனர் என்பதில் திடஞானிகளுக்கு எவ்வித சந்தேகமும் இல்லை'** – நூல்: அரப் ஹிந்த்கே தஅல்லுகாத் பக்கம் 115.

**'அன்றைய பிரபலமான அறிஞர்களில் ஒருவரான 'மௌலானா மனாஸிர் அஹ்ஸன் கீலானி' என்பாரின் பார்வையில் மகாத்மா புத்தரிடம் நபித்துவத்தின் வாடை வீசிற்று என்பதாம். மேலும் அவர் திருக்குர்ஆன் குறிப்பிடும் 'துல்கிப்லையும்' 'கபல்தஸ்தவா'வையும் ஒரே மனிதர் தானென்று கூறிக் கொண்டிருந்தார்.'**

-நூல்: மஆரிப் இதழ், மலர் 95, பக்கம் 171.

**'ஏ.என். கனங்கம்'** என்பாரின் மிகப்பழமையான 1862-1863 ம் வருடத்திய ரிப்போர்ட்டின் ஆய்வுக் குறிப்பில் நமக்கு முக்கியமானதொரு குறிப்பொன்று கிடைக்கின்றது. அதாவது...

**'கனங்கம் அஜ்வதியாவிலுள்ள சமாதிகளைக் குறித்து விபரிக்கும்போது இப்படி எழுதுகிறார். மினா மற்றும் கபீர் என்னும் குன்றுகளுக்கிடையே இஸ்லாமியரின் ஒரு மதஸ்தலம் இருக்கின்றது. அது கிழக்கிலிருந்து மேற்குவரை நாற்பத்தாறு அடி நீளமும் நாற்பத்தேழு அடி அகலமும் உள்ளது.அதில இரு சமாதிகள் உள்ளன. ஒன்று ஷீத் நபியுடையது. மற்றொன்று அய்யுப் நபியுடையதுமாகும் என்று சொல்லப்படுகிறது'**.

-நூல்: முஸ்லிம் இண்டியா, ஏப்ரல் 1988 பக்கம் 15.

**'இந்திய மண்ணும் நபிமார்களை விட்டு காலியாகவில்லை. முஜத்தித் அல்பதானி போன்ற இஸ்லாமிய கொள்கையில் மிகவும் பிடிப்புள்ளவர்கள் கூட இந்தியாவிலும் நபிமார்களின் தோற்றம் இருந்ததென்பதை ஒப்புக் கொள்கின்றனர். இன்னும் அவர்களுக்கு இங்குள்ள பல நகரங்களிலிருந்தும் நபித்துவத்தின் பேரொளி தென்பட்டது'** -நூல்: மக்தூபாத் பாகம் 1, பக்கம் 295.

எம். ஸமான் கோகராவைக் குறித்து அவரது கட்டுரையை பிரசுரித்த நாளிதழின் ஆசிரியர் சொல்லும்போது...

**'எம்.ஸமான் கோகராவுக்கு நூஹ் நபி மற்றும் நூஹ் நபியின் மைந்தரின் சமாதி மட்டுமின்றி வேறு பல சமாதிகளை குறித்தும் தெரிந்திருந்தது. அதைப் பற்றி அவர் கூறும்போது, 'சௌகானி' என்னுமிடத்தில் யூசுப் நபியின் மைந்தரான 'தானூக் கன்ஆனி'யின் சமாதி இருந்ததென்றும் 'ஆயீனயே குஜராத்' என்னும் இதழில் காஜி சுல்தான் மஹ்மூத் என்பார் சமாதிகளைக் குறித்து தமது ஞான அறிவைக் (கஷ்புல் குபூரை) கொண்டு குஜராத்தின் அக்கம்பக்கத்தில் பல சமாதிகளை இனம் காட்டித் தந்துள்ளார். அவர் அந்த சமாதிகளனைத்தும் பனீ இஸ்ரவேலர்களது நபிமார்களின் சமாதிகளென்றும் அவர்கள் மூஸா நபி மற்றும் இம்ரானின் சந்ததியினர் என்றும் கூறுகிறார்.**

**இன்னும் மிகப்பழமையான வரலாற்று ஆதாரங்களை முன்னிறுத்திப் பார்க்கும்போது குஜராத் கல்வி கலை ஞானங்களைக் கொண்டு யூனான் பிரதேசத்தை போன்றது மட்டுமல்ல. மாறாக ஆன்மீகத்துடைய தொடர்பால் நபிமார்களின் அடக்கதலங்களை பெற்ற ஓர் இடமுமாகும். 'ரவால் ஷரீப்' என்னுமிடத்தில் ஒரு சமாதி உள்ளது. அதனுடைய நீளம் சராசரியான சமாதிகளை காட்டிலும் மிகவும் அதிகமாக உள்ளது. அதைக் குறித்து அந்த இடத்தில் ஆதம் நபியின் மைந்தர்களில் ஒருவரான ஷீத் நபியின் சந்ததியைச் சார்ந்த ஒஜரு இறைநேசர் சமாதி கொண்டிருக்கிறார் என்று கூறுப்படுகிறது. 'பனீஸகர்' என்னுமிடத்தில் 'ஹம்ஸயாலானின்' சமாதி என்றுள்ளது. இவர் புக்துநஸர் என்னும் அரசன் அரபுமண்ணை ஆக்கிரமித்தபோது அவனால் சிறைபிடிக்கப்பட்டார். அதன்பின் 'பாபுலில்' (பாபிலோன்) அஸீர் என்னுமிடத்தில் எழுபது ஆண்டுகள் வரை வாழ்ந்தபின் இந்தியாவுக்கு வந்து விட்டார். இவரது முன்னோர்களில் ஒருவர் ஹாரூன் நபியாகும்.**

**இவ்வாறே 'டான்டா' என்னும் சிற்றூரில் ஒரு இஸ்ரவேலருடைய தலைவரின் சமாதியுள்ளது. இதுபோன்றே 'தோகி' என்னும் நதிக்கரையில் 'சுல்தான் பைனூஸ் மற்றும் பயனூஸ்' என்பாரின் சமாதிகளும் உள்ளன. இவ்விரு பெரியாரும் இப்றாஹீம் நபியின் மைந்தரான 'அப்ராஸீம்' சந்ததியரென்று சொல்லப்படுகிறது. சுல்தான் 'சனியாதூஷ்' பற்றிய பிரபலமானதோர் செய்தி யாதெனில் இவர் தாவூத் நபியின் மைந்தரென்று கூறப்படுகிறது.**

**அடுத்து ஒன்பது முழ நீளமுள்ள சமாதியொன்றும் 'ரஹ்டா' என்னும் ஊரிலுள்ளது. இப்பழமையான பல நூற்றாண்டுகளுக்கு முந்தைய சமாதிகள் இன்றும் சீர்குலையாது இறையாற்றலின் நினைவுச் சின்னங்களாக அழியாதிருப்பது என்பது அந்த நபிமார்களின் அற்புதமென்றுதான் சொல்ல வேண்டும்.'**

-ஆதாரம்: கௌமீ ஜங்க் நாளிதழ், 13 மார்ச் 1988.

அடுத்து மூஸா நபியைக் குறித்து ஜெயின் சமூக மக்களின் வரலாற்றில் அவர்கள் இந்தியாவுக்கு வந்தார்களென்று கூறப்படுகிறது. பின்னும் ஆதம் நபி, நூஹ் நபி போன்றோர் இந்தியாவில் வாழ்ந்த ஆதாரங்களை ஒப்பிடும்போது இதுவரை நாம் மேலே எடுத்துக் காட்டியவைகளுக்குரிய ஆதாரங்கள் என்பது மிகக் குறைவானது தான். இருப்பினும் வரலாற்றுடைய ஏடுகள் அவற்றை குறிப்பதால் உங்களின் பார்வைக்குக் கொண்டு வந்தோம்.

**இந்தியாவில் ஈஸா நபி**

ஈஸா நபியவர்கள் இந்தியாவுக்கு வந்துள்ளனர் என்பது பற்றி காஷ்மீர் மற்றும் லடாக் பகுதியிலிருந்து கணக்கில்லாத ஆதாரங்கள் நமக்குக் கிடைக்கின்றன. ரஷ்யா மற்றும் ஆங்கிலேய ஆய்வாளர்களும் இதைக் குறித்து பேசுகின்றனர். இதுபற்றி நாம் 'தம்பனீ மார்ச் 1973 இதழில் வெளிவந்த 'ஈஸாவின் மறைவான ஜீவியம்' என்னும் ரஜ்னீஷ் அவர்களின் கட்டுரையிலிருந்து சில பகுதிகளை உங்களின் பார்வைக்குத் தருகிறோம்.

**'இந்தியாவில் ஈஸா நபி இருந்துள்ளனர் என்பதற்கு நமக்கு எண்ணற்ற ஆதாரங்கள் கிடைக்கின்றன. அதாவது ஈஸா நபி காஷ்மீரில் ஒரு புத்த மடத்தில் தங்கி இருந்துள்ளனர். காஷ்மீரில் இதுகுறித்த கதைகள் பிரபலமானவை. அப்போது அங்கே அவர்கள் முராகபாவி(தியானத்தி)ல் மூழ்கியிருந்தார்கள். அதன்பின் ஜெரூஸலத்தில அவர்கள் வெளிப்பட்டார்கள். அப்போது அவர்கள் முப்பது வயது உடையவர்களாக இருந்தனர்'.**

பிரான்ஸ் நாட்டைச் சார்ந்த வரலாற்றாசிரியர் ஒருவர் தமது (The Serpent of Paradise) என்னும் நூலில் '**முப்பது ஆண்டுகள் வரை அவர் (ஈஸா) என்ன செய்து கொண்டிருந்தார்? எங்கே இருந்தார்? என்பது யாருக்குமே தெரியாது. ஒரு அறிவிப்பின் படி அவர் 'காஷ்மீரில் இருந்தாரென்று கூறப்படுகின்றது**' என்பதாக எழுதுகிறார்.

**'உலகப் பயணம் செய்த ரஷ்யாவைச் சார்ந்த 'நிகோலஸ் பைரூவச்' என்பார் கி.பி. 1887 ல் இந்தியாவுக்கு வந்தபோது லடாக் பகுதிக்கு சென்றார். அங்கே அவர் நோய்வாய்பட்டு காடுகளடர்ந்த ஒரு குகைக்குள் தங்கியிருந்தார். அங்கே அவர் தங்கியிருந்த காலங்களில் பல்வேறு புத்தமத நூல்களையெல்லாம் படித்தார். அவற்றில் ஈஸா நபியின் நல்லுபதேசங்களையும் அவர்கள் லடாக் வந்த விசயங்களையும் கண்டார். அதன்பின் அவர் நூலொன்றை எழுதினார். அந்த நூலில் ஈஸா நபியவர்கள் லடாக்குக்கு வந்ததைப் பற்றியும் கிழக்கு தேச நாடுகளுக்கு அவர்கள் பயணம் செய்ததைப் பற்றியும் விரிவாக எழுதியுள்ளார். அதாவது, லடாக்கில் ஈஸா நபியவர்கள் உயர்ந்த மலைகளையெல்லாம் கடந்து பனி நிறைந்த பாதைகளையும் குன்றுகளையும் தாண்டி காஷ்மீரிலுள்ள 'பெஹல்காம்' என்னுமிடத்திற்கு வந்து சேர்ந்தார். அங்கேயே அவர் நீண்ட காலமாக தனது ஆடுமாடுகளை பராமரித்துக் கொண்டு தங்கியிருந்தார். அங்கே ஈஸா நபியவர்களுக்கு சில மறைந்து போன இஸ்ரவேலர்களுடைய சமூகத்தாரின் அடையாளங்களும் கிடைத்தன. இன்னும் ஈஸா நபியவர்கள் அங்கே வந்து தங்கிய பின்புதான் அந்த ஊர் பெஹல்காம் என்றே அழைக்கப்படலாயிற்று. 'பெஹல்' என்றால் காஷ்மீர மொழியில் 'பழவர்க்கமுள்ள' என்பது அர்த்தமாகும். அதன்பின் ஶ்ரீநகர் வழியாக செல்லும்போது இளைப்பாறுவதற்காக சிறிது அங்கே தங்கினர். இன்னும் 'இஸ்முக்கம்' என்னுமிடத்தில் வைத்து ஜனங்களுக்கு நல்லுபதேசமும் செய்தனர். இந்த ஊரும் இஸ்முக்கம் (ஈஸா இளைப்பாறிய இடம்) எனப் பின்னர் அழைக்கப்படலாயிற்று'.**

அதே இதழில் தம்பனீ மார்ச் 1978 ல் **'சாந்தி கஞ்ச் ஹரித்துவார்'** என்னும் தலைப்பில் **'திபெத்லாமாவின் அருகில் ஈஸா'** **तिब्बती लामा [illegible] में भविष्य पुराण** என்னும் கட்டுரை யொன்றும் பிரசுரமாயிற்று. அதிலிருந்தும் சில பகுதிகளை உங்களின் பார்வைக்காக தருகிறோம்.

**'இந்த முப்பது ஆண்டுகளும் ஈஸா நபியவர்கள் எங்கே இருந்தனர்? என்ன செய்தனர்? என்பதைப் பற்றி பல ஆய்வாளர்'கள் நீண்டகாலமாக ஆராய்ந்தனர். ஆய்வுக்குரிய ஸ்காலர்களில் அனைவரையும் மிஞ்சக் கூடிய வகையில் ரஷ்யாவைச் சேர்ந்த ஆய்வாளர் 'நௌராவச்' என்பார் தொடர்ந்து நாற்பதாண்டு காலம்வரை பல நாடுகளை சுற்றி ஆய்வு செய்து இறுதியில் கி.பி. 1898 ல் (ருமெழெறn டுகைந ழக துநளரள) என்னும் பெயரில் நூலொன்றை எழுதி வெளியிட்டார்.**

**நிகோலஸ் நௌராவச் தனது ஆய்வுப் பயணத்தின்போது திபெத்துக்கு சென்றார். அவர் திபெத்திலுள்ள 'ஹம்னூஸ்' என்னும் புத்தவிஹாரத்தில் பேரீத்தமரத்தைப் போன்று உயர்ந்து வளர்ந்துள்ள ஒரு மரத்துடைய இலைகளால் எழுதப்பட்ட மிக மிகப் பழமையான கிரந்தமொன்றைக் கண்டார். நௌராவச் அப்புத்தவிஹாரில் தாம் கழித்த நாட்களைப் பற்றி எழுதும்போது, நான் அங்கிருந்த ஒரு குகைக்குள் சென்றபோது அங்கிருந்த லாமா ஒருவர் எனக்கு ஒரு தீர்க்கதரிசியைப் பற்றி சொன்னார். அவரை அவர் புத்தரின் தோற்றமென்றே நம்பினார். அவரைப் பற்றி எனக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது. இருப்பினும் பெரிய லாமாவிடம் நூலொன்று இருக்கிறது. அதில் ஈஸாவைப் பற்றி நிறைய எழுதப்பட்டுள்ளது என்றார். பல்வேறு முயற்சிக்குப் பின் அந்நூலை நௌராவச் காப்பி எடுத்தார். அதில் பதினான்கு அத்தியாயங்களும் இருநூற்றி நாற்பத்தி நான்கு சுலோகங்களும் உள்ளன. ஈஸா நபியைப் பற்றி அந்த நூலில் கூறப்பட்டுள்ள விபரம் பின்வருமாறு...**

**ஈஸா நபி ம:ஃரிபத்தை (மோட்சம்) தேடி இந்தியாவுக்கு வந்தார். அக்காலத்தில் ஜெருஸலத்திலுள்ள வணிகர் கூட்டம் வர்த்த்தகத்தின் நிமித்தம் இங்கே வந்துபோய் கொண்டிருந்தன. அதில் ஈஸாவும் ஒரு வர்த்தகக் கூட்டத்தாரோடு இணைந்து சிந்து வழியாக இந்தியாவிற்கு வந்தார். ஈஸா எல்லா மக்களையும் நேசித்தார். அவரை வைசியர் சூத்திரர் ஆகிய அனைவர்களும் நேசித்தனர். அப்போது அவர் ஜகந்நாத்பூரில் தங்கியிருந்தார். அங்கிருந்த ஆலயத்தின் பூசாரிகளுக்கு ஈஸா சூத்திரர்களை நேசிக்கிறார் என்றும் அவர்களோடு பழகுகிறார் என்றும் தெரிய வந்தபோது அவர்கள் ஈஸா நபியை வெறுக்கத் துவங்கினர். ஈஸாவுக்கு அப்பூசாரிகள் தம்மை வெறுப்பது தெரியவந்தபோது அவர் ஜகந்நாத் ஆலயத்தை விட்டு 'ராஜ்கிரா'வுக்கு சென்று விட்டார். ஆறு ஆண்டுகள் வரை அங்கே தங்கியிருந்து அதன்பின் நேபாளம் சென்று அங்கிருந்து திபெத்துக்கு வந்து சேர்ந்தார். பதினாறு ஆண்'டுகள் வரை இவ்வாறு பயணம் செய்தவாறே இறுதியில் ஈரான் வழியாக தனது நாட்டுக்குத் திரும்பிச் சென்றார். திபெத்தில பயணம் செய்த காலத்தில் அவர் சில ஆண்டுகள் வரை ஹம்னூஸிலுள்ள புத்தவிஹாரத்தில் லாமாவுடன் தங்கியிருந்தார்.**

**மேலும் இன்ஜீல் வேதத்தில் கூறப்பட்டுள்ள விபரமானது, 'பைத்துல் லஹம்' என்னும் இடத்தில் வைத்து ஈஸா நபியவர்கள் பிறந்தபோது கிழக்கு தேசத்தை சார்ந்த சில ஞானிகள் அவர்களை சந்திப்பதற்காக பைத்துல் லஹமுக்கு வந்ததாகக் கூறப்பட்டுள்ளது. 'ஆர்தர்மால்' என்பார் அந்த ஞானிகளை புத்த சன்னியாசிகள் என்பதாக குறிப்பிடுகிறார்.**

**'கிறாய்ஸ்ட் இன் காஷ்மீர்' என்னும் நூலில் அஸீஸ் குறைஷி என்பார் கூறுகிறார், அக்காலத்தில் யூதர்களின் பெருங்கூட்டமொன்று இந்தியாவுக்கு வருகை தந்து இங்கேயே தங்கிவிட்டனரென்றும் அதனுடைய அடையாளம் இப்போதும் இருக்கிறதென்றும் கூறுகிறார். இன்னும் காஷ்மீரிலுள்ள 'கோஜர்' என்னும் சமூக மக்கள் சத்திரியர்களின் கூட்டம் என்று கூறிக் கொள்கின்றனர். அவர்களின் பெயர் இப்போதும் கூட யூதர்களின் பெயரைப்போன்றே காணப்படுகிறது. இன்னும் இவர்கள் அப்ராணி மொழியுடன் இணைந்த பாஷை பேசுகின்றனர். தெரிந்து கொள்ளுங்கள்,யூதர்களிலும் அப்ராணி மொழிபேசப்படுகிறது. அவர்களின் வீடுகளின் பெயர்களும் யூதர்களின் பெயரைப் போன்றுதான் உள்ளது. ஈஸா நபியும் யூதர்களின் பாரம்பரியத்தில்தான் தோன்றினார். அந்நாளில் இந்தியாவுக்கு வருகை தந்த யூதர்களின் வர்த்தக கூட்டத்தாரோடு சேர்ந்துதான் இந்தியாவுக்கு வந்தனர்.**

**துரைசாமி ஐயங்கார் என்பாரால் எழுதப்பட்ட Long Missing Links and Discoveries About Aryans என்னும் நூலில் 'ஜெம்மீஸ்' என்பவரால் குறிப்பிடப்படும் பல ஆதாரங்களையும் படங்களையும் தருகிறார். அதில் எத்தனை படங்கள் உள்ளதோ அவையனைத்தும் இந்திய கலாச்சார தாக்கத்தை கொண்டதாகவே காணப்படுகிறது.**

**பவிஷ்ய புராணத்தின் भविष्य पुराण பிரசங்கம் 3, அத்தியாயம் 22 ல், 21 லிருந்து 26வது சுலோகம் வரை இமயத்தில் ஈஸாவுடன் 'ஷுகாதேவ்' என்பாரோடு நிகழ்ந்த சந்திப்பை இவ்வாறு கூறப்படுகிறது. அதாவது, ஒரு முறை ஷுகாதேவ் இமயத்தை தாண்டி हूण 'ஹூட்' என்னும் தேசத்திற்கு சென்றார். அங்சே அவர் வெண்மையான ஆடை தரித்த சிவப்பான மனிதரை மலைகளில் சுற்றிக் கொண்டிருக்க கண்டார். ஷுகாதேவ் அவரைக் குறித்து கேட்க, அதற்கவர் என்பெயர் ஈஸா என்றும் தான் ஒரு கன்னித்தாயின் வயிற்றில் பிறந்தவன் என்றும், வேற்று தேசத்திலிந்து வந்துள்ளேன் என்றும், என்னை மக்கள் 'மஸீஹ்' என்று அழைப்பார்பளென்றும் கூறினார்'** –ஆதாரம் தம்பனீ டிசம்பர் 1978 பக்கம் 135-139.

இதுவரை நாம் மேலே எடுத்துக்காட்டிய ஆதாரங்களன்றி **'ரமேஷ் சுந்தர்தத்'** என்பாரின் நூலாகிய (History of Civilisation in Ancient India)**'புராதான இந்திய கலாச்சாரத்தின் வரலாறு'** என்னும் நூலும், டாக்டர் 'ஸ்பென்ஸர்' என்பாரால் எழுதப்பட்ட (Mystic Life of Jesus) **'ஈஸாவின் மறைவான ஜீவியம்'** என்னும் நூலும் ஈஸா நபியவர்கள் இந்தியாவுக்கு வருகை தந்திருந்தனர் என்பதை தகுந்த ஆதாரங்களைக் கொண்டு உறுதிப்படுத்துகின்றன.

இதுதான் இந்திய தேசத்தை குறித்த ஆங்கிலேய மற்றும் ரஷ்ய ஆராய்ச்சியாளர்களின் ஆய்வறிக்கை. இதை நீங்கள் நம்புவதோ அல்லது நம்பாமல் இருப்பதோ உங்கள் விருப்பம். அப்படியும் இதை நம்பித்தானாக வேண்டும் என்ற கட்டாயம் ஏதுமில்லை. இப்போது வாருங்கள் இறுதித் தூதர் முஹம்மத் நபிக்கும் இந்தியாவுக்குமிடையே உள்ள தொடர்பை இப்போது காண்போம்.

**இந்தியாவில் முஹம்மத் நபி**

**'முஹம்மத் நபியவர்களின் தோழர்களில் ஒருவரான 'தமீம்தாரீ' என்பார் ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டு இஸ்லாத்தை தழுவினார். அவரைக் குறித்து நடமாடும் ஒரு அறிவிப்பானது, அவர் இஸ்லாத்தை பரப்பும் நோக்கத்தோடு இந்தியாவின் தென்பகுதிக்கு வந்தார். வந்தவர் இங்கேயே அகாலமும் எய்திவிட்டார். அவரது சமாதி சென்னையை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ளது.'**

-நூல்: கிலாபத்தே ராஷிதா அவ்ர் ஹிந்துஸ்தான் பக்கம் 47.

தபகாத் இப்னு ஸஃத், ஸீரத் இப்னு ஹிஷாம், தாரீகே தப்ரீ போன்ற நூல்களில் காணப்படும் ஒரு நபிமொழியானது...

'ஹிஜ்ரி பத்தாம் நூற்ஹாண்டி ல் நபித்தோழர் காலித் பின் வலீத் என்பார் நஜ்ரானை சேர்ந்த பனூ ஹாரிஸின் ஒரு கூட்டத்தாரை அழைத்துக் கொண்டு முஹம்மத் நபியவர்களின் முன் வந்தபோது, நபியவர்கள் அக்கூட்டத்தாரைப் பார்த்து விட்டு, யார் இவர்கள்? இந்தியர்களைப் போல் இருக்கிறார்களே என்றனர்.'

-நூல்: கிலாபத்தே ராஷிதா அவ்ர் ஹிந்துஸ்தான் பக்கம் 29-30.

மேற்கண்ட இரு நபிமொழிகளைக் கொண்டும் முஹம்மத் நபியவர்கள் இந்தியர்களை எத்தனை தூரம் புரிந்து கொண்டிருந்தார்கள் எனில், முகம் தெரியாதவர்களின் அடையாளங்களை விளக்க இந்தியர்களை நபியவர்கள் உவமைப்படுத்துகின்றனர் எனக் கூறப்படுகிறது. அடுத்து நாம் எடுத்துக் காட்டப் போகும் இரு நபிமொழிகள் முஹம்மத் நபியவர்கள் இந்தியர்களை நன்றாக தெரிந்து வைத்திருந்தனர் என்பதை மேலும் உறுதிப்படுத்துவதை பாருங்கள்.

இதுபோன்றே நபித்துவ காலத்தில் இந்தியாவை சேர்ந்த பல கூட்டத்தார் அரபு மண்ணில் வாழ்ந்து வந்தனர். அவர்களில் '**ஜாட்**' மற்றும் '**ஸயாப்ஜா**'வின் கூட்டத்தார் பெருமளவில் அரபிய கிழக்குக் கடற்கரையோரம் வாழ்ந்துவந்தனர். அவர்களை அரபைச் சேர்ந்த அனைவர்களும் தெரிந்து வைத்திருந்தனர். அதுமட்டுமல்ல. முஹம்மத் நபியவர்களும் அவர்தம் தோழர்களும் கூட அவர்களை தெரிந்து வைத்திருந்தனர். உதாரணமாக திர்மிதி என்னும் நபிமொழி நூலில் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் என்னும் நபித்தோழரைக் கொண்டு அறிவிக்கப்படுவதாவது...

**'சிலர் என்பக்கமாக வந்தனர். அவர்களின் தேகம் மற்றும் கேசம் போன்றவை ஜாட் இனத்தாரைப் போலிருந்தது.'** – நூல்: திர்மிதி, பாகம் 2 பக்கம் 135.

புகாரி என்னும் நபிமொழி கிரந்தத்தில் முஹம்மத் நபியவர்கள் மூஸா நபியை மிஃராஜுடைய பயணத்தின்போது கண்டதைப் பற்றி, மூஸா நபியின் நிறத்தையும், சரீரத்தையும் ஜாட் இனத்தாரோடு ஒப்பிட்டுக் கூறினர் எனக் கூறப்பட்டுள்ளது. அந்த நபிமொழியானது...

**'இப்னு உமர் என்னும் நபித் தோழர் முஹம்மத் நபியவர்கள் நவின்றதாகக் கூறுகிறார், நான் ஈஸா நபி, மூஸா நபி மற்றும் இபறாஹீம் நபியைக் கண்டேன். ஈஸா சிவந்த நிறமுடையவராகவும், சுருண்ட கேசமுள்ளவராகவும், பரந்த மார்புடையவராகவும் இருந்தார். இவ்ஸாவாறே மூஸா நபி கோதுமை நிறமுடையவராகவும், நீண்ட தலைமுடியைக் கொண்டவராகவும் ஜாட் இனத்தாரைப் போன்றும் இருந்தார்.'** –நூல்: புகாரி, பாடம் கிதாபுல் அன்பியா.

ஆக இதுவரை நாம் எடுத்துக்காட்டியவை அனைத்தும் இந்தியாவைப் பற்றி முஹம்மத் நபியவர்களுக்கு இருந்த பரிச்சயத்தை மட்டும் சுட்டிக் காட்டுகிற அறிவிப்புக்களாகும். ஆனால் விசயம் பரிச்சயத்தோடு மட்டுமல்ல. இந்தியாவுடன் முஹம்மத் நபியவர்களுக்கு இருந்த நெருக்கமான தொடர்பு, நேசம், பிணைப்பு போன்றவைகளையும் இப்போது பாருங்கள்.

**'அரபு தேசத்தவருக்கு இந்தியாவுடன் எப்போதுமே நெருக்கமான பிணைப்பு இருந்து வந்துள்ளது. இதில் அரபியர் நினைப்பது என்னவெனில், ஆதம் நபியவர்கள் பூமியில் 'தஜ்னா' என்னுமிடத்தில்தான் இறக்கப்பட்டார்கள் என்றும், அந்த இடம் இந்தியாவில்தான் இருக்கிறது என்றும் நம்புகின்றனர். அதுபோது 'நூரே முஹம்மதீ' (முஹம்மத் நபியின் ஜோதி) ஆதமுடைய நெற்றியில் அமானிதமாக இருந்ததால் இதன்மூலம் உறுதிப்படுத்தப்படும் விசயம் யாதெனில், முஹம்மத் நபியவர்களின் முதல் துவக்கத்திற்குரிய வெளிப்பாடே இந்தியாவில்தான் ஆரம்பமாயிற்று என்பதாம்.'** –நூல் தப்ஸீர் துர்ருல் மன்ஸூர் பாகம் 1 பக்கம் 55.

**'மற்றோர் அறிவிப்பானது, சுவனத்திலிருந்து நான்கு நதிகள் வெளியாயிற்று. அவை நைல், புராத், ஜைஹூன், ஸைஹூன் என்பதாகும். இதில் நைல் நதி எகிப்திலுள்ளது. இவ்வாறே புராத் நதி ஈராக்கிலும், ஜைஹூன் நதி துருக்கியிலும் உள்ளது. ஸைஹூனைப் பற்றி சொல்லும் போது அது இந்தியாவிலுள்ள நதி என்று சொல்லப்படுகின்றது. என்ன? சுவனத்துடைய அந்த நான்காவது நதியை கங்கை என்று சொல்லலாமா? இருப்பினும் வேறுசிலர் அதை சிந்து நதி என்றும் கூறுகின்றனர்.'** –நூல் அரப் ஹிந்த்கே தஅல்லுகாத் பக்கம் 2,3.

இதுபோன்றே அரபியரிடம் காணப்படும் மற்றோர் நபிமொழியானது...

**'முஹம்மத் நபியவர்கள் கூறினர், எனக்கு இந்திய தேசத்தின் பக்கமிருந்து இறையாண்மையின் நறுமணம் வீசுகிறது என்றும், இவ்வாறே அலீ என்னும் நபித்தோழர்**

**மிகப் பரிசுத்தமான நறுமணம் நிறைந்த இடம் இந்தியா என்றும் கூறுகின்றனர்.'** – நூல்: ஸப்தத்துல் மர்ஜான் ஃபீதாரீக் ஹிந்துஸ்த்தான் பக்கம் 88.

இதுமட்டுமல்ல. முஹம்மத் நபியவர்கள் இந்தியாவில் நிகழவிருக்கும் யுத்தத்தைப் பற்றிய சுபச் செய்தியையும் தந்துள்ளனர். இது எப்படிப்பட்ட யுத்தம் எனில் இதில் பங்கேற்றாலே போதும். பங்கேற்பவர் நரக நெருப்பை விட்டும் பாதுகாப்புப் பெறுவார் என்பதாக முஹம்மத் நபியவர்கள் கூறுகின்றனர். இதனை இமாம் நஸாயி சுனனிலும், இமாம் தப்ரானி முஃஜமிலும் தகுந்த ஆதாரங்களைக் கொண்டு ஸவ்பான் என்னும் நபித்தோழர் மூலம் அறிவிக்கின்றனர்.

**'முஹம்மத் நபியவர்கள் கூறுகின்றனர், எனது சமூகத்திலுள்ள இரு கூட்டத்தாருக்கு இறைவன் நரக நெருப்பிலிருந்து பாதுகாப்பு அளித்தான். அதில் ஒரு கூட்டம் இந்தியாவில் ஜிஹாத் (அறப்போர்) செய்யும். இன்னொரு கூட்டம் ஈஸா நபியோடு இருக்கும்.'** நூல்: நஸாயி பாகம் 2 பக்கம் 63.

**'அபூஹுரைரா என்னும் நபித்தோழர் கூறுகிறார், எங்களிடையே முஹம்மத் நபியவர்கள் இந்திய யுத்தம் குறித்து வாக்களித்துள்ளனர். ஒருவேளை நான் அதில் பங்கு பெறுவேனாயின் எனது உயிர் பொருள் அனைத்தையும் அதற்காக செலவிடுவேன். அவ்வாறின்றி ஒருவேளை நான் அப்போரில் வெட்டப்பட்டால் மிகச் சிறந்த ஷஹீதா(தியாகியா)குவேன். அப்படியும் இன்றி ஒரு வேளை நான் திரும்பி வந்தால் நரகதத்திலிருந்து விடுதலை பெற்ற அபூஹுரைராவாக திரும்பி வருவேன் என்று கூறுகின்றனர்.'** (இறைவன் நமக்கும் அப்போரில் பங்கு கொள்ளும் பாக்கியத்தை தருவானாக) நூல்: கிலாபத்தே ராஷிதா அவ்ர் ஹிந்துஸ்த்தான் பக்கம் 36.

**அரபும் ஹிந்தும் ஒன்றாயிருந்தன.**

அரபுக்கும் இந்தியாவுக்கும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நடைபெற்று வந்துள்ள வர்த்தக, கலாச்சார மற்றும் ஆன்மீக ரீதியான தொடர்பின் ஒரு நீண்ட வரலாற்றுடைய மத்தியப் பகுதியைத்தான் இதுவரை நீங்கள் பார்த்தீர்கள். சிலபோது இவ்விரு தேசங்களும் ஒரே கம்யூட்டரின் இரு பாகங்களோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது. சில இரட்டை சகோதரர்களின் மூளை வெள;வேறாக இருந்தாலும் அவர்களின் எண்ண அலைகள் மட்டும் ஒன்றாகச் சேர்ந்து (இருவரும் பலநூறு மைல்களுக்கு அப்பால் பிரிந்திருந்த போதிலும்) ஒரே மாதிரியாக சிந்திப்பதைப் போல...

ஒரு காலத்தில் இந்தியாவும், அரபும் புவியியல் ரீதியாக ஒன்றாக இணைந்திருந்தன என்றுதான் சொல்ல வேண்டும். ஏன்! இரு தேசங்களும் இரண்டற கலந்திருந்தன என்று சொன்னால் நீங்கள் திகைத்துப் போவீர்களா என்ன? அதன்பின் இவ்விரு தேசமும் காலச் சுழற்சியின் மாற்றங்களால் பிநரிந்து போயிருக்கலாமல்லவா?

காரணம் புவியியல் ஆய்வாளர்களது நவீன ஆய்வுக்குப் பின் இப்பரந்து விரிந்துள்ள பூமியின் வறட்சிப் பகுதி அசையாத் தன்மை கொண்டதல்ல. மாறாக சதா இது அசைந்து கொண்டே

இருக்கினறதெனக் கூறுகின்றனர். இருபது கோடி ஆண்டுகளுக்கு முன் இப்பூமியின் வறண்ட பகுதியிலுள்ள பாகங்கள் அனைத்தும் ஒன்றோடொன்று இணைந்திருந்தன. அப்போது அவ்வறண்ட பகுதியின் நாற்புறமும் கடலால் சூழப்பட்டிருந்தது. அவற்றின் பகுதிகள் அக்காய்ந்த மணற்பரப்பிலிருந்து உடைந்து மிதந்தவாறே இன்று நாம் பார்க்கும் தோற்றத்திற்கு வந்து சேர்ந்துள்ளன. அத்துடன் அவை இப்போதும் அசைந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்தத் தலைப்பில்'**ரெனால்டு ஷைலர்**' என்பாரால் எழுதப்பட்ட (Earths Continents Are Adrift) '**பூமியின் வறண்ட பகுதிகள் மிதக்கின்றன**' என்னும் கட்டுரையிலிருந்து சில பகுதிகளை உங்களின் மேலான பார்வைக்கு தருகிறோம். இது '**ரீடர்ஸ் டைஜஸ்ட்**' என்னும் நாளிதழில் ஜூலை 1971ல் வெளிவந்தது. சில படங்களையும் நாம் தந்திருக்கிறோம்.அவைகளும் ரீடர்ஸ் டைஜஸ்ட்டிலிருந்து எடுத்ததுதான். இப்போது படியுங்கள்.

**'நானூற்றி அறுபது கோடி ஆண்டுகளாக புவியியல் வரலாற்றில் கடல் விரிந்தும் சுருங்கியும் வந்துள்ளது. இன்னம் பூமி கடலின் கொந்தளிப்பால் ஒரு பழைய கப்பலைப் போன்று அங்குமிங்குமாக அலைந்து கொண்டிருந்தது. அதில் சிலவற்றை இன்று காணோம். இந்த விளக்கங்கள் அனைத்தையும் விஞ்ஞானிகள் ஒட்டுமொத்தமாக ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும் இது ஒரு கற்பனை பார்வை அல்ல என்றும்,மாறாக இது உண்மைதான் என்பதை விஞ்ஞானிகள் உலகம் இன்று ஏற்றுக் கொள்கிறது.**


**கடல் ஆராய்ச்சியின் விஞ்ஞானியான 'மூரஸ்யாங்' என்பார் கூறுவதைக் கொண்டு இந்த விஞ்ஞான ஆய்வின் ஆதாரம் மனித குலத்திற்கு மிகவம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும் என்று கூறுகிறார்.**

**துவக்கத்தில் பூமியின் எல்லா வறண்ட பகுதிகளும் ஒன்றாகத்தான் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து கொண்டிருந்தன. இருபது கோடி வருடங்களுக்கு முன் இப்பலமான வறட்சிப் பகுதி உடைய ஆரம்பித்தது. எதுவரையெனில் இன்று நாம் பார்ப்பதைப் போல் ஏழு கண்டங்களாகவும், பற்பல தீவுகளாகவும் உடைந்தன. இவ்வனைத்து வறட்சிப் பகுதிகளும் ஒரு பலமான சக்தியைக் கொண்டு (அதனுடைய தலைமை பீடம் எதுவென்று தெரியவில்லை) ஒவ்வொரு பகுதியிலும் மிதக்கின்றன. இன்னும் அவற்றின் வேகம் ஆண்டுக்கு ஒரு சென்டி மீட்டரிலிருந்து பதினைந்து சென்டி மீட்டராகும். புவியியல் பார்வையின் படி இது அதிகமான வேகமாகும்.**

**உதாரணமாக விஞ்ஞானிகளுக்கு தெரியவந்தது என்னவெனில், கடலின் பரப்பளவுக்குரிய அகலம் அதிகமாகிக் கொண்டுள்ளது என்பதேயாகும். ஐரோப்பாவும் தென் அமெரிக்காவும் ஒன்றிலிருந்து மற்றொன்று ஆண்டுக்கு இரண்டரை சென்டிமீட்டர் விலகிப் போய் கொண்டிருக்கிறது. கடலன் இயக்கத்துடைய வேத்தை கணக்கெடுத்தபின் விஞ்ஞானிகளுக்கு தெரியவந்த விசயம்யாதெனில் வறண்ட பகுதியான பூமியின் எல்லா துண்டுகளும் முன்னர் எந்த வடிவத்தில் ஒன்றோடொன்று பின்னிக் கொண்டு இருந்ததோ அதில் முதன் முதலாக ஒரு பலமான கிழக்கு மேற்கின் விரிசல் ஏற்பட்டுள்ளது. அதனால் ஆப்பிரிக்காவும் வடஅமெரிக்காவும் பிரிந்தன. அண்டார்டிகாவும் ஆஸ்திரேலியாவும்**

பிரிந்தன. இதில் இந்தியா சுதந்திரமடைந்து வடபகுதியில் மிதக்கத் துவங்கி இருபது கோடி ஆண்டுகளில் பூமி தற்போது காணப்படும் உருவ அமைப்பை பெற்றது.

எல்லாவற்றையும் விட இந்தியாவின் நிலைதான் திகைப்புக்குரிய ஒன்றாகும். இது ஆப்பிரிக்கா அண்டார்டிகாவிலிருந்து உடைந்து பிரிந்தபின் வடக்குத் திசையில் 8800 கிலோமீட்டர் தூரத்தை பதினெட்டு கோடி ஆண்டுகளில் கடந்து பின்னர் ஆசியா வின் வயிற்றுக்குள் எத்தனை பலமாக நுழைந்தது என்றால் அதற்கு முன்னால் இருந்த பூமி இமயமலை என்னும் தோற்றத்தில் பிரமாண்டமாக எழுந்து நின்றது. இப்போதுள்ள நிலையில் இதே வேகத்தில் பூமியின் துண்டுப்பகுதிகள் தொடர்ந்து செல்லுமாயின் இமயமலை இன்னும் உயரத்திற்கு வந்து விடும். அதன்பின் இந்தியா ஆசியாக் கண்டத்தை விட்டும் அகன்று கிழக்குத் திசையில் மிதக்கத் துவங்கி விடும்.



மேலே உள்ள வரைபடத்தில் இந்தியா முன்பு இப்போதுள்ள பூமித்துண்டின் வறட்சிப் பகுதியான ஆப்பிரிக்காவுடன்தான் இணைந்து இருந்தது. அதன்பின் இந்தியா அதை விட்டு தனியாகப் பிரிந்த பின் கோடிக்கணக்கான வருடங்களின் மாற்றத்தால் ஆப்பிரிக்கா இருந்த இடத்தில் இப்போது பூமித் துண்டின் இன்னொரு வறட்சிப் பகுதியான அரபுப் பிரதேசம் இணைந்துள்ளது.

மேலும் இந்த பூமியைப் பற்றிய ஒரு பழைய நம்பிக்கை எவ்வாறு இருந்தது எனில், ஜீவியம் என்பது n வறும் மனிதனுக்கும், விலங்குகளுக்கும், பிற கண்களால் காணப்படுகிற சிருஷ்டிகளுக்கு மட்டும்தான் உண்டென்று ஒரு காலத்தில் நம்பப்பட்டது. அதன்பின் விஞ்ஞானம் தாவரங்களுக்கும் ஜீவியம் உண்டென்பதை உறுதிப்படுத்திற்று. ஆனால் அதே விஞ்ஞானம் இன்று கல்கரடு, மலை போன்ற ஜடப் பொருட்களுக்கும் ஜீவியம் உண்டென்பதை ஆதாரப் படுத்துகிறது. எதுவரை எனில் அந்த ஜடப் பொருட்களுக்கு உணரும் தண்மையும் தீவிரமடையும் உத்வேகத் தன்மையும் கூட உண்டெனக் கூறுகிறது. (இது முஸ்லிம் வேதமான குர்ஆனைக் கொண்டு முன்பே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் நமது பேச்சின் தலைப்பு என்பது இதுவல்ல)

**ஆதலால் உலகிலுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் ஜீவியமுண்டுஎன்பதோடு அவைகளுக்கிடையே பிணைப்பும், விரிசலும உண்டென்பதை மேலோட்டமாக சிந்திப்பவரால் புரிந்து கொள்ள முடியாது. காரணம் கண்ணுக் தெரியாத ஒரு சக்தியின் வழிநடத்தலைக் கொண்டு பல்வேறு கட்டுப்பாடுகளாலும் விதிமுறைகளாலும் இறுக்கப்பட்டுள்ள வௌ;வேறு பொருட்களுக்கு மத்தியில் நேசமும் வெறுப்பும் கூட உணரப்படுகிறது என்றால் இங்கே அதிசயக்கத்தக்க ஒரு விசயம் என்னவெனில், அரபுப் பிரதேசம் இந்திய தேசத்தின் புவியியல் கூற்றின்படி பிரிந்து விட்ட பின்னரும் கூட இவ்விரு தேசங்களுக்குமிடையே காந்தத்தைப் போன்ற ஈர்க்கக் கூடிய ஒரு பிணைப்பு இப்போதும் இருக்கிறதென்றால் அதன்மூலம் கடந்த காலங்களில் இவ்விரு தேசங்களுக்குமிடையே ஒரு ஆழமான ஆத்மார்த்தத் தொடர்பு இருந்ததென்பதையும் வருங்காலத்தில் இத்தொடர்பு இன்னும் அதிகமாக நிலைத்து வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் என்பதேயாம்.**

**புழுதியேறிய கண்ணாடியில் பாலீஷ் ஏறாது.**

இப்பூவுலகில் ஒவ்வொரு நொடிப்பொழுதும் நிகழ்ந்து கொண்டிருக்கும் இயக்க மாறுதல்களின் எந்தக் கோணத்தை நோக்கினாலும் இயற்கையின் அந்த அழகான மாற்றங்கள் மனித அறிவை மலைப்புக்குள்ளாக்கி விடுகின்றன.

கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் இப்பூமியின் இரு துண்டுகள் ஒன்றோடொன்று இணைந்திருந்தது. பின்னர் பிரிந்து விட்டன. அதன்பின் ஒரு துண்டின் மீது உலகின் முதல் மனிதர் தனது பாதம் பதிக்கிறார். இவ்வாறே இன்னொரு துண்டில் சுவர்க்கத்திலிருந்த அவருடைய துணைவி இறக்கப்படுகிறார். (அறிவிப்புக்களின் ஆதாரப்படி 'ஹவ்வா'வை ஜித்தாவில் இறக்கப்பட்டது) இதன் மூலம் இப்பூமியில் வாழப்போகும் மனித இனத்தை துவக்கத்திலேயே அவ்விரு துண்டுப் பகுதியிலும் இறக்கியதால் அவ்விரு பகுதிக்கும் ஒரு நெருக்கமான தொடர்பு ஏற்பட்டுவிட்டது. அதில் ஒரு துண்டுப்பகுதியின் பெயர்தான் இந்தியா. இன்னொன்றின் பெயர் அரப். இவ்வாறே நூஹ் நபியின் ஜலப்பிரளயம் இவ்விரு துண்டுப்பகுதியிலிருந்து துவங்கி அக்கப்பல் தண்ணீரில் மிதந்தவாறே இன்னொரு பகுதிக்கு மேலே சென்று நிற்கிறது. அதன்பின் நூஹ் நபி அந்த பகுதியிலிருந்து இந்தப் பகுதிக்குத் திரும்பி வருகிறார்.

இந்திய தேசத்தை சேர்ந்த பல கூட்டத்தாருடைய மக்கள் எல்லா காலங்களிலுமே அரபின் பல்வேறு பகுதிகளில் காணப்படுகின்றனர். ஒரு பகுதியில்தோன்றும் நபி கூட இன்னொரு பகுதியோடு தனது தொடர்பை நிரந்தரப் படுத்திக் கொள்கிறார். பின்னர் அரபுப் பகுதியில் இறுதித் தூதர் தோன்றுகிறார். ஒரு கூட்டம் அது மாற்றத்தைப் பெ றுவதற்கு முன் மனிதத்துவம் மற்றும் கொள்கை ரீதியான வழிகேட்டின் காரணமாக உலகின் பார்வையில் சிதறிக் கிடந்தது. அதன்பின் அது மாறிற்று. மாறியது மட்டுமல்ல உலகின் இன்னொரு பெரும்பகுதியையும் மாற்றிட முஹம்மத் நபியின் அற்புதம் அப்பகுதியையும் தன்னோடு இணைத்துக் கொண்டது. அதாவது இப்போது ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்குப்பின்

இந்தியாவைச் சேர்ந்த எந்தக் கூட்டம் மனிதத்துவம் மற்றும் கொள்கை அடிப்படையில் உலகின் பார்வையில் சிதறிக் கிடக்கிறதோ அதுவும் மிகவிரைவில் ஹிந்தி '**ஓம்மத்**' என்பதிலிருந்து '**உம்மத்தாக**' மாறப் போகிறது.

இன்னும் இதை செயல்வடிவமாக்க,நிறைவேற்ற வேண்டி இறுதி ஷரீஅத் (வாழ்வியல் நடைமுறை) கொண்டுள்ள ஒரு கூட்டத்தை நூஹ் நபியின் கூட்டமாகிய முதல் ஷரீஅத்துடைய கூட்டத்தாரோடு இந்திய மண்ணில் இணைக்கப்படுகிறது. முதலில் வேதயிஸம், பின்னர் ஸைனயிஸம், புத்தயிஸம் அதன்பின்னர் இஸ்லாமிய ஞானிகள் நூஹ் நபியின் காலத்திலிருந்து இன்றுவரை இந்ததேசத்தை ஆன்மீகத்தின் நிலைக்களனாகவே தக்கவைத்து வந்துள்ளனர். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக படிந்து போயுள்ள புழுதிகள் இப்போது அகற்றப்பட வேண்டும். ஏற்கனவே உள்ள மிகத் தூய்மையான பிரகாசமுடையதாக இருக்கும் ஒன்றை மீண்டும் மெருகேற்ற வேண்டும் என்ற அவசியமில்லை. இவ்வாறே புழுதியால் கரைபடிந்து போயுள்ள ஒன்றை பளபளப்பாக ஆக்குவதும் நடக்காத காரியமாகும்.

**'என்ன? இப்போது மனிதர்கள் இறுதிநாளை எதிர்நோக்கி கொண்டுள்ளனரே! அது அவர்களிடம் திடீரென வந்துவிட்டால்? அதனுடைய அடையாளங்கள் வந்த விட்டன. எப்போது அது வந்து விடுமோ அப்போது நல்லுபதேசத்தை செவியேற்கக் கூடிய சந்தர்ப்பம் அவர்களுக்கு எங்கே கிடைக்கும்?'**

-அல்குர்ஆன் சூறா முஹம்மத் வசனம் 18.

## அத்தியாயம் ஐந்து

**முந்தைய வேதச் சுவடிகள்**

**வேதம் ஒரு விளக்கம்**

**'நாங்கள் அனைத்துக்கும் முந்தைய இறைவனைத்தான் வணங்குகிறோம்.'**-நூல்: ரிக் வேதம் 1-1-1

**'ஏ! அறிவின் மூலமே! அனைத்தையும் பிரகாசப்படுத்தும் பரமெஸ்வரா! எங்களை நேரான மற்றும் மன்னிப்புக்குரிய சீரான பாதையில் நடத்திச் செல். ஏ! சுகமளிக்கும் பிரபுவே! ஆஜராகியுள்ள சக்கரவர்த்தியே! நீ எல்லா கல்வி செயல் மற்றும் எண்ணங்களையும் தெரிந்தவனாயிருக்கிறாய். எங்களை விட்டு திசைமாறும் வழிகேட்டையும் பாவங்களையும் தூரப்படுத்து. நாங்கள் உன்னையே வணங்கி புகழ்கிறோம்.' –நூல் ரிக் வேதம் 3-121-10**

**'அகிலங்களின் அதிபதி ஒருவன் மட்டுமே'** –நூல் :ரிக்வேதம் 3-121-10.

**'ஜனங்களே! கேளுங்கள். 'நிராஷ்னஸ்'ஸை (முஹம்மத் நபியை) மனிதர்களுக்கிடையே அளவு கடந்து புகழப்படும்'** –நூல்: அதர்வண வேதம் 1-127-20.

**'அவர்கள் இறுதிநாளை மறந்து இன்னும் அறிவையும் நல்புத்தியையும் ஏளனமாக எண்ணி உதாசீனப்படுத்தி நமது கட்டுப்பாட்டின் எல்லையை மீறிக் கொண்டுள்ளனர்.'** – ரிக் வேதம் 3-4-1.

இவை சில வேத மந்திரங்களின் அர்த்தமாகும். அமைதியாக யோசித்துப் பாருங்கள்;. என்ன? இந்துமத வேதங்களில் காணப்படும் இவ்வாக்கியங்கள் முஸ்லிம் வேதமான ;குர்ஆனில் காணப்படும் வாக்கியங்களைப் போன்று , போதனைகளைப் போன்று தென்படவில்லை? இந்து மத வேதங்களில் இப்படி சில உதாரணங்களல்ல. அந்த வேதங்கள் முழுவதும் இப்படிப்பட்ட போதனைகளால் தான் நிரம்பியுள்ளன. அவைகளில் சிலவற்றை இந்த அத்தியாயத்தின் இறுதியில் நாம் எடுத்துக் காட்டுவோம். அதற்குமுன் பாமர இந்துக்களின் பார்வையில் அவர்களுடைய வேதங்கள் என்ன நிலை வகிக்கின்றது என்பதை முதலில் பார்ப்போம்.

· **'வேத ஷர்வத்தீ கயான்'** (கேட்கப்பட்ட அல்லது கேட்டுக் கொள்ளப்பட்ட கல்வி) என்பதுதான் வேதமாகும். ஆயிரக்கணக்கான வருடங்களாக இந்த வேதங்கள் எழுத்து வடிவில் இருக்கவில்லை. இவை பண்டிதர்களின் நினைவிலும், ஒரு இதயத்திலிந்து இன்னொரு இதயத்திற்கு போதிக்கப்பட்டும் வந்தது. முதன் முதல் **'மேக்ஸ் முல்லர்'**(MAX MULLER) என்பவர்தான் அதிகமான பண்டிதர்களை சந்தித்து பெரும் பிரயாசைக்குப் பின் அந்த வேதங்களை எழுத்து வடிவத்திற்கு கொண்டு வந்தார். அவர் மட்டும் இதை செய்யாதிருந்தால் பாமர மக்களுக்கு இதைக் காணும் வாய்ப்பே கிடைத்திருக்காது. அத்துடன் வேதத்தை எல்லா மக்களும் கேட்பதற்குரிய அனுமதியும் அப்போது வழங்கப்பட்டிருக்கவில்லை.

· வேதங்களனைத்தும் ஒன்றுதான் என்றும், ஆனால் ஒரே வேதமாக இருந்ததுதான் இன்று நான்காக ஆகிவிட்டதென்றும் இவர்கள் நம்புகின்றனர். இன்னும் இதைக் குறித்து பல்வேறு கிருத்துக்களும் நிலவுகின்றன. ஒருசாரார் உண்மையான வேதம் மறைந்து விட்டதென்று கூறுகின்றனர். வேறுசிலர் அந்நான்கு வேதங்களில் ஒன்று மட்டும் தான் உண்மையான வேதம் என்றும் கூறுகின்றனர். இன்னும் சிலர் ஒரே வேதத்தை தான் நான்காகப் பிரிக்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர்.

· **'வேத் தேவ்தாத்தி'** वेद वाणी (அதாவது இறைவாக்கு) என்பது இதனுடைய அர்த்தமாகும். இந்துக்கள் மகாபாரதத்தையும், ராமாயணத்தையும் ரிஷிகளால் எழுதப்பட்டவை எனக் கூறுகின்றனர். அதேநேரம்'; வேதத்தை இறைவாக்கு என்பதாகக் கூறுகின்றனர்.

· **'வேத் பர்ஹம்கா நிஜ்கயான்'** ब्रह्म निज ज्ञान (அதனுடைய அர்த்தம் இறைவனுடைய தனித்தன்மையான அறிவு என்பதாகும்)

· வேதம் என்பது இருவகை கல்விகளால் அமைக்கப்பட்டுள்ளது. அதிலொன்று, **'வேத் மந்தர் ஷுர்வத்தி'** वेद मन्त्र श्रुति (கட்டளை சம்பந்தமான வசனங்கள்) இரண்டாவது, **'வேத் தந்தர் ஷுர்வத்தி'** ............. சங்கேதாஸ்பதமான வசனங்கள்.

· **'வேத் ஆதி கிரந்த்'** आदि ग्रन्थ (முந்திய வேதச் சுவடிகள்) ஆகும்.

**'இனி இந்த நூற்றாண்டின் வேதங்களைக் குறித்த ஆய்வாளர்களில் முதல் மனிதரான மேக்ஸ் முல்லருக்கு தொடர்ச்சியான இருபது ஆண்டுகளின் இடைவிடாத உழைப்புக்கும், கணக்கின்றி செய்யப்பட்ட செலவுக்குப் பிறகும் கூடவெறும் 'சாய்ன் ஆச்சர்யா'வின் விரிவுரை மட்டும் தான் அவருக்கு முழுமையாக கிடைத்தது. அதை ஆதாரமாக வைத்துக் கொண்டு கணக்கில்லாத பண்டிதர்களின் உதவியால் மிகப் பெரிய அளவில் மறைந்துகிடந்த வேதங்களை உலகின் முன் நூல் வடிவில் கொண்டு வந்தார்.'** – நூல்: பூமீகா யஜூர் வேத், பக்கம் 3,4 ஆசிரியர்: ஸ்ரீராம் சர்மாஜி.

'ஆரியன்;' இது மனித இனத்தலில் முதன் முதல் போடப்பட்ட பதமாகும். இதனுடைய தொடர்பு உலகம் மற்றும் இந்திய வரலாறுகளில் காணப்படுகிறது. இன்னும் இது பின்னால் வந்த வம்சத்தாரின் நினைவுச் சின்னமாகும். மனித இனத்தாரின் சந்ததியில் ஆரியரின் கூட்டத்தாருக்கு முந்தைய வேதங்களோடு தொடர்பு உண்டு. (மேக்ஸ் முல்லர்) (Quoted by Griffith in the preface of the first edition of the 'Hymns of Rig Veda – Volume1)

**இந்நான்கு வேதங்களின் துவக்கத்தையும் விண்ணுலகோடு தோடர்பு படுத்திப் பேசப்படுகிறது. இன்னும் இது காலங்காலமாக இருந்து வருகிறதென்றும் நம்பப்படுகிறது. மகத்தான படைப்பாளனிடமிருந்தும் அவனுடைய படைப்பாளிகளின் வாயிலாக பெறப்பட்டதாகவும் நமப்பப்படுகிறது.**

**மேலும் இதனுடய துவக்கம் எங்கிருந்து ஆரம்பமாயிற்று என்பதற்குரிய விளக்கத்தில் குழப்பம் காணப்படுகிறது. இருப்பினும் இது மனித இனத்தாருக்கு இறைவன் மூலமாக வழங்கப்பட்ட வெகுமதியென்றே நமப்பப்படுகிறது. (விக்கின்ஸ்)** (W.J. Wilkins' in Hindu Mythology,Page-3)

**இது வேதம்தான் என்பதை யார் ஆதாரப்படுத்தினார்? இது சிக்கலான கேள்வியாகும். ஆனால் கொள்கை பிடிப்புள்ள இந்துக்கள் இதை மனித வாக்கல்லாத இறைவாக்கு என்பதாக நம்புகின்றனர். அதாவது இதை இறைவேதமென்று நம்புகின்றனர்.'** (டாக்டர் சம்பூரனானந்த்)

கிறித்துவ ஆய்வாளர் டுபாய்ஸ் எழுதுகிறார்...

**'இதில் பிரதிகள் எடுப்போரின் கவனக்குறைவு மற்றும் அறியாமை காரணமாக இதில் பெருமளவில் தவறுகள் நேர்ந்து விட்டன.'** (Hindu Manners Customs, page 174)

ஷாஹ் வலியுல்லாஹ்வின் காலத்தைச் சேர்ந்த மீர்ஸா மஜ்ஹர் ஜானெஜான் என்னும் ஷாஹ் அப்துல் அஸீஸ் முஹத்திஸ் தெஹ்லவி என்பவரால் எழுதப்பட்ட நூலை ஆதாரமாகக் கொண்டு புரபஸர் கலீக் நிஜாமி என்பார் எழுதுகிறார்...

**'இவர்கள் இந்துக்களை அரபிய இழணவைப்பாளர்களோடு ஒப்பிட மறுத்தது மட்டுமில்லலாமது வேதங்களை ஞான (இல்ஹாமி) நூல்களென்று நம்புவதோடு இந்துக்களை வேதக்காரர்களுடைய தரத்துக்கு உயர்த்துகின்றனர்.'** –நூல்: தரீக் மஷாயிக் சிஷ்த், பாகம் 5, பக்கம் 58.

உத்திரப் பிரதேசத்தில் ஸஹாரன்பூர் என்னும் ஊரிலுள்ள மஸாஹிருல் உலூம்' என்னும் அரபிக் கல்லூரியின் முப்தி (மார்க்க தீர்ப்பாளர்) மௌலானா முஹம்மது யஹ்யா என்பார் ஒரு கேள்விக்கு பதிலளிக்கும் போது இப்படி எழுதுகிறார்....

**'ஹஜ்ரத் மீர்ஸா மஜ்ஹர் ஜானெஜான் அவர்களது நூல்களில் வேதங்களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் அதை வானுலக மற்றும் ஞான(இல்ஹாமி) கிரந்தமென்று நம்புகின்றனர். அடுத்;து அல்லாமா ஷாஹ் அப்துல் அஸீஸ் முஹத்திஸ் திஹ்லவி மற்றும் அப்துல் ஹை லக்னவி போன்றோர்ரின் பத்வாவி(மார்க்கத் தீர்ப்பி)லும் எதை இவர்கள் அவதாரம் என்கிறார்களோ அதை பின்பற்றுவோரைப் பற்றியும் அந்த அவதாரங்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**உதாரணமாக ஆரியர்கள் தங்களின் மார்க்க(மத)த்தை வானுலக மார்க்கமென்றும், தங்களின் கிரந்தங்களை ஞான(இல்ஹாமி) வேதங்களென்றும் கூறுகிறார்களல்லவா? அதற்குரிய ஆதாரத்தை அவர்களிடம் கேட்க வேண்டியுள்ளது. எனினும் தகுந்த காரணமின்றி அதை நாம் மறுக்கவும் கூடாது. உதாரணமாக எங்களுடைய ஆசிரியர் மௌலானா அஸ்அதுல்லாஹ் அவர்கள் அவர்களைப் பற்றி விரும்பத்தகாத வார்த்தைகளைப் பயன்படுத்துவதில்லை.'**

-நூல்: மௌலானா அக்லாக் ஹுஸைன் காசிமி, பிப்ரவரி 1988 பக்கம் 13.

தாருல் உலூம் தேவ்பந்த் என்னும் அரபிக் கல்லூரியன் ஸ்தாபகர் காஸிம் நானூத்தவி என்பாரின் நிலை எவ்வாறிருந்து எனில், ராமனைக் குறித்தோ அல்லது கிருஷ்ணணைக் குறித்தோ தவறாக பேசுவதைக் கூடாதென்று தடுத்து வந்தார். ஏனெனில் அவ்விருவரும் ரஸூலாக இருக்கலாமென எண்ணுபவராக அவர் இருந்து வந்தார்.

**பரிசுத்தம் என எவ்வாறு நம்புவது?**

இதுவரை எடுத்துக் காட்டிய ஆதாரங்களைக் கொண்டு நாம் உறுதிப்படுத்த விரும்பும் விசயம் என்னவெனில், வேதக் கிரந்தங்களில் வானுலகச் செய்திகள் இருப்பதற்கு வாய்ப்பு உண்டு என்பதாம். குறைந்த பட்சம் அந்த வேதக் கிரந்தங்களில் காணப்படும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே முஹம்மத் நபியவர்களின் வருகை பற்றிய செய்திகள் வானுலக செய்திகளாகத் தான் இ ருக்க வேண்டும். அவையன்றி ஏகத்துவம் மற்றும் இறுதிநாளின் நம்பிக்கை குறித்த செய்திகளைக் கொண்டு அதை வேதமென்று ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் தௌராத் இன்ஜீல் போன்ற வேதங்களில் கூறப்பட்டவை பின்னர் மாற்றிப்

புரட்டப்பட்டதைப் போல பின்னால் இவ்விசயங்கள் அக்கிரந்தங்களில் சேர்க்கப்பட்டிருக்கலாம். இருப்பினும் இதற்கு மூன்று காரணங்கள் உண்டு.

1. இப்போதுள்ள தௌராத், ஜபூர், இன்ஜீல் போன்ற கிரந்தங்களை பரிசுத்த வேதமென்று ஏற்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

2. ஒரு வேதம் வேதம்தான் என்பதற்கு அந்த வேதம்தான் ஆதாரமாகும். ஏகத்துவம் மற்றும் மறுமை சம்பந்தமான சில செய்திகள் அவைகளில் இருப்பதை வைத்து அவைகளை தௌராத் என்றும் ஜபூர் என்றும் இன்ஜீல் என்றும் ஏற்க முடியாது.

3. தௌராத், ஜபூர், இன்ஜீலைப் பற்றி குர்ஆனில் பேசப்பட்டுள்ளது. ஆனால் வேத கிரந்தங்களைப் பற்றி குர்ஆனில் எங்குமே பேசப்படவில்லை. ஆதலால் நாம் மேற்கண்ட மூன்று சந்தேகத்திற்குரிய விளக்கத்தை வரிசையாகக் கீழே தருகிறோம்.

தற்போதுள்ள தௌராத், ஜபூர், இன்ஜீல் போன்றவற்றுக்கு வேதத்திற்குரிய பரிசுத்த நிலையினை கொடுப்பதற்குரிய சட்டப்பிரச்சனை குறித்து மௌலானா உபைதுல்லாஹ் சிந்தீ என்பார் n வகு அழகாக பதிலளிக்கிறார். அவர் கூறுகிறார்...

**'நமது உலமா(மார்க்க அறிஞர்)க்கள் பொதுவாகவே அஸல் தௌராத், ஜபூர், இன்ஜீல் போன்ற வேதங்கள் மறைந்து போய் விட்டதென்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர். அதனால்தான் இப்போதுள்ள அந்த வேதங்களை அ வர்கள் பரிசுத்தமானவைகளென நம்பத்தயாராக இல்லை. இத்தகைய கண்ணோட்டதால் ஏற்பட்ட மோசமான விளைவு என்னவெனில் திருக்குர்ஆன் வேதக்காரர்களை நோக்கி எந்தெந்த இடத்தில் தங்களின் வேதப்பிரகாரம் அவர்கள் செயல்படவில்லை என்றும், அவர்கள் செயல்பட வேண்டுமென்றும் கூறுகிறதோ அத்தகைய வசனங்களுக்குரிய சரியான விரிவுரையை நமது உலமாக்களால் செய்ய முடியாது போய்விட்டது.'** - ஆதாரம்: அல்புர்கான் பரேலி 1941, **பக்கம் 282.**

**'மேலும் குர்ஆனைப் போன்று இந்த வேதங்களின் வஹீ** (தெய்வ அறிபிப்பு) **அதனுடைய எழுத்துர்க்கள், அர்த்தங்கள் போன்றவை முறையாக பாதுகாக்கப்பட்டதைப் போல வேறு எந்த மத வேதங்களிலும் இம்முறை கையாளப்படவில்லை. அதற்கு மாறாக பொதுவான ரீதியில் அம்மத முன்னோடிகள் தமது சுயநிர்ணய அறிவைக் கொண்டு தங்களின் நபிமார்களுடைய வரலாற்றையும் போதனா முறைகளையும் சேகரித்ததைப் போலவே வேதத்தையும் சேகரித்து வைத்தனர்.**

**இன்னும் அவ்வேதங்களில் நபிமார்கள் தனது சமூகத்தாருக்கு தங்களின் சுயநிர்ணய அறிவைக் கொண்டு போதித்த அப்போதனா முறைகளும்; எழுத்து வடிவிலோ அல்லது அர்த்தத்திலோ இணைந்த நிலையில் இறங்கிற்று. உதாரணமாக தௌராத்தின் பத்து கட்டளைகள், இன்ஜீலிலுள்ள பேருரைகள் போன்றவற்றை குறிப்பிடலாம். அத்துடன் இறக்கப்படும் வேதவசனமொன்று ஒரு நபியுடைய சுயநிர்ணய அறிவைக் கொண்டு**

**இணைத்து பேசப்படும்போது அதில் இறைவனுடைய மகத்துவத்திற்கு மாசு ஏதும் இல்லையேல் அதை வஹி என்றே ஏற்றுக் கொள்ளப்படும்.**' –ஆதாரம்: அல்புர்கான் பரேலி, 1941 பக்கம் 282.

மேலும் குர்ஆன் முஹம்மத் நபியவர்களுக்கு பின்னால் நூலுருவில் முறைப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட்டு விட்டது. இவ்வாறே அதை கோர்வை செய்தவர்களி;ன அறிவிப்பும் முறைபடுத்தப்பட்டன. ஆனால் ஹதீஸி(நபிமொழியி)ல் வஹீயின் மூலம் இறக்கப்பட்டவை நபியவர்களின் காலத்தில் நூலுருவில் முறைப்படுத்தப்படவில்லை. அத்துடன் அதனுடைய வரிசைத் தொடரும் தேவையான ஒன்றென கருதப்படவும் இல்லை. அதனால் இப்போது முந்தைய வேதங்களை ஏற்க மறுப்போரை சமாதானம் செய்யும் பொருட்டு அவைகளை இன்றுள்ள ஹதீஸுடைய கிரந்தங்களோடு ஒப்பிட்டால் இதை நாம் சாமார்த்தியம் என்று எண்ணக் கூடாது. அன்றி நம்முடைய இவ்விளக்கத்தை மார்க்க அறிஞர்கள் ஏற்றுக் கொள்வார்களேயாயின் எல்லா வகையான சந்தேகங்களுக்கும் தீர்வு கிடைத்து விடும்.

· நமது நபிமொழி கிரந்தங்களில் எதேச்சையாக உண்மையல்லாத அறிவிப்புகளும் உள்ளன.

· நமது நபிமொழிக் கிரந்தங்களில் ஒரே சம்பவத்தை பல்வேறு விதமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன.

· நமது பல்வேறு நபிமொழிக் கிரந்தங்களில் அதை எழுதவோர் மூலம் பல தவறுகள் நிகழ்ந்து அவைகளை அவ்வப்போது நபிமொழி வல்லுனர்கள் சரி செய்து கொண்டுமிருக்கின்றனர்.

'**அதன்பின் அந்நான்கு முந்தைய வேதங்களையும் நமது நபிமொழி கிரந்தமான புகாரி, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதீ, அஹ்மத், இப்னுமாஜா போன்றவைகளோடு இணைத்துப் பார்ப்போமாயின் இரண்டுக்குமிடையே கொஞ்சம் கூட வேறுபாடு என்பதே தெரியாது.**'

-ஆதாரம்: அல்புர்கான் பரேலி, 1941 பக்கம் 282.

அடுத்து நமது உம்ம (சமூக) த்தில் பரிசுத்த வேதங்களுக்கு உதாரணமாக '**ஷாஹ் வலியுல்லாஹ்**' அவர்கள் புகாரி, முஸ்லிம் போன்ற நபிமொழிக் கிரந்தங்களைக் குறிப்பிடுகின்றனர்.

'நான் இன்ஜீல் கிரந்தத்தின் விரிவுரையை (மிஸ்டர் ஹென்றி ஸ்காட் என்பவரால் எழுதப்பட்டது) உர்து மொழியில் படித்துப் பார்த்தபோது அதில் நான்கு வேதங்களிலும் காணப்படும் கருத்து வேறுபாடுகளை இணைப்பதற்கும் அவைகளை ஒழுங்குப்படுத்துவதற்கும் உரிய பாதை கண்டறியப்பட்டுள்ளது. அதாவது நாம் நபிமொழிக் கிரந்தங்களில் கையாளும் முறையைப் போல'. –ஆதாரம்: அல்புர்கான் பரேலி1941, பக்கம் 282.

ஆதலால் முந்தைய வேதங்களை நாம் பரிசுத்தமானவை என ஏற்றுக் கொள்வதற்கு மேற்கண்ட சந்தேகங்கள் தான் காரணமென்பதை உணருகிறோம். அதேநேரம் அக்கிரந்தங்களில் இடைச் செருகல்களும் நுழைந்து விட்டுள்ளன. பெரும்பாலான இடங்களில் ஒரே சம்பவத்தை பல்வேறு கோணத்தில் விபரிக்கப்பட்டுள்ளது. இன்னும் அதை எழுதியவர்கள் மாற்றி தவறாக எழுதியுள்ளனர். எனினும் அவ்வப்போது அதனுடைய வல்லுனர்கள் அதை சரிபடுத்தியும் வந்துள்ளனர்.

அடுத்து மௌலானா அவர்களின் மேற்கண்ட விளக்கத்தைக் கொண்டு ஒன்று மட்டும் நமக்கு நன்கு புலனாகிறது. அது முந்தைய வேதங்களை பரிசுத்தமானவை என ஏற்கும் விசயத்தில் தடுமாற்றம் ஏற்பட்டதற்குரிய காரணம் என்னவெனில் வேதம் என்றதுமே நாம் அதனை குர்ஆனோடு ஒப்பிடத் துவங்கி விடுகிறோம். அதற்கு மாறாக அவைகளை நபிமொழிக் கிரந்தங்களோடு அவற்றில் பலகுறைபாடுகள் காணப்பட்ட போதிலும் அவற்றை நாம் பரிசுத்தமானவை என ஒப்புக் கொள்வதைப் போல முந்தைய வேதங்களையும் ஒப்புக் கொள்ள தயக்கம் காட்டக் கூடாது.

இன்னும் குறிப்பாக குர்ஆனிலும் முந்தைய வேதங்களை குறித்து எச்சரிக்கப்படுகிறது. அத்துடன் நாம் இதையும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். அதாவது நபிமொழியைக் குறித்து கணக்கற';ற ஆய்வுகள், ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டும் கூட மிகுதமான சந்தேகத்திற்குரிய நபிமொழிகள் அதில் இருக்கின்றன என்னும் போது இந்நிலையில் நாம் அவைகளை பரிசுத்தமான ஒன்றென ஒப்புக் கொள்ளும்போது தௌராத், ஜபூர், இன்ஜீல் போன்ற வேதக்கிரந்தங்கள் பற்றிய விசயத்தில் சந்தேகம் இருக்கும் நிலையில் அவைகளை பரிசுத்தமானவை என ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது.?

இந்த நுணுக்கம் நமக்குப் புரிந்த பின் ஒருவேளை வேதங்களில் கூறப்பட்டுள்ள வாக்கியங்களே அது வேதம்தானென சாட்சி பகருமாயின், இவ்வாறே குர்ஆனைக் கொண்டும் அவைகள் வேதங்கள் தானென்பது உண்மைபடுத்தப் படுமாயின் மௌலானா சிந்தீ அவர்கள் கூறுவதைப் போல அந்த முந்தைய வேதங்களை பரிசுத்தமானவை என ஏற்றுக் கொள்வதில் நமக்கு எந்தச் சிரமமும் நேராது.

**ஒரு வேதம் இன்னொரு வேதத்தின் ஒளியில்**

பொதுவாக ஒரு வேதத்திலுள்ள இறை வசனங்கள் தான் அது வேதம் என்பதற்குரிய ஆதாரமாகும். குர்ஆனில் காணப்படும் விஷயங்கள் குர்ஆனை உண்மைப்படுத்துவதற்குரிய மிகப் பெரிய ஆதாரமாகும். வாருங்கள். வேதங்களில் காணப்படும் சில விஷயங்களை குர்ஆனுடைய வெளிச்சத்தில் இப்போது பார்ப்போம். இதில் அத்தனை வேத மந்திரங்களிலுள்ள அர்த்தத்தையும் நாம் ஸ்ரீகங்கா பிரசாத் உபாத்யாயா அவர்களின் '**மஸாபீஹுல் இஸ்லாம்**' என்னும் நூலிலிருந்து எடுத்துள்ளோம் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

| வேதம் ' | குர்ஆன் |
|---|---|

www.sufimanzil.org

मही देवस्य सवितुः परिष्टुतिः இப்பூவுலகை உருவாக்கியவனுக்குத்தான் புகழனைத்தும். –ரிக் வேதம் 1-81-5

वसुर्दधान கொடுக்கிறவன் இரக்கமுடையவன் -ரிக்வேதம் 1-34-3

महोदिवः प्रथिव्यश्च सम्राट एங்களை எங்களுக்கு பலனளிக்க வல்ல நேரான பாதையில் நிலை நிறுத்து. -யஜுர் வேதம் 16-40

महोदिवः प्रथिव्यश्च सम्राट அவன் மகத்துவமிக்க வானங்கள் பூமியின் அதிபதியாகும்.-ரிக்வேதம் 2-117-10

नो भवत्विन्द्र ऊ ती அந்த ஈஸ்வர் நமக்கு உதவி செய்யட்டும். –ரிக்வேதம் 1-100-1

प्रजा पति जर्नयति प्रजा इमाः பரமாத்மா எல்லா பிரஜைகளையும் உருவாக்குகிறான். –அதர்வண வேதம் 1-19-7.

य एक इद् विदयतेवसु मर्ताय दाशुषे இறைவன் ஒருவனே அக்கிருபையாளன். தர்மம் செய்வோருக்கு இரணமளிக்கிறான். –ரிக்வேதம் 7-84-1.

अनश्नन्नन्यो अभिचाक शीति பரமாத்மா உண்ணுவதில்லை. மற்றவர்கள் உண்ணுவதற்குரிய ஏற்பாட்டை செய்கிறான். –ரிக்வேதம் 2-164-1.

न तस्य प्रतिमा अस्ति அப் பரமேஸ்வரனுக்கு எந்த மூர்த்தியும் அமைக்க முடியாது. – யஜூர் வேதம் 3-32

यंस्येमाः प्रदिशः எல்லா திசைகளும் அவனுக்குரியதே. –ரிக் வேதம் 4-121-10.

सविता पश्चातात् सविता पुरस्तात्
सवितोत्तरतात् सविताधरात्तात् உலகின் படைப்பாளன் கிழக்கிலும் மேற்கிலும் மேலும் கீழும் என எல்லா இடங்களிலும் இருக்கிறான். –ரிக் வேதம் 1-121-10

विश्वत श्चक्षुरुत विश्वतो मुखो இறைவனின் பார்வை எல்லா இடங்களிலும் உள்ளது. இறைவனின் முகம் எல்லா இடங்களிலும் இருக்கின்றது. –ரிக்வேதம் 3-81-10.

الْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ

அகிலங்களனைத்தின் பரிபாலகனாகிய அல்லாஹ்வுக்கே புகழனைத்தும். –பாத்திஹா 1

الرَّحْمَٰنِ الرَّحِيمِ

கிருபையுள்ளவன் இரக்கமுள்ளவன்-பாத்திஹா 2

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ

எங்களை நேரான பாதையில் நடத்துவாயாக.-பாத்திஹா 5

أَلَمْ تَعْلَمْ أَنَّ اللَّهَ لَهُ مُلْكُ السَّمَاوَاتِ وَالْأَرْضِ ۗ وَمَا لَكُم مِّن دُونِ اللَّهِ مِن وَلِيٍّ وَلَا نَصِيرٍ

வானங்கள் பூமியின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது என்பதை நீங்கள் அறியவில்லையா? இன்னும் அல்லாஹ்வையன்றி உங்களுக்கு உதவ செய்பவர் வேறு யாருமில்லை. –பகரா 107

وَخَلَقَ كُلَّ شَيْءٍ

இன்னும் அவன்தான் அனைத்து வஸ்த்துக்களையும் படைத்தான்.-அல்புர்கான் 2

وَأَنفِقُوا خَيْرًا لِّأَنفُسِكُمْ

இன்னும் உங்களின் ஆன்மா நலம் பெற செலவு செய்யுங்கள்.- தஙாபுன் 16.

إِن تُقْرِضُوا اللَّهَ قَرْضًا حَسَنًا يُضَاعِفْهُ لَكُمْ

அன்றி நீங்கள் அல்லாஹ்வுக்கு அழகிய கடன் கொடுத்தால் அதை அதிகமாக்குவான். –தஙாபுன் 17.

وَهُوَ يُطْعِمُ وَلَا يُطْعَمُ ۗ

அவன் அனைவருக்கும் உண்ணத் தருகிறான். இன்னும் அவன் உண்ணுகிறவனல்ல.-அன்ஆம் 14.

لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ ۖ

அவனைப் போன்று ஒரு வஸ்துவுமில்லை. -



www.sufimanzil.org

त्वंनो अन्तम उत त्राता

நீ நமக்கு அருகில் இன்னும் பாதுகாக்கப்பட்டவனாக இருக்கிறாய். –ரிக்வேதம் 1-25-5.

न यस्य द्यावा प्रथिवी अनुव्यचो
न सिंधवो रजसो अन्तमानशु: ।
नोत स्ववृष्टिं मदे अस्य युध्यत एको
अनयच् चकृ षे विश्वमानुष्क्

இன்னும் வானமும் பூமியும் அந்த இறைவனை வியாபிக்கும் எல்லையை எட்ட முடியாது. வானத்தின் வட்டமல்ல. அல்லது வானத்திலிருந்து பொழியும் மழையல்ல. அந்த இறைவனைத் தவிர வேறு எதுவும் அந்த சிருஷ்டிகர்த்தாவின் மீது சக்தி பெற முடியாது. –ரிக்வேதம் 14-52-1.

वेद नाव : समुद्रिय :

அவன் கடலிலுள்ள கப்பல்களை அறிகிறான். – ரிக் வேதம் 7-25-1

अहोरात्राणि विदधद्
विश्वस्य निपतो वशी

அனைத்து உயிரினங்களின் மீதும் சக்தி பெற்றுள்ள இறைவன் தான் இரவு பகலின் வழக்கத்தை ஏற்படுத்தினான். –ரிக்வேதம் 2-190-10.

यदङ्ग दाशुषे त्वमग्ने भद्रं
क रिष्यसि । तवेत् तत् सहयाङ्गिर :

ஓ! பரமேஸ்வரா! நீ நல்லவர்களுக்கு நல்ல பலனைத் தருகிறாய். இது உனது சொந்தமான பண்பாகும். – ரிக்வேதம் 6-1-1.

ऋ तस्य पथा नमसा विवासेत

மனிதன் சத்தியத்தின் பாதையில் பணிவுள்ளவனாக செல்ல வேண்டும். –ரிக்வேதம் 231-10.

यो विश्वाभि वि पश्याति भुवना
संच परयति

அந்த ஈஸ்வர் இந்த அகிலமனைத்தையும் மிக நன்றாக அறிந்திருக்கிறான். – ரிக்வேதம் 4-187-10.

यरित्तष्टति चरति यश्च वन्चति यो
मिलायं चरति या प्रतङ्क म् द्वौ
सांनिषद्य यन् मंत्र येते राजरतद् वेद
वरुणस्तृतीय :

எவன் நிற்கிறானோ, நடக்கிறானோ, எவன் ஏமாற்றுகிறானோ எவன்

ஷூறா 11

கிழக்கும் மேற்கும் அல்லாஹ்வுக்குரியதே- பகரா 115.

فَأَيْنَمَا تُوَلُّوا فَثَمَّ وَجْهُ اللَّهِ ۚ إِنَّ اللَّهَ وَاسِعٌ عَلِيم

நீங்கள் எந்தப் பக்கம் திரும்பினாலும் அல்லாஹ்வின் முகம் (தற்சொரூபம்) இருக்கிறது. அல்லாஹ் மிக விசாலமுடையவனாகவும் அறிபவனாகவும் இருக்கிறான்.-பகரா115

وَنَحْنُ أَقْرَبُ إِلَيْهِ مِنْ حَبْلِ الْوَرِيدِ

இன்னும் நான் அவனது பிடரி நரம்பை விட மிகச் சமீபமாகவே இருக்கிறேன். –காஃப் 16.

وَلَا يُحِيطُونَ بِشَيْءٍ مِّنْ عِلْمِهِ إِلَّا بِمَا شَاءَ ۚ وَسِعَ كُرْسِيُّهُ

السَّمَاوَاتِ وَالْأَرْضَ ۖ

இன்னும் அவர்கள் அவனது அறிவில் நின்றும் நாடியதையன்றி எந்த வஸ்துவையும் அறிந்து கொள்ள மாட்டார்கள். அவனது குர்ஸியானது வானங்கள் பூமியை விடவும் விஸ்தீரணமாகிவிட்டது. –பகரா 255.

وَيُنَزِّلُ الْغَيْثَ

இன்னும் அவன்தான் மழையைப் பொழியச் செய்கிறான். – லுக்மான் 34.

أَلَمْ تَرَ أَنَّ الْفُلْكَ تَجْرِي فِي الْبَحْرِ بِنِعْمَتِ اللَّهِ

என்ன? நீங்கள் பார்க்கவில்லையா? இறையருளைக் கொண்டே கப்பல் கடலில் செல்கிறது. –லுக்மான் 31.

أَلَمْ تَرَ أَنَّ اللَّهَ يُولِجُ اللَّيْلَ فِي النَّهَارِ وَيُولِجُ النَّهَارَ فِي اللَّيْلِ وَسَخَّرَ

الشَّمْسَ وَالْقَمَرَ كُلٌّ يَجْرِي إِلَىٰ أَجَلٍ مُّسَمًّى وَأَنَّ اللَّهَ بِمَا تَعْمَلُونَ

خَبِيرٌ

என்ன? அல்லாஹ் இரவை பகலில் நுழைக்கிறான் என்பதை நீங்கள்

ஒளிந்து விடுகிறானோ, எவன் மற்றவனுக்கு துன்பம் தருகிறானோ, எந்த இருவர் மறைந்திருந்து பேசுகிறார்களோ மூன்றாவதான ஈஸ்வர் இவையனைத்தையும் அறிகிறான். –அதர்வண வேதம் 2-16-4.

विश्वस्य मिषतो वशी

அவன் அனைத்து உயிரினங்களையும் அறிந்திருக்கிறான். –ரிக் வேதம் 2-19-10

सर्वतद् राजा वरुणो विचष्टे
यदन्तरा रोदसी यत् परस्तात्

மேலும் எவை பூமியிலும், வானத்திலும் உள்ளதோ இன்னும் அதற்கு மேல் எவை உள்ளதோ அவைகளை ஈஸ்வர் பார்த்துக் கொண்டிருக்கிறான். –அதர்வண வேதம் 5-16-4.

वेद वातस्य वर्तनिमुरो ऋष्वस्य
बृहतः : वेद ये अध्यासते

அவன் மேலே பரவியுள்ள நற்செய்தி அறிவிக்கும் காற்றின் பாறைகளையும் இன்னும் அவனது ஆதரவிலுள்ள அனைத்து வஸ்த்துக்களையும் அறிந்திருக்கிறான். –ரிக்வேதம் 9-25-1.

अहोरात्राणि विदध :

இரவையும் பகலையும் வெளிப்படுத்துகிறான். –ரிக் வேதம் 2-190-10.

सूर्याचन्द्रमसौ धाता यथा पूर्वमक
ल्पयत्

இன்னும் அந்த சிருஷ்டி கர்த்தா சூரியனையும், சந்திரனையும் முந்தைய படைப்புக்களைப் போன்று அமைத்தான். –ரிக் வேதம் 3-190-10

होतारं सत्ययजं रोदस्योरुत्तानहस्तो
नमसा विवासेत

வணங்கத் தகுதியான பூமி இன்னும் வானங்களை உண்மையான பாதையில் நடத்திச் செல்லும் பரமேஸ்வரிடம் கைகளை மேலேற்றி பிரார்த்தனை செய்யுங்கள். –ரிக் வேதம் 46-16-6

मघदा देवं महा

கடவுள் உண்மையில் மகா

பார்க்கவில்லையா? இன்னும் சூரியனையும் சந்திரனையும் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறான். ஒவ்வொன்றும் அவைகளுக்கு வரையறுக்கப்பட்ட காலம் வரை சென்று கொண்டிருக்கும். இன்னும் அல்லாஹ் உங்களின் எல்லா கிரியை பற்றிய செய்திகளையும் அறிந்திருக்கிறான். –லுக்மான் 29.

نِّعۡمَةً مِّنۡ عِندِنَا ۚ كَذَٰلِكَ نَجۡزِي مَن شَكَرَ

இது நமது அருட்கொடையாகும். யார் நன்றி செலுத்துகிறார்களோ அவர்களுக்கு அதைப் போன்ற பிரதியைத் தருவோம்.- கமர் 35.

إِنَّ ٱللَّهَ لَا يُحِبُّ مَن كَانَ مُخۡتَالًا فَخُورًا

திடனாக அல்லாஹ் பெருமையடிப்போரையும், முகஸ்துதி செய்வோரையும் விரும்ப மாட்டான். –நிஸா 36.

وَٱللَّهُ يَعۡلَمُ مَا فِي ٱلسَّمَٰوَٰتِ وَمَا فِي ٱلۡأَرۡضِ ۚ وَٱللَّهُ بِكُلِّ شَيۡءٍ عَلِيمٌ

இன்னும் அல்லாஹ் வானங்கள் பூமிகளிலுள்ளதை அறிகிறான். இன்னும் அல்லாஹ் அனைத்து வஸ்துக்களையும் அறிந்திருக்கிறான். - ஹுஜுராத் 16.

يَعۡلَمُ سِرَّكُمۡ وَجَهۡرَكُمۡ وَيَعۡلَمُ مَا تَكۡسِبُونَ

அவன் உங்களின் அந்தரங்க பகிரங்க நிலைகளை அறிந்திருக்கிறான். இன்னும் நீங்கள் செய்வதையும் அவன் அறிந்திருக்கிறான். – அன்ஆம் 3.

وَهُوَ مَعَكُمۡ أَيۡنَ مَا كُنتُمۡ ۚ وَٱللَّهُ بِمَا تَعۡمَلُونَ بَصِيرٌ

இன்னும் நீங்கள் எங்கிருப்பினும் அவன் உங்களோடு இருக்கிறான். இன்னும் நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கிறான். -ஹதீத் 4.

وَهُوَ ٱلۡقَاهِرُ فَوۡقَ عِبَادِهِۦ ۚ وَهُوَ ٱلۡحَكِيمُ ٱلۡخَبِيرُ

அவன் தன் அடியார்களை மிகைத்திருக்கிறான்.- அன்ஆம் 18.

பெரியவன். –அதர்வண வேதம் 3-58-20.

अदब्धानि वरुणस्य व्रतानि கடவுளின் சட்டங்கள் மாறாது. – ரிக்வேதம் 10-24-1.

न कि रस्य प्रमिनन्ति व्रतानि கடவுளின் சட்டங்களை எவராலும் மாற்ற முடியாது. –அதர்வண வேதம் 5-1-18.

इमे चित् तव मन्यवे वेपेते भियसा नही
यदिन्द्र वजिन नोजसा वृत्रं मरुत्वाँ
अवधीर चर्न्नु स्वराज्यम्
ஏ! கடவுளே! பூமி மற்றும் வானங்கள் உனது மகத்துவத்தால் நடுங்குகின்றன. ஏ! கடவுளே! நீ உனது கோபத்தால் தீயவர்களை தண்டிக்கிறாய். இன்னும் நல்லதை செய்வோருக்காக மகத்துவமிக்க ஆன்மீக படித்தரங்களை சித்தப்படுத்தி வைத்திருக்கிறாய். –ரிக்வேதம் 11-80-1.

तवमग्ने प्रथमो अङ्गिरस्तम : ஏ!பரமேஸ்வரா! நீயே அனைத்துக்கும் முன்னவன். இன்னும் அனைவரையும் விட அதிகமாக அறிந்திருக்கிறாய்.-ரிக் வேதம் 2-31-1.

दृष्ट्वारुपेव्याक रोत् सत्यानृते
प्रजापतिः अश्रदांमनृते दधाच् छृदां सत्ये
प्रजापतिः
கடவுள் சத்தியத்தையும் அசத்தியத்தையும் புரிந்து கொள்ள சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்து விட்டார். இன்னும் ஜனங்களே! சத்தியத்தை விசுவாசியுங்கள். அசத்தியத்தை விசுவாசிக்காதீர்கள் என்றும் கட்டளையிட்டார். –யஜூர் வேதம் 77-19.

उत त्वः पश्यन्न ददर्श वाचम्
उत त्वः श्रृण्वन्न श्रृणोत्येनाम
அறிவற்றவர்கள் வேதங்களை பார்த்தும் அவர்கள் பார்ப்பதில்லை. இன்னும் கேட்டும் அவர்கள் கேட்பதில்லை. –ரிக்வேதம் 4-71-10.

महेवम त्वामद्रिवःपराशुल्क ाय
देयाम् । न सहस्त्राय नायुताय
वजिवोम न शताय शतामघ
ஏ!மறைவற்றவனே!

يَعْلَمُ مَا يَلِجُ فِي الْأَرْضِ وَمَا يَخْرُجُ مِنْهَا وَمَا يَنزِلُ مِنَ السَّمَاءِ وَمَا يَعْرُجُ فِيهَا

இன்னும் அவன் பூமிக்குள் புகுவதையும் இன்னும் அதிலிருந்து வெளிப்படுவதையும் இன்னும் வானத்திலிருந்து இறங்குவதையும் இன்னும் அதிலிருந்து மேலேறுவதையும் அறியக் கூடியவனாக இருக்கிறான். -ஹதீத் 4.

وَهُوَ الَّذِي أَرْسَلَ الرِّيَاحَ بُشْرًا بَيْنَ يَدَيْ رَحْمَتِهِ

இன்னும் அவன் தனது ரஹ்மத்தைக் கொண்டு காற்றை நற்செய்தி அறிவிக்கக் கூடியதாக அனுப்பினான். – புர்கான் 48.

وَهُوَ الَّذِي جَعَلَ اللَّيْلَ وَالنَّهَارَ خِلْفَةً

அவன் எப்படிப்பட்டவன் எனில், இரவையும் இன்னும் பகலையும் ஒன்றன்பின் ஒன்றாக வரச் செய்தவன். –அன்ஆம் 96.

وَجَعَلَ اللَّيْلَ سَكَنًا وَالشَّمْسَ وَالْقَمَرَ حُسْبَانًا

இன்னும் அவன் இரவை அமைதி பெறுவதற்காகவும் இன்னும் சூரிய சந்திரனை கணக்கிடுவதற்காகவும் வெளியாக்கினான். -அன்ஆம் 96.

أَلَا لَهُ الْخَلْقُ وَالْأَمْرُ ۗ تَبَارَكَ اللَّهُ رَبُّ الْعَالَمِينَ

ادْعُوا رَبَّكُمْ تَضَرُّعًا وَخُفْيَةً ۚ إِنَّهُ لَا يُحِبُّ الْمُعْتَدِينَ

உஷார்! அவனுக்குத்தான் சிருஷ்டிப்பதும் கட்டளையிடுவதும் உள்ளன. அகிலத்தாருக்கு ரட்சகனாகிய அல்லாஹ் முபாரக்காகி விட்டான். உங்களின் ரட்சகனை தாழ்மையாகவும் ரகசியமாகவும் நீங்கள் பிரார்த்தியுங்கள். திடனாக அவன் (எல்லை) கடப்போரை நேசிக்க மாட்டான். –அஃ.ராஃ.ப் 54,55.

الْكَبِيرُ الْمُتَعَالِ

(அல்லாஹ்) அனைவரையும் விட பெரியவனும் மகத்துவமுள்ளவனுமாகும். –ரஃ.த் 9.

ஆற்றல்மிகு கடவுளே! நீ எத்தனை மதிப்புக்குரியவன் எனில் நான் உன்னை எந்த விலைக்கும் விடத்தயாராக இல்லை. ஆயிரங்களுக்காகவோ அல்லது இவ்வுலகின் அளவற்ற பொருட்களுக்காகவோ அல்ல. –ரிக் வேதம் 5-1-8.

स्वयं यजस्व स्वयं जुषस्व நீயே காரியமாற்று. நீயே அதன் பலனையும் அனுபவி. - யஜூர் வேதம் 15-23.

क्र तत्र: समाह दीनता प्रतीप जगमा
शुचे । मृला सुक्षत्र मृळ्य ஏ! மகத்தான ஆற்றல் கொண்ட பரிபாலகனே! நாங்கள் எங்களின் அறியாமையினாலேயே வழி கெடுகிறோம். எங்கள் மீது கிருபை செய். –ரிக் வேதம் 3-89-7

لَا تَبْدِيلَ لِكَلِمَاتِ اللَّهِ

அல்லாஹ்வின் வாக்கு மாறாது. –யூனுஸ் 64.

وَلَن تَجِدَ لِسُنَّةِ اللَّهِ تَبْدِيلًا

இன்னும் அல்லாஹ்வுடைய சட்டங்களில் நீங்கள் எந்த மாற்றத்தையும் காண மாட்டீர்கள். -ஃபத்ஹு 23.

وَلِلَّهِ مَا فِي السَّمَاوَاتِ وَمَا فِي الْأَرْضِ لِيَجْزِيَ الَّذِينَ أَسَاءُوا بِمَا عَمِلُوا وَيَجْزِيَ الَّذِينَ أَحْسَنُوا بِالْحُسْنَى

இன்னும் வானங்களிலும் பூமியிலும் என்னென்ன உள்ளதோ அவையனைத்தும் அல்லாஹ்வுக்கு உரியவை களாகும். எனவே யார் தீய செயல் புரிகிறார்களோ அவர்களுக்கு தீயதே கிடைக்கும். இன்னும் யார் நற் செயல் புரிகிறார்களோ அவர்களுக்கு நல்லதே கிடைக்கும்.- நஜ்ம் 31.

هُوَ الْأَوَّلُ وَالْآخِرُ وَالظَّاهِرُ وَالْبَاطِنُ ۖ وَهُوَ بِكُلِّ شَيْءٍ عَلِيمٌ

அவனே முன்னவன். அவனே பின்னவன். இன்னும் அவனே வெளியீடானவன். அவனே உள்ளீடானவன். இன்னும் அவன் எல்லா வஸ்துக்களையும் தெரிந்திருக்கிறான். - ஹதீத் 3

قَد تَّبَيَّنَ الرُّشْدُ مِنَ الْغَيِّ ۚ فَمَن يَكْفُرْ بِالطَّاغُوتِ وَيُؤْمِن بِاللَّهِ فَقَدِ اسْتَمْسَكَ بِالْعُرْوَةِ الْوُثْقَىٰ

திடனாக நேர்வழி வழிகேட்டிலிருந்து வெளியாகி விட்டது. ஆகவே யார் பைசாசங்களுக்கு மாறு செய்து அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்கிறாரோ அவர் திடனாக கெட்டியான கயிற்றை பிடித்துக் கொண்டார். – பகரா 256.


وَأَنتُمْ تَتْلُونَ الْكِتَابَ ۚ أَفَلَا تَعْقِلُو

இன்னும் வேதவசனங்களை ஓதும் அறிவைக் கொண்டு செயல்பட மாட்டீர்களா? –பகரா 44.


وَلَا تَشْتَرُوا بِآيَاتِي ثَمَنًا قَلِيلًا وَإِيَّايَ فَاتَّقُونِ



எவன் தனது வருமானத்தை தானே திண்ணுகிறானோ அவன் பாவத்தை திண்ணுகிறான். –ரிக்வேதம் 6-117-10.



யார் வறியவர்களுக்கும் தேவையுடையோருக்கும் உதவுவதற்காக தர்மம் செய்கிறாரோ அவர் கொடையாளி. அவருக்கு நன்மை கிடைக்கும். அவரது விரோதி கூட அவரின் நண்பனாகி விடுகிறான். -3-117-10



எவர் ரொட்டி அவசியப்பட்ட அனாதைக்கு ரொட்டி இருந்தும் உதவவில்லையோ, இன்னும் இறுகிய மனமுள்ளவனாக தான் மட்டும் தின்று கொண்டிருக்கிறானோ

இன்னும் எனது வசனங்களை அற்ப விலைக்கு விற்காதீர்கள். இன்னும் என்னையே அஞ்சுங்கள். –பகரா 41.

أَلَّا تَزِرُ وَازِرَةٌ وِزْرَ أُخْرَىٰ

சுமையை தூக்கிக் கொண்டுள்ள இவன் இன்னொருவரின் சுமையை சுமக்க மாட்டான். – நஜ்ம் 38.

إِنَّ اللَّهَ لَا يَظْلِمُ النَّاسَ شَيْئًا وَلَٰكِنَّ النَّاسَ أَنفُسَهُمْ

திடனாக அல்லாஹ் எந்த வஸ்துவின் மீதும் அநியாயம் செய்வதில்லை. எனினும் மனிதர்கள் தங்களின் ஆன்மாவுக்கு தாங்களே அநியாயம் செய்து கொள்கிறார்கள்.- யூனூஸ் 44

لَن تَنَالُوا الْبِرَّ حَتَّىٰ تُنفِقُوا مِمَّا تُحِبُّونَ

நீங்கள் நேசிக்கும் ஒன்றை அவன் பாதையில் செலவு செய்யாதவரை நீங்கள் நன்மையை அடைய மாட்டீர்கள். –ஆல இம்ரான் 92.

الَّذِينَ يُنفِقُونَ فِي السَّرَّاءِ وَالضَّرَّاءِ وَالْكَاظِمِينَ الْغَيْظَ وَالْعَافِينَ

عَنِ النَّاسِ ۗ وَاللَّهُ يُحِبُّ الْمُحْسِنِينَ

அவர்கள் இன்பத்திலும் துன்பத்திலும் செலவு செய்வார்கள். இன்னும் கோபத்தை தடுத்துக் கொள்வார்கள். இன்னும் ஜனங்களை மன்னித்து விடுவார்கள். மேலும் அல்லாஹ் உபகாரிகளை நேசிப்பான். –ஆல இம்ரான் 133.

فَذَٰلِكَ الَّذِي يَدُعُّ الْيَتِيمَ

وَلَا يَحُضُّ عَلَىٰ طَعَامِ الْمِسْكِينِ

فَوَيْلٌ لِّلْمُصَلِّينَ

யார் அனாதைகளை துன்புறுத்து கிறாரோ இன்னும் தேவையுடை யோருக்கு உணவளிக்கத் தயங்குகிறாரோ அத்தகைய தொழுகையாளிகளுக்கு கேடுதான். –மாவூன் 2, 3, 4.

| | |
|---|---|
| அவனுக்கு துன்பத்தையன்றி சுகம் என்பது அவனது விதியில் இல்லை. | |


**குறிப்பு:** ஸ்ரீகங்கா பிரசாத் உபாத்யாயா அவர்களுடைய அர்த்தத்தில் சிற்சில இடங்களில் நமக்கு கருத்து வேறுபாடு உள்ளது. எனினும் இங்கே நாம் அவருடைய அர்த்தத்தை அப்படியே தந்துள்ளோம்.

**இன்னும் பரிசீலனை செய்க**

வருடக் கணக்கில் காணாமல் போயிருந்த உங்களின் சகோதரன் ஒருவேளை திடீரென கிடைத்துவிட்டால், என்ன? பூமியின் சுழற்சியுடைய மாற்றத்தின் காரணமாக அவனை கண்டு கொள்வதற்கோ அல்லது அவனை கட்டிப்பிடிக்கவோ மறுத்து விடுவீர்களா? இன்னும் அவனுடைய முகத்தில் சிறுவயதுடைய அடையாளத்தை கண்டு கொள்ளும் அளவிற்கு இருந்தாலுமா? இருப்பினும் முதலில் அவனுடைய தோற்றம் மற்றும் உருவத்தை வைத்து அவனை கண்டு கொள்வதில் உங்களுக்கு சற்று தயக்கம் ஏற்படலாம். அதன் பின் அவனுடைய கடந்த காலத்தை விசாரிப்பதன் மூலம் அவன் யார் என்பதை தெரிந்து கொண்டு அவனை அப்படியே வாரியணைத்துக் கொள்வீர்களா இல்லையா? அத்துடன் முன்னைவிட இப்போது இன்னும் அதிகமான பாசம் அவன் மீது உங்களுடைய மனதில் ஏற்படுமா இல்லையா? ஒருவேளை அவன் உங்களை புரிந்து கொள்ளாமல் போனால் நீங்கள் தனியாகப் போய் அவனுக்கு உங்களை புரியவைக்க முயல்வீர்களா இல்லையா? அப்படியானால் இப்போது வாருங்கள். உருவத் தோற்றங்களின் ஒப்புவமையைப் பார்த்த பின் கடந்தகால காணாமல் போன சகோதரனின் அடையாளங்களை கவனமாக பார்ப்பதோடு அவனைப் பார்த்து சில கேள்விகளையும் கேளுங்கள்.

प्रतित्यं चारुमध्वरं गोपीथाय प्रहूयसे | मरुद्भिरग्न आ गहि १
नहि देवो न मर्त्यो महस्तव क्रतु परः | मरुद्भिरग्न आ गहि २
य महो रजसो विदुर्विश्वे देवासो अद्रुहः | मरुद्भिरग्न आ गहि ३
य उग्रा अर्कमानृचुरना धृष्टास ओजसा | मरुद्भिरग्न आ गहि ४
य शुभ्राघोरवर्पसः सुक्षत्रासो रिशादसः | मरुद्भिरग्न आ गहि ५
य नाकस्याधि रोचने दिवास आसते | मरुद्भिरग्न आ गहि ६
य ईङ्खयन्ति पर्वतान् तिरः समुद्रमर्णवम् | मरुद्भिरग्न आ गहि ७
आ ये तन्वन्ति रश्मिभिस्तिरः समुद्रमोजसा | मरुद्भिरग्न आ गहि ८
अभि त्वा पूर्वपीतये सृजामि सोम्यं मधु | मरुद्भिरग्न आ गहि ९

மேற்கண்ட வேதமந்திரங்கள் ரிக் வேதத்தில் காணப்படுபவைகளாகும். (19-1-1 லிருந்து 19-1-9 வரை) உள்ள இம்மந்திரங்களை கொஞ்சம் கவனமாக பாருங்கள். ஒவ்வொரு மந்திரத்தின் இறுதியிலும் ஒரு வார்த்தை (அர்த்தமானது, **'அக்னி'யைப் பற்றிய ரகசியத்தின் விளக்கம் பாலைவனக் கூட்டத்தாரி(முஸ்லிம்களி)டமிருந்து தான் கிடைக்கும்**)' எனத் திரும்ப திரும்ப பேசப்படுகிறது. இது குர்ஆனிலுள்ள சூறா ரஹ்மானைப் போல் இல்லை? இந்த சூறாவில் திரும்பத் திரும்ப فباي آلاء ربكما تكذبان '**:.பபிஅய்யி ஆலாயி ரப்பிகுமா துகத்திபான்**' **(அர்த்தமானது பின்னர் உங்களுடைய ரட்சகனின் எந்தெந்த வசனங்களை பொய்யாக்குவீர்கள்?)**' என்பது முப்பத்தோறு இடங்களில் வருகிறது. மேலும் இது

எதேச்சையானது அல்ல. இதேமுறை ரிக் வேதத்திலன் முதல் மண்டலத்திலுள்ள பதினெட்டாவது சுலோகத்திலும் காணப்படுகிறது. அதாவது  (அர்த்தமானது **'பெரும் ஏற்பாட்டுடன் இன்னும் கண்ணியத்தோடு நாம் அனைத்து திசைகளைக் கொண்டும் புகழுகிறோம்.**)' என்பதை திரும்பத் திரும்ப ஐந்துமுறை பேசப்பட்டுள்ளது. விரிவஞ்சி இங்கே சிலவற்றை மட்டும் குறிப்பிடுகிறோம்.

ஸாம வேதத்தில் மூன்று சுலோகத்தின் இறுதியில்  **(விரோதியால் இழுக்கப்பட்ட வில் உடைந்து போகட்டும்)** என்றும் ரிக்வேதத்தில் திரும்பத் திரும்ப  (ஏ! **சுவர்க்கபூமியே! எனது துன்பத்தைத் திரும்பிப் பார்**) என்பது பதிமூன்று முறையும் ரிக் வேதம் 121-10ல்  (**நாங்கள் எந்த கடவுளுக்கு பலி கொடுப்போம்.**) என்பது ஒன்பது முறையும், யஜூர் வேதத்தின் 21வது அத்தியாயம் முதல் பாகத்தின் 48லிருந்து 55 வது மந்திரம் வரை ஒவ்வொரு மந்திரத்தின்  இறுதியிலும் இவ்வாறு வருகிறது.

முஸ்லிம் வேதமான குர்ஆனிலும் இம்மாதிரியான வசனங்கள் சூறா ரஹ்மானில் மட்டுமல்ல. சூறா முர்ஸலாத், சூறா கமர், சூறா ஷுஅரா போன்றவைகளிலும் காணலாம். இன்னும் இதுபோன்ற பல உதாரணங்கள் வேதங்களிலும் குர்ஆனிலும் காணப்படுகின்றன. இன்னும் வேதங்'களில் ஏகத்துவம், தூதுத்துவம் மற்றும் இறுதிநாள் பற்றிய விசயங்களை தனித்தனி தலைப்புக்களில் அடுத்துவரும் அத்தியாயங்களில் பேசுவோம்.

மேலும் எத்தனை தூரம் முந்திய பரிசுத்த வேதங்களை ஒப்பு நோக்குகின்ற நிலையுள்ளதோ அதில் அப்ரானி மொழியைத் தெரியாத காரணத்தால் நாம் முந்தைய தௌராத், ஜபூர், இன்ஜீல் போன்ற வேதங்களின் ஆங்கில மொழிபெயர்ப்புகளைத் தான் படிக்கும் வாய்ப்பை பெற்றோம். அவற்றை மொழியாக்கம் செய்தோர் தங்களின் எண்ணங்களையும், நம்பிக்கைகளையும் ஒருவேளை அதில் இணைத்திருக்கலாம். ஆனால் அதே நேரம் வேதங்களில் பெரும்பான்மையானவைகளை நாம் அவைகளின் அஸல் மொழியான சமஸ்கிருதத்திலேயே படித்துப் பார்த்து அவைகளை புரிந்து கொள்ளவும் முயன்றுள்ளோம். அத்துடன் அவ்வெல்லா வேதங்களையும் குர்ஆனோடு உரசியும் பார்த்துள்ளோம். ஆதலால் நாம் இறைவனை முன்னிறுத்தி மிகுந்த இறைவிசுவாசத்தோடு கூறுகிறோம். இந்த வேதங்கள் தங்களின் அசல் மொழியின் மூலம் வேதங்கள்தான் என்பதை உறுதிப்படுத்துவதோடு தற்போது காணப்படும் வேதங்கள் ஆங்கில மொழியாக்கம் செய்யப்பட்ட தௌராத், ஜபூர், இன்ஜீல் போன்ற வேதங்களுக்கிடையே எந்த வித்தியாசமும் இருப்பதாகத் தெரியவில்லை. இது குர்ஆனுடைய வெளிச்சத்தில் அந்த வேதங்கள் மற்றும் பைபிளை ஒப்பு நோக்கி உரசிப் பார்த்த ஓர் விஷயமாகும். இருப்பினும் உண்மையான இறுதிநிலை கொண்டு உரசிப் பார்க்கும்

ஆதாரமொன்று இன்னும் மீதமுள்ளது. அது குர்ஆன் வேதங்களைக் குறித்து என்ன கூறுகிறது என்பதாம். அதையும் இப்போது பார்த்து விடுவோம். இதுபற்றி குர்ஆனில்.....

وَلِكُلِّ اُمَّةٍ رَّسُوْلٌ

**'இன்னும் ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் ஒரு திருத்தூதர் இருந்தார்'** என இறைவன் கூறுவதாக குர்ஆன் நமக்குக் கூறுகிறது.

**இறுதி சாட்சி**

குர்ஆனில் எந்தெந்த பரிசுத்த வேதங்களைப் பற்றி கூறப்பட்டுள்ளதோ அவைகளில் தௌராத், ஜபூர், இன்ஜீல் மட்டுமே அறியப்படுகின்றன. ஸ்ரீகங்கா பிரசாத் உபாத்யாயா தமது நூலில் இதை கண்டிக்கும் வண்ணம்...

**'ஆதம் நபிக்குப் பின் முஸ்லிம் வேதமான குர்ஆனில் குறிப்பாக நான்கு வேதாந்திகளைப் பற்றி காணப்படுகிறது. அவர்கள் மூஸா நபி, ஈஸா நபி, தாவூத் நபி, முஹம்மத் நபி ஆகியோர்களாகும். அவர்களோடு நான்கு வேதங்களும் தொடர்பு படுத்தப்படுகின்றன. அவை மூஸா நபியோடு தௌராத்தும், ஈஸா நபியோடு இன்ஜீலும், தாவூத் நபியோடு ஜபூரும், முஹம்மத் நபியோடு குர்ஆனும் இணைத்துப் பேசப்படுகின்றன. இதில் ஆதம் நபியை வேதாந்தி என்றோ அல்லது அவர்களோடு ஒரு வேதமோ தொடர்புப் படுத்தப்படும் ஒரு வசனம் கூட குர்ஆனில் எங்குமே காணப்படவில்லை. இந்நிலையில் ஆதம் நபியிலிருந்து மூஸா நபி வரை ஒரு நீண்ட காலம் கடந்து போயுள்ளது. அதில் மனித வரலாற்றில் எத்தனையோ ஏற்ற இறக்கங்களும் நிகழ்ந்துள்ளன. மாற்றங்களும் வந்துள்ளன. எத்தனையோ ஆட்சிகள் தோன்றி அவைகள் மறைந்தும் போயுள்ளன. இவ்விடைப்பட்ட காலத்தில் ஒரு வேதக்காரர் கூட தோன்றவில்லையா என்ன?'**

-நூல்: மஸாபீஹுல் இஸ்லாம் பக்கம் 43.

இதற்கு நீங்கள் குர்ஆன் என்பது நேர்வழிக்குரிய ஒரு வேதமேயன்றி திருத்தூதர்களின் பெயர்பட்டியலையோ அல்லது வேதங்களின் பெயர்களையோ தொகுத்துத் தருகின்ற என்சைக்ளோ பீடியா அல்ல என்பதாக பதில் கூறலாம். இருப்பினும் ஸ்ரீகங்கா பிரசாத் உபாத்யாயா அவர்களின் ஆட்சேபணையைக் கொண்டு ஒரு கேள்வி எழுகிறது என்னவோ உண்மைதான். அதாவது எந்தெந்த வேதாந்திகளான இறைத்தூதர்களைப் பற்றி குறிப்பிட்டு குர்ஆன் திரும்பத்திரும்ப நூஹ் நபி, இப்றாஹிம் நபி, மூஸா நபி, ஈஸா நபி, முஹம்மத் நபி என்று பேசுகின்றதோ அந்த குர்ஆன் நூஷஹ் நபியின் வேதத்தைத் தவிர மற்ற தூதர்களின் வேதங்களையெல்லாம் பேசுகிறது. எதுவரையெனில், தாவூத் நபியின் வேதத்தை சொன்ன குர்ஆன் நூஹ் நபி கொண்டு வந்த வேதத்தின்; பெயரை மட்டும் ஏன் சொல்ல வில்லை.?

**'அல்லது இக்கேள்வி இங்கே இன்னொரு கோணத்திலும் வினவப்படலாம். அதாவது, எந்தெந்த பெரிய கூட்டங்களைப் பற்றி குர்ஆன் முஃமின், ஈஸாயீ, யஹூதி, ஸாயிபீன் என**

**இணைத்துப் பேசுகிறதோ அதில் குத்ஆன் முதலில் மூன்று கூட்டத்தாரிடம் இறக்கப்பட்ட வேதங்களின் பெயர்களை சொல்லித் தந்ததைப் போல ஸாயிபீன்களிடம் நூஹ் நபியின் எந்த வேதம் வந்தது என்பதை மட்டும் ஏன் சொல்லவில்லை? அத்துடன் ஸாயிபீன்களை குர்ஆன் வேதக்காரர்களென்று குறிப்பிடுவதைக் கவனித்தால் இக்கேள்வியின் பலம் இன்னும் அதிகமாகிவிடுகிறது. பின்னும் அவ்வேதக்காரர்கள் மாற்றம் பெற்று இஸ்லாத்தையும் அங்கீகரிப்பார்களென முன்னறிவிப்பு வேறு காணப்படுகிறது. இதுமட்டுமல்ல. ஹதீஸ் என்னும் நபிமொழியில் மாற்றம் பெறப்போகும் அந்த கூட்டம் ஆச்சரியமான கூட்டம் என்றும் முதலில் குர்ஆனை விசுவாசிக்க மாட்டார்கள் என்றும் அதற்கு மாறாக துண்டிக்கப்பட்டு போன தங்களின் வேதத்தின் பக்கமாகத்தான் முதலில் திரும்புவார்கள் என்றும் அவ்வேதத்தில் குர்ஆனிலுள்ள போதனைகள் தங்களுடைய வேதத்தை உண்மையாக்கி வைப்பதை பார்த்து அதன் பின்னரே அவர்கள் நம்பிக்கை கொள்வார்கள் என்றும் கூறப்படுவதை நாம் கவனிக்க வேண்டும்.**'

-நூல்: மிஷ்காத், ஆசிரியர்: அம்ருபின் ஷுஜப், பாடம் உம்மத்தின் நன்மைகள்.

**ஆதிகிரந்த் என்னும் பெயரைத் தேடுக**

முஸ்லிம் வேதமான குர்ஆனில் வைதீக தர்மம் குறித்த வேதங்களைப் பற்றி எங்கே சொல்லப்பட்டிருக்கிறது என்பதை முதலில் நாம்;தேட வேண்டும். அவ்வாறு தேடும்போது பிந்திய வேதங்களான தௌராத், ஜபூர், இன்ஜீல், ஸுஹுஃபெ இப்றாஹிம் போன்ற வேதங்களின் பெயர்கள் மட்டுமின்றி **'ஸுஹுஃபே ஊலா, 'ஜுபுருல் அவ்வலீன்'** என்னும் இருபெயர்களும் நமக்குக் கிடைக்கின்றன. இதனுடைய அர்த்தமானது **'முந்தைய வேதச் சுவடி' 'முந்தைய சிதறிப் போன வரிகள்'** என்பதாகும். இவ்விரு பதங்களின் சமஸ்கிருத வார்த்தை आदि ग्रन्थ 'ஆதிகிரந்த்'மற்றும் आदि ज्ञान 'ஆதி கயான்' என்பதாகும். பின்னும் இந்துக்கள் தமது வேதங்களை குறித்து இவை ஆதிகிரந்த் மற்றும் ஆதிகயான் எனவும் வாதிக்கின்றனர். என்ன? குர்ஆன் எதை ஸுஹுஃபெ ஊலா, ஜுபுருல் அவ்வலீன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறதோ அதைத்தான் இந்துக்கள் '**ஆதிகிரந்த்**' என்பதாக ஒருவேளை கூறுகிறார்களோ என்பதாக நீங்கள் எப்போதாவது யோசித்துப் பார்த்தது உண்டா?

இங்கே இன்னொன்றையும் நீங்கள் கவனிக்க வேண்டும். அது '**வேத்**' என்னும் பெயரில் எந்தக் கிரந்தத்தையாவது குர்ஆனில் நீங்கள் தேடுவீர்களேயாயின் அப்படியொரு பெயரில் எந்த வேதமும் உங்களுக்கு ஒரு போதும் கிடைக்காது. அத்துடன் இன்று தாவூத் நபிக்கு இறக்கப்பட்ட வேதத்திற்கு '**ஸாம்**'(PSALM) என்றுதான் பெயர் சொல்லப்படுகிறது. ஆம் ஸாம் என்னும் பெயரில் தாவூத்நபிக்கு இறக்கப்பட்ட வேதத்தை குர்ஆனில் தேடினால் அது அறவே கிடைக்காது. காரணம் குர்ஆன் அவ்வேதத்தை ஜபூர் என்னும் பெயரில் பேசிக் கொண்டிருக்கிறது. இதுபோன்றுதான் இன்று எந்த கிறிஸ்துவரும் தம்மை நஸாரா என்று சொல்வதில்லை. அதேநேரம் குர்ஆன், யார் தம்மை கிறிஸ்துவர் என்று சொல்லிக்

கொண்டிருக்கிறார்களோ அவர்களைத்தான் நஸாரா என்று கூறுகிறதென்பதை நாம் புரிந்து கொண்டிருப்பதைப் போல இதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

**நாம் எப்படி மறந்து போனோம்?**

யார் தங்களை நஸாரா என்று சொல்லிக் கொள்ளவில்லையோ அவர்கள்தான் நஸாரா என்பதை நாம் தெரிந்து வைத்திருக்கிறோம். இதேபோலள யார் தம்முடைய வேதத்தை 'ஜபூர்' என்று சொல்லவில்லையோ அந்த வேதம்தான் இன்று ஸாம் என்னும் பெயரில் உலவிக் கொண்டிருக்கிறது என்பதையும் நாம் தெரிந்து வைத்திருக்கிறோம். அதேநேரம் இங்கே ஆயிரக்கணக்கான வருடங்களாக ஒரு மிகப்பெரும் கூட்டம் குர்ஆன் இறக்கப்படுவதற்கு முன்பிருந்தே எங்களிடம் 'ஸுஃபெ ஊலா' என்னும் வேதம் இருக்கிறதென வாதித்து வருகிறதோ, அத்துடன் தனது பாஷையில் அவ்வேதத்தின் பெயரை குர்ஆன் கூறுகிற அதே n பயரைக் கொண்டு சொல்லிக் கொண்டிருக்கிறதோ, அத்துடன் ஆயிரக்கணக்கான வருடங்களாக அக்கூட்டத்தாரோடு நாம் கலந்து வாழ்ந்து வந்தும் கூட அந்த வேதங்களை பார்க்காமல், அதன் பக்கமாக நமது கவனத்தை செலுத்தாமல், அதைக் குறித்து எந்த ஆய்வுமே செய்யாமல் ஸுஃபே ஊலா என்ற பெயரில் ஜுருபுல் அவ்வலீன் என்னும் பெயரில் இன்று ஒரு வேதமே இவ்வுலகில் இல்லையென எப்படிச் சொல்ல முடியும்?

இன்னும் மேற்கண்ட அப்பெயரில் இவ்வுலகிலுள்ள எந்தக் கூட்டமாவது எங்களிடமும் அப்பெயரில் வேதமொன்று உள்ளதென வாதிக்கிறதா? என்பதை நோக்கினால் இந்தியாவிலுள்ள இந்துச் சமூகத்தைத் தவிர வேறு எந்தக் கூட்டமும் இவ்வாறு வாதிக்கவில்லை என்பதையும் நாம் பார்க்கிறோம். இந்நிலையில் இறைவன் நம்மை மன்னிக்க வேண்டும். ஒருவேளை மாறப் போகிற அச்சமூகத்தாரது மாற்றத்திற்குரிய அக்காலகட்டம் நெருங்கி வரும்போது இந்த ரகசியத்தை அவன் வெளிப்படுத்தலாமென எண்ணியிருக்கிறானோ என்னவோ? அதனால்தான் அந்த ஸுஃபெ ஊலா, அல்லது ஜுருபுல் அவ்வலீன் என்னும் அவ்வேதம் எந்த நபியின் வாயிலாக இப்பூமிக்கு இறக்கப்பட்டது என்பதை சொல்லாமல் விட்டுவிட்டானோ!

ஆயினும் நமது மறதியை நாம் குற்றம் அல்ல எ ன வாதிக்க முடியாது. காரணம் குர்ஆன் இதை மிகவும் தெளிவாகப் பேசுகிறது. அத்துடன் இதை குர்ஆன் இறங்கியபோது வாழ்ந்திருந்த அரபுமக்களும் தெளிவாகத் தெரிந்திருந்தனர். அதுபோக குர்ஆனில் நீங்கள் அதற்குரிய குறிப்பான சம்பவங்களை தேடியிருந்தால்; கூட ஒருவேளை கிடைத்திருக்கலாம். இப்படி தெளிவாகக் காட்டித் தரப்பட்ட ஒன்றை ஆயிரத்து நானூறு வருடங்களுக்கு முன்னரே வாழ்ந்த அரபிகள் பொதுவானதொரு குறிப்பைக் கொண்டு காட்டித் தந்தும் கூட ஆயிரம் ஆண்டுகளாக அச்சமூக மக்களோடு இணைந்து வாழ்ந்து n காண்டிருக்கும் நாம்தானே குர்ஆனில் அதைத் தேடியிருக்க வேண்டும். அது நமது கடமையுமல்லவா!

**முந்தைய வேதம் இருக்கிறது!**

முந்தைய வேதம் இன்றும் உலகிலுள்ளது. அதைப் பற்றிய குர்ஆனின் வசனமொன்றைப் பாருங்கள்.

وَقَالُوا لَوْلَا يَأْتِينَا بِآيَةٍ مِّن رَّبِّهِ ۚ أَوَلَمْ تَأْتِهِم بَيِّنَةُ مَا فِي الصُّحُفِ الْأُولَىٰ

**'இன்னும் தமது ரட்சகனிடமிருந்துள்ள அத்தாட்சியை கொண்டு அவர் நம்மிடம் வரவேண்டுமேயென்று அவர்கள் கூறுகின்றனர். முந்தைய வேதங்களுடைய அத்தாட்சி அவர்களிடம் வரவில்லையா?'** - அல்குர்ஆன் சூறா தாஹா, வசனம் 133.

இந்த வசனம் முந்தைய வேதமான 'ஆதிகிரந்த்' மறைந்து போய்விடவில்லை. அது இன்னும் உலகிலுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதோடு இதை குர்ஆன் நமக்கு ஒரு பலமான ஆதாரமாகவும், அற்புதமாகவும் எடுத்துக் காட்டுகிறது. பின்னும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் உருண்டோடிய பின்பும் கூட முந்தைய வேதத்தில் குர்ஆன் தொகுத்துப் பேசுகிற அப்போதனைகள் இன்றும் அச்சுமாறாமல் அப்படியே உள்ளது. ஆதலால் முந்தைய வேதங்கள் இன்றும் இப்பூமியில் இருக்கிறதென்பதற்கு என்ன ஆதாரம் எனக் கேட்போரின் வாயை இறைவனே அடைக்கிறான்.

'மேலும் குர்ஆனில் ஆதாரம் கேட்கிறீர்களா?' இறைவாக்குக்கு ருஜுவை எதிர்பார்க்கிறீர்களா என்ன? முந்தைய வேதமான ஆதிகிரந்தத்தை எடுத்துப் பாருங்கள். நாம் தேடும் ஆதாரங்கள், ருஜு போன்ற அற்புதங்களெல்லாம் உங்கள் முன்னால் வந்துவிடும் என்கிறான்.

மேலும் இவ்வசனம் நமக்குப் புரியவைக்கும் ஒருவிஷயம் யாதெனில், முந்தைய வேதங்களில் எத்தனை போதனைகள் இருந்ததோ, எத்தனை விஷயங்கள் இருந்ததோ அவையனைத்தும் பிழிந்தெடுக்கப்பட்ட 'அத்தரின் உருவத்தில்' எல்லா வேதங்களுக்குமுரிய தொகுப்பாக உள்ள குர்ஆன் நம்மிடம் வந்து விட்டது. இன்னும் இந்த உம்மி நபியும் கூட இறைவனுடைய தரப்பிலிருந்து நமக்கு ஓர் அற்புதமாகும். ஆம். இதுவும் இந்த வசனத்தில் குறிப்பிட்டுக் காட்டப்படும் ஒரு விஷயமாகும். இங்கேயும் அதே அறைகூவலை நீங்கள் உணரவில்லையா? எதுவரை முந்தைய வேதங்கள் அனைத்திலும் என்ன இருந்ததென்பதை நீங்கள் தெரிந்து கொள்ளவில்லையோ அதுவரை இதோர் அற்புதம் தான் என்பதை எவ்வாறு உங்களால் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்? அத்துடன் குர்ஆன் எல்லா வேதங்களுடைய விஷயங்களையும் தனக்குள் சேகரித்துக் கொண்டுள்ளது என்பதை எப்படி உங்களால் ஆதாரப்படுத்த முடியும்? இதுதான் முந்தைய வேதங்களின் அஸல் போதனைகளை நாம் தேடவேண்டுமென குர்ஆன் நமக்குப் பிறப்பிக்கும் கட்டளையாகும். அக்கட்டளையை கொண்டு முந்தைய வேதங்கள் இன்றும் பூமியில் இருக்கின்றன என்பதை இவ்வசனம் நமக்கு உறுதிப்படுத்துகின்றது.

**வேதம்தான் ஸுஹு∴பெ ஊலா**

'ஸுஹு∴பெ ஊலா' என்பது ஒரு பொதுப் பெயராகும். காரணம் இது தனக்குள் ஒரு பொதுநிலையையும், அதேநேரம் ஒரு குறிப்பானதோர் நிலையையும் கொண்டுள்ளது. அத்துடன் இவ்வாக்கியத்திற்கு எல்லா முந்தைய வேதங்களும் என்றும் பொருள் கொள்ளலாம். அதுபோலவே முதன்முதல் இறக்கப்பட்ட வேதம் என்றும் பொருள் கொள்ளலாம். இதில்

குர்ஆன் குறிப்பாக பெயரைச் சொல்லி எந்தெந்த வேதங்களை பேசுகிறதோ அவை, ஸுஹுஃபெ இப்றாஹிம், தவ்ராத். ஜபூர், இன்ஜீல் ஆகியவையாகும். இந்த வேதங்களனைத்தையும் அரபியர் தெரிந்து வைத்திருந்தனர்.

ஆனால் நூஹ் நபியவர்களின் காலத்தில் நிகழ்ந்த ஜலப்பிரளய சம்பவம், அவர்களுடைய சமூகத்தாரது நிலைமைகள் மற்றும் அவர்களின் வேதத்தைப் பற்றி குர்ஆனை முதன்முதலாக வாசித்தபோது அரபியர் அதைப் பற்றி தெரிந்திருக்கவில்லை. அதுபற்றி இறைவனே குர்ஆனில் 'சூறா ஹூத்' என்னும் அத்தியாயத்தில் விபரித்துவிட்டு அதன்பின் கூறுகிறான்...

تِلْكَ مِنْ أَنبَاءِ الْغَيْبِ نُوحِيهَا إِلَيْكَ ۖ مَا كُنتَ تَعْلَمُهَا أَنتَ وَلَا قَوْمُكَ مِن قَبْلِ هَٰذَا

**'இம்மறைவான செய்திகளை நாம் உமக்கு வஹியின் மூலம் அறிவிக்கிறோம். அவைகளை நீர் தெரிந்து கொண்டிருக்கவில்லை. அல்லது உமது சமூகத்தான் அதற்குமுன் தெரிந்திருக்கவில்லை.'**

-அல்குர்ஆன் சூறா ஹூத் வசனம் 39.

ஆதலால் குர்ஆன் தனக்கே உரியதோர் பாணியில் எந்த நபியுடைய வேதத்தைப் பற்றி அப்போதிருந்த குர்ஆனின் வாசிப்பாளர்கள் புரிந்திருந்தார்களோ அவர்களுக்கு குர்ஆன் அவ்வேதங்களின் பெயர்களை அவர்கள் பேசும் மொழியிலேயே எளிதாக விளங்கும் வண்ணம் சொல்லித் தந்தது. இதில் அவர்கள் முந்திய வேதத்தையும் விட்டுவைக்கவில்லை. அதற்காக அவர்கள் ஒரு பொதுப் பெயரைக் கொண்டு பல அர்த்தங்களைப் பொதிந்துள்ள ஒரு பதத்தைப் பயன்படுத்தினர். இது இறைவனுக்குரிய ஓர் தனித்தன்மையாகும். **'ஸுஹுஃபெ ஊலா', 'ஜுபுருல் அவ்வலீன்'** என்னும் வாக்கியம் எந்த வேதத்தை குறிக்கிறது என்பதை விளங்கிக் கொள்வது அவர்களுக்கு எளிதாக இருந்தது. காரணம் அப்பதத்தை அவர்கள் தெரிந்து வைத்திருந்த எல்லா வேதங்களுக்கும் பயன்படுத்தினர்.

இப்போது அதே பதத்தை ஸ்ரீகங்கா பிரசாத் அவர்களுக்கும் நாம் சொல்லிக் கொடுத்துவிட்டோம். அதாவது குர்ஆனில் உங்களுடைய வேதத்தைப் பற்றி கூறப்பட்டுள்ளது என்பதே. ஆம். அது முந்தைய வேதம் आदि ग्रन्थ 'ஆதிகிரந்த்' என்னும் பெயரில் பேசுகிறது. மேலும் நமது இந்நுணக்கத்தைக் கொண்டு உலகிலுள்ள பெரும் பெரும் கூட்டத்தார்களுடைய தலைவர்களான இப்றாஹிம் நபி, மூஸாநபி, ஈஸா நபி, முஹம்மத் நபி போன்றோர்களின் பெயர்களனைத்தையும் வரிசைப்படி குறிப்பிட்டோம். அத்துடன் அவர்களுக்கு தரப்பட்டிருந்த வேதங்களின் பெயர்களையும் நூஹ் நபியுடையதைத் தவிர மற்றவைகளனைத்தையும் நாம் குறிப்பிட்டதாக நீங்கள் ஒருவேளை நினைத்துக் கொண்டிருக்கலாம். விஷயம் அவ்வாறல்ல.

இப்போது வாருங்கள். குர்ஆனில் உங்களுடைய நபியான நூஹ் நபியுடைய வேதத்துடைய பெயரையும் நாம் குறிப்பிட்டிருக்கிறோமா இல்லையா என்பதைப் பாருங்கள்.

அதங்னான 'ஜுருபுல் அவ்வலீன்' என்று குர்ஆன் கூறும் பதத்தைப் பற்றி குர்ஆனிலிருந்தே நாம் பார்ப்போம்.

وَإِنَّهُۥ لَفِي زُبُرِ ٱلۡأَوَّلِينَ

'இன்னும் திடனாக அவரைப் பற்றி ஜுருபுல் அவ்வலீனி (முந்தைய வேதத்தி)ல் உள்ளது.'- அல்குர்ஆன் சூறா ஷுஅரா வசனம் 196.

இதில் **'ஜுபுர்'** என்னும் பதத்திற்குரிய அர்த்தமானது **'சிதறிவிட்ட வரிகள்'** என்பதாகும். அவ்வாறாயின் 'ஜுருபுல் அவ்வலீன'; என்பதற்குரிய கருத்தானது 'அனைத்துக்கும் முந்தைய சிதறி விட்ட வரிகள்' என்பதாகும். இன்னும் எல்லா இறைத்தூதர்களுக்கும் முன்பாக முதன்முதல் ஷரீஅத் என்னும் வாழ்வியல் நடைமுறைக்குரிய மார்க்கம் கொடுக்கப்பட்ட 'ரஸூலும்' நூஹ் நபிதான். இதில் **'இந்துக்கள்'** நூஹ் நபியின் கூட்டத்தாராகும். ஏனெனில் அவர்கள் தம்மிடம் பரிசுத்த நூல்களான வேதங்களின் आदि ज्ञान .......... **'ஆதிகயான்'** (முதல் ஞானம்) இருப்பதாக இப்போதும் வாதிக்கின்றனர். பின்னும் வேதங்களைப் பற்றிய வரலாற்றை கவனித்தால் எல்லாவற்றுக்கும் முந்தைய சிதறிவிட்ட வரிகள் என்பதற்குரிய வார்த்தையின் அhத்தம் இதில் தான் உண்மையாக்கப்படுகிறது.

வாருங்கள் இப்போது இதையே இன்னொரு கோணத்தில் பார்ப்போம். முஸ்லிம் வேதமான குர்ஆனில் இறைவன்...

وَمَآ أَرۡسَلۡنَا مِن قَبۡلِكَ إِلَّا رِجَالٗا نُّوحِيٓ إِلَيۡهِمۡۚ فَسۡـَٔلُوٓاْ أَهۡلَ ٱلذِّكۡرِ إِن كُنتُمۡ لَا تَعۡلَمُونَ

بِٱلۡبَيِّنَٰتِ وَٱلزُّبُرِۗ وَأَنزَلۡنَآ إِلَيۡكَ ٱلذِّكۡرَ لِتُبَيِّنَ لِلنَّاسِ مَا نُزِّلَ إِلَيۡهِمۡ وَلَعَلَّهُمۡ يَتَفَكَّرُونَ

**'இன்னும் உமக்கு முன்னர் யார்மீது நாம் வஹி அறிவித்துக் கொண்டிருந்தோமோ அவர்கள் ஆண்களேயன்றி வேறல்ல. நீங்கள் அறியாதவர்களாகயிருப்பின் நினைவுடையோரிடம் கேளுங்கள். அவர்களை நாம் 'பையினாத்' மற்றும் 'ஜுபுரு'டன் அனுப்பினோம்.'** –அல்குர்ஆன் சூறா நஹ்ல் வசனம் 43, 44.

இந்த வசனத்தில் மறைவான அதேநேரம் ஒரு நுணுக்கமான விஷயம் ஒளிந்து கொண்டிருப்பதை நாம் கவனிக்க வேண்டும். அதாவது, திருத்தூதர்கள் மீது எத்தனை வேதங்கள் அல்லது வேதச்சுவடிகள் இறங்கிற்றோ அவைகளில் சில பையினாத்தாகவும், சில ஜுபுராகவும் இருந்தன என்பதாம். அதாவது பையினாத் என்பதும் ஜுபுர் என்பதும் வெள;வேறு நிலைகளைக் கொண்ட வேதக்கிரந்தங்கள். இதில் பையினாத் என்பதற்குரிய அர்த்தமானது எதில் தெளிவாக

விளங்கிக் கொள்ளக் கூடிய வாக்கியங்களைக் கொண்ட வசனங்கள் இருந்தனவோ அவைகளை பையினாத் என்று சொல்லப்படும். இவ்வாறே பையினாத்தில் வித்தியாசமான நிலைகளை கொண்டிருந்தவை என்னவெனில் எதில் உதாரணங்களைக் கொண்டு விசயங்கள் பேசப்பட்டிருந்ததோ அவைகளாகும். இது பற்றி ரிக்வேதத்தில்,...

**'நான் சம்பவங்களை புகழுடன் இணைத்து உதாரணத்திற்குரிய வார்த்தைகளால் பேசுகிறேன்.'** – ரிக் வேதம் 11-6-8.

என்று சொல்லப்பட்டிருப்பதைக் கவனிக் வேண்டும். மேலும் வேதங்களை நாம் கவனிப்போமாயின் அவை **'ஜுபுர்'** என்னும் நிலையை கொண்டிருப்பதையும் நாம் பார்க்கலாம். எனவே அது முந்தைய வேதம்தான் என்பதில் இனி யாருக்கும் எந்தக் கருத்து வேறுபாடும் ஏற்படாது என்று நம்புகிறோம்.

இனி '**வேதங்கள்**' ஸுஹுஃபெ ஊலா அல்லது ஜுபுருல் அவ்வலீன் தான் என்பதாகும். அது நூஹ் நபியின் வேதம்தான் என்பதற்கும் உரிய அறிவார்த்தமான கடைசி ஆதாரமானது, புராணங்கள் மற்றும் இந்துக்களின் மற்ற மத நூல்களில் பல நபிமார்களின் பெயர்களோடு கூடிய முன்னறிவிப்புக்கள் கிடைக்கின்றன. ஆனால் வேதங்களில் நபிமார்களென்று நாம் தேடினால் ஆதம் நபி மற்றும் நூஹ் நபி ஆகிய இருவருடைய பெயர் மட்டும்தான் நமக்குக் கிடைக்கிறது. அதன்றி விண்ணின் முதல் ரஸூலைப் பற்றி '**அஹ்மத் நபி**' என்னும் பெயரில் அதற்குரிய விளக்கங்கள் கிடைக்கின்றன. இதைத்தவிர முஹம்மத் நபியுடைய வெளிப்பாட்க்குரிய முன்னறிவிப்புக்களும் கிடைக்கின்றன. இதில் முஹம்மத் நபியைப் பற்றிய முன்னறிவிப்புக்கள் என்பது எல்லா வேதங்களிலும் காணப்படுகின்றன. இதைத்தவிர நபிமார்கள் என்று பார்க்கும்போது நூஹ் நபியைத் தவிர வேறு எந்த நபியைப் பற்றிய ஒரு சிறு குறிப்பைக் கூட நம்மால் காணமுடியவில்லை என்பது அந்த வேதம் நூஹ் நபிக்கு முந்தியதோ அல்லது பிந்தியதோ அல்ல என்பது நமக்குத் தெளிவாக்கப்படும் மிகப் பெரிய ஆதாரமாகும்.

எனவே வேதங்கள் இறைநூல் அல்லது பரிசுத்தக் கிரந்தம் தான் என்பதை ஏற்றுக் கொள்வதில் நமக்கு என்ன சந்தேகங்கள் இருந்ததோ அவையனைத்தும் இப்போது அகன்று விட்டதென்று நாம் நம்புகிறோம். பின்னும் அவ்வேதக் கருத்துக்கள், அவ்தேத்தை படிக்கும் முஸ்லிம் அறிஞர்களின் சிந்தனை, ஏன்! எல்லாவற்றிற்கும் மேலாக குர்ஆன் காட்டித்தந்த ஆதாரங்கள் போன்றவற்றிற்குப் பின்னால் அது வேதம்தான் என்பது உறுதிப்படுத்தப்படுவதோடு அது 'கலாமே ரப்பானி' (ரட்சகனின் வாக்கு) தான் என்பதும் நிரூபணமாகிவிட்டது.

**வேதம் மற்றும் இந்துமத நூல்கள்:**

இந்துமத நம்பிக்கையில் வேத ங்களை இறைவாக்கு என நம்பப்படுகிறது. இந்'த இறைவாக்கு என்னும் வார்த்தையில் ஒரு சிறு மாற்றத்தைக் கூட அவர்கள் அனுமதிப்பதில்லை. இனி வேறு மத நூல்களாகிய புராணம் पुराण பிராஹ்மன், ब्रह्मण உபநிஷத்துக்கள், उपनिषद् ஸ்மிருத்துக்கள் போன்றவைகளை வேதங்களின் விரிவுரையென்றே

நம்புகின்றனர். அந்த நூல்களின் வாக்கியங்களை இறைவனோடு சம்பந்தப்படுத்துவதும் இல்லை. மாறாக அவைகள் பல்வேறு ரிஷிகளோடு சம்பந்தப்படுத்தப்படுகிறது. மேலும் அவற்றின் வாக்கியங்கள் மாறாதிருந்தால் அதை அவர்கள் ஒரு குற்றமாகவும் கருதுவதில்லை. அதாவது குர்ஆன் ஹதீஸில் காணப்படும் வித்தியாசத்தைப் போதன்றுதான் இதுவும் என்று சொல்லலாம். 'கல்யாண் பதம்' என்னும் புராணத்தில் இதைப் பற்றி...

**'கடவுளின் வார்த்தைகளைப் பேசுகிறவர் மற்றும் நினைக்கிறவர் அதை வேறு வார்த்தையில் மாற்றக்கூடாது. ஒரு வேளை மாற்றுவாரேயாயின் அதை கடவுளுடைய வாக்கு என்று சொல்ல முடியாது. இத்தகையக் கட்டுப்பாடுகளைக் கொண்டு வேத வாக்கியங்கள் கடவுளின் வாக்கியங்களே. அது மட்டுமல்ல. வாக்கியங்களின் வரிசையும் மாறக் கூடாது. இனி; புராணம் என்பது நல்லவர்களின் வாக்குகளைப் போன்றதாகும். அந்த வாக்குகளின் வாக்கியங்கள் மாறிவிடுவது தவறாகாது. ஆனால் அந்த வாக்கியங்களின் மாற்றத்தினால் கருத்து மாறிப் போய் விடக்கூடாது.'**

-நூல்: கல்யாண் பதம் பக்கம் 3

இந்து அறிஞர்கள் கூறுகின்றனர் வேதங்களை மனனம் செய்வதில் எத்தனை முன்னெச்சரிக்கை அல்லது ஒழுங்குமுறை கடைப்பபிடிக்கப்பட்டு வருகிறதெனில் அது துவக்கத்திலிருந்தே எத்தகைய மாற்றமுமின்றி நடைபெற்று வருகிறது. இருப்பினும் ஆயிரக்கணக்கான வருடங்களாக நினைவில் மட்டுமே பாதுகாக்கப்பட்டு வந்த அவ்வேதங்களை பதினெட்டாவது நூற்றாண்டின் இறுதியில் தான் முதன்முதலாக 'மேக்ஸ் முல்லர்' என்பார் நூல் வடிவிற்கு கொண்டு வந்தார் என்பதையும் நாம் தெரிந்திருக்கிறோம்.

இனிநாம் இம்முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எல்லம் ஏற்றுக் கொண்டாலும் நினைவில் பாதுகாக்கப்பட்டிருந்த வேதங்களுடன் புராணங்களும் மற்ற இதிகாசங்களின் விஷயங்களும் கலந்து விடுவதற்குரிய வாய்ப்பு அறவே இல்லை என்றும் சொல்ல முடியாது. அத்துடன் வேதங்களின் ஆங்கில விரிவுரையாளர்களும் இதை ஒப்புக் கொள்கின்றனர். எனினும் நமது அறிவின் விளக்கம் ஆய்வு போன்றவற்றைக்கொண்டு வேதங்கள் மற்றும் இதர நூல்களில் காணப்படும் விஷயங்களில் எவையெவை குர்ஆனைக் கொண்டு உண்மைபடுத்தப்படுகிறதோ அதுதான் அஸல் வேதமாகும்.

رَبَّنَا لَا تُؤَاخِذْنَا إِن نَّسِينَا أَوْ أَخْطَأْنَا ۚ

**'ரட்சகா! எங்களின் மறதியின் காரணமாக நிகழ்ந்துவிட்ட குற்றங்களுக்காக எங்களை நீ பிடித்துவிடாதே'**-அல்குர்ஆன் சூறா பகரா வசனம் 286.

**'ஏ! தேவ்(இறைவா) எங்களில் எங்களை அறியாத நிலையில் நிகழும் குற்றங்களுக்காக எங்களை நீ விட்டுவிடாதே'** – ரிக்வேதம் 5-89-7.

## அத்தியாயம் ஆறு

**அகிலத்தின் துவக்கம் அஹ்மத் நபி**

**அஹ்மதின் ரகசியம்.**

நாம் இந்த நூலில் பல இடங்களில் இந்து சமூக மக்கள் தங்களின் மார்க்கத்துடைய அடிப்படையான எதார்த்தத்திற்குரிய உண்மைகளை அவதராம் மற்றும் வேதத்துடைய பூஜையில் தொலைத்துவிட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளோம். இதில் ஒரு அடிப்படையான உண்மை என்னவெனில், எதை இச்சமூக மக்கள் தெரிந்து வைத்திருந்தார்களோ இன்னும் எதைக் கொண்டு அவர்களின் அவதாரத்திற்குரிய கொள்கை என்பது அடித்தளமிடப்பட்டிருந்ததோ அது '**ஹகீகத்தே முஹம்மதிய்யா**' (அஹமதின் அஹமியமா)கும். அதை இவர்கள் விளங்கிக் கொள்ளும்முன் ஹகீகத்தே அஹ்மதீ என்பது என்ன என்பதை முதிலில் தெரிந்து கொள்ள வேண்டும். இதுபற்றி முஸ்லிம் அறிஞர்களும் கூறியுள்ளனர். இதனோடு ஞானவான்களும் தொடர்பு கொண்டிருந்தனர். அந்த ஹகீகத்தே அஹ்மதீ என்பது எப்படிப்பட் ஓர் அடிப்படையான அஸல் வித்து என்றால் அதை இந்த 21ம் நூற்றாண்டிலாவது அவசியம் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இல்லையேல் இந்துச் சமூக மக்களின் அவதாரக் கொள்கையை நம்மால் புரிந்து கொள்ளவோ அல்லது அதுபற்றிய விளக்கத்ததை இந்துச் சகோதரர்களுக்குத் தந்து அவர்களுடைய கண்களை மறைத்துக் கொண்டுள்ள திரையை நம்மால் நீக்கவோ அறவே முடியாது. இதுபற்றி முஸ்லிம் வேதமான குர்ஆனில்...

وَإِذْ قَالَ عِيسَى ابْنُ مَرْيَمَ يَا بَنِي إِسْرَائِيلَ إِنِّي رَسُولُ اللَّهِ إِلَيْكُم مُّصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيَّ مِنَ التَّوْرَاةِ وَمُبَشِّرًا بِرَسُولٍ يَأْتِي مِن بَعْدِي

اسْمُهُ أَحْمَدُ ۖ فَلَمَّا جَاءَهُم بِالْبَيِّنَاتِ قَالُوا هَٰذَا سِحْرٌ مُّبِينٌ

'**இன்னும் எண்ணிப் பாருங்கள். மர்யமுடைய மைந்தர் ஈஸா கூறினார் ஓ! பணீ இஸ்ரவேலர்களே! நான் உங்களுக்கு இறைவனுடைய திருத்தூதராகவும், எனக்கு முந்தைய தௌராத் வேதத்தைத உண்மையாக்கி வைப்பவனாகவும் ஒரு ரஸூலைக் குறித்து சுபச் செய்தி தருபவனாகவும் வந்திருக்கிறேன். அவர் எனக்குப்பின்' வருவார். அவர் பெயர் அஹ்மதாகும். அதன்பின் அவர் தெளிவான அத்தாட்சிகளைக்கொண்டு வந்தபோது அவர்கள் இது தெளிவான சூனியம் என்றனர்.**' –அல்குர்ஆன் சூறா ஸஃப் வசனம் 6.

மேற்கண்ட வசனத்தில் ஈஸா நபியவர்கள் வருகைதர இருக்கும் ஒரு ரஸூலை (இறைத்தூதரை) குறித்து சுபச் செய்தி தந்ததோடு அவருடைய பெயர் அஹ்மத் என்றும் சொல்லித் தருகிறார். மேலும் இவ்வசனத்துடைய விளக்கத்தில் வேதவிரிவுரையாளர்கள் மிக விரிவாக விளக்கமும் தந்துள்ளனர். அதாவது கிறிஸ்துவ வேதமான இன்ஜீலில் அஹ்மத் என்னும் பெயரில் ஒரு திருத்தூதரின் வருகையைப் பற்றிக் கூறப்பட்டிருந்தது என்றும், கிறிஸ்துவர்கள் அதனுடைய அர்த்தத்தை மாற்றி திரித்துக் கூறுகின்றனர் என்றும் சொல்கின்றனர். ஆனால் இங்கே அவ்விரிவுரையாளர்கள் 'முஹம்மத் நபியின்' பெயர் '**அஹ்மத்**' என எப்படியிருந்து என்பது பற்றிய விளக்கம் எதையும் தராது '**முஹம்மத் நபியவர்கள் அஹ்மத் என்பதும் எனது பெயர்தான்**' என்று கூறிய ஒரேயொரு நபிமொழியை மட்டும்

தங்களின் கூற்றுக்கு ஆதாரமாகத் தருகின்றனர். ஆம். முஹம்மத் நபியின் பெயர்களில் அஹ்மத் என்பதும் ஒன்றென்பதை நாம் நம்புகிறோம். ஆனால் அந்த அஹ்மத் என்னும் பெயர் எப்போது இருந்தது? எங்கே இருந்தது? எப்படி இருந்தது? என்பவைகளெல்லாம் விளக்கப்பட வேண்டாமா?

இன்னும் முஹம்மத் நபியுடைய பொன்மொழியின் மீது பரிபூரணமான நம்பிக்கையுண்டு. ஆனால் அந்த நபிமொழியைக் கொண்டு அஹ்மத் என்பதன் ஹகீகத் (எதார்த்தம்) என்ன? என்பதை நம்மால் விளங்கிக் கொள்ள முடியாதபோது, அதைப் பற்றி கேட்போருக்கு நம்மால் எப்படி பதிலளிக்க முடியும்? பின்னும் கிறிஸ்துவர்கள் என்ன கூறுகிறார்கள் எனில்,செவிகளின் வேதத்தில் எங்களின் நபியைக் கொண்டு சொல்லப்பட்ட அஹ்மத் என்னும் பெயரை முஹம்மத் பார்த்துவிட்டு தன்னுடைய வேதத்திலும் அப்பெயரை அவர் இணைத்துக் கொண்டார் என்று கூறுகின்றனர். நவூதுபில்லாஹ். அத்துடன் அவர்தான் அஹ்மத் என்று மற்றவர்களிடமும் சொல்லத்துவங்கினார். ஆனால் அவர் பெயர் முஹம்மத் மட்டும்தான் என ஒரு பெரும் பழியொன்றை சுமத்துகின்றனர். இதுபற்றி ஒரு கிறிஸ்துவ நூலாசிரியர் கூறுவதைப் பாருங்கள்:...

**'குழந்தைக்கு முஹம்மத் என பெயரிடப்பட்டது. இப்பெயர் அரபியரிடையே மிகவும் குறைவாக இருந்தது. ஆனாலும் இருந்தது. இப்பதத்தின் மூலம் 'ஹம்த்' என்பதாகும். முஹம்மத் என்னும் பெயருக்கு 'புகழப்பட்டவர்' என்பது அர்த்தமாகும். இனி ஹம்த் என்பதிலிருந்து தான் அஹ்மத் என்னும் பதம் தோன்றுகிறது. இன்ஜீல் வேதத்தின் சில அரபி மொழிபெயர்ப்பு நூலில் 'பேராக்லீட்' (PARACLETE) என்னும் சுர்யாணி மொழியின் வார்த்தைக்கு அஹ்மத் எனத் தவறாக அர்த்தம் கொடுக்கப்பட்டுள்ளது. இன்னும் இப்பெயர் முஸ்லிம்களிடையே இருந்த யூத, கிறிஸ்துவர் மத்தியில் பேச்சு வழக்கில் அங்கீகாரரம் பெற்று விட்டது. ஏனெனில் அவர்கள் சொல்லிக் கொண்டிருந்ததற்கு ஒப்ப அப்பெயரில் அவர்களின் வேதங்களிலும் அத்திருத்தூதர் பற்றிய முன்னறிவிப்பு வந்தது.'**

-நூல்: லைப் ஆப முஹம்மத் லண்டன் 1871 பக்கம் 5.

**'மௌண்டன் என்பார் கூறுவதைக் கொண்டு நமக்கு விளங்கும் விஷயம் என்னவெனில், 'பேராக்லீட்டின் வருகை பற்றிய வாக்கு' என்பதைக் குறிக்கும் நிறைய விஷயங்களை மாற்றிப் புரட்டுவதற்குரிய வாய்ப்பு நிறையவே உண்டு. அவ்வாறு மாற்றப்பட்ட ஒரு வசனம் முஹம்மதின் முன்பு பேசப்பட்டதை வைத்து முஸ்லிம் வேதமான குர்ஆனில் காணப்படும் வசனம் அமைக்கப்பட்டது.'** –நூல்: லைப் ஆப் முஹம்மத், லண்டன 1871, பக்கம் 164.

வரலாற்று நூல்களில் முஹம்மத் நபியின் பெயர் அஹ்மத் என்பதற்குரிய ஆதாரம் எங்கும் கிடைக்கக் காணோம். இது நபியவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்ட பின்னரே நபியவர்கள், நான்தான் அஹ்மத் எனக் கூற அஹ்மத் என்னும் பெயர் பேசப்படலாயிற்று. இன்னும் முஹம்மத் நபியவர்களின் பாட்டனார் அப்துல் முத்தலிப் என்பார்தான் முஹம்மத்

நபியவர்களுக்கு முஹம்மத் என்பதாக பெயரிட்டார். சிறுவயதிலிருந்தே மக்காவாசிகள் எல்லோருமே நபியவர்களை முஹம்மத் எனரைக் கொண்டுதான் அழைத்து வந்தனர். அத்துடன் ஸாதிக், அமீன் என்னும் பெயர்களாலும் அவர்கள் அழைக்கப்பட்டனர். ஆனால்; அஹ்மத் என்னும் பெயர் எங்குமே பேசப்படவில்லை. அத்துடன் அவர்களுடைய தோழர்கள் எல்லோருமே அவர்களை முஹம்மத் என்னும் பெயரில்தான் தெரிந்து வைத்திருந்தனர்.

முதன்முதல் அஹ்மத் என்பதும் தான்தான் என்பதை முஹம்மத் நபியவர்கள் தான் தமது வாயால் தெரிவித்தனர். அப்படியானால் அஹ்மத் என்னும் அப்பெயரின் அகமியத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமில்லையா? இன்னும் பூமியில் அவர்களுடைய பெயர் முஹம்மத் என்றுதானிருக்கும் என்பதை நாம் தெரிந்தி;ருந்தும் எதற்காக தன்னுடைய சமூகத்தாரிடம் ஈஸா நபியவர்கள் முஹம்மத் நபியவர்களின் பெயரை அஹ்மது என்று சொன்னார்கள்? மேலும் அவ்வாறு சொல்வதன் மூலம் கருத்து மோதல் ஏற்படும் என்பதும், மறுப்புக்குரிய வாயில்கள் திறக்கப்படும் என்பதும் அவர்களுக்குத் தெரியாதா? இன்னும் பின்னால் வரப்போகும் கூட்டத்தார் அவர்களை நோக்கி அவர்களோடு இணைய வேண்டும் என்றிருக்கும்போது முஹம்மத் என்று சொல்லாமல் அஹ்மத் என்று ஏன் சொன்னார்கள்? அவ்வாறாயின் நபியவர்களின் அஹ்மத் என்பதற்குரிய அகமியம் முஹம்மத் என்னும் பெயருக்கு மாற்றமானதா? அல்லது வேறானதா?

'**அஹ்மத்**' உண்மையில் இப்பெயர் நபியவர்களுக்கு ஆன்ம உலகில் வைக்கப்பட்டிருந்த பெயராகும். இப்பூலோக ஜடத்துவ உலகிற்கு அனுப்பப்படுமுன் மனித ஜீவராசிகள் அனைத்தும் படைக்கப்படும் முன், ஆதம் நபி இப்பூவுலகுக்கு வருகை தரும் முன்னும் நாம் இருந்தோம். ஆம். ஆன்ம உலகில் நமது எல்லோருடைய ஆன்மாக்களும் படைக்கப்பட்டிருந்தன. அதன்பின்பே நமக்கொரு சரீரத்தைக் கொடுத்து இவ்வுலகுக்கு நாம் அனுப்பப்பட்டோம். இவ்வாறே இறுதிநாள்வரை பிறக்கப்போகும் மனிதர்கள் அனைவருடைய ஆன்மாக்களனைத்தும் இப்போதும் இருக்கின்றன. அந்த ஆன்ம உலகில்தான் இறைவன் நம்மனைவரிடமும் வாக்குறுதியும் வாங்கினான். இதைப் பற்றி முஸ்லிம் வேதமான குர்ஆனில்....

وَإِذْ أَخَذَ رَبُّكَ مِن بَنِي آدَمَ مِن ظُهُورِهِمْ ذُرِّيَّتَهُمْ وَأَشْهَدَهُمْ عَلَىٰ أَنفُسِهِمْ أَلَسْتُ بِرَبِّكُمْ ۖ قَالُوا بَلَىٰ ۛ شَهِدْنَا ۛ أَن تَقُولُوا يَوْمَ
الْقِيَامَةِ إِنَّا كُنَّا عَنْ هَٰذَا غَافِلِينَ أَوْ تَقُولُوا إِنَّمَا أَشْرَكَ آبَاؤُنَا مِن قَبْلُ وَكُنَّا ذُرِّيَّةً مِّن بَعْدِهِمْ ۖ أَفَتُهْلِكُنَا بِمَا فَعَلَ الْمُبْطِلُونَ

**'இன்னும் திடனாக நாங்கள் இதைவிட்டு மறந்தவர்களாக இருந்தோம். என இறுதிநாளில் நீங்கள் சொல்லாதிருப்பதற்காக ஆதமுடைய மக்களில் நின்றும் அவர்களுடைய முதுகுகளிலிருந்து அவர்களின் சந்ததியினரை உமது ரட்சகன் எடுத்து, உங்களின் ரட்சகன் நானில்லையா? என்று அவர்களின் ஆன்மா மீது அவர்களை சாட்சி சொல்ல வைத்த நேரத்தை (நபியே! அவர்களுக்கு நீர் நினைவூட்டுவீராக!) மெய்தான். நாங்கள் சாட்சி பகர்ந்தோம் என்று சுறினர்.**

**அன்றி (எங்களுக்கு) முன் இணை வைத்ததெல்லாம் எங்களின் தந்தையர்கள்தாம். இன்னும் அவர்களுக்குப் பின்னுள்ள சந்ததியினராக நாங்கள் இருந்தோம். ஆகவே (அவ்)வீணர்கள் செய்ததைக் கொண்டு எங்களை நீ அழிக்கிறாயா? என்று நீங்கள் கூறாதிருப்பதற்காக (நாம்உங்களுடைய) தந்தையர்களின் முதுகுகளிலிருந்து வாக்குறுதி வாங்கினோம்;'** –அல்குர்ஆன் சூறா அஃராஃப் வசனம் 172, 173.

இவ்வசனத்தின் விரிவுரையில் ஷியா, சுன்னி ((முஸ்லிம் மதத்திலுள்ள) இருபிரிவாரும் ஒருங்கிணைந்த நிலையில், இவ்வாக்குறுதி சரீரமம் படைக்கப்படுவதற்கு முன்னரே எல்லா ஆதமுடைய ஆன்மாக்களிடமும் வாங்கப்பட்ட ஒன்றெனக் கூறுகின்றனர். உதாரணமாக ஹாபிழ் இப்னு கையிம் என்பார் தனது '**அர்ரூஹ்**' என்னும் நூலில்...

**'இவ்வாக்குறுதி ஆன்மாக்களிடம் வாங்கப்பட்டது. காரணம் அப்போது சரீரங்கள் எங்கே இருந்தன.?'** –நூல்: ரூஹோன்ஸே மிலியே பக்கம் 249

அடுத்து கஃப் கர்ழீ என்பார் இவ்வசனத்திற்கு விரிவுரை செய்யும்போது...

**'எல்லா ஆன்மாக்களிடமும் அவைகளின் சரீரங்கள் படைக்கப்படுமுன் இறைவன் மீது நம்பிக்கை கொள்வதற்காகவும் அவனை அறிந்து கொள்வதற்காகவும் வாக்குறுதி செய்தன என்று கூறுகிறார்.'**

-நூல்: ரூஹோன்ஸே மிலியே பக்கம் 253.

இதன்றி இந்நூலில் விரிவாக விளக்கப்படும் வகையில் முஸ்லிம் வேதமான குர்ஆனில் இறைவன்....

وَلَقَدْ خَلَقْنَاكُمْ ثُمَّ صَوَّرْنَاكُمْ

**'ஆகவே இன்னும் உங்களை நாம்தான் படைத்தோம். பின்னர் உருவங்களை சமைத்தோம்.'** –அல்குர்ஆன் சூறா அஃராஃப், வசனம் 11

**என்று 'ஸும்ம' (பின்னர்) என்னும் வாக்கியத்தைக் கொண்டு வாக்கியத்தின் தொடர்ச்சியையும், தாமதத்தையும் இவ்வசனம் குறிக்கின்றது. அத்துடன் படைத்தோம் என்பதற்கு ஆன்மாக்களை படைத்தோம் என்பது கருத்தாகும்.'**

-நூல்: ரூஹோன்ஸே மிலியே பக்கம் 249.

ஆன்ம உலகில் எங்கே வைத்து நாம் அனைவரும் இறைவனிடம் வாக்குறுதி செய்து கொடுத்திருந்தோமோ அங்கே ரிஸாலத் (திருத்தூதுவத்)தின் ஆட்சியும் இருந்தது. அதேநேரம் அந்த ஆன்ம உலகில் ஒரே ஒரு ரஸூல் (திருத்தூதர்) மட்டும்தான் இருந்தார். அவர்தான் முஹம்மத் நபியாகும். அங்கே இறைவனின் திருமுன், வானவர்களின் முன் முஹம்மத் நபியவர்களின் பெயர் அஹ்மத் என்பதாகத்தான் அமைந்திருந்தது. அத்துடன் அஹ்மத் மற்றும்



www.sufimanzil.org

முஹம்மத் என்பது ஒரே மனிதருடைய இரு வேறு ஹகீகத்தா(அகமியமா)கும். இதுதான் எல்லா ஞானிகளுடைய ஒட்டுமொத்தமான கருத்தும் கொள்கையும் ஆகும்.

மேலும் அஹ்மத் என்பது முஹம்மத் நபியவர்களின் இன்னொரு பெயர் ஆகும். இப்பெயர் விண்ணுலகத்தாரிடையே மிகவும் பிரபலம். இன்னும் இப்பெயருக்கு இறைவனுடன் மிகவும் நெருக்கமான தொடர்ப உண்டு. இவ்வாறே முஹம்மத் என்னும் பெயர் ஒரு படித்தரத்தில் இறைவனுக்கு மிகவும் அருகாமையில் நெருங்கிய தொடர்பு உண்டு. முஜத்தித் அல்பதானி என்னும் ஞானி கூறுகிறார்...

**'அவர்களின் பெயர் விண்ணுலகில் வானவர்களிடையே அஹ்மத் என்பதுதான் பிரபலம். இவ்வாறே பூலோகவாதிகளிடையே முஹம்மத் என்பதுதான் பிரபலமாகும்.'** நூல்: மக்தூபாத்தே ரப்பானி பாகம் 2, பக்கம் 94.

**'இப்பூமியில் முஹம்மத் நபியவர்களுடைய பெயர் அஹ்மத் என்பதாக எங்குமே ஆதாரப்படுத்தப்படவில்லை. இவ்வாறிருக்க முஸ்லிம் வேதமான குர்ஆனில் ஈஸா நபியவர்கள் அஹ்மதின் வருகையைப் பற்றி முன்னறிவிப்புத் தருகின்றனர். அவர்தான் இறுதித் தூதர். இது முந்தைய வேதங்களிலும் அறிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் பல்வேறு வகையான அடையாளங்களைக் கொண்டும் இரு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் இங்கே எல்லா சமூகக் கூட்டத்தாரையும் நோக்கி இறைத்தூதர் யாரெனில் ஆன்ம உலகில் எந்த அஹ்மத் முதல் திருத்தூதராக இருந்தாரோ அவர்தான் என்பதை நினைவூட்ட வேண்டிய நோக்கமிருந்ததால் தான் உலகிலுள்ள எல்லா மனித ஆன்மாக்களின் ரஸூலை(திருத்தூதரை) குறிக்கும் வகையில் ஈஸா நபி பனீ இஸ்ரவேலர்களை நோக்கி, என்னுடையவும் உங்களுடையவும் ஏன் எல்லா மனிதர்களுடையவும் திருத்தூதராக வானத்தில் அஹ்மத் என்னும் பெயரில் இருப்பவர்தான் எனக்குப் பிறகு இவ்வுலகில் தேகத்துடன் கூடிய இறுதித்தூதராக வரப்போகிறார் என்று கூறினார்.'**

-நூல்: ஸீரத்தே முஹம்மதிய்யா, பக்கம் 170.

**ஹகீகத்தே அஹ்மதீ எல்லா வேதங்களிலும்**

தௌராத் மற்றும் இன்ஜீல் போன்ற வேதங்களில் கூறப்பட்டுள்ள ஹகீகத்தே அஹ்மதியைப் பற்றி முஸ்லிம் வேத விரிவுரையாளர்கள் பலர் மிக நீண்ட விழளக்கங்களை தந்துள்ளனர். ஆதலால் அவைகளை இங்கே நாம் குறிப்பிடாது ஹகீகத்தே அஹ்மதியைப் பற்றிய சில குறிப்புகளை தருகிறோம். பைபிள் தவிரவுள்ள வேதங்களில் 'அஹ்மத்' பெயரைக் குறித்துள்ள விபரங்கள் கூறப்பட்டுள்ளன. அவையாவன...

वेदाहमेत पुरुष महान्तमादित्यवर्ण तमसः प्रस्तात......यनाय

**'அனைத்து கல்வியறிவின் ஊற்றுக் கண்ணான 'அஹ்மத்' ஒரு மகத்தான மனிதராகும். இவர் ஒரு சூரியப் பிரகாசத்தை போல இருளை விரட்டக் கூடியவர். அந்த ஸிராஜுல்**

**முனீரை (பிரகாசமிக்க பேரொளியை)அறிந்து கொண்ட பின்னரே மரணத்தை வெல்ல வேறு வழி கிடையாது.'**

-நூல்: யஜூர் வேதம் 18-31.

अहमिद्धि पितुष्परि मेधामृतस्य जग्रभ । अहं सूर्य इवाजनि

**'அஹ்மத் தான் முதன் முதலில் பலி (குர்பானி) கொடுத்தார். அது சூரியனைப் போல் ஆகிவிட்டது.'** –நூல்: ரிக்வேதம் 1079-6-8

இதில் முஸ்லிம் வேதமான குர்ஆன் முஹம்மத் நபியை '**சிராஜுன் முனீரா**' எனக் குறிப்பிடுவதை கவனிக்க வேண்டும்.

अयमिद् वै प्रतीवर्त ओजस्वान् सजयो मणि: ॥
प्रजां धनं च रक्षतु परिपाण: सुमङ्गल: ॥

**'அஹ்மத் யாரெனில் அவர் திரும்பினால் மின்னொளி வீசும். பலமிக்க வைரத்தைப் போல தெரிகிறவர். படைப்புக்களையும் செல்வங்களையும் எல்லா தரப்பிலிருந்தும் பாதுகாக்கிறார். இன்னும் மேலான ஈடேத்திற்குரிய நட்சத்திரமாகவும் ஜொலிக்கிறார்.'** இதே போல அதர்வண வேதம் 14-126-30 லும் காணப்படுகிறது.

மேற்கண்ட நான்கு மந்திரங்களின் மொழியாக்கத்திலும்; தவறு நேர்ந்துள்ளது. உதாரணமாக முதல் மந்திரத்தில் 'அஹம்மத்;' என்று எழுதப்பட்டுள்ளது. சமஸ்கிருதத்தில் அரபி மொழியிலுள்ள '**தால்**' என்பதற்குரிய இடத்தில் பெரும்பாலும் '**தே**' என்றே குறிக்கப்பட்டுள்ளது. இப்பெயரை இரண்டாகப் பிரித்து, அதாவது '**அஹம் + அத்** என அர்த்தம் செய்யப்படுகிறது. அதாவது 'அஹம்' என்பதற்கு '**நான்**' என்றும், '**அத்**' என்பதற்கு '**அவருடைய**' என்றும் அர்த்தம் செய்வதுதான் சரியான அர்த்தமாகும். ஆனால் இங்கே அஸல் அர்த்தம் சிதைக்கப்பட்டுள்ளது. இவ்வாறே மற்ற இரு மந்திரங்களிலும் இச்சிதைவு காணப்படுகிறது.

அடுத்து புத்த மதத்திலும் அஹ்மத் என்னும் பெயருக்குரிய ஹகீக(அகமிய)த்தை பாருங்கள். அதாவது புத்தமதத்தில் '**புத்தர்**' என்னும் பதம் நபிமார்களுக்கு வழங்கப்படும் ஒரு பதமாகும். இதை ஆதாரப்படுத்தும் வகையில் புத்தர் தமது சீடரான நந்தாவை நோக்கி '**நந்தா நான் முதல் புத்தருமல்ல. கடைசி புத்தருமல்ல**' என்று கூறுகிறார். நூல்: Gospels of Buddha by Carus, Page 217

முதல் புத்தரைப் பற்றி டாக்டர் ராதா கிருஷ்ணன் தனது நூலில் இவ்வாறு கூறுகிறார்...

**'ஜப்பானிலுள்ள முதல் புத்தரின் பெயர் 'அமிதாப்' என்று காணப்படுகிறது.'** –நூல்: கௌதம புத்தர், பக்கம் 150.

**'இன்னும் ஜப்பானில் அப்பெயதை 'அய்மித்'** (யுஆஜனு) **என்று உச்சரிக்கின்றனர். அதாவது அஹ்மத்** '–நூல்: ரிகவரி ஆப் பெய்த், பக்கம் 154.

'**அமிதாப்**' என்னும் இப்பதம் **அமித்** மற்றும் **ஆபா** என்னும் துண்டுச் சொற்களின் திரிபாகும். அமித் (EMETH) அஹ்மத் என்னும் மூலத்திலிருந்து சிதைந்து விட்ட ஒரு உச்சரிப்பாகும். இனி ஆபா என்பதன் அர்த்தம் ஜோதி என்பதாகும். இதைக் கொண்டு அமிதாப் என்பதற்கு '**அஹ்மதின் ஜோதி**' என்றாகிறது. ஆக புத்தமதத்திலும் முதல் திருத்தூதரின் பெயர் 'அஹ்மதின் ஜோதி' என்றிருந்தது தொலைக்கப்பட்டு போய்விட்டது. இவைதான் முந்தைய வேதங்களில் காணப்படும் குறிப்புகளாகும். இப்போது நபிமொழி என்ன கூறுகிறது என்பதைப் பாருங்கள்.

**'அபூஹுறைறா என்னும் நபித்தோழர் கூறுகிறார், ஒருநாள் நபித்தோழர்கள் நபிகளாரை நோக்கி, 'இறைத்தூதரே! உங்களின் மீது நபித்துவம் எப்போதிருந்து துவங்கிற்று எனக் கேட்க, அதற்கு நபியவர்கள், ஆதம் ஆன்மாவுக்கும் சரீரத்திற்கும் மத்தியிலிருக்கும்போது என்றனர்'.**

-நூல்: திர்மிதீ, பாடம் ஸையிதுல் முர்ஸலீன்.

இன்னும் திர்மதி இந்த நபிமொழியை அழகானது (ஹஸன்) என்றும் கூறுகிறார்.

**'அர்பாழ் பின் ஸாரியா என்னும் நபித்தோழர் நபியவர்கள் கூறியதாக அறிவிக்கிறார். நிச்சயமாக நான் இறைவனின் திருமுன் நபியாக இருந்தேன். அப்போது ஆதம் மண்ணினாலான சரீரத்தில் இருந்தார். (அதாவது இன்னும் உயிர் கொடுக்கப்பட்டிருக்கவில்லை) ஹாகிம் என்பார் இந்த நபிமொழியை உண்மையான வரிசைத் தொடர் (ஸஹீஹுல் அஸ்னாத்) என்றும் கூறுகிறார்.'**

-நூல்: பைஹகீ, அஹ்மத், ஹாகிம்.

**'இதுபோன்ற அன்ஸபீ என்னும் நபித்தோழர் கூறுகிறார், நான் நபியவர்களை நோக்கி, நீங்கள் எப்போது நபியாக இருந்தீர்கள் என்று கேட்டேன். அதற்கு நபியவர்கள், ஆதம் ஆன்மாவுக்கும் சரீரத்திற்கும் இடையிலிருந்த போதே நான் நபியாக இருந்தேன் என்று கூறினர். இதை இமாம் புகாரி என்பார் தமது தாரீகிலும், அபூநயீம் என்பார் தமது ஹுல்யாவிலும் அறிவிக்கின்றனர். அதேநேரம் ஹாகிம் இந்த நபிமொழியை உண்மையான(ஸஹீஹான)தென்று கூறுகிறார்.'** நூல்: ஸீரத்தே முஹம்மதிய்யா, பக்கம் 8

**பகுத்தறிவின் ஆதாரம்.**

முஹம்மத் நபியவர்கள் ஆன்ம லோகத்தில் நபியாக இருந்தார்கள் என்பதற்குரிய அறிவுப்பூர்வமான ஆதாரமானது, இவ்விஷயத்தில் எல்லா வேதவிரிவுரையாளர்களுமே கருத்தொருமித்துள்ளனர். ஆதம் நபியவர்கள் சுவர்க்கத்தில் இருந்தபோது நபியாக இருக்கவில்லை. மாறாக பூமிக்கு அவர்கள் அனுப்பப்பட்ட பின்னரே நபித்துவம் பெற்றார்கள்.

எவ்வாறெனில் இதைப் பற்றி முஸ்லிம்வேதமான குர்ஆனில் இறைவன் வானவர்களை நோக்கி...

**'திடனாக பூமியில் எனது பிரதிநிதியை நான் வெளிப்படுத்தப் போகிறேன் என்று கூறினான்'** –அல்குர்ஆன் சூ_றா பகரா வசனம் 30.

وَعَلَّمَ آدَمَ الْأَسْمَاءَ كُلَّهَا

**'இன்னும் ஆதமுக்கு நாம் எல்லாத் திருநாமங்களையும் கற்றுக் கொடுத்தோம். பின்னர் அதை அவர் வானவர்கள் முன் வெளிப்படுத்தினார்.'** –அல்குர்ஆன் சூறா பகரா 31.

இங்கே தானாகவே கேள்வியொன்று எழுகிறது. அது, ஆதமுக்கு இறைவன் கற்பித்த அத்திருநாமங்களை இறைவனே நேரடியாகக் கற்பித்தானா? அல்லது ஜிப்ரீலைக் கொண்டோ வேறொரு வானவரைக் கொண்டோ கற்பித்தானா? என்பதுதான். இருவகையாகவும் இந்தவஹீ இறங்கிற்று எனக் கூறப்பட்டால் வஹீ எப்போது இறங்கிற்றோ அப்போதே ஆதம் நபி உலகிலும் நபியாக இருந்தார் எனக் கூற வேண்டியது வரும். ஆனால் அது உண்மையல்ல.

இனி மற்ற அறிவிப்புகளைக் கொண்டு: பார்க்கும் போது ஒரு அறிவிப்பில் முஹம்மத் நபியவர்கள் கூறுகின்றனர்...

**'எல்லாத் திருநாமங்களும் ஒன்று எனக்கோ அல்லது ஆதமுக்கோ கற்பிக்கப்பட்டது.' என்**றும்,

தைலமி என்பார் அபூரா**:**பி என்பாரக் கொண்டு நபியவர்கள் சொன்னதாக அறிவிக்கிறார், **'எனக்கு எனது சமூகத்தாரை மண் மற்றும் தண்ணீரில் காட்டப்பட்டது. இன்னும் எனக்கு எல்லா திருநாமங்களுக்கும் உரிய கல்வி(ஞானம்) கொடுக்கப்பட்டது. அதாவது ஆதமுக்கு கொடுக்கப்பட்டிருந்ததைப் போல'**

-நூல்: தப்ஸீர் பத்ஹுல் கதீர், பாகம் 1 பக்கம் 52.

அதாவது இருவருக்கு மட்டுமே இந்த ஞானம் வழங்கப்பட்டிருந்தது. அதில் ஒருவரான ஆதம் அப்போது நபியாக இல்லை. ஆனால் வானுலகில் நபியாக அப்போதும் இருந்த அஹ்மதின் வாயிலாக ஆதமுக்கு அந்த ஞானம் வழங்கப்பட்டிருக்கலாம் அல்லவா! ஆதலால் முஹம்மத் நபியவர்கள் வானுலகில் அஹ்மத் என்னும் பெயரில் ரஸூலாக (திருத்தூதராக) இருந்தனர் என்பதற்கு இதோர் அறிவார்த்தமான ஆதாரமாகும்.

**விஞ்ஞானத்தின் உதவி தேவை**

இப்பூவுலகில் மனித இனம் தோன்றி ஆயிரக்கணக்கான ஆண்டுகள் உருண்டோடி விட்டன. எண்ணற்ற நாடு நகரங்கள் மற்றும் மனித வாழ்க்கையின் படிப்பினைக்குரிய எத்தனையோ நிகழ்ச்சிகளை இழுத்துக் கொண்டு காலம் வெகுவேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது. அதன்பின்



www.sufimanzil.org

இறுதியில் இந்த அதிசயங்கள் எல்லாம் திடீரென காணாமல் போய் ஒரு சாஸ்வதமான வாழ்க்கை துவங்கும். கால ஓட்டத்தின் கூடவே மனித அறிவும் வளர்ச்சி அடைந்து கொண்டே வந்து உச்சநிலையை எட்டியபின் அந்த இயற்கையான அறிவும் இறுதியில் அழிந்து போய்விடும்.

இன்னும் இப்போதிருந்து 1400 ஆண்டுகளுக்கு முன் மனித அறிவு குழந்தைப் பருவத்திலிருந்து வெளிப்பட்டு பக்குவத்திற்குரிய காலத்தை எட்டியபோது இறைவன் தன் இறுதித் தூதரை இவ்வுலகில் அக்கடைசி வேதத்துடன் அனுப்பி வைத்தான். அதில் பூமியின் இறுதிநாள்வரை நேர்ந்திடும் எல்லாப் பிரச்சனைகளுக்குமுரிய தீர்வு இருந்தது. குர்ஆன் முஹம்மத் நபியின் மிகப்பெரும் அற்புதமாகும். இன்னும் அதிலுள்ள அதிசயங்கள் உலகம் உள்ளவரை வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். இதைப் பற்றி இறைவன் கூறுவதைப் பாருங்கள்....

سَنُرِيهِمْ آيَاتِنَا فِي الْآفَاقِ وَفِي أَنفُسِهِمْ حَتَّىٰ يَتَبَيَّنَ لَهُمْ أَنَّهُ الْحَقُّ ۗ أَوَلَمْ يَكْفِ بِرَبِّكَ أَنَّهُ عَلَىٰ كُلِّ شَيْءٍ شَهِيدٌ

**'நாம் வெகுவிரைவில் அவர்களுக்கு நமது அத்தாட்சிகளை (இப்) பூமியிலேயே காட்டுவோம். இன்னும் அவர்களுடைய ஆன்மாவிலும் எதுவரை எனில் இதுதான் சத்தியம் என்பது அவர்களில் வெளியாகிவிடும்'.**

-அல்குர்ஆன சூறா ஹாமீம் ஸஜ்தா வசனம் 53.

மனிதஅறிவு ஒருபோதும் இறைவனுடைய அறிவை வளைக்க முடியாது. காரணம் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் முடக்கப்பட்டுள்ள இந்த அறிவு எவ்வாறு இறைவனுடைய அறிவை வளைக்க முடியும்? இதற்குரிய மிகப்பெரும் உதாரணம் நோபல் பரிசு பெற்ற டாக்டர் அப்துஸ்ஸலாம் என்னும் விஞ்ஞானியாவார். அவர் குர்ஆனை பலமுனைகளிலும் ஆராய்ந்த பின் இப்பிரசஞ்சத்தில் பல சக்திகள் (FORCES) என்பதே கிடையாதென்றும், ஒரேயொரு அடிப்படை சக்திதான் இப்பூமியை இயக்கிக் கொண்டிருக்கிறது என்றும் கூறுகிறார். அதுதான் பல்வேறு தோற்றங்களாக காட்சியளித்துக் கொண்டிருக்கிறது என்றும் கூறுகிறார்;. ஆனால் அதற்கு மாறாக சிலர் இன்றுவரை அதனுடைய நுணுக்கத்தை கண்டுபிடிக்க முயன்று கொண்டிருக்கின்றனர். அதாவது மனிதன் இப்பூமியில் எப்படித் தோன்றினான்? டார்வினின் பார்வையில் குரங்கின் வளர்ச்சிதான் மனிதனின் தோற்றம். இதுதான் இன்றுவரை முடிவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் இதுவ¡ இதை வேறு யாரும் மறுக்காததால் விஞ்ஞானமும் இதைத்தான் சரியென்று நம்புகிறது. மனிதஅறிவு தனது சக்தி முழுவதையும் பயன்படுத்திய பின்பும் கூட டார்வினின் கூற்றுத்தான் சரியானதென்பதை நிரூபிக்கவும் முடியவில்ழல. இனியும் முடியாது. மனித அறிவு எங்கே விழிபிதுங்கிப் போய் நிற்கிறதோ அங்கே அது உள்ளத்தின் ஆழத்தில் மறைந்துள்ளவற்றின் மற்றவையும் அறிந்து கொள்வோனின் பேச்சைக் கேட்க முயற்சிக்க வேண்டும். அவன் கூறுவதைப் பாருங்கள்...

أَفَلَا يَتَدَبَّرُونَ الْقُرْآنَ أَمْ عَلَىٰ قُلُوبٍ أَقْفَالُهَا

**'என்ன? இவர்கள் குர்ஆனை சிந்திக்க மாட்டார்களா? அன்றி அவர்களுடைய இதயங்கள் பூட்டப்பட்டுள்ளதா?** -அல்குர்ஆன் சூறா முஹம்மத் வசனம் 24.

இனி விஞ்ஞானம் மனிதத் தோற்றம் பற்றியே சிந்திக்கவில்லை என்னும் போது படைப்பு சம்பந்தமான அறிவை அது எப்படி பெற முடியும்? இவ்விஷயத்திலும் அது இருட்டில்தான் தனது கைகால்களை உதறிக் கொண்டிருக்கிறது. உலகின் மிகப்பெரிய ஆங்கில ஏடான ரீடர்ஸ் டைஜஸ்ட்டில் 1977 ஆகஸ்டில் வெளிவந்த கட்டுரையொன்றைப் பாருங்கள்.

**'கடந்த சில ஆண்டுகளாக நமது விஞ்ஞானிகளை மயிர் கூச்செறிய வைக்கும் அதிசயங்கள் வெளிப்படத்துவங்கியுள்ளன. அவைகள் இவ்வகிலத்தை பற்றி விஞ்ஞானம் கொண்டிருந்த முடிவுகளுக்கு அறைகூவல் விடுப்பதாக உள்ளன. இன்னும் இந்த அண்டத்தை குறித்து திகைக்க வைக்கும் ஒரு புதிய தோற்றம் இப்போது உருவாகி வருகிறது.'** –நூல்: ரீடர்ஸ் டைஜஸ்ட் 1977 ஆகஸ்ட்.

**முஹம்மத் நபியே அகிலத்தின் துவக்கம்.**

நபிமொழிகளின் மூலம் முஹம்மத் நபியின் '**தூதுத்துவம்**' ஆதம் நபி ஆன்மாவுக்கும் சரீரத்திற்கும் மத்தியிலிருந்த போதே இருந்ததென்பது மட்டுமின்றி முஹம்மத் நபியின் வெளிப்பாடு இவ்வகிலம் அனைத்திலுமுள்ள வானவர்கள், வானம், பூமி, மற்றும் இதர சிருஷ்டிகள், இறைவனுடைய தெய்வாசன பீடம் என்னும் அர்ஷ் போன்றவை படைக்கப்படுவதற்கு முன்னரே இருந்ததென்றும், இன்னும் அந்த அஹ்மதின் ஜோதியைத்தான் இறைவன் சிருஷ்டிகள் அனைத்தையும் தோற்றுவிப்பதற்குரிய வஸீலாவாக (காரணப் பொருளாக)வும் ஆக்கினான் என்றும் கூறுகின்றன. இதை உறுதிப்படுத்;தும் வகையில் முஜத்தித் அல்பதானி என்பாரின் மூலம் எடுத்துக் காட்டப்படும் சில நபிமொழிகளை உங்களின் பார்வைக்குத் தருகிறோம்....

كُنْتُ كَنْزًا مَّخْفِيًّا فَأَحْبَبْتُ اَنْ أُعْرَفَ فَخَلَقْتُ الْخَلْقَ

மிகவும் பிரபலமான '**குத்ஸி**' என்னும் ஒரு நபிமொழியானது, '**நான் மறைந்த புதையலாக இருந்தேன். அப்போது என்னை அறியப்பட ஆசைப்பட்டேன். அதன்பின் படைப்புக்களை படைத்தேன் என்பதாக இறைவன் கூறினான். முதன்முதல் மறைந்திருந்த அப்புதையலுக்குள்ளிருந்து வெளிப்பட்டது 'நேசமாகும்'. அதுதான் சிருஷ்டிகளின் வெளிப்பாட்டிற்கு காரணமாக அமைந்தது.**' நூல்: மக்தூபாத்தே ரப்பானி பாகம் 2 பக்கம் 160.

இந்த நபிமொழியை இமாம் கஸ்ஸாலி மற்றும் முஹ்யித்தீன் இப்னு அரபி போன்ற ஞானவான்களும், தமது நூல்களில் குறித்துள்ளனர். இன்னொரு '**குத்ஸி**'யான நபிமொழியில் முஹம்மத் நபியவர்களின் மகத்துவம் இவ்வாறு கூறப்படுகின்றனது...

لَوْلَاكَ لَمَا خَلَقْتُ الْاَفْلَاكَ لَمَا اَظْهَرْتُ الرُّبُوْبِ اَتِي

'ஒருவேளை நீர் இல்லையென்றால் வான மண்டலத்தை நான் படைத்திருக்க மாட்டேன். இன்னும் நான் எனது ருபூபிய்யத்தை (ரட்சிப்புத் தன்மையை)யும் வெளிப்படுத்தியிருக்க மாட்டேன்.' –நூல்: மக்தூபாத்தே ரப்பானி பாகம் 2, பக்கம் 93.

குறிப்பு: இதே நபிமொழியை தைலமி என்பார் தனது முஸ்னதுல் பிர்தௌஸ்' என்னும் நூலில் இப்னு அப்பாஸ் என்னும் நபித்தோழரைக் கொண்டு அறிவிக்கப்பட்டதாகக் கூறுகிறார். மேலும் இந்த நபிமொழி 'மவாஹிபுல் லதுன்னியா' என்னும் நூலிலும், ஹாகிம் என்பார் தமது முஸ்தத்ரக் என்னும் நூலிலும், அல்லாமா ஸுப்கி என்பார் தமது ஷிஃபாவுஸ்ஸகாம் என்னும் நூலிலும், அல்லாமா புல்கீனி என்பார் தமது மார்க்கத் தீர்ப்பான பத்வாவிலும் குறிப்பிடுகின்றனர்.

**'முஹம்மத் நபியவர்கள் கூறுகின்றனர், இறைவன் முதன் முதல் எனது பேரொளியைத்தான் படைத்தான்'** –நூல்: மக்தூபாத்தே ரப்பானி பாகம் 2, பக்கம் 93.

குறிப்பு: இந்த நபிமொழியை அல்லாமா ஸுர்கானி என்பார் தமது **'ஷரஹுல் மவாஹிப்'** என்னும் நூலிலும், **'மஹாழிரத்துல் அவாயில்'** என்னும் நூல் இந்த நபிமொழியை அழகானதென்றும், ஷைகு முஹ்யித்தீன் இப்னு அரபி என்பார் தமது **'புதூஹாத்துல் மக்கிய்யா'** என்னும் நூலிலும், முஹத்திஸ் அப்திர் ரஜ்ஜாக் என்பார் இதே போன்றதொரு நபிமொழியை ஜாபிர் என்னும் நபித்தோழரைக் கொண்டும் அறிவிக்கிறார்.

மேற்கண்ட நபிமொழிகளைக் கொண்டு இவ்வகிலமனைத்தின் சிருஷ்டிகளுடைய தோற்றத்திற்கு முன் முதன் முதலாக தோற்றுவிக்கப்பட்ட படைப்பு **'நூரே அஹ்மத்'** (முஹம்மத் நபியின் பேரொளி) தான் என்பதை தெரிந்து கொள்ளலாம். அத்துடன் இது புத்த மதத்திலும், இந்து மதத்திலும் கூட உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதை முன்னால் நாம் குறிப்பிட்டிருக்கிறோம். இந்து மதத்தில் முதல்படைப்பைப் பற்றிய குறிப்பு எத்தனை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது என்பதை அடுத்துவரும் ஆதாரங்களைக் கொண்டு பாருங்கள்...

**'முதல் படைப்பை; பற்றிய தலைப்பு. அதை யார் புரிந்து கொள்கிறார்களோ அவர் நீண்ட ஆயுளையும், பிரபலமிக்க (இதயத்தின்) செல்வத்தால் நிரப்பப்பட்டவராகவும், தர்மவானாகவும், நீடித்த வம்சமுடையவராகவும், மாபெரும் அறிவாளியாகவும் ஆகிவிடுவார். இன்னும் அவருக்கு ஹக்கை (கடவுளை) தரிசிக்கின்ற பாக்கியமும் கிடைத்துவிடும்.'**

-நூல்: ஹரீவன்ஷ் புராணம், பாகம் 1, பக்கம் 59, சுலோகம் 54. ஆசிரியர்: பண்டித் ஸ்ரீராம் சர்மா ஆசர்சார்யா.

முதல் படைப்பைப் பற்றி இந்துமதம் எவ்வளவு முக்கியத்துவம் தருகிறது? அதை அறிந்த இந்து ஆய்வாளர்களில் பிரபலமான **டாக்டர் சமன்லால் கௌத்தம்** என்பார் ஆச்சரியமடைந்தவராக அதை வெளிப்படுத்தும் வகையில் கூறுகிறார்...

**'முதல் படைப்புக்காக ஒரு புராணமோ, அல்லது ஒரு கோவிலோ உருவாக்கப்படவில்லை. அல்லது அதற்குரிய பூஜையும் ஏற்படுத்தப்படவில்லை. இது ஆச்சரியம்தான். முதல் படைப்பை எல்லாவற்றுக்கும் முன்பாக ஒரு தேவதையின் வடிவில் முதலில் வெளிக் கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும்.'** –நூல்: விஷ்னு ரஹஸ்யா பக்கம் 276.

இதுவரை முதல் படைப்பைப் பற்றிய சில உதாரணங்களை மட்டும்தான் உங்களின் பார்வைக்கு எடுத்துக் காட்டினோம். வானுலகின் முதல் திருத்தூதர் அல்லது நூரே அஹ்மதீ அல்லது முதல் படைப்பு என்னும் இதன் மீது இந்தக் கூட்டம் எத்தனை தேவதையைக் கொண்டு வந்து நிறுத்தியுள்ளதோ, இன்னும் அந்த தேவதைகளின் அஸல் அகமியமென்ன? எனில் இது மிகவும் ருசிகரமான அதே நேரம் மிக நீளமானதொரு தலைப்பாகும். இதைப்பற்றி பின்னால் நாம் விபரிப்போம். இன்ஷாஅல்லாஹ்!

**குர்ஆனிலும் ஆதாரம் உண்டு.**

நபிமொழிகளிலும் இதர இடங்களிலும் இத்தனை விரிவாகக் காணப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த இப்பிரச்சனை முஸ்லிம் வேதமான குர்ஆனில் மட்டும் இல்லாமல் போய்விடுமா என்ன? இது எப்படி சாத்தியம்? வாருங்கள் இப்போது அதையும் பார்த்து விடுவோம்.

قُلْ إِن كَانَ لِلرَّحْمَٰنِ وَلَدٌ فَأَنَا أَوَّلُ الْعَابِدِينَ

**'சொல்லும் கிருபையாளனுக்கு பிள்ளை இருந்திருக்குமாயின் அதை வணங்குகிறவர்களில் முதல் ஆளாய் நான் இருந்திருப்பேன்.'**

-அல்குர்ஆன் சூறா ஸுக்ரூஃப் வசனம் 81.

மேற்கண்ட வசனத்திற்கு பெரும்பான்மையான வேதவிரிவுரையாளர்கள் என்ன விளக்கம் தருகின்றனர் எனில், ஒருவேளை இறைவனுக்கு பிள்ளை இருந்திருந்தால் அதை வணங்குகிறவர்களில் நான் முதலாமவனாக இருந்திருப்பேன் என்று கூறுவதால் இறைவனுக்குப் பிள்ளை என்ற ஒன்று அறவே சாத்தியம் இல்லையாதலால் நான் அப்பிள்ளையை வணங்குவது என்ற பேச்சும் இடமில்லை என நபியவர்கள் கூறுவதாக விளக்கம் தருகின்றனர்.

இந்த வசனத்திற்கு உரிய விளக்கம் சரியானதுதான். இருப்பினும் இவ்விளக்கத்தில் இறைவனுக்கு பிள்ளை என்பது ஏன் சாத்தியமில்லை என்னும் சந்தேகவினாவிற்குரிய சரியான விளக்கம் தரப்படவில்லை. அத்துடன் இறைவனுக்கு பிள்ளை இருந்திருந்தால் நான் அதை வணங்கியிருப்பேன் என நபியவர்கள் மீது களங்கம் சுமத்துவது சரியல்ல. ஆதலால் அறிவு இவ்விஷயத்தில் இன்னொரு விளக்கத்தைத் தேடுகிறது. மேற்கண்ட வசனத்தில் காணப்படும் '**இன்**' என்ற அரபிச் சொல்லுக்கு '**ஒரு வேளை**' என்றும், '**இல்லை**' என்றும் இருலவகையான அர்த்தங்கள் இருப்பதால் இமாம் புகாரி என்பார் தமது '**கிதாபுத் தப்ஸீர்**' என்னும் நூலில் இவ்வசனத்திற்கு விளக்கம் அளிக்கும் போது...

**'சொல்லும் ரஹ்மானுக்கு பிள்ளை இல்லை. ஆதலால் பிள்ளை உண்டென நம்புவதில் திருப்தியற்றோரில் முதலாமவன் நான்'**

-நூல்: லுகாத்துல் குர்ஆன் பாகம் 4, பக்கம் 156.

என்பதாக விளக்கம் அளிக்கின்றனர். இதில் '**ஆபிதீன்'**(வணங்குவோர்) என்பதற்கு தகுதியற்றோர் என்பதாக விளக்கம் தருகின்றனர். அரபிக் கவிதைகளில் இப்பதம் இந்த அர்த்தத்தில் பேசப்பட்டுள்ளது.

அடுத்து இவ்வகிலத்திலுள்ள சிருஷ்டிப் பொருட்களனைத்தும்(வானவர், பூமி, வானம், கடல், மலை, மரம், செடி, கொடிகள்) இறைவனை வணங்கிக் கொண்டுதானிருக்கின்றன. இன்னும் அவைகள் இறைவனுடைய அடிமைகளாகும்.இதில் முதல் வணக்கவாளர் என்பதும் அடிமை என்பதும் எது முதல் முதல் படைக்கப்பட்டதோ அதுவாகத்தான் இருக்க வேண்டும். இங்கே இறைவன் நபியவர்களை நோக்கி ஆணையிடுகிறான், 'நபியே நீங்கள் அறிவித்து விடுங்கள். ரஹ்மானுக்கு எந்தப் பிள்ளையுமில்லை. அதற்குரிய மிகப் பெரிய ஆதாரமும் நான்தான். ஏனெனில் நான்தான் முதன் சிருஷ்டி. பிள்ளை இருக்கின்றதென வாதிப்பதாக இருந்தால் முதலில் நான் தான் வாதித்திருக்க வேண்டும். நானே அவ்வாறு வாதிக்காது என்னை அவனுடைய அடியார் என்றும் ரஸூல் என்றும் சொல்லும் போது ரஹ்மானுக்கு பிள்ளை எவ்வாறு இருக்க முடியும்? என்பதும் இவ்வசனத்தின் விளக்கங்களில் ஒன்றாகும். அடுத்து முஸ்லிம் வேதமான குர்ஆனில் இன்னொரு வசனத்தைப் பாருங்கள்...

يَا أَيُّهَا النَّاسُ اتَّقُوا رَبَّكُمُ الَّذِي خَلَقَكُم مِّن نَّفْسٍ وَاحِدَةٍ وَخَلَقَ مِنْهَا زَوْجَهَا

**'ஓ! மனிதர்களே! உங்களின் ரட்சகனிடமிருந்து இறை உணர்வை பெறுங்கள். அவன் எப்படிப்பட்டவன் எனில், ஒரேயொரு ஆன்மாவிலிருந்து உங்களனைவரையும் படைத்தான். இன்னும் அதிலிருந்தே உங்களுக்குரிய ஜோடிகளையும் படைத்தான்.'**

-அல்குர்ஆன் சூறா நிஸா வசனம் 1.

இங்கே எல்லா மனிதர்களையும் ஒரே ஒரு ஆன்மாவிலிருந்து படைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதில் '**நப்ஸ்'** என்பதற்கு '**ஆன்மா'** என்பது அர்த்தமாகும். இனி ஆன்மாவைக் கொண்டு உயிர் உடல் ஆகிய இரண்டும்தானென கருத்துக் கொள்ளப்பட்டால் இந்நிலையில் நப்ஸ் என்பதற்கு சரீரம் எனில் இவ்வசனத்தைக் கொண்டு ஆதம் ஹவ்வாவின் மூலம் மனிதர்கள் அனைவரும் படைக்கப்பட்டனர் என்னும் விளக்கத்தை நாம் பெறலாம். அவ்வாறின்றி நப்ஸ் என்பதற்கு உயிர் என்று கருத்துக் கொள்ளப்பட்டால் இந்நிலையில் முதல் உயிரான நூரே அஹ்மதியின் மூலம் எல்லா உயிர்களும் படைக்கப்பட்டன என்பது உறுதியாகிறது. புரிந்து கொள்ளுங்கள். உயிருக்குரிய ஜோடிதான் சரீரம் என்பதாகும். அதனால்தான் முதலில் ஒரு உயிரிலிருந்து எல்லா உயிர்களும் படைக்கப்பட்டு அதன்பின் அதற்குரிய ஜோடியான சரீரம் படைக்கப்பட்டது.

இறைவேதத்தை கொண்டு மனித சரீரம் எந்தப் பொருளால் படைக்கப்பட்டது என்பதை நாம் தேடுவோமாயின் அதுபற்றிய பல்வேறு வாக்கியங்கள் நமக்கு கிடைக்கின்றன. அதாவது ்தீன் (கூளம்), துராப்(மண்), அலக் (இரத்தக் கட்டி), மாஅ தா்பிக்(துள்ளுகின்ற நீர்), ஸல்ஸால்(கணீரென்ற சப்தம் வரும் கெட்டுப்போன மண்), ஹமயின் மஸ்னூன்( பிசைந்து பதப்படுத்தப்பட்ட மண்) மற்றும் விந்து ஆகியவைகளாம்.

இனி மேற்கண்டவையனைத்தையும் இணைத்துப் பார்த்தால் மனித சரீரம் என்பது அசுத்தங்களின் தொகுப்பென்பது நமக்குப் புலனாகிறது. இன்னும் அந்த அசுத்தங்களின் குறைகளனைத்தும் மனித இனத்தில் அமைந்துள்ளது. மனிதன் சரீரத்தின் கோர்வைக்குள் நுழைக்கப்பட்ட பின் சுவனத்திலும் கூட சாத்தானிடம் ஏமாந்து போனான். இப்போது பாருங்கள். இறைவன் மனிதனை தனது பண்பில் படைக்கிறான். முஸ்லிம் வேதம் கூறுகிறது...

فِطْرَتَ اللَّهِ الَّتِي فَطَرَ النَّاسَ عَلَيْهَا ۚ

'**அல்லாஹ்வின் அந்த இயற்கைக்கு வழிப்படுங்கள். எதன் மீது அவன் மனிதர்களைப் படைத்துள்ளானோ**' –அல்குர்ஆன் சூறா ரூம், வசனம் 30.

இது முதல் உயிராகும். எதை இறைவன் தனது பண்பைக் கொண்டு பண்புக்குரியதாக ஆக்கினானோ அதுவாகும். மேலும் முஸ்லிம் வேதமான குர்ஆனில் அதை '**ரவூ்புன் ரஹீமுன்**' (இரக்கமுள்ளவர், கிருபையாளர்) என்பபதாகக் கூறுகிறான்.அப்பரிசுத்தமான உயிரிலிருந்துதான் எல்லா மனிதர்களுடைய உயிர்களும் படைக்கப்பட்டன. இனி எப்போது சரீரத்தில் உயிர் ஊதப்பட்டதோ அப்போது மனிதன் மகத்தான பண்புள்ளவனாகவும், மிகவும் தாழ்வான் அசுத்தமானவைகளின் தொகுப்பாகவும் ஆகிப்போனான். முஸ்லிம் வேதமான குர்ஆன் இதை இவ்வாறு கூறுகிறது...

لَقَدْ خَلَقْنَا الْإِنسَانَ فِي أَحْسَنِ تَقْوِيمٍ ثُمَّ رَدَدْنَاهُ أَسْفَلَ سَافِلِينَ

'**நாம் மனிதர்களை படைத்து அவனை அழகான வடிவில் நிலைநிறுத்தினோம். பின்னர் அவனை கீழினும் கீழான நிலைக்கு தாழ்த்தினோம்.**' –அல்குர்ஆன் சூறா அத்தீன் வசனம் 4, 5.

அதாவது உயிர் முதலில் படைக்கப்பட்டது. அது அப்போது இறைவனது பண்பில் அமைந்திருந்தது. அதன்பின் அந்த உயிர் சரீரத்துடன் இணைக்கப்பட்டது. அது அசுத்தமாக இருந்தது. இப்போது மனிதன் இருநிலைகளின் தொகுப்பாகிவிட்;டதைப் பாருங்கள். மிக அழகான வடிவில் எந்த உயிர் படைக்கப்பட்டதோ அதைத்தான் '**கிருபையாளர், இரக்கமுடையவர்**' என்று அழைக்கப்பட்டது. அடுத்து முஸ்லிம் வேதத்தில் காணப்படும் '**ரஹ்த்மத்துல் லில் ஆலமீன்**' என்னும் வசனம் கூட முஹம்மத் நபியவர்கள்தான் முதல் படைப்பு என்பதை நமக்கு உறுதிப்படுத்துகின்றது. இவ்வாறு ரப்புல் ஆலமீன் என்னும் அகிலத்தின் ரட்சகனாகிய இறைவனே முஹம்மத் நபியை ரஹ்மத்துலில் ஆலமீன் என்னும்

அகிலத்தின் பேரருள் என்று சொல்லிக் காட்டியதைக் கொண்டு இறுதித் தூதரின் தொடர்பு என்பது இவ்வுலகிலுள்ள மனிதர்களுக்கு மட்டும்தான் என்றிருந்தால் முஹம்மத் நபியவர்கள் அகிலத்திற்கே பேரருளாக எப்படி ஆகியிருக்க முடியும்?

மேலும் முஸ்லிம் வேதமான குர்ஆனின் பல இடங்களில் '**ரஸூலுன் மின் அன்ஃபுஸிகும்**' (உங்களுடைய நப்ஸ்களின் திருத்தூதர்) என்பதாகச் சொல்லப்படுகிறது. இதில் நப்ஸ் என்பதற்கு உயிர் என்பதாக கருத்துக் கொள்ளப்பட்டால் நபியவர்கள் அரபியருக்கு மட்டும் தூதரல்ல. மாறாக '**உங்கள் அனைவரது உயிர்களுக்குமுரிய திருத்தூதர்**' எனப்தை வெளிப்படுத்துவதன் மூலம் அவர்களுடைய ஆதிநிலையும் உறுதிப்படுத்தப்படுகிறது. இன்னொரு வசனத்தைப் பாருங்கள்...

وَإِذْ أَخَذْنَا مِنَ النَّبِيِّينَ مِيثَاقَهُمْ وَمِنكَ وَمِن نُّوحٍ وَإِبْرَاهِيمَ وَمُوسَىٰ وَعِيسَى ابْنِ مَرْيَمَ ۖ وَأَخَذْنَا مِنْهُم مِّيثَاقًا غَلِيظًا

'**இன்னும் (நபியே!) எண்ணிப் பாருங்கள். நதம் நபிமார்களிடம் வாக்குறுதி வாங்கினோம். இன்னும் உங்களிடமும் நூஹிடமும், இப்றாஹிமிடமும், மூஸாவிடமும், ஈஸாவிடமும் இன்னும் நாம் அவர்களிடம் உறுதியான வாக்குறுதி வாங்கினோம்.**' –அல்குர்ஆன் சூறா அஹ்ஸாப் வசனம்' 7

இந்த வசனத்தை கொஞ்சம் ஆழ்ந்து கவனிப்பீர்களேயாயின் வாக்குறுதி பெறப்பட்டோரில் முஹம்மத் நபியவர்களின் பெயரைத்தான் முதலில் குறித்துக் காட்டப்படுகிறது. ஆகையால் முஹம்மத் நபியவர்கள்தான் முதல் படைப்பு என்பதோடு அஹ்மதுடைய ஜோதியின் அகமிய விளக்கமும் இதுதான் என்பதையும் நாம் புரிந்து கொள்ளலாம். ஏனெனில் முஹம்மத் நபியவர்கள் தான் முதன் முதலாக படைக்கப்பட்டவர்கள் என்பதாலும் ஆன்ம உலகில் அனைத்து உயிர்களின் முதல் திருத்தூதராகவும் அவர்களே விளங்குவதாலும் எல்லா வேதங்களிலுமே அவர்களை குறித்து சொல்லப்பட்டிருந்தது. (இன்றும் அது அவ்வேதங்களில் இருக்கின்றது) இதனால்தான் முஸ்லிம் வேதமான குர்ஆனும் முந்தைய சமூகக் கூட்டத்தாரிடம் இவர் வேறு எந்தக் கூட்டத்தாருடைய திருத்தூதருமல்ல. மாறாக இவர் உங்கள் அனைவருக்குமுரிய ஒரு திருத்தூதர். உயர்ந்த உலகில், ஆன்ம லோகத்தில எனக் கூறப்பட்டது.

*அத்தியாயம் ஆறுடன் முதல் பகுதி முற்றிற்று. இரண்டாம் பகுதி அத்தியாயம் ஏழிலிருந்து துவங்குகிறது. அதைக் காண.....*